www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

11/00

දිනමුරසු වාරමලර්

ஒக்.05–11,1997

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 225

## தலைநகர அபாயம்

## தகவலும் நழுவலும்



## எப்போது விடியும்?

தொடர் அவலம்



## டயானாவின் சோகங்கள்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

padippakam

www.padippakam.com

# முரசம்

## உத்தமமான யோசனை

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

கிணறு வெட்டப் பூதம்
கிளம்பியது போல
சிங்களக் கமிஷனின்
அறிக்கை கிளம்பியிருக்கிறது!
தீர்வு யோசனைகளின் மீது
நாடு தழுவிய விவாதம்
என்று காலத்தை இழுத்தடித்ததின்
பயன்தான் இது!
சிங்களக் கமிஷனின்
அறிக்கையை அலட்சியம் செய்ய
முடியாதளவுக்கு
ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும்
இருகரம் நீட்டிப் பெற்றுள்ளன!
ஆயுதமேந்திப் போராடி
ஜனநாயகப் பாதைக்கு வந்த
தமிழ்க் கட்சிகள்
முன்வைத்த யோசனைக்குக்கூட
இத்தனை முக்கியத்துவம் கிடைக்கவில்லை!
தமிழ்க் கட்சிகளின்
தீர்வு தொடர்பான நிலைப்பாடுகளை
ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும்
ஏறெடுத்தே பார்க்கவில்லை!
சிங்களக் கமிஷன்
அங்கீகரிக்கப்பட்ட
அரசியல் அமைப்பல்ல!
சாதாரண சிங்கள மக்களை
பிரதிநிதித்துவப் படுத்தும்
வெகு ஜன அமைப்புமல்ல!
ஒய்ந்து கிடந்த
பேரினவாதத்தை உசுப்பி
குட்டையைக் குழப்ப முற்படும்
தீய சக்திகளின்
கூட்டு முயற்சிதான் அது!
முளையிலேயே
அதனைக் கிள்ளியெறிந்திருக்கலாம்.
வேரூன்றி விழுதுவிட்டு தளைக்க
அனுமதித்திருக்கிறார்கள்!
ஆளும் தரப்பும், எதிர்த்தரப்பும்
சிங்களக் கமிஷனுடன்
தமக்கு தொடர்பில்லை என்று
காட்டிக் கொள்ள
முயன்றனவே தவிர,
அதன் வளர்ச்சிக்கு எதிராக
போராட முன்வரவில்லை!
இப்போது
சிங்களக் கமிஷன் அறிக்கையையும்
ஆரவாரத்துடன்
வாங்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள்!
அப்படியானால் என்ன அர்த்தம்?
'பூதம் புறப்படட்டும்!'
என்று நினைத்துக் கொண்டுதான்
ஆளும் தரப்பும், எதிர்த்தரப்பும்
கிணறு வெட்டிக் கொண்டிருக்கிறார்களா?
புறப்பட்டுவிட்ட
பூதத்தைக் காட்டி
குறைந்த பட்சத் தீர்வுக்கான
நியாயம் கற்பிக்கப் போகிறார்களா?
எதிர்க்கட்சிக்கு
இன்னொரு நோக்கமும்
இருப்பதாகத் தெரிகிறது!
புறப்பட்டுள்ள பூதத்தையும்
ஆளும் தரப்பையும் மோதவிட்டு
வேடிக்கை பார்க்க நினைக்கிறது!
அதன் மூலம்
தீர்வு முயற்சிகளுக்கு
எதிர்க்கட்சிதான் தடை என்ற
குற்றச் சாட்டிலிருந்தும்
தப்பிக் கொள்ளலாம் அல்லவா?
சபாஷ்! அருமையான தந்திரம்!
அரசியல் பூனைகளுக்கு
அபாரமான விளையாட்டு.
நாட்டு மக்கள் சுண்டெலிகள்-
அவர்கள் சீவன் போகட்டும்!
இதற்கிடையே
பௌத்த மதகுரு ஒருவர்
உத்தமமான யோசனை ஒன்றை
உதிர்த்திருக்கிறார்.
"சிங்கள மக்களை
பாதுகாக்க முடியாவிட்டால்
நாட்டை பௌத்த குருமாரிடம்
ஒப்படைத்து விடுங்கள்!"
என்று திருவாய் மலர்ந்துள்ளார்!
இனக் காவலர்களாக
போடப்படும் தங்கள் நாடகத்தின்
இறுதி நோக்கம் எதுவென்பதை
வெளிப்படையாகச் சொல்லிவிட்டார்.
எனக்கென்றால்,
பசப்பிக் கொண்டிருக்கும்
அரசியல்வாதிகளைவிட
உண்மையைப் புட்டுவைத்த
அந்த பௌத்த மதகுரு மீது
மதிப்புத்தான் ஏற்படுகிறது!
பேசாமல் நாட்டை
அவர்களிடமே கொடுத்து விடலாம்!
நாடு பிரியப் போகிறது என்று
அவர்களை அடிக்கடி
கவலைப்பட வைப்பானேன்?
அவர்களே அந்தக் காரியத்தை
விரைவாகச் செய்ய வசதியாக-
நாட்டை ஆளும் பொறுப்பை
அவர்களிடமே கொடுத்துவிடலாம்!
சமாதானம் மலரவேண்டுமானால்
அரசியல் தீர்வு காணவேண்டும்.
அதனை அவர்கள் விரும்பார்கள்.
மீதியுள்ளது இரண்டு வழிதான்-
தமிழ் பேசும் மக்களை
ஒழித்துக் கட்ட வேண்டும்;
அல்லது நாட்டைப் பிரிக்கவேண்டும்!
ஆட்சிப் பொறுப்பை
அவர்களிடம் கொடுத்துவிட்டு
எது நடக்கிறதோ
அதைப் பார்த்துக்கொள்ளலாம்.
அதுதான் உத்தமம்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## பரிசுத்தம்!

இவ்வுலகில் நாம் வாழும்போது பரிசுத்தமாக வாழ வேண்டும். இதற்காகவே நாம் அழைக்கப்பட்டும் இருக்கிறோம்.

பரிசுத்தம் பற்றி வேதாகமத்தில் இருந்து சில வரிகள்:-

* நாம் தாயின் வயிற்றில் உருவாகுமுன்னும் கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னும் கர்த்தர் எம்மை அறிந்து, பரிசுத்தம் பண்ணியுள்ளார். (எரேமியா 1:5)
* நாம் பிதாவாகிய தேவனாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களும் இயேசுக் கிறிஸ்துவினாலே காக்கப்பட்டவர்களுமாகிய அழைக்கப்பட்டவர்களாயிருக்கிறோம். (யூதா1:1)
* இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள். (மத்தேயு 5:8)
* நாம் பரிசுத்தராயிருந்தால் கர்த்தர் எம்மத்தியிலே அற்புதங்களைச் செய்வார். (ஏசாயா 6:3)

எனவே, சகோதரர்களே! எமது வாழ்க்கைக்குப் 'பரிசுத்தம்' என்பது எத்தனை அவசியமும் முக்கியமும் என்பதை மேற்குறிப்பிட்ட வேதாகம வசனங்களில் இருந்து காணக்கூடியதாக இருக்கிறது.

வேதா பூபாலரத்தினம், கல்முனை-01.



## படுதூறு ஒரு பெரும் பாவம்!

இன்று நாம் நம்மை அறியாமலே பெரும் பாவங்களைச் செய்து கொண்டிருக்கின்றோம்.

எவ்வாறு என்றால், நாம் ஒரு சாதாரண மனிதனைக் கண்டு விட்டால் அவனில் இல்லாததை இருப்பதாகவும், இருப்பதை இல்லை என்றும் கூறி எத்தனையோ மனிதர்களிடத்தில் இட்டுக்கட்டி படுதூறு சொல்லித் திரிகின்றோம்.

இதைத்தான் அபூ ஹுறைரா (றழி) அவர்கள், பெருமானார் (ஸல்) அவர்கள் கூறிய கீழ் கண்ட அருளுரையை அறிவிக்கின்றார்கள்:

"உங்களை அழித்து நாசமாக்கக்கூடிய ஏழு விடயங்களை தவிர்த்துக் கொள்ளுங்கள்" என ரஸூல் (ஸல்) கூற.... அவைகள் எவை அல்லாஹ்வின் தூதரே என்று கேட்டார்கள். அப்போது ரஸூல் (ஸல்) "அவர்கள் ஒன்று.. அல்லாஹ்வுக்கு இணை வைப்பது: இரண்டு... சூனியம்; மூன்று.... அல்லாஹ் ஹறாமாக்கினானே அத்தகைய ஒரு உயிரை கொலை செய்வது: நான்கு... வட்டிப் பணத்தில் சாப்பிடுவது: ஐந்து.... அனாதைகளுடைய பணத்தை சாப்பிடுவது ஆறு... போர் புரியும் நாளையில் புறமுதுகு காட்டி ஓடுவது: ஏழு... நிரபராதியான, முஃமினான ஒரு பெண்ணை படுதூறு சொல்லி இட்டுக் கட்டுவது. என கூறினார்கள். இவைகள் பெரும் பாவங்களில் நின்றும் உள்ளதாயிருக்கும். (ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்)

சுல்தான் எம்.அஸ்மி, கும்புக்கந்துறை, கண்டி.

## கவிதைப் போட்டி இல. 222



பரிசுக்குரிய கவிதை

### தொடரும் துன்பங்கள்

நிலவென்றால் தேய்ந்துவிடும்
மலரென்றால் உதிர்ந்து விடும்
நாம் காண்பது நிழலாச்சே!

ஏ. நிதா-நுரைச்சோலை.

**இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்:**

### எங்கு?

கண்ட இடமெலாம்
கண்ணி வெடி!
எங்கே வைப்பது
காலடி?

மு.சித்திரவேல்- பம்பலப்பிட்டி.

### போராளி

நிகழ்காலத்திற்கான உறுதிமொழியா....
கடந்த காலத்திற்கான கண்ணீரா...
எதிர்காலத்திற்கான சிந்தனையா?

சுபா வரன்-கண்டி.

### மாறும் நிழல்

ஆலமர நிழலான
உறவுகள் இழந்த பின்னே
நிலையில்லா நிழலை
குனிந்து பார்த்து என்னபயன்?
ஒளி மாற அது மாறும்;
இருள் சூழ, நிழலல்ல நீயுமில்லை!

ம.திருவரசுராசா- தவசிகுளம், வவுனியா.

### அஞ்சலி?

இழந்து விட்ட இளவரசிக்காய்
இளங்கன்று செலுத்தும்
இரு நிமிட அஞ்சலியோ?

செல்வி நிகாரா ஏ.முதலிப்-
ஜெயந்தி மாவத்தை, அனுராதபுர.

### தயவு தேவை!

சுடும் நெருப்பாம் கடும் சமரில்
நெடுந்தூரம் கடந்துவிட்டேன்!
படுந்துயரம் மறக்க வென்று
மறுகரையைத் தாண்டிடத்தான்
தண்ணீரைக் கடப்பதற்கு
தயவு கொஞ்சம் தேடுகின்றேன்!

தர்ஷிக்கா கனகசிங்கம்-
கல்லடி வேலூர், மட்டக்களப்பு.

### போரும் புலி வாலும்

புலிவாலைப் பிடித்த கதையாச்சு போர் நிலைமை!
எலிவளையும் இல்லை அகதிகள் நாம் ஒதுங்குதற்கு!
வலியாரை வாழவைக்க போட்டா போட்டியிட்டு
சலிக்காமல் வலிந்தே வழங்குகின்றார் ஆயுதங்கள்!
மெலியாரை வாழவிட ஆள்வோர்கள் எண்ணாரோ?
காடு, கடல், காணும் இடமெல்லாம் மோதல் மோதல்!
வீடும் விடுதலையும் தந்திடுமோ வீதி நாடகங்கள்?

சி.ஹரேந்திரன்- மட்டக்களப்பு.

### போர் நாடு

இவன் போகும் இடமெல்லாம்
சாம்பல் மேடு!
போர் ஒன்றுதான் இந்நாட்டின்
சாபக்கேடு!

நஸ்லியா பத்தாஹ்- இபுன் பதூதா வீதி,
புத்தளம்.

### மறைந்துபோகும்

சூரியன் மறையும் போது
போரும் உதயமாகும்...
எனக்குத் துணை நிற்கும்
என் நிழலும் மறைந்துபோகும்,
சமாதானக் கூச்சல் போல!

அ.சந்தியாகோ- அசோகா வித்தியாலயம், கண்டி.

### தொடர் கதையோ?

தொடரும் நிழல் போல(த்)
தொடரும் யுத்தமதால்
தொடரும் துயரங்கள்
தொலைவதுவும் எக்காலம்?

சி.மு.சுந்தரேசன்- அரசினர்
வைத்தியசாலை, மஸ்கெலியா.

## கவிதைப் போட்டி இல.225



**கவனியுங்கள்!**

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 11.10.1997

**முகவரி:** கவிதைப் போட்டி இல.225
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல-1772, கொழும்பு.

## உள்ளொன்றுவைத்து......

நியாயமான தீர்வு முயற்சிகளுக்கு தடையாக உள்ளவற்றையும், தடையாக உள்ள சக்திகளையும் விமர்சிப்பதோடு மாத்திரம் நின்றுவிடாது, அதற்குரிய மாற்று வழிகளையும் அரசியல் அலசலில் இராஜதந்திரியார் விளக்கிக் கூறியிருந்தார். நாட்டின் பெரும்பான்மை இன அரசியல் கட்சிகள் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும்வரை இனப்பிரச்சினைக்கு தீரப்போவதில்லை.

வி.தங்கராசா, முல்லைத்தீவு.

# வாசக(ர்)சாலை

அன்பின் முரசே!

நாங்கள் சவூதி அரேபியாவில் வேலை செய்தாலும் உன் வருகையை எதிர்பார்த்தவண்ணம் இருக்கிறோம். இலங்கையில் நடக்கும் சம்பவங்கள் அனைத்தையும் உடனுக்குடன் அறியத்தரும் தினமுரசே! என்றும் எம் வாழ்த்துக்கள்.

முகைதீன், முபாஷா, றியாட்.

✦✧

இனிய முரசிற்கு!

உன்னில் அடங்கியிருக்கும் பல தரப்பட்டவற்றையும் படித்து எதைப் பாராட்ட, எதை விட என்ற தடுமாற்றமே ஏற்படுகின்றது. தொடர்கதைகள், கள நிலவரங்கள், கட்டுரைகள், அதிரடி அலசல்கள், கவிதைகள் யாவும் நன்று. கந்தசாமியாருக்கு யார் காதிலை பூ வைத்தது? அசத்தலா, சரியான கிழித்தலா? ஒரேமூச்சில் எல்லாவற்றையும் படித்துவிட வேண்டும் என்ற பரபரப்பு மேலோங்க வைக்கின்றாய்.

இதன் மேலாக உலகமே உவந்து பேசிய இருவர்- இளவரசி டயானா, அன்னை திரேசா. இவர்களின் இறப்பிற்குபின், முன், இவர்கள் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளை ஏகமாய் தந்துள்ளாய். பாராட்டுக்கள்.

சரசையூர் கிருஷ்ணா, மங்கை, கல்கிசை.

✦✧

அதிரடி அய்யாத்துரையின் பார்வை மட்டுமல்ல- கவிநயமும் சிறப்பானதாக உள்ளது. இன்று தலை நகரில் தனியார் மருத்துவமனை லீலைகளையும் தெளிவாக்கி உள்ளார்.

டயானாவின் வாழ்க்கைக்கு அஞ்சலியாக அவரின் புகைப்படங்கள், வாழ்க்கை வரலாறுகள் தந்த முரசுக்கு எனது பாராட்டுக்கள்.

மகேஸ்வரி ராமதாஸ், வத்தேகம.

✦✧

நெஞ்சில் என்றும் நிறைந்திடும் முரசே!

உன்னை இரண்டு வருடமாக குவைட்டில் படித்து வருகிறேன். உனது அனைத்து அம்சங்களும் மனம் நிறைவானதே. அதில் எனக்கு மிகவும் பிடித்தது பூலான் தேவியின் தொடர்.

முரசு என்கரம் கிட்டியதும் முதலில் படிப்பது பூலான்தேவியின் தொடர். மல்லாவின் மரணம் அறிந்ததும் என் தலையணையே நனைந்துவிட்டது. வரண்டு போன பூமியிலே மழைத்துளியாய் உதித்து பூலானின் இருண்ட வாழ்வில் ஒளிவீசிய தீபம் இவ்வளவு சீக்கிரம் அணைந்து விடும் என்று எதிர்பார்க்கவில்லை.

எஸ். ஆரி:பா உம்மா, குவைட்.

முரசுக்கு!



நீ ஒவ்வொரு வாரமும் வெளியிடும் அம்சங்கள் என்னைப் போன்ற முரசு இதயங்களுக்கும் பெருமையாகவே இருக்கும். குறிப்பாக கிரைம் சக்கரவர்த்தியின் உடைந்த இரவு, பூலான் தேவி, பாப்பா முரசு, இராமாயணம் போன்றவை என்னைக் கவர்ந்தவை.

ஆர்.சந்திரகுமாரி, தெல்தொட்டே.

## அடித்தது சிக்சர்

'பாணும், பவுண்டரியும்' காதிலை பூ கந்தசாமியார் அடித்தது சிக்சர். இரு பெரும் கட்சிகளும் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டவேண்டும் என்பதற்காகவே குற்றம் குறை கண்டுபிடிக்கின்றன. தவறுகளைத் திருத்தவோ, பொது நலன் பற்றிய சிந்தனைகளை வளர்க்கவோ தயாராக இல்லை. கந்தசாமியார் அதனை நயமாகச் சாடிவிட்டார்.

எம்.இஸ்மாயில், மட்டக்களப்பு.

## படுகொலை

"போராட்டங்களைப் பொறுத்தவரை துரோகங்கள் மன்னிக்கப்படுவதில்லை!" அரசியல் தொடரில் 1988ல் ஈ.பி.ஆர்.எல்.எஃப்.பினரால் படுகொலை செய்யப்பட்டவர்கள் பட்டியல் ஒன்று வெளியாகி இருந்தது!

அந்தக் கொடூரமான நாட்கள் நினைவுக்குவந்தது. அந்தக் காலப்பகுதியில் யாழ்/மாலை தெற்கு அ.மி.த.க வித்தியாலய முன்னாள் அதிபர் திரு.ஐ.நவரத்தினம் அவர்கள் கொல்லப்பட்டார். யாரால்? தங்கள் பத்திரிகை நிருபராக இருக்கும்படி ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர் வற்புறுத்தினார்கள். அவர் அடிபணிய மறுத்தமையால் சுட்டுக்கொன்றார்கள். எமது கிராமத்தில் ஓயாது வீசிக்கொண்டிருந்த ஒரு தென்றல் நின்றுபோனது. அவரது திருவுடல் காங்கேசன் துறையில் கண்டெடுக்கப்பட்டது. இப்படி எத்தனை புத்தி ஜீவிகள்.......?!

மு.பா.துவாரகன், விஞ்ஞானபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

## இனிப்பாக இருக்காது!

அன்பு முரசுக்கு!

புலிகள் இயக்கத்தினர்மீது ஏனைய இயக்கங்கள் சில கூறிவரும் விமர்சனங்கள் எவையென்று பட்டியலிட்டால், அத்தனை காரியங்களையும், அதனைவிட பல மடங்காக அதே இயக்கங்கள் செய்து முடித்திருக்கின்றன. ஏனைய இயக்கங்களை புலிகள் தாக்கியதை நான் நியாயப்படுத்துவதாக நினைக்கவேண்டாம். ஆனால் புலிகளின் ஜனநாயக விரோத செயற்பாடுகள் என்று தாமே கண்டித்தவற்றை ஏனைய இயக்கங்களும் தங்களுக்கு வாய்ப்புக் கிடைத்தபோது கையில் எடுத்துக் கொண்டனவே, அது ஏன்? இயல்பாகவே சகல இயக்கங்களின் தலைமைகளிடமும் தங்களை முன்னிறுத்தும் அதிகார அபிலாசைகள் குடிகொண்டிருந்தன. அரசியல் தொடர்மூலம் அந்த உண்மைகள் உள்ளங்கை நெல்லிக்கனி போல வெளிப்படுவது சம்பந்தப்பட்டவர்களுக்கு நிச்சயம் இனிப்பாக இருக்காது.

கா.லோகநாதன், கவிற்ஸ்லாந்து.

## முள்ளும் ரோஜாவும்

'டயானா ஸ்பெசல்' அசத்தலோ அசத்தல். 'கண்ணீரில் கரைந்த இரவுகள்' டயானாவின் உள்ளத்தில் வீசிய புயலையும், அதன் நியாயத்தையும் புலப்படுத்துகிறது. சாள்ஸ் மீதும், அரச குடும்பம்மீதும் வெறுப்பையும் ஏற்படுத்துகிறது. 'முள்ளில் விழுந்த ரோஜா டயானா' என்ற தகவல் பெட்டி விபரிப்பு மிகச் சரியானது. வழக்கமாக ரோஜாவில்தான் முள் இருக்கும். டயானா என்ற ரோஜா அரச குடும்பம், அதன் போலி மரபுகள், இளவரசரின் புறக்கணிப்புக்கள் என்ற முட்கள் மேல் விழுந்த ரோஜா.

செல்வி இ.உஷா, கொழும்பு-08.

## திமிர் அல்ல

பிரபஞ்சனின் 'கனவு மெய்ப்படவேண்டும்' உன்னதமான கதை. உயிரோட்டமான பாத்திரங்கள். 'பெண் விடுதலை' என்றால் ஆண்களுக்கு எதிரான ஒன்று போலவும், திமிரான செயல் போலவும் ஜனரஞ்சக பத்திரிகைகளில் வெளியாகும் கதைகளும், ஜோக்குகளும் சித்தரித்து வந்தன. 'முரசு' அப்போக்கை மாற்றியிருக்கிறது. 'கனவு மெய்ப்படவேண்டும்' கதையில் சுமதி ஆண்களுக்கு எதிராகப் போராடுகிறவள் அல்ல. ஆண்களை வெறுப்பவள் அல்ல. நாகரிக மோகத்தில் அலைபவள் அல்ல. பெண்ணை ஒரு புழுவாய் நினைக்கும் ஒரு ஆதிக்க மிருகத்தை எதிர்ப்பவள். ஆதிக்க மிருகங்களுக்கு எதிரான போராட்டத்தின், எதிர்ப்பு உணர்வின் வெளிப்பாடுகளில் ஒன்றுதான் பெண் விடுதலை உணர்ச்சி. பிரபஞ்சன் அதனை நன்கு புரிந்து எழுதுகிறார்.

திருமதி க.புஸ்பலதா, திருக்கோணமலை.



படிப்பகம்

www.padippakam.com

# "கொழும்பைக் கையேந்தும் மனோபாவம் வேண்டாம்"

## திலீபன் நினைவு தினத்தில் புலிகள் தெரிவிப்பு!

விடுதலைப் புலிகள் இயக்க தலைவர்களில் ஒருவரான திலீபனின் 10வது ஆண்டு நினைவு தினம் புலிகளால் அனுஷ்டிக்கப்பட்டது.

செப்டம்பர் 14ம் திகதி முதல் செப்டம்பர் 26ம் திகதிவரை வடக்கு-கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் திலீபன் நினைவுநாள் அனுஷ்டிக்கப்பட்டது.

செப்டம்பர் 26ம் திகதி நினைவுநாள் இறுதி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. வன்னிப் பகுதிகளிலும் திருமலை மாவட்டத்திலும், மட்டக்களப்பில் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களிலும் இறுதி நாள் நிகழ்ச்சிகள் பாரியளவில் அனுஷ்டிக்கப்பட்டன.

திலீபனின் நினைவு தினத்தை முன்னிட்டு புலிகள் விடுத்த செய்தியில், தமிழீழ மக்கள் அரசியல் ரீதியில் சிந்தித்துப் பழக வேண்டும் என்பதே திலீபனின் விருப்பமாக இருந்தது. தமிழீழ மக்கள் கொழும்பைக் கையேந்தும் அடிமை மனோபாவத்தில் இருந்து விடுபடவேண்டும். உரிமைக்காக போராடி சுதந்திர தமிழீழம் ஒன்றை அமைப்பதே திலீபனுக்கு செய்யும் அஞ்சலியாகும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

திலீபன் நினைவு தினத்தை முன்னிட்டு நாடெங்கும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. வடக்கு-கிழக்கில் புலிகள் தாக்குதல் நடத்தக்கூடும் என்று எதிர்பார்த்து படை முகாம்களும் உஷார்படுத்தப்பட்டிருந்தன. எனினும் பாரிய தாக்குதல்கள் எதிலும் புலிகள் ஈடுபடவில்லை.

25.09.97 அன்று பொலநறுவ மாவட்டத்தில் நாகஸ்கந்த என்ற இடத்தில் அமைந்திருந்த இராணுவக் காவலரண்மீது புலிகள் தாக்குதல் நடத்தினர். மூன்று படையினர் பலியாகினர். புலிகள் தரப்பில் எவ்வித இழப்பும் இல்லை.

25.09.97 அன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஜெயந்தியாய பகுதியில் உள்ள காவலரண்கள்மீதும் புலிகளால் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 5 படையினர் பலியாகினர். ஆர்.பி.ஜி-01, ஆர்.பி.ஜி ஷெல்கள், மற்றும் ரி.56 ரக துப்பாக்கி என்பவை தம்மால் கைப்பற்றப்பட்டதாக புலிகள் தெரிவித்துள்ளனர். இங்கு நடைபெற்ற சண்டையில் புலிகள் தரப்பில் லெப்டினன்ட் தமயந்தன் என்பவர் பலியானார். ■

# அரசியல் தீர்வு முயற்சிகள் இழுபறி

## ஆளும் தரப்புக்குள்ளும் பொது இணக்கம் இல்லை

அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள அரசியல் தீர்வு யோசனைகள் தொடர்பாக செப்டம்பர் 29ம் திகதி அமைச்சரவைகூடி ஆராய்ந்தது.

வடக்கு-கிழக்கு இணைப்பு, முஸ்லிம்களுக்கான தனி அலகு, பிராந்திய சபைகளுக்கான அதிகாரங்கள் போன்ற விடயங்களில் அமைச்சர்கள் சிலர் எதிர்க் கருத்து கூறியதாகத் தெரிகிறது.

அமைச்சரவையில் பொது இணக்கத்தை காணமுடியாமையால், ஆளும் தரப்பு எம்.பி.களையும் உள்ளடக்கிய கூட்டம் ஒன்றை கூட்டுவதற்கும், அதில் மேலும் விரிவாக ஆராயவும் முடிவு செய்யப்பட்டதாம்.

சிங்கள கமிஷன் அறிக்கையை தொடர்ந்து எழுந்துள்ள வாதப் பிரதிவாதங்களை எதிர்க் கட்சியினரே பின்னணியில் நின்று ஊக்குவித்து வருவதாக தெரிகிறது.

இதேவேளை ஆளும் தரப்புக்குள் உள்ள அதிருப்தியாளர்களான லலித் பிரிவினரும் சிங்கள கமிஷன் அறிக்கைக்கு சார்பாக குரல் கொடுப்பதன் மூலம் தமது அரசியல் செல்வாக்கை உயர்த்திக்கொள்ளத் திட்டமிட்டுள்ளனர்.

ஆளும் தரப்புக்குள் இருந்து தங்களை விலக்கக்கூடிய சூழ்நிலை உருவாக வேண்டும். தாங்களாக வெளியேறாமல், ஜனாதிபதியே தங்களை வெளியேற்றினால் சிங்கள மக்களிடம் அனுதாபம் பெறலாம் என்று நினைக்கின்றனர். சிங்கள மக்களின் உரிமைக்கு குரல் கொடுத்ததால் தூக்கி எறியப்பட்டோம் என்று மக்களிடம் கூறலாம் என்று திட்டமிடுகின்றனர்.

அவ்வாறான உணர்ச்சி பூர்வமான நிலையில் அவர்களைத் தம்மோடு இணைத்துக் கொள்ள ஐ.தே.கட்சியும் முன்வருமாம்.

எனினும் தமிழ் பேசும் வாக்காளர்களை கருத்தில் கொண்டு, மறைமுகமாக நின்று இனவாத சக்திகளை ஊக்குவிக்கும் வேலையைத்தான் ஐ.தே.கட்சியினர் தற்போது செய்து வருகின்றனர்.

### அறைகூவல்

கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையான ஐலண்டில் அரசியல் தீர்வு யோசனைகளை எதிர்த்து சிங்கள மக்கள் கிளர்ந்தெழ வேண்டும் என்று கோரும் விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது.

'அமைதியாக இருக்கும் பெரும்பான்மையினருக்கு தேசத்தின் அறைகூவல்' என்ற தலைப்பில் அந்த விளம்பரம் வெளியிடப்பட்டிருந்தது. சிறீலங்காவின் ஒற்றுமைக்கான குழுவினர் என்ற பெயரில் விளம்பரம் கொடுக்கப்பட்டிருந்தது.

அதிகாரப் பரவலாக்கல் இடம் பெறுமானால் ஒரு பிராந்தியத்தில் ஆதிக்கம் செலுத்தும் இனத்தினர் வெற்றிகரமான சுதந்திர பிரகடனம் செய்துவிடுவர் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

"எமது தாயகத்தின் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் பாதுகாக்கவே எமது தந்தையர், எமது புத்திரர்கள், எமது சகோதரர்கள் தொடர்ந்து மரணமடைந்து வருகின்றனர். எந்த பயனும் இல்லாமலா அவர்கள் இறந்து கொண்டிருக்கிறார்கள்? இன்னும் எதற்காக நாம் அமைதியாக இருக்கிறோம்? எழுங்கள்! உங்கள் எதிர்ப்புக் குரல் எங்கும் கேட்கட்டும்!" என்று அந்த விளம்பரத்தில் அறைகூவல் விடுக்கப்பட்டுள்ளது.

### கண்டனம்

இதேவேளை சிங்களக் கமிஷன் அறிக்கைக்கு எதிராக அமைச்சர் மங்கள சமரவீர மட்டுமே உறுதியான கண்டனத்தை தெரிவித்திருந்தார். ஏனைய அமைச்சர்களோ, அரசாங்கமோ உத்தியோகபூர்வமாக கண்டனம் எதையும் தெரிவிக்கவில்லை.

அமைச்சர் மங்கள சமரவீர மீது சிங்கள கமிஷனும், பௌத்த பீடங்கள் சிலவும் ஒன்றுதிரண்டு எதிர்ப்பு தெரிவித்துவருகின்றன. ஏனைய முக்கிய அமைச்சர்கள் அவர் சார்பாக குரல் கொடுக்க முன்வரவில்லை.

இதற்கிடையே எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதுபோல அமைச்சர் மங்கள சமரவீரவைக் கண்டித்திருக்கிறார்.

# அம்பாறையில் நடந்தது என்ன?

## வெளியான செய்திகளும் வெளிவராத தகவல்களும்

அம்பாறை மாவட்டத்தில் நாலாம் கொலனியில் தமிழ் மக்கள்மீது வன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்டது. 23.09.97ல் நடைபெற்ற இந்த வெறியாட்டத்தில் 5 தமிழர்கள் பலியாகினர். அதில் ஒருவர் உயிரோடு எரிக்கப்பட்டிருந்தார். மத்திய முகாம் பொலிசாரே மக்கள்மீது தாக்குதல் நடத்தினார்கள்.

அம்பாறை மூன்றாம் கொலனியில் ஒரு படைவீரரும், ஒரு பொலிஸ்காரரும் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர். அதன் பின்னரே வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன என்றே செய்திகள் வெளியாகி இருந்தன.

ஆனால் சம்பவத்தை நேரில் கண்ட பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட தகவல்கள் அச் செய்திகளுக்கு மாறாக உள்ளன. இது பற்றி முரசுக்கு கிடைத்துள்ள தகவல்கள் பின்வருமாறு:

22.09.97 அம்பாறை மூன்றாம் கொலனியில் உள்ள வீடொன்றில் மரணச் சடங்கு ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. அங்கு பௌத்த மதகுரு ஒருவர் கிரியை நடத்திக் கொண்டிருந்தார். வீட்டிற்கு வெளியே விடுமுறையில் வந்திருந்த படைவீரர் ஒருவரும், பொலிஸ்காரர் ஒருவரும் நின்றுகொண்டிருந்தனர்.

படைவீரர் ஒருவர் விடுமுறையில் வந்துள்ள செய்தியை அறிந்து அவரைத் தேடி வந்த புலிகள் துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். அதில் படைவீரரும், பொலிஸ்காரரும் பலியாகினர். இச்சம்பவத்தினால் பதற்றம் ஏற்படாதவாறு விசேஷ அதிரடிப்படையினர் பார்த்துக் கொண்டனர்.

இதனை அடுத்து மறுநாள் 23.09.97 அன்று ஒரு மோட்டார் சைக்கிளில் சாதாரண உடையில் இரண்டு பொலிசார் அம்பாறை நாலாம் கொலனிக்கு சென்றனர். இரண்டு பொலிசாரும் கண்ணில் பட்டவர்களை மிரட்டுவதும், அடிப்பதுமாக அட்டகாசம் செய்து கொண்டிருந்தனர். இதனால் நாலாம் கொலனி மக்கள் சிலர் விசேஷ அதிரடிப் படையினரிடம் ஓடிச் சென்று புகார் செய்திருக்கிறார்கள்.

### துப்பாக்கிச் சூடு

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விசேஷ அதிரடிப்படையினர் விரைந்தனர். அப்போது பொலிசார் இருவரும் மோட்டார் சைக்கிளில் அங்கிருந்து செல்ல முற்பட்டனராம்.

சிவில் உடையில் இருந்ததால் அவர்களை பொலிசார் என்று இனம் காண முடியாத அதிரடிப்படையினர் நிற்குமாறு எச்சரிக்கை செய்தனராம். மீண்டும் மீண்டும் எச்சரித்தும் கேட்காமல் அவர்கள் மோட்டார் சைக்கிளில் சென்றிருக்கின்றனர்.

அதனால் புலிகளாக இருக்கலாம் என்ற சந்தேகத்தில் விசேஷ அதிரடிப்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள் என்று கூறப்படுகிறது. மோட்டார் சைக்கிளில் சென்ற ஒரு பொலிஸ்காரர் பலியானார். இன்னொருவர் காயத்துடன் தப்பி பொலிஸ் நிலையத்துக்கு ஓடிவிட்டாராம்.

புலிகள் வந்து சுட்டுவிட்டனர் என்று அப் பொலிஸ்காரர் பொலிஸ் நிலையத்தில் கூறியிருக்கிறார். அங்கிருந்து பொலிசார் புறப்பட்டுவந்து "புலிகள் எங்கே?" என்று கேட்டு மக்களை தாக்கத் தொடங்கியுள்ளனர்.

பின்னர் விசேஷ அதிரடிப்படையினர் தலையிட்டதால் பொலிசாரின் நடவடிக்கை கட்டுப்படுத்தப்பட்டது. அவ்வாறில்லாவிட்டால் பாரிய அழிவுகள் நேர்ந்திருக்கும் என்று மக்கள் கூறுகின்றனர்.

தற்போது நாலாம் கொலனியில் இருந்து 354 தமிழ்க் குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. அவர்களில் 147 குடும்பத்தினர் சேனைக் குடியிருப்பு கணேச வித்தியாலயத்தில் தங்கி உள்ளனர். ■

# பெண்டாக்டர்மீது தாக்குதல்! படைமீது பழி போட்டனர்

மட்டக்களப்பு கல்லாறு வைத்திய சாலைக்குள் அத்துமீறிப் பிரவேசித்த மூன்று பேர் அங்கிருந்த பெண்டாக்டரை தாக்கியுள்ளனர். அவரது கணவரும் டோர்ச்லைட்டினால் தாக்கப்பட்டார்.

தங்கள் முகத்தை துணியினால் மறைத்துக் கொண்டே தாக்குதல் நடத்தினராம்.

இச் சம்பவம் 26.09.97 அன்று இரவு 8.30 மணியளவில் இடம்பெற்றது.

தாங்கள் விசேஷ அதிரடிப்படையினர் என்றும், பின்னர் புலிகள் என்றும் முன்னுக்குப் பின் முரணாக கூறிவிட்டுப் போனார்களாம்.

தற்போது மூவரும் இனம் காணப்பட்டுள்ளனர். ஈ.பி.ஆர்.எல்.எஃப். ராசிக் குழுவைச் சேர்ந்த பாக்கியராசா பிரபா, பாலன் கஜேந்திரன், சவுந்தரநாயகம் சுரேஸ் ஆகியோரே தாக்குதல் நடத்தியதாக தெரிய வந்துள்ளது.

கல்லாறு நாகதம்பிரான் கோவில் திருவிழாவில் நடைபெற்ற சம்பவம் ஒன்றில் காயமடைந்த தமது உறுப்பினர் ஒருவருக்கு சிகிச்சை செய்ய மறுத்தமை காரணமாகவே தாக்குதல் நடத்தினார்களாம். இச்சம்பவத்திற்கு மூலகாரணமானவர் கந்தையா புவனேந்திரராசா. இவரை விசேஷ அதிரடிப் படையினர் தேடியபோது ஈ.பி.ஆர்.எல்.எஃப். ராசிக் குழுவினர் மறைத்து வைத்திருந்ததாக கூறப்படுகிறது. ■

# மூடப்படும் பாதைகள்-போடப்படும் அரண்கள்!

(மன்னார் நிருபர்)

மன்னார் நகரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் தற்போது வெகுவாக அதிகரிக்கப்பட்டு வருகின்றன.

இதன் முதற்கட்டமாக நகரில் இருக்கும் சிறு சிறு ஒழுங்கைகள், குறுக்கு வழிப்பாதைகள் என்பன அடைக்கப்பட்டுள்ளன.

புதிய பஸ் நிலையத்தில் உள்ள பின்பக்கப் பாதை மதிற் சுவர் கொண்டு மூடப்பட்டுள்ளது. அத்துடன் நூறு வீட்டுத் திட்டத்தினூடாக இருந்த பாதை புல்டோசரினால் மண் அணைபோடப்பட்டுள்ளது.

இதன்மூலம் நகருக்குள் வரும் மக்கள் குறிப்பிட்ட சில பாதைகளை மட்டுமே பயன்படுத்த முடியும். மண் அணைபோடப்படும் வேலைகள் சவுத் பார் வரை இடம் பெறக்கூடும் என்று தெரிகிறது.

மன்னாரில் தாக்குதல்களை நடத்திவிட்டு புலிகள் இயக்கத்தினர் தப்பிச்செல்வதற்காகப் பயன்படுத்தியதாக சந்தேகிக்கப்படும் பாதைகளே தற்போது மூடப்பட்டுள்ளன. செப்டம்பர் 26ம் திகதி திலீபன் நினைவு தினமாக இருந்தபடியால் நகரில் ஏதேனும் அசம்பாவிதங்கள் இடம்பெறக்கூடும் என எதிர்பார்த்து, அடிக்கடி சுற்றிவளைப்புக்கள் இடம்பெற்றன. பலர் விசாரணைக்காக கொண்டு செல்லப்பட்டு பின் விடுதலை செய்யப்பட்டனர்.

இங்குள்ள குறுக்குப் பாதைகள், ஒழுங்கைகள் மூடப்பட்டுள்ளதால் இங்கு ஏதேனும் அசம்பாவிதங்கள் இடம்பெற்றால், பொது மக்கள் பாதுகாப்பான இடம் தேடி ஓட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வெகு விரைவில் மேலும் பல பாதைகள் மூடப்பட்டு குறிப்பிட்ட சில பாதைகள் மட்டுமே பயன்படுத்தப்பட உள்ளன என்று தெரியவருகிறது. ■

# மாகாண சபையில் மாபெரும் சுருட்டல்!

## நீண்டகால சம்பள மோசடி அம்பலம்

(திருமலை நிருபர்)

தங்களுக்குச் சேர வேண்டிய தொகையை விட அதிக தொகைச் சம்பளம் பெற்றுக்கொண்டு சேவை புரியும் வடகிழக்கு மாகாணசபை அதிகாரிகளிற் சிலர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கு ஒரு பிரதம செயலாளரும் நான்கு அமைச்சுச் செயலாளர்களுமே அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கு உட்பட்டவர்களாவர்.

எனினும் இலங்கை நிருவாக சேவை முதலாந்தரத்திலுள்ள சில அதிகாரிகள் தமக்குத் தாமே "பிரதிப் பிரதம" என்ற அடைமொழியைத் தமது பதவிக்கு முன்னால் சேர்த்துக் கொண்டு பம்மாத்துக் காட்டி வருவதாக மாகாணசபை வட்டாரங்கள் கவலை தெரிவிக்கின்றன.

உண்மையில் "பிரதிப் பிரதம" என்ற எழுவாய் விசேடத்தைச் சேர்த்துக் கொள்ளும் பதவி இலங்கையில் எந்த மாகாண சபையிலும் கிடையாது. அப்படியிருக்க இவர்கள் இவ்வடை மொழியைக் கௌரவத்துக்காகவும் சம்பள ஏமாற்றுக்காகவும் சேர்த்துக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இவர்கள் சாதாரணமாக பெற வேண்டிய சம்பளம் இலங்கை நிருவாக சேவை முதலாந்தரத்துக்குரியதாகும். இதன்படி இவர்களது உத்தியோகம் புதிய சுற்று நிருபத்தின் படி 13,600/=ஐ மாதாந்த ஆரம்பச் சம்பளமாகக் கொண்டது. இது சம்பளச் சுற்றறிக்கையில் ரி/7/1 என வகுக்கப்பட்டுள்ளது.

ஆனால் ரி/8/1 என வகுக்கப்பட்ட பிரிவின் ஆரம்பச் சம்பளமான 17,850/ரூபா ஊதியத்தில் தொடங்கும் பதவிகளுக்குரிய சம்பளத்தையே இவர்கள் பெற்று வருகிறார்கள். 'பிரதிப் பிரதம' என்ற பொய்யான பட்டங்களை சேர்த்துக் கொண்டதாலேயே இவ்வாறான அதிக சம்பளத்தை பெறமுடிகிறது.

இந்த ஏமாற்று வேலைகள் மூலம் மாதாந்தம் பல்லாயிரக் கணக்கான ரூபாயை சம்பளம் என்ற பெயரில் ஒவ்வொருவரும் சுருட்டி வருவதோடு அச் சம்பளம் பதவிக்குரிய சலுகைகளையும் கபடத்தனமாக அனுபவித்து வருகிறார்கள்.

இந்தச் சம்பள மோசடி ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்று வருகின்ற போதிலும் தலைமைச் செயலாளர் கண்டு கொள்ளாதது ஆச்சரியம்தான். ■

# உத்தியோகப் பற்றற்ற அழைப்பை ஏற்க வேண்டாம்!

## கிராம சேவகர்களுக்கு படை அதிகாரிகள் விளக்கம்!

மட்டக்களப்பு மாவட்டத்தில் கிராம சேவர்கள் பலர் படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளது ஒரு புறமிருக்க, பலர் அடிக்கடி படையினராலும், படையினருக்கு உதவியளிக்கும் நபர்களினாலும் விசாரணைக்கு உட்பட்டு வருகிறார்கள். அவ்வாறு விசாரணைக்காகச் சென்ற கிராம சேவகர் ஒருவர் தற்சமயம் காணாமல் போயுள்ளார் என்ற செய்தி தெரிந்ததே.

படையினரின் கண்காணிப்பின் கீழும், புலிகள் இயக்கத்தினரின் ஆளுகையின் கீழும் உள்ள பகுதிகளில் கடமையாற்ற வேண்டியிருப்பதால் தாம் பெரும் ஆபத்தான சூழ்நிலைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கிறது என்று கிராம சேவகர்கள் தெரிவித்த புகார்களைத் தொடர்ந்து இந்த விவகாரம் படை உயரதிகாரிகள் உட்பட பலரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

இதன் பின்னர் தமது கண்காணிப்பின் கீழுள்ள பகுதிகளில் மாத்திரம் கடமையாற்றும் கிராம சேவகர்களை முறக்கொட்டான் சேனைப் படைமுகாமின் ஆணையிடும் அதிகாரி சந்திப்பொன்றுக்காக அழைத்திருந்தார்.

கடந்த 25.09.97 அன்று நடந்த மேற்படி சந்திப்பில் "இனிமேல் கிராம சேவகர்கள் அந்தந்தப் பகுதிப் படை உயரதிகாரிகளின் எழுத்து மூலமான அழைப்பின்றி சாதாரண படையினரோ அன்றி படையினருடன் உதவிக்காச் செயற்படுபவர்களோ அழைத்தால் செல்லவேண்டியதில்லை. அவசரமான நிலைமைகளையிட்டு பிரதேச செயலாளர்களுடன் தொடர்பு கொண்டு அவர்கள் மூலம் சமுகமளிக்க ஏற்பாடு செய்யப்படும். படையினருக்காக உதவிக்குச் செயற்படும் நபர்கள் யாராவது முறைகேடாக நடந்து கொண்டால் அவர்களைப் பற்றித் தமக்கு அறியத்தருமாறும்" படையினர் கேட்டுள்ளனர்.

கிராம சேவகரான எஸ். தருமலிங்கத்தைத் தாம் விசாரித்தபின் விடுதலை செய்து விட்டதாக படையினர் தொடர்ந்து கூறி வருகின்றனர். மேற்படி கிராம சேவகர் விசாரணை முடிந்து திரும்பும் வழியில் சீருடை அணிந்தவர்களால் பிடித்துச் செல்லப்பட்டார் என்று அப்பகுதி வாசிகள் தெரிவிக்கிறார்கள். ■

# மீன்பிடித் தொழிலாளர் கைது!

## 150 குடும்பங்கள் பாதிப்பு!

திருக்கோணமலையில் உள் துறைமுக கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த 98 மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட அனைவரும் கண்கள் கட்டப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டனராம். இவர்கள் அனைவரும் 30.09.97 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர். ஒவ்வொருவரிடமும் தலா நூறு ரூபா அபராதம் அறவிடப்பட்டது.

அபராதம் விதிக்கப்பட்டமையால் இனிமேல் உள்துறைமுக கடலில் இவர்கள் மீன்பிடிக்க இயலாது. இதனால் சிறு மீன்பிடித் தொழிலை நம்பியுள்ள 150 குடும்பங்கள்வரை அன்றாட சீவனோபாயத்துக்கு வழியில்லாமல் அவதிப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

திருமலை நகர் மற்றும் கிண்ணியா, மூதூர் பகுதிகளைச் சேர்ந்த கட்டுவலை மற்றும் தூண்டில் மூலம் கடலின் ஆழமற்ற பகுதியில் மீன்பிடிக்கும் மீனவர்களே பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் காலையில் தான் தொழிலுக்கு செல்வார்கள். பகல் பத்துமணியளவில் திரும்பி விடுவார்கள். கரையில் இருந்து நூறு யார்வரை உள்ள பகுதிகளில்தான் மீன்பிடித்தலில் ஈடுபடுவர்.

எனவே- தாங்கள் மீன்பிடித்தலில் ஈடுபடுதல் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் என்று கூறப்படுவதும், தடுக்கப்படுவதும் நியாயமல்ல என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். ■

# முஸ்லிம் ஆசிரியர்கள் நியமனம்!

## அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக புகார்கள்

மத்திய மாகாண முஸ்லிம் பாடசாலைகளில் எழுநூறுக்கும் மேற்பட்ட முஸ்லிம் ஆசிரியர்கள் வெற்றிடங்கள் நிலவும் இவ்வேளையில் 268 வெற்றிடங்கள் மாத்திரமே நிலவுவதாக கல்வி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அவர்கள் கூறும் புள்ளி விபரம் பிழையென புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

கண்டி மாவட்டத்தில் உள்ள 17 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் வெற்றிடங்கள் பல நிலவுகின்றன அதேவேளையில் முஸ்லிம் பாடசாலைகள் பல இருக்கும் ஹரிஸ்பத்துவ பிரதேச பிரிவில் வெற்றிடம் இல்லையென அதிகாரிகள் தெரிவித்திருக்கும் விபரம் முழுக்க முழுக்கப் பிழையானதெனவும் புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இது வேண்டுமென்றே தமக்கு இழைக்கப்பட்ட அநீதி எனவும், ஆசிரியர் தெரிவுக்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி நியமனங்களை எதிர்பார்த்திருக்கும் பரீட்சார்த்திகள் குமுறுகின்றனர். தாம் ஒன்று திரண்டு மனித உரிமை மீறலின் கீழ் நீதி நியாயம் கோரி சட்டத்தின் முன் செல்ல இருப்பதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

மத்தியமாகாண கல்வியமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ள தரவுகளுக்கும் அவருக்குக் கீழாக இயங்கும் முஸ்லிம் அதிகாரிகளினால் வழங்கப்பட்டுள்ள தரவுகளுக்கும் இடையில் வித்தியாசம் நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க இந்த பாரபட்சம் குறித்தும் அநீதி குறித்தும் மத்திய மாகாண முஸ்லிம் கல்வி. அமைச்சர் ஜனாப் எம்.எச்.ஏ.ஹலீமுக்கும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் ஜனாப் றவுப் ஹக்கீமுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிழையான புள்ளிவிபரங்களைச் சமர்ப்பித்த அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் ஜனாப் றவுப் ஹக்கீம் இனிகலை முஸ்லிம் வித்தியாலயத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவின்போது தெரிவித்திருக்கிறார். ■

# தமிழ் பேசுவோர் தெரிவாகவில்லை!

ஆயுள்வேத திணைக்களத்தால் நாடெங்கும் இருந்து 30 சுகாதார மருத்துவ உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அவ்வாறு தெரிவான 30 பேரும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களாவர். இவர்களில் இரண்டுபேர் வடக்கு-கிழக்குக்கும் பணிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக ஆயுள்வேத வைத்திய பாதுகாப்பு சபையினர் ஈ.பி.டி.பி செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா பா.உ, மட்டக்களப்பு மாவட்ட பா.உ செல்வராசா ஆகியோருக்கு கடிதம் அனுப்பியுள்ளனர். இந்த விடயத்தில் தலையிட்டு இன விகிதாசாரப்படி மருத்துவ உத்தியோகத்தர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளனர்.



படிப்பகம்

www.padippakam.com

# நயினாதீவு 'நாகதீப'வாகியது எப்படி?

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் செய்திகள் சிங்களத்தில் எழுதப்படும் .செய்தியில் இருந்து நேரடியாக மொழி பெயர்க்கப்படுகின்றன.

அவ்வாறு மொழி பெயர்க்கும் தமிழ் பேசும் செய்தி ஆசிரியர்கள், தங்கள் விசுவாசத்தைக் காட்ட தமிழ் பெயர்களை சிங்களத்தில் உள்ள பெயரிலேயே எழுதி விடுகின்றனர். செய்தி வாசிப்பாளர்களும் அதனையே வாசிக்கின்றனர். எழுதிக் கொடுப்பதை வாசிப்பதுதான் செய்தி வாசிப்பாளர்களின் பணி. அவர்கள் திருத்தி வாசிக்க முடியாது.

24.09.97 அன்று மாலை ஆறுமணிக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் செய்தியில் நயினாதீவை 'நாகதீப' என்று குறிப்பிடப்பட்டது. 'நாகதீப'வில் ராடர் நிலையம் மீதான பயங்கரவாதிகளின் தாக்குதல் முறியடிக்கப்பட்டது' என்று செய்தியில் கூறப்பட்டது.

யாழ் குடாநாட்டில் உள்ள நயினாதீவை சிங்களத்தில் 'நாகதீப' என்றே அழைக்கின்றனர். தமிழில் ஏன் அப்படிக் குறிப்பிடப்பட்டது என்பதுதான் கேள்வி.

செய்தி ஆசிரியரின் முதுகெலும்பு இல்லாத செயலா? அல்லது நயினாதீவை இனி மேல் 'நாகதீப' என்று அழைக்கும்படிதான் மேலிட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதா? அப்படியாயின், அது தமிழ்ப் பிரதேசங்களை சிங்கள மயமாக்கும் நோக்கம் என்றே கருதப்படும். மேலிட உத்தரவு காரணம் இல்லையாயின் குறிப்பிட்ட செய்தி ஆசிரியருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா?

# ஏன் இந்த ஏமாற்று?

'சுயாதீன தொலைக்காட்சியில் தரமான தமிழ்த் திரைப்படங்களை தெரிவு செய்து காண்பிக்க முடிவு. அதற்கென ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.' இது பத்திரிகைகளில் வெளியான செய்தி. சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்தார்தான் அச் செய்தியைக் கொடுத்திருந்தனர்.

செய்தியைப் படித்த தமிழ்த் திரைப்படப் பிரியர்கள் மகிழ்ச்சியோடு இருந்தனர். 'இப்படியான நல்ல மாற்றங்களும் நடக்கிறதா?' என்ற வியப்பும் எழாமலில்லை.

ஆனால் 24.09.97 புதன்கிழமை பழைய படி வேதாளம் முருங்கை மரத்தில் தாவியது. அன்றிரவு சுயாதீன தொலைக்காட்சியில் பிரபு-பானுப்பிரியா நடித்த 'உழவன்' படம் காண்பிக்கப்பட்டது. திரைப்படப் பிரியர்களுக்கு செம கடுப்பு.

ஏற்கனவே சுயாதீன தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்ட திரைப்படத்தையே மறுபடி காண்பித்து வெறுப்பேற்றினார்கள். அப்படத்தில் உள்ள தரம் என்ன? என்பதும் புரியவில்லை. தமிழ்நாட்டில் படு தோல்வி கண்ட அத் திரைப்படத்தை மீண்டும் மீண்டும் காண்பிக்குமளவுக்கு அதில் உள்ள தரம் என்னவோ? மீறும் திருந்தவேமாட்டார்கள். யாரப்பா அந்த தரம் காணும் குழு?

# ஷெல் விதைக்கும் மரணம்!



வன்னியில் மாங்குளம் பகுதியில் நடைபெற்ற ஆட்டிலெறி ஷெல் வீச்சில் பலியான ஆசிரியை: தலை பிளந்திருக்கிறது. மனைவியின் நிலை கண்டு உணர்விழந்து விழுந்துகிடக்கிறார் கணவர்.

# மன்னாரில் விஞ்ஞான தினம்

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்ட விஞ்ஞான தின நிகழ்ச்சிகள் 22.09.97 அன்று மன்னார் நகர மண்டபத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.சீ.அப்துல் ஹக் தலைமையில் நடைபெற்றது.

மன்னார் லயன்ஸ் கழகத்தலைவர் எஸ்.யூ.சந்திரகுமார் சிறப்புரை நிகழ்த்தினார்.

'இன்டர் நெட் ஓர் அறிமுகம்' என்ற தலைப்பில் கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் எஸ்.மோகன்ராஜ் உரையாற்றினார்.

மன்னார் மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி திருமதி ஆர்.யூட், 'எய்ட்ஸ்' பற்றி சிறப்புரை நிகழ்த்தினார்.

மதிய போசன இடைவேளையின் பின்னர் மாணவர்களுக்கிடையேயான பேச்சுப் போட்டி, விஞ்ஞான வினா-விடை நிகழ்ச்சி என்பன நடைபெற்றன.

இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தின் தவிசாளர் கலாநிதி விக்னராஜா வரவேற்புரை நிகழ்த்தினார்.

இவ்வைபவத்திற்கு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.மரிய தாசன் குரூஸ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

விழா ஏற்பாட்டாளரும் விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளருமான ஜே.ஈ.ரி. டயஸ் நன்றியுரை நிகழ்த்தி விழாவினை நிறைவு செய்தார்.

# தமிழ் புறக்கணிப்பு!

கம்பஹா மாவட்டத்தின் பிரதான நகரங்களுள் ஒன்றாக விளங்கும் 'நிட்டம்புவ' நகர மத்தியில் அமைந்துள்ள மக்கள் மயப்படுத்தப்பட்ட பஸ்நிலையம், தனியார் பஸ் நிலையம் ஆகியவற்றில், பஸ் வண்டிகள் புறப்படும் இடங்கள், நேரங்கள் என்பன தனிச் சிங்களத்திலேயே பொறிக்கப்பட்டுள்ளன.

தமிழில்-அறிவிப்புப் பலகைகள், இல்லாததால் சிங்களம் தெரியாத தமிழ்-முஸ்லிம் பாமர மக்கள் பெரிதும் சிரமப்படவேண்டியுள்ளது. 'அத்தனகல்ல' பிரதேச சபையில் உறுப்பினர்களாகவுள்ள தமிழ்பேசும் அங்கத்தவர்கள் இது விடயமாக ஆவன செய்ய வேண்டுமென இத்தால் 'தினமுரசு' வாயிலாக வேண்டுகோள் விடுக்கப்படுகிறது.

எம்.எச்.

# மூடப்பட்டுள்ள வாசகசாலை

கம்பஹா மாவட்டம்-அத்தனகல்ல தொகுதியிலுள்ள 'திஹாரிய' முஸ்லிம் வட்டாரத்தில் இயங்கி வந்த வாசகசாலை நீண்ட நாட்களாக மூடப்பட்டுள்ளது. ஞாயிறு தினங்களில் மட்டும் பத்திரிகை படிக்கும் வாசகர்களின் நலன் கருதி சிறிது நேரம் நூலகம் திறந்து வைக்கப்படுகிறது.

நூலகத்திலுள்ள பெறுமதிவாய்ந்த நூல்கள் சஞ்சிகைகள் பழுதடைந்துள்ளன.

இப்பிரதேச வாசகர்கள் சுற்றுப் புறக்கிராமங்களிலுள்ள நூல் நிலையங்களை, வாசகசாலைகளை நாடிச் செல்ல வேண்டியுள்ளது.

எம்.எச்.

# எதிரான பிரசாரம் செய்யத் தடை!

## இராணுவ அதிகாரி தொடுத்துள்ள வழக்கு

'அரசாங்கம் முன்வைத்துள்ள அரசியல் தீர்வு யோசனைகள் இந்நாட்டின் இனப் பிரச்சனையைத் தீர்த்துவைக்கப்போவதில்லை; மென்மேலும் இன மோதல்களையே ஏற்படுத்தும்' என்று தனது கருத்தை வெளிப்படுத்தியமையினால் தனது அடிப்படை உரிமைகளுக்கு குந்தகம் ஏற்படும் வகையில் இந்நாட்டின் இராணுவத்தளபதி ரோகன் எஸ்.தலுவத்த நடந்து கொண்டார் என்று உயர்தர இராணுவ அதிகாரி ஒருவர் உச்ச நீதி மன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

சிறிலங்கா இராணுவத்தின் தொண்டர் படை அணியைச் சேர்ந்த லெப்டினன்ட் கேணல் ஏ.எல்.அமரசேகர என்பவரே இவ் வழக்கினைத் தாக்கல் செய்துள்ளார். இராணுவத் தளபதியுடன் வெலிஓயாவிலுள்ள 12வது படை அணியின் தலைவர் பிரிகேடியர் ஹிரான் ஹலங்கொடவையும் தனது அடிப்படை உரிமையை மறுக்கும் எதிரிகளாக அவர் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

அரசாங்கம் சமாதானத் தீர்வுக்கான ஆலோசனைப் பொதியை அறிவித்த காலத்திலிருந்து அதனைத் தான் எதிர்த்து வந்திருப்பதாகவும் தனது கருத்தைப் பகிரங்கமாகப் பலரிடம் கூறிவந்திருப்பதாகவும் கேணல் அமரசேகர தெரிவித்தார்.

ஆனால் வெலிஓயாப் பிரதேசத்தை அண்டிய கிராமப்புறங்களுக்குச் சென்று தனது கருத்தைக் கூறுவதற்கு பிரிகேடியர் ஹலங்கொட இடையூறாக இருந்து வருவதாகவும் கூறுகிறார்.

தனது சொந்த அரசியல் கருத்துக்களைக் கூறுவதற்குத் தனக்குரிய உரிமைகளுக்கு இவர்கள் தடைவிதிக்கின்றனர். ஆகவே இவ்வாறு தடைசெய்வதை நீதிமன்றம் தடுக்க வேண்டும் என்று தனது கோரிக்கையில் கேணல் அமரசேகர கேட்டுள்ளார்.

# கசிப்புக்குத் தடை!

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கோட்டைக் கல்லாற்றைச் சேர்ந்த இளைஞர்கள் குழுவொன்றை அமைத்து கசிப்புத் தடை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

கடந்த இரண்டு வாரங்களாக இடம் பெற்று வரும் இந்நடவடிக்கையின்போது கசிப்பு உற்பத்தியாளர்களின் உபகரணங்கள் பல நொறுக்கப்பட்டன. வியாபாரிகளிடமிருந்து கசிப்புக் கொள்கலன்கள் பறிமுதல் செய்யப்பட்டு அவை அழிக்கப்பட்டன.

அரச அதிகாரிகளின் ஆலோசனைகளுடன் இடம் பெற்றுவரும் கசிப்புத் தடை இயக்கத்துக்குப் பொது மக்களும் ஆதரவு நல்கி வருகின்றனர்.

இளைஞர்களின் முயற்சியைச் சண்டித்தனம் மூலம் தடுக்க முயன்ற சில கசிப்பு உற்பத்தியாளர்கள் விடுதலைப் புலிகளால் எச்சரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.


## சித்தர் மாந்திரீகம்

அதிஷ்ட கரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒருதடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர் களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும் திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

1ந் திகதி முதல் 20ந் திகதி வரை தொடர்பு

SHAKTHY SARAVANA,
8/2, SRI SIDDARTHA ROAD,
KIRILAPONE, COLOMBO-5.
TELE PHONE: 823465.
(பொலிஸ் நிலைய எதிரில்)

21ந் திகதி முதல் 30ந் திகதி வரை தொடர்பு

SHAKTHY SARAVANA,
82, MANIKKAVASAGAR ROAD,
TRINCOMALEE.
TELE PHONE: 026-20347

வியாழன் விடுமுறை

## விளம்பரப் பகுதி

## காண்டம்

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

ரிஷி. S.மணி

மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

S. MANI
144 2/1, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு - 6.
T.P. 586218

## மனோதத்துவ வைத்தியம்

பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr. P. ஆறுமுகம் அவர்களை
கீழ்காணும் இடங்களில் சந்திக்கலாம்.

கல்முனை ஒக்டோபர் 11, 12, 13, 14 T.M.M.அமைவிலும் T.P. 065 - 29329
ஓட்டமாவடியில் ஒக்டோபர் 4, 5 ஆம் திகதிகளில்
Dr. முகைக்கின் டிஸ்பென்சரி, ஓட்டமாவடி

கொழும்பில் அகமட் டூரிஸ்ட் இன்னில்
ஒக்டோபர் 19 முதல் 30 வரை சந்திக்கலாம்

கொழும்பில் முன்கூட்டியே பதிவு செய்யலாம்.
கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No. 078 - 71101
தொலைபேசி: 436383, 438390

## பிறந்தநாள் வாழ்த்து மற்றும் விளம்பரங்கள் பிரசுரிக்க வேண்டுமாயின்

முன்கூட்டியே தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகளுக்கு:- விளம்பர முகாமையாளர் தினமுரசு வாரமலர், த.பெ.இல.1772, கொழும்பு.

முன்னதாக இடத்தைப் பதிவு செய்து ஏமாற்றத்தைத் தவிருங்கள். நிர்வாகி

## 'மந்திரயோகி' மாந்திரீக மருத்துவம்

INTERNATIONAL DIVINE MEDICAL SERVICES INDIAN CLINIC

APPROVED CHARITY அரசாங்கப் பதிவு இல. HA14/BT/176

"எல்லாப்புகழும் இறைவனுக்கே"

காம-காலமைனினால், தீயசக்திகளினால், தீவினைகளினால் தீராத உடல்மனநோய்கள், காதல், திருமணம், தொழில், வெளிநாட்டுப் பிரயாணம் வேறுகாரியத்தடைகளும், காதலர்கள் ஒன்றுசேர முடியாமை, கணவன் மனைவி குடும்பப்பிரச்சினைகள், வேண்டியவர்கள் வெறுத்தல், பிரிந்து செல்லல், வேறு பிரச்சினைகளும் ஏற்படலாம். இலங்கையருக்கு இமயமலைச் சித்த முனிவர்கள் கையாண்ட கைகண்ட புராதன பாரம்பரிய மருந்து, மந்திர யந்திரவசியங்களினால் நிவாரணம் பெற்று இன்பமாக வாழ, தகாத உறவை, போதை வஸ்த்தை மறப்பிக்க, வேறு (மருத்துவ) காரியங்களுக்கு வரமுடியாதவர்கள், வெளிநாட்டவர்கள் மஹா சக்தி உபாசகர் "மந்திரயோகி" டாக்டர் சக்தியானந்தபாவாவிற்கு [(D.H.M.D.Ac) (இலங்கை) M.B.B.S.(H).S.M.P (இந்தியா)] முழுப்பெயர்களுடன் கோரிக்கைகளை எழுதி கடிதம் அனுப்பி உடன்வேலை செய்தும் அதி ஆகர்ஷணசக்தி வாய்ந்த இறைபிரசாதப்பொருட்களை தபாலில் பெற்று விருப்பங்களை உடன் நிறைவேற்றிக் கொள்கின்றார்கள். 12ரூபா 50சத முத்திரைகள் இரண்டும் விரும்பிய குருதட்சணையும் (மணியோடர்) அனுப்புபவர்களின் விடயங்கள் முதலில் கவனிக்கப்படுகின்றன. விஷ(பாம்பு கடிக்கு மந்திரத்தினால் விஷமிறக்கி மருந்து கொடுத்து இலவசமாக அவசரசிகிச்சை அளிக்கப்படுகின்றன.

நாடவேண்டிய பெயர், விலாசம்



YOGI.DR.SACKTHYANANTHEBABA
GURUSACKTHY CENTRE (INDIAN CLINIC)
(KALLADY) BATTICALOA (P.O), SRI LANKA.

குருசக்தி நிலையம், (பிள்ளையார் கோவில் வீதி), (வேலூர்), கல்லடி-மட்டக்களப்பு, இலங்கை.

## உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

எப்பேர்ப்பட்ட வியாதியாயினும் சரி உடனே என்னை சந்தியுங்கள்



K. சிவசுப்பிரமணியம்
M.I.H. Ind. S.M.P.

எவ்வளவு நாள்பட்ட வியாதியானாலும் சரி. காலதாமதம் செய்யாமல் கீழ்கண்ட வியாதிகளுக்கு நேரில் கண்டு ஆலோசியுங்கள். நேரில் வர முடியாது போனால் கடிதம் மூலம் தெரிவித்துக் கொள்ளுங்கள்.

ஆஸ்மா, க்ஷயம், இளைப்பு, பீனிசம், தலைவலி, மலேரியா, கண்டமாலை, சொறி, சிரங்கு, பாண்டு, ரோகை, காக்கை வலிப்பு, வாதம், நீரிழிவு, மூலரோகங்கள், இருதய நோய்கள், இடுப்புவலி, நெஞ்சு எரிவு, குடல்வாய்வு, நரம்புத் தளர்ச்சி, வீரியக் குறைவு, இரத்தமின்மை, சொப்பன ஸ்கலிதம், பெண்களுக்கு ஏற்படும் சூதக வாய்வு, மாசம் முன், பின் காணுதல், சூதகவலி, பிள்ளை இல்லாமலிருத்தல் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் சகல வியாதிகளுக்கும் உத்தரவாத சிகிச்சை அளிக்கப்படும்.

வார நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையிலும் விடுமுறை தினங்களில் காலை 9 மணி முதல் பகல் 12 மணி வரை வைத்தியரை சந்திக்கலாம்.

## முருகானந்தா வைத்தியசாலை

No. G/02, கொழும்பு மத்திய சுப்பர் மார்க்கெட், (நிலமாடி) மீன்கடை மேல். கொழும்பு - 11.

சகல விதமான வாத்தியக் கருவிகளையும் உதிரிப் பாகங்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும் அவற்றை உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ளவும் நாடுங்கள்

சங்கீதப் புத்தகங்களும் விற்பனைக்கு உண்டு



SAI SANGEETHA
L.G 123, Peoples Park, Gaswork St,
Colombo -11. Tel: 445102

## மலையாள மாந்திரிகம்





மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச் சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது பிறந்த திகதி மாதநேரம் வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடை நீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
பி.கே. சாமி J.D.G.A.N&JP
ஸ்ரீ துர்காதேவி மாந்திரிக உச்சாட்ட பீடம்
இல. 162, கொட்டாஞ்சேனை வீதி, மே பில்ட் ரோட், கொழும்பு-13

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464
Tel-00941431137
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்-
342463-344531

## BRIGHTன் தபால் மூலம் கல்வித் திட்டம்

மூன்றே மாதங்களில் ஆங்கிலம்/சிங்களம் பேச, எழுத, வாசிக்க கற்றுத்தரப்படும் விபரங்களுக்கு கீழ்காணும் விண்ணப்பத்துடன் தொடர்பு கொள்க

பெயர்:........................
விலாசம்:......................

BRIGHT BOOK CENTRE (PVT)LTD
S-27, FIRST FLOOR, P.O.BOX 162,
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX
COLOMBO 11. TEL:434770

## ரெறாசோ ஷிப்ஸ்

(TERRAZZO CHIPS)
★ கலர்பவுடர் (Pigments) (Holland, Germany)
★ வெள்ளை சீமெந்து (Asano)
ரூபா 9/- க்கு மேல்

றம்சன்ஸ்

443, பழைய சோனகத் தெரு.
கொழும்பு - 12.
தொலைபேசி - 431511, 434411




படிப்பகம்

www.padippakam.com

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

இரத்மலானையில் புலிகளின் மறைவிடம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டதை அடுத்து தலைநகர பாதுகாப்புக்கள் உஷார்படுத்தப்பட்டுள்ளன.

தலைநகர சோதனை அரண்கள் பற்றி நன்கு ஆராய்ந்து அவற்றுக்கேற்ப கொழும்புக்குள் பிரவேசிப்பதற்கும், வெளியேறுவதற்குமான பாதைகளை புலிகள் கண்டறிந்து வைத்திருந்தனர்.

இரத்மலானையில் கைது செய்யப்பட்ட புலிகள் இயக்க உளவுப் பிரிவைச் சேர்ந்த இருவர் மூலம் மேற்கண்ட தகவலை பெற்றதை அடுத்து, தலைநகரில்

# வலையில் இருந்து தப்பிய புலிகள்!

புதிய சோதனை அரண்கள் முளைத்திருக்கின்றன.

இரத்மலானை விமானத் தளத் தாக்குதல் திட்டத்தின் முக்கிய சூத்திரதாரிகள் பாதுகாப்புத் தரப்பினர் வீசிய வலையில் சிக்காமல் நழுவிச் சென்றுவிட்டனர்.

இரத்மலானையில் புலிகளின் உளவுப்பிரிவினர் இருவர் கைது செய்யப்பட்டவுடன் அத் தகவல்களும், பரபரப்பான விசாரணைச் செய்திகளும் உடனுக்குடன் வெளியே தெரியப்படுத்தப்பட்டன.

'ஜயசிக்குறுய்' உட்பட வடக்கு-கிழக்கில் படை நடவடிக்கைகள் மந்த நிலையில் இருந்த நேரத்தில், இரத்மலானை விமானத் தளத் தாக்குதல் திட்டம் முறியடிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவிப்பது மூலம் மக்களின் கவனத்தை ஈர்க்க முயன்றனரோ தெரியவில்லை.

விமானத் தளத் தாக்குதல் திட்டத்தை முறியடித்ததை புலிகளுக்கு ஏற்பட்ட தோல்வியாக சித்தரிக்கும் பிரசார ஆர்வத்தில், தலைநகரில் இருந்த புலிகளை அரசாங்கமே உஷார்படுத்திவிட்டது. அதனால் அவர்கள் சுலபமாக வலையில் இருந்து தப்பிவிட்டனர் என்று ஒரு கருத்து நிலவுகிறது.

ஆனால், உளவறியச் சென்ற தங்கள் ஆட்கள் இருவர் திரும்பவில்லை என்றதுமே, குறிப்பிட்ட தாக்குதல் திட்டம் தொடர்பான சூத்திரதாரிகள் உஷார் அடைந்திருப்பர்.

ஆயுதங்களைவிட ஆட்கள் தப்புவதுதான் முக்கியம். இரத்மலானையில் இருந்த ஆயுதங்களை இடம்மாற்ற அவகாசம் போதாது என்பதால் அந்த முயற்சியில் ஈடுபடவில்லை.

கைது செய்யப்பட்ட புலிகள் இருவர் மற்றும் வர்த்தகர் ஆகியோருக்கு இரத்மலானை மறைவிடம் பற்றித்தான் தெரிந்துள்ளது. புலிகளின் ஏனைய மறைவிடங்கள் தெரிந்திருக்கவில்லை.

கொழும்பில் உள்ள அரசியல் பிரமுகர் ஒருவரின் இல்லத்துக்கு இரத்மலானையில் இருந்தும், தெமட்டகொடவில் இருந்தும் செல்வதற்கான வீதி வரைபடம் ஒன்று இரத்மலானை வீட்டில் கண்டெடுக்கப்பட்டதாம்.

சோதனை அரண்கள் வழியாக செல்லாமல் குறிப்பிட்ட இலக்கை அடையக்கூடிய வகையில் பாதைகள் தெரிவு செய்யப்பட்டிருந்தனவாம்.

அதனால் தெமட்டகொடையிலும் புலிகளின் மறைவிடம் உள்ளதா என்று கண்டறிய கைதானவர்களிடம் துருவல் நடந்ததாம். அவர்களுக்கு அது பற்றித் தெரிந்திருக்கவில்லை.

**முக்கிய சூத்திரதாரிகள் வலையில் சிக்காமல் நழுவிவிட்டதால் தலைநகரப் பாதுகாப்புக்கான அச்சுறுத்தல் விலகவில்லை. தாக்குதல் அபாயம் இருந்து கொண்டே இருக்கிறது.**

புத்தளம் சார்ந்த கடற்கரைப் பகுதிக்கு ஊடாகவே கடற்புலிப் படகுகளில் ஆயுதங்கள் கொண்டுவந்து இறக்கப்படுவதாக பாதுகாப்புத் தரப்பினர் சந்தேகிக்கின்றனர்.

சந்தேகத்தின் பேரில் உடப்பில் சிலர் கைது செய்யப்பட்டனர். ஆனாலும் போதிய தகவல்கள் பெறப்பட்டதாகத் தெரியவில்லை.

வடக்கு-கிழக்கு கடலிலும், கிழக்கு மாகாணத்தை ஒட்டிய கடற்பகுதியிலும் பெரும்பான்மை இன மீனவர்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்த புலிகள் சில நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கிழக்கு மாகாணத்தை ஒட்டியதாக அமைந்துள்ள பானம என்ற இடத்தில் 18.10.97 அன்று 20 மீன்பிடிப் படகுகள் தீயிட்டு எரிக்கப்பட்டன. **கிழக்கு கடலில் தமது நடமாட்டங்களைப் பற்றிய தகவல்கள் சிங்கள மீனவர்கள் ஊடாக கடற்படையினருக்கு எட்டலாம் என்ற அச்சமே இவ்வாறான எச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

போக்குவரத்து, விநியோகம் என்பவற்றுக்கு உபயோகமாக கடற்பகுதியை தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதில் புலிகள் பிரதான கவனம் செலுத்தி வருகின்றனர்.

**வடக்கு-கிழக்கு பகுதிகளுக்குள் உள்ள புலிகளின் தளங்களுக்கு மட்டுமல்லாமல், தலை நகரில் உள்ள புலிகளின் இரகசிய தளங்களுக்கும் கடல் மூல விநியோகம் மேற்கொள்ளப்படுவதுதான் பாதுகாப்புத் தரப்புக்கு பெரும் தலைவலியாக உருவெடுத்திருக்கிறது.**

இலங்கைக் கடற்பகுதி முழுவதையுமே மனித நடமாட்டமில்லாத பகுதியாக பிரகடனம் செய்தால் கூட புலிகளின் கடற் போக்குவரத்தை கட்டுப்படுத்த இயலாது.

வடக்கு-கிழக்கு கடற்பகுதிக்கு வெளியே உள்ள கடற்பிராந்தியத்தில் கடற்புலிகளின் அச்சுறுத்தல் இருந்தால்கூட அதனை ஒப்புக் கொள்வது அரசுக்குத்தான் நஷ்டம்.

வெளிநாட்டு வர்த்தகக் கப்பல்கள் வருவது தடைப்பட்டுவிடும். வர்த்தக நடவடிக்கைகளும் பாதிப்புக்கு உள்ளாகும்.

**புல்மோட்டையில் 'இல்மனைட்' ஏற்றிய 'கோர்ட்டியலைற்' கப்பல் தாக்கப்பட்ட செய்தியைக்கூட வெளியுலகம் முன்பாக பெரிதுபடுத்திக் காட்ட அரசு விரும்பாததும் அதனால் தான்.**

வர்த்தகக் கப்பல்களை புலிகள் தாக்குகிறார்கள் என்று கூறி உலக கண்டனத்தை திரட்டுவதால் ஏற்படும் இலாபத்தைவிட, அத்தகைய பிரசாரத்தால் வர்த்தக தொடர்புகள் பாதிக்கப்பட்டால் ஏற்படும் நஷ்டம்தான் பெரிது என்பதால் பேசாமல் இருந்து விட்டனர்.

இன்னொரு பாரிய விவகாரத்திலும் இலங்கை அரசு மெள்ளவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் முழித்துக் கொண்டிருக்கிறது.

32 ஆயிரத்து 400 மோட்டர் குண்டுகளுடன் சிம்பாப்வேயிலிருந்து புறப்பட்ட ஆயுதக் கப்பல் பற்றி புதிய செய்திகள் வெளியாகியுள்ளன.

காணாமல்போன ஆயுதக் கப்பல் வெற்றுக் கப்பலாக, பிரான்ஸ்' கடற்பகுதியில் தரித்து நிற்பதாக முதலில் செய்திகள் வெளியாகின.

தற்போது முன்னர் எக்ஸ்ரே ரிப்போட்டில் தெரிவித்த ஊகத்தை உறுதிப்படுத்துவதுபோல செய்திகள் கிடைத்துள்ளன.

சிம்பாப்வேயில் இருந்து வெளியாகும் பத்திரிகை ஒன்று கப்பல் விவகாரம் தொடர்பாக செய்தி வெளியிட்டுள்ளது.

**புலிகள் வர்த்தக கப்பல் நிறுவனம்போல நாடகமாடி இலங்கைக்கு ஆயுதம் கொண்டு செல்லும் குத்தகையை எடுத்தனர். அதன்படி சிம்பாப்வேயிலிருந்து தமது கப்பலில் குண்டுகளை ஏற்றிக்கொண்டு மாயமாகிவிட்டனர் என்று அந்தப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.**

முன்னுக்குப் பின்னர் முரணான செய்திகளும் பலவித ஊகங்களும் கப்பல் விவகாரத்தில் கூறப்பட்டு வருகின்றன. எப்படியிருப்பினும் மோட்டார்குண்டுகள் புலிகளின் கையில் தான் உள்ளன என்பது உறுதியாகியுள்ளது.

இந்திய, இலங்கை கடற்படைகளின் கண்காணிப்புக்கு அப்பாற்பட்ட கடற்பகுதியில் புலிகளின் கப்பல் வந்து தரித்து நின்றிருக்கிறது.

கடற்புலிகளின் அதிவேக விசைப் படகுகளில் மோட்டார் குண்டுகள் ஏற்றப்பட்டு புலிகளின் தளத்துக்கு கொண்டு செல்லப்பட்டன என்று நம்பப்படுகிறது.

81 எம்.எம்.ரக மோட்டார்களுக்கு உரிய குண்டுகளே சிம்பாப்வேயில் இருந்து அனுப்பப்பட்டிருந்தன.



# மிகையான தகவல்களும் தவறான நியாயங்களும்

வன்னி யுத்தத்தில் மோட்டார் குண்டுகள் தான் புலிகளுக்கு பெருமளவு உதவிவருகின்றன. சாதாரண நாட்களில் தினமும் பத்து மோட்டார் குண்டுகளாவது புலிகளால் ஏவப்படுகின்றன.

சண்டை உக்கிரமாக நடக்கும் நாட்களில் 500 க்கு மேற்பட்ட மோட்டார் குண்டுகள் ஏவப்படுகின்றன.

ஆனால் 'ஜயசிக்குறுய்' படையினர் முன்னேற முடியாமல் உள்ளதை நியாயப்படுத்துவதற்காக கள நிலவரம் பற்றிய மிகையான செய்திகள் படைத்தரப்பால் கூறப்படுவதும் உண்டு.

புலிகள் தினமும் மூவாயிரம் ஷெல்களை ஏவுகின்றனர் என்று 'சண்டே ரைம்ஸ்' தகவல் வெளியிட்டிருந்தது. படைத்தரப்பினர் கூறிய தகவலையே வெளியிட்டிருக்க வேண்டும். தினமும் மூவாயிரம் ஷெல் என்ற கணக்குப்படி பார்த்தால் வன்னிச் சண்டை தொடங்கிய ஐந்து மாதங்களுக்குள் நாலரை லட்சம் ஷெல்களை புலிகள் ஏவியிருக்க வேண்டும்.

கைப்பற்றிய ஷெல்களும் போதுமானதாக இருந்திருக்காது. சொந்தமாக உற்பத்தி செய்தால்கூட அந்தளவுக்கு வேகமாக உற்பத்தி செய்ய இயலாது.

**இதுவரை 'ஜயசிக்குறுய்' படையினருக்கு எதிராக மூவாயிரம் ஷெல்களைக்கூட புலிகள் ஏவியிருக்கமாட்டார்கள் என்பதே உண்மையான விபரமாகும்.**

'ஜயசிக்குறுய்' படையினருக்கு எதிரான இதுவரை கால சமரில் புலிகள் ஒட்டுமொத்தமாக ஏவிய ஷெல் கணக்கை, புலிகள் தினமும் ஏவிவருவதாக படைத்தரப்பு கணக்கு கூறியிருப்பதுதான் வேடிக்கை.

களத்தில் ஏற்படும் இழப்புக்கள் பற்றிய தகவல்களை சரியாக வெளியிடாத படைத்தரப்பினர், தாங்கள் முன்னேறுவதற்கு புலிகளின் மோட்டார் ஷெல் மழைதான் தடையாக இருப்பதாக கூறிக்கொள்கின்றனர்.

**அதுமட்டுமல்லாமல் படையினரின் உக்கிரமான ஷெல் தாக்குதல்களை நியாயப்படுத்துவது போலவும் இச் செய்திகள் அமைந்துள்ளன.**

படையினர்கூட சண்டை உக்கிரமாக நடக்கும்போதும், புலிகள் ஊடறுப்பு நடத்தும் போதும்தான் ஆயிரக்கணக்கான ஷெல்களை ஏவுகின்றனர். அப்படியில்லாமல் தினமும் ஆயிரம் ஷெல்களை படையினர் ஏவினால் படையினரிடம் உள்ள ஷெல்கள் எப்போதோ தீர்ந்து போயிருக்கும்.

சிம்பாப்வேயிலிருந்து வந்த கப்பலில் இருந்த 32 ஆயிரத்து 400 குண்டுகளும் புலிகளிடம் சேர்ந்திருப்பதால், நீண்டகாலத்துக்கு மோட்டார் தாக்குதல்களை, புலிகள் தொடர முடியும்.

இவைதவிர முல்லைத்தீவு முகாம் தாக்குதல், மற்றும் ஜயசிக்குறுய் படையினர்மீதான ஊடறுப்புத் தாக்குதல்களில் கைப்பற்றப்பட்ட ஆயிரக்கணக்கான ஆட்டிலெறி ஷெல்களும் புலிகளின் கையிருப்பில் உள்ளன.

81 எம்.எம். மோட்டார்கள் தவிர 100 எம்.எம்.மோட்டார்கள் உட்பட பல ரக மோட்டார்களும் புலிகளிடம் இருக்கின்றன. புலிகளின் உள்ளூர் தயாரிப்புக்களும் உள்ளன.

பாரியளவில் முன்னேறும் படையினரை **நிலைகுலைய வைக்க ஷெல் தாக்குதல் நடத்துவது, அதே சமயம் நெருங்கி வந்து குறும்தூர ஆயுதங்களால் அதிரடி நடத்துவது என்ற ரீதியில்தான் ஜயசிக்குறுய் படையினரை புலிகள் எதிர்கொண்டு வருகின்றனர்.**

நெருங்கி வந்து நடத்திய தாக்குதல்கள் மூலமே டாங்கிகள் தகர்க்கப்பட்டன. டாங்கிப் படையணியின் முன்னேற்றம் தடுக்கப்பட்டது.

ஆர்.பி.ஜி. ரொக்கட் லோஞ்சர்கள், கிரனேட் ஏவிகள் போன்றவையும் குறும்தூர ஆயுதங்களாகும். இவற்றால் டாங்கிகளை தாக்கலாம்.

மோட்டார்கள், ஆட்டிலெறிகள் ஒரு நிலபரப்பில் படையினர் குவிந்து முன்னேற விடாமல் தடுக்கக் கூடியவை. ஆயினும் டாங்கிகள், கனரக வாகனங்கள் என்பவற்றை கவசமாக பாவித்து படையினர் முன்னோக்கி நகர இயலும்.

அதுதவிர ஆட்டிலெறிகள் மோட்டார்கள் எங்கிருந்து ஏவப்படுகின்றன என்பதை ஷெல்கள் பறந்துவரும் கோணத்தை வைத்து கணிப்பிட்டு, படையினரும் ஷெல்களை ஏவ முடியும். விமானப் படையினரும் தாக்குதல் நடத்துவர்.

எனவே ஆட்டிலெறி, மற்றும் மோட்டார் தாக்குதல்களை மட்டும் புலிகள் சார்ந்திருந்தால் படையினர் தற்போதுள்ளதைவிட பல மடங்கு தூரம் முன்னேற முடிந்திருக்கும்.

மோட்டார் ஷெல் தாக்குதல் ஒருபுறம் நடக்க, புலிகளின் படையணிகள் நெருங்கி தாக்குவதும், அதற்கேற்ப வன்னியின் புவியியல் சாதகமும்தான் படையினரின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்தியுள்ளன.

**மரபுப் போர் ஆயுதங்களான ஆட்டிலெறிகள், மோட்டார்கள் என்பவற்றின் பிரயோகமும், கெரில்லா பாணியில் துரித தாக்குதல் நடத்தும் புலிகளின் அணிகளது தேர்ச்சியும் ஒன்றுகலந்து வெளிப்படும் போர்முனைதான் வன்னிக் களமாகும்.**

ஆனால் புலிகளது அணிகள் சண்டையிடும் ஆற்றலை வெளிப்படையாக ஒப்புக்கொள்ள தயங்குவதால், புலிகளிடமுள்ள மோட்டார்களும், ஆட்டிலெறிகளும்தான் படையினர் முன்னேறவிடாமல் செய்கின்றன என்று கூறப்படுகிறது.

வன்னியில் புலிகளின் மோட்டார் ஷெல்களால்தான் படையினருக்கு இழப்பு அதிகம் என்றும் 'சண்டே ரைம்ஸ்' இராணுவ ஆய்வாளர் குறிப்பிட்டிருந்தார்.

அது முற்றிலும் தவறான ஒரு தகவலாகும். புலிகளின் மூன்று ஊடறுப்பு தாக்குதல்கள் மூலமே படையினருக்கு பாரிய இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

ஷெல் தாக்குதல்கள் நடைபெறும் போது குவிந்து பெரும் தொலைவினராக முன்னேறி வருவதுதான் கடினம். ஏனைய சமயங்களில் பாதுகாப்பு அரண்களுக்குள் இருந்து கொள்ளலாம். ஆனால் திடீர் திடீர் என்று மோட்டார் ஷெல்கள் எப்போது வேண்டுமானாலும் வந்து விழக்கூடும் என்பதால் படையினர் தமது கட்டுப்பாட்டு பகுதிகளில் நிம்மதியாக நடமாடித்திரிய முடியாது. அதனால் உளவியல் தாக்கங்கள் ஏற்படும்.

'ஜயசிக்குறுய்' படையினரின் மனவலிமையையும், படைபலம் மற்றும் படைக்கலப் பலத்தையும் அழித்தொழிப்பு மற்றும் ஊடறுப்பு சமர்கள் மூலமே புலிகள் பாரிய சேதங்களை ஏற்படுத்தி உள்ளனர்.

தாண்டிக்குளத்தில் நடைபெற்ற முதலாவது ஊடறுப்பின் பின்னர் படைத்தரப்பினர் வெகு உற்சாகமாகவே இருந்தனர்.

சண்டே ரைம்ஸ் பத்திரிகையின் இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் அப்போது பின்வருமாறு எழுதியிருந்தார்; "பிரபாகரன் இப்போது ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டும். அரசியல்வாதியாக மாறி வெளியே வரப்போகிறாரா? அல்லது தனது முடிவை தேடிக்கொள்ளப் போகிறாரா? என்பதை தீர்மானிக்க வேண்டிய கட்டம் வந்திருக்கிறது.

அதுமட்டுமல்ல, மணலாறு முகாம் தாக்குதல் தோல்வியில் முடிந்தபோது அதனை 'பிரபாகரனின் வோட்டலூ' என்று இக்பால் அத்தாஸ் விபரித்திருந்தார்.

பொதுவாக தென்னிலங்கை சிங்கள, ஆங்கில விமர்சகர்கள் ஒரு போக்கை வெளிப்படுத்தி வருகின்றனர். புலிகள் ஒரு தாக்குதலை வெற்றிகரமாக நடத்தினால் படையினரை ஒருபிடி பிடித்துவிடுகின்றனர். புலிகளின் பலத்தையும் அளவுக்கு அதிகமாக புகழ்வர்.

படையினர் புலிகள்மீது ஒரு வெற்றிகரமான தாக்குதல் நடத்திவிட்டால் புலிகளின் பலத்தை குறைத்து மதிப்பிட்டு விளாசித் தள்ளிவிடுவர்.

**ஆனால் தற்போது உண்மை நிலவரங்களை ஓரளவு புரிந்துகொள்ள தலைப்பட்டுள்ளனர். இனவாதக் கண்ணோட்டத்தோடு போர் நிலவரங்களை நோக்குவோர் தவிர, ஏனைய சிங்கள, ஆங்கில விமர்சகர்கள் இன்றைய யுத்தம் அரசு நினைப்பது போல முடிவடையக்கூடியதல்ல என்பதை வெளிப்படுத்த ஆரம்பித்துள்ளனர்.**

கள நிலவரத் தகவல்களை பத்திரிகையாளர்கள் சுதந்திரமாகச் சென்று சேகரிக்க தடை இருக்கிறது. அப்படி இருந்தும்கூட புளியங்குளம் நோக்கி சில கிலோமீட்டர்கள் தூரம் செல்லவே படையினர் பலமாதங்கள் சிரமப்பட்டமை செய்தியாளர்களையும், விமர்சகர்களையும் வியப்பில் ஆழ்த்தியிருக்கிறது. அதனால் படைத்தரப்பினரால் வெளியிடப்படும் செய்திகள் கேள்விக்குள்ளாகி வருகின்றன.

இந்நிலையிலும்கூட படைத்தரப்பு பேச்சாளர் பிரிகேடியர் சரத்முனசிங்க **'புலிகளுக்கு அனுபவம் வாய்ந்த தலைமை இல்லை. அதனால் புலிகளுக்குள் முரண்பாடு நிலவுகிறது' என்று கூறியிருக்கிறார்.**

படைத்தரப்பின் செய்திகளின் நம்பகத்தன்மையை நிரூபித்தாக வேண்டிய இந்த நேரத்தில் அப்படி அவர் கூறியிருக்கத்தான் வேண்டுமா?

**அனுபவம் இல்லாத தலைமையால் வழிநடத்தப்படும் புலிகளை எதிர்த்து பல்லாயிரம் படைகளும், படு நவீன படைக்கலங்களுடன் இத்தனை காலமாக போரிடவேண்டி இருக்கிறதென்றால், படைத்தரப்பு தனது தகுதியைத் தானே குறைத்துக் கூறுவது போலாகிவிடும்.**

பிரசார ஆர்வ வேகத்தில் பிரிகேடியர் சரத்முனசிங்க அதனை கருத்தில் கொள்ளாமல் கூறிவிட்டார் போல் இருக்கிறது.

வெளியே என்ன கூறப்பட்டாலும் போர்க்கள நிலவரம் விரைவான வெற்றிகள் பற்றிய கனவுகளை கலைத்திருக்கின்றன என்பதே உண்மையாகும். ■

### நாரதர்



"கமிஷன் அறிக்கைக்கு ஏற்ற இடம் குப்பைத் தொட்டி" எண்டு போட்டாரே ஒரு போடு. சபாஷ் சரியான போடு! இன்னொரு அதிகாரமுள்ளவர் அதை ஏன் போய் வாங்கிக் கொண்டுவந்தவர்? மங்களமானவர் கருத்துப்படி பார்த்தால் அறிக்கை பெற்ற இன்னொருவர் செய்த பணி 'குப்பை பொறுக்குதல்' என்றல்லோ அர்த்தம்? என்னதான் இருந்தாலும் மங்களமானவர் அவரை இப்படிக் கிண்டல் பண்ணியிருக்கக்கூடாது.

**கூட்டான கட்சித் தலைவரில்** இருந்த கொஞ்ச நஞ்ச நல்லபிப்பிராயமும் தொலைந்து போச்சு. பண்டாரநாயக்கா நினைவு நாளுக்காக அரச ஆங்கிலப் பத்திரிகையில் கட்டுரை எழுதியிருக்கிறார். 'பண்டா-செல்வா ஒப்பந்தம் கிழிக்கப்பட்ட செய்தியையும், காலிமுகத் திடலில் உண்ணாவிரதமிருந்தவை தாக்கப்பட்டதை பண்டா ரசித்தவர்' எண்டும் சொல்லிச் சொல்லித்தானே முந்தி இளைஞர்களை உசுப்பேத்திவிட்டவை? இப்ப என்ன சொல்லுகினம்- 'தங்கள் அரசியலுக்காக அந்த நல்ல மனுசனைப் பற்றி இல்லாததும் பொல்லாததும் சொல்லி தாங்கள் சனத்தை ஏமாத்தினவை' எண்டு சொல்லுகினமோ? அல்லது 'மகளை ஏமாற்ற அப்பா புகழ்பாடுகினம்' எண்டு அர்த்தமோ? எப்படிப் பார்த்தாலும் ஏமாற்று, மோசடி என்ற பிரிவுகளின் கீழ்தான் இவை சேரும். இதுவும் சட்டப்படி தப்பில்லையோ?

**"தமிழ்க் கட்சிகளுக்கு** வேகம் போதாது. இலக்கறிந்து திட்டமிட்டு செயற்படும் உத்வேகம் காணாது என்பதெல்லாம் உண்மைதான். அந்த விடயத்தை சுட்டிக்காட்டி விமர்சிக்கும் சில

## அதிரடி அய்யாத்துரை

விமர்சகர்கள் மிஸ்டர் பண்டாரநாயக்காவை தீர்க்கதரிசி என்றெல்லாம் பக்கம் பக்கமாய் பாராட்டியது நியாயமோ? அரச ஆங்கிலப் பத்திரிகைகூட 'இனவாதிகள் நிர்ப்பந்தித்தால் அவர் ஏன் பணிந்தவர்?' எண்டு எடிட்டோரியல் எழுதும்போது, தமிழ் 'விமர்சகர்கள்' சிலர் துள்ளித் துள்ளி புகழ்மாலை போட்டது ஏனாம்? பச்சை அணி இருந்தால் டட்லி பற்றி புராணம். நீல அணி இருந்தால் பண்டா புராணம். இந்த விமர்சகர்களும் அரசியல்வாதிகளாக மாறினால் எங்களையும் தூக்கிச் சாப்பிட்டுப்போடுவினம்." இது தமிழ்க் கட்சி பிரமுகர் ஒருவரின் கிண்டல். நீங்கள் என்ன நினைக்கிறியள்?

**வடபகுதி புனரமைப்பு** பற்றி அதிகாரத் தரப்பார் மாநாடு நடத்தினவை. மூன்று தமிழ்க் கட்சிகள் ஆஜராகி இருந்தவை. கூட்டான கட்சி சார்பில் கலந்துகொண்ட சங்கரியார் எழுப்பிய பிரச்சனைதான் அதிகாரத்தரப்பாரை கடுமையாகச் சிந்திக்க வைச்சுப் போட்டுதாம். அதென்ன பிரச்சனை? அவரது உறவினர் ஒருத்தரை வவுனியாவில் இருந்து கொழும்புக்கு பத்திரமாக அழைக்க முடியாமல் இருப்பதைப் பற்றி தெட்டத் தெளிவாக எடுத்து விளக்கினாராம். கேட்டவை எல்லாம் புல்லரிச்சுப்போட்டினமாம். உள்ளே என்ன பேசினால் என்ன: 'வடபகுதி பயணிகள் நிலை பற்றி எடுத்துரைப்பு' எண்டுதானே செய்தி சொல்லப்பட்டது. அரசியலுக்கு அது போதாதோ?

**கிழக்கில் குடியிருப்புக்கள்மீது** பாய்ச்சல் நடத்திய காக்கி உடையணியினருக்குப் பொறுப்பானவர், ஒழுங்கீனல் தண்டனையாக அங்கு மாற்றம் செய்யப்பட்டிருந்தவராம். தப்புச் செய்யிற அதிகாரிகளை தண்ணியில்லாத காட்டுக்கு மாற்றவேணும் எண்டு கதைப்பது தெரிந்ததுதான். எங்கள் நாட்டில் வடக்கு-கிழக்குக்கு மாற்றல் செய்வதுதான் 'பணிஷ்மெண்ட்' போல கிடக்கு. இப்போது நடவடிக்கை எண்டு அவரை வேறு ஊருக்கு மாற்றியிருக்கினமாம். அப்படியெண்டால் இதுதான் புரமோஷன் எண்டமாதிரியல்லோ நினைக்க வேண்டிக்கிடக்கு! உப்பிடியெண்டால் இனி வடக்கு-கிழக்கு பணிஷ்மெண்டில் போறவை சண்டையில் மாட்டுப்படவேணுமோ, என்னாகுமோ, ஏதாகுமோ எண்டு பயந்து கொண்டிருக்கத் தேவையில்லை. சனத்தைப் பிடிச்சு ஒரு வாட்டு வாட்டினால் போதும்: வேறு நல்ல இடத்துக்கு மாற்றம் கிடைச்சுப்போடும். இந்த சூட்சுமத்தை வடக்கு-கிழக்குக்கு பணிஷ்மெண்டில் போறவை எல்லாம் அறிஞ்சுகொண்டால் சனத்தின் பாடு அதே பாடுதான் போங்கோ!

**பொதி பற்றி** அதிகாரத் தரப்பார் கூடி ஆராய்ந்தவையாம். பொதுக்கருத்து எட்டப்படவில்லையாம். இணைப்புக்கு பலர் எதிர்ப்பு தெரிவித்திருக்கினம். முடிவுகாண முடியாமல் கூட்டம் கலைந்ததாம். போக்குவரத்துக்கு பொறுப்பானவர் "உதெல்லாம் சரிப்படுவது மாதிரித் தெரியேல்லை" எண்டு நெருங்கியவர்களிடம் சொன்னாராம். முடிவுகள் எடுக்கப்பட்டதாகக் கூறப்பட்ட செய்திகள் வெறும் பூச்சுத்தானாம்!

**பொதி** போகும் போக்கைப் பார்த்தால் பழைய பாடல் ஒன்று ஞாபகத்துக்கு வருகுது.

"நந்தவனத்தில்  
ஓர் ஆண்டி  
நாலாறு மாதமாய்  
குயவனை வேண்டி  
கொண்டுவந்தான் ஒரு தோண்டி  
அதைக் கூத்தாடிக் கூத்தாடி  
போட்டுடைத்தாண்டி."


படிப்பகம்

www.padippakam.com

## அரசியல் தொடர்

# கட்டாய ஆட்சேர்ப்பு

## பயிற்சிமுகாம் அனுபவங்கள்

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அற்புதன்

"புலிகள் இயக்கத்தினருடன் பேச்சு நடத்த தயார். வடக்கு-கிழக்கு மாகாண சபை அதிகாரங்களை புலிகளுடன் பகிர்ந்து கொள்ளவும் தயாராக இருக்கிறோம்." என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். செயலாளர் நாயகம் க. பத்மநாபா அறிவிப்பு.

மேற்கண்ட செய்தியை இந்திய வானொலி தெரிவித்தது. இலண்டனில் உள்ள புலிகள் இயக்க அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் பேச்சு நடத்த தமது பிரதிநிதி ஒருவரையும் அனுப்பப்போவதாக பத்மநாபா கூறியுள்ளார் என்றும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

இத் தகவலை ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினரால் வெளியிடப்பட்ட 'செய்திகள்' என்ற பத்திரிகையும் வெளியிட்டிருந்தது.

1989ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் புலிகள் சார்பாக சுயேட்சைக் குழுவினருக்கு மாபெரும் வெற்றி கிடைத்த பின்னரே பத்மநாபா அவ்வாறு கூறியிருந்தார்.

உண்மையில் புலிகளோடு பேச்சு நடத்த எவ்வாறான முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. தாம் பேச்சுக்கு தயாரானவர்கள், புலிகள்தான் பேச்சுக்கு வருகிறார்கள் இல்லை என்று மக்களை நம்பவைக்கும் அரசியல் தந்திரம்தான் அது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்க தலைமை அலுவலகத்தில் புலிகள் இயக்க உறுப்பினர்கள் சிலர் பற்றிய விபரங்கள் அடங்கிய ஆவணம் (ஃபைல்) ஒன்று இருந்தது.



அந்த ஆவணத்தின் அட்டையில் ஓடிப்போனவர்கள் என்று எழுதிவைத்திருந்தனர்.

'ஓடிப்போனவர்கள்' என்று குறிப்பிட்டதுகூட பொருத்தமாகப்படவில்லை. அதனால் ஓடிப் போனவர்கள் என்பதில் 'ப்' என்ற எழுத்தை வெட்டிவிட்டு 'யே' எழுத்தைச் சேர்த்தனர். 'ஓடியே போனவர்கள்' என்றாகியது.

புலிகள் இயக்கத்தினர் இனிமேல் திரும்பிவரவே போவதில்லை, தலையெடுக்கவும் போவதில்லை என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர் எந்தளவுக்கு நம்பினார்கள் என்பதற்கு அது ஒரு உதாரணம்.

### பத்திரிகைத் தடை

யாழ்ப்பாணத்தில் இருந்து அப்போது மூன்று பத்திரிகைகள் வெளிவந்து கொண்டிருந்தன. முரசொலி, உதயன், ஈழநாடு.

ஈழநாடு பத்திரிகை அலுவலகம் முதலில் இலங்கைப் பொலிசாரால் தாக்கப்பட்டது. அதன் பின்னர் புலிகள் இயக்கத்தினரால் தாக்கப்பட்டது.

'ஈழநாடு' பத்திரிகைக் காரியாலயமும், அச்சியந்திரமும் புலிகளால் தகர்க்கப்பட்டதை ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினரும் கடுமையாகக் கண்டித்தனர்.

இரண்டு முறை அழிவுகளைச் சந்தித்தபின்னரும் 'எரிந்த சாம்பலில் இருந்து எழும் பீனிக்ஸ் பறவை' போல 'ஈழநாடு' தொடர்ந்து வெளிவந்து கொண்டிருந்தது.

1989 நாடாளுமன்றத் தேர்தலில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்க அத்துமீறல்களை யாழ் பத்திரிகைகள் ஓரளவு வெளியிட்டு வந்தன. ஈரோஸ் சுயேட்சைக் குழுவினரின் செய்திகளையும் வெளியிட்டு வந்தன.

நாடாளுமன்றத் தேர்தல் முடிவடைந்ததும் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த பத்திரிகைகள்மீது ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தின் கோபப் பார்வை திரும்பியது.

பல பெயர்களில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர் பத்திரிகைகள் வெளியிட்டனர். அவ்வாறு வெளியிட்டும்கூட திருப்தி ஏற்படவில்லை.

தமக்கு எதிரான செய்திகளை வெளியிட வேண்டாம் என்று ஈழநாடு பத்திரிகைக்கு எச்சரிக்கை விடுத்தது ஈ.பி.ஆர்.எல்.எஃப்.

எச்சரிக்கை பயன் அளிக்கவில்லை. யாழ் குடாநாட்டில் இருந்து எந்தவொரு பத்திரிகையும் வெளிவரக்கூடாது. தமது பத்திரிகை மட்டுமே வெளிவரவேண்டும். தமது பத்திரிகை மூலம் தாம் கொடுக்கும் செய்திகளை மட்டும் மக்கள் அறிந்தால் போதும் என்று முடிவுக்கு வந்தனர்.

'ஈழநாடு' பத்திரிகைக் காரியாலயத்துக்குள் ஆயுதங்களுடன் புகுந்தனர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர். பத்திரிகை அலுவலகத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்த ஊழியர்களைக் கடத்திக்கொண்டு போனார்கள். அலுவலகம் அடித்து மூடப்பட்டது.

'முரசொலி', 'உதயன்' அலுவலகங்களும் மூடப்பட்டன. மூன்று பத்திரிகைகளுக்கும் மூடுவிழா நடத்திவிட்டு, 'விடுதலை' என்ற பெயரில் தமது பத்திரிகையை வெளியிட்டனர்.

மூடப்பட்ட பத்திரிகைக் காரியாலயங்களில் இருந்து துப்பாக்கி முனையில் கடத்திச் செல்லப்பட்ட ஊழியர்களை வைத்து தமது பத்திரிகைக்கான வேலைகளை செய்வித்தார்கள்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கம் வெளியிட்ட பத்திரிகையின் பெயர் 'விடுதலை.' அப்பத்திரிகைக்கான அச்சுக்கோர்ப்புப் பணி துப்பாக்கி முனையில் நடத்தப்பட்டதுதான் வேடிக்கை. இரண்டு வாரங்கள்வரை கடத்திச் செல்லப்பட்டவர்கள் தடுத்துவைக்கப்பட்டு வேலை வாங்கப்பட்டனர்.

பத்திரிகைகளை தடை செய்ததையும், பத்திரிகைகளில் பணியாற்றியவர்கள் கடத்திச் செல்லப்பட்டதையும் கண்டித்து எதிர்ப்புக் குரல்கள் எழத் தொடங்கின.

இந்தியப் படையினரிடமும் முறையிடப்பட்டது. பரவலான எதிர்ப்புகள் தோன்றியதால் ஈ.பி.ஆர்.எல்.எஃப். பின்வாங்கியது. கடத்திச் சென்றவர்களை விடுதலை செய்தனர்.

பத்திரிகைக் காரியாலயங்களுக்கு பின்னர் இந்தியப் படையினர் பாதுகாப்பளித்தனர்.

'முரசொலி' பத்திரிகை ஆசிரியர் திருச்செல்வத்தை தேடித்திரிந்தனர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர். அவரது வீட்டுக்கு தேடிப்போனபோது திருச்செல்வம் அங்கிருக்கவில்லை. அவரது மகனான அகிலன் தான் வீட்டில் இருந்தார்.

19 வயதான அகிலன் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டார். சென் ஜோன்ஸ் கல்லூரி மாணவனான அகிலன் கல்விப் புலமையில் முதல்தர மாணவனாக விளங்கியவர். அகிலன் கொலை தொடர்பாக இத் தொடரில் முன்னரே விபரிக்கப்பட்டுள்ளது.

### தாக்குப் பிடிக்குமா?

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் அமைச்சர்களில் ஒருவராக ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினரால் நியமிக்கப்பட்டவர் தயான் ஜெயத்திலக. 'லங்கா கார்டியன்' சஞ்சிகை ஆசிரியர் மேர்வின் டி. சில்வாவின் மகன்தான் தயான் ஜெயத்திலக.



அகிலன்

வடக்கு-கிழக்கு இணைப்பு நிரந்தரமாக்கப்பட்டால் நாட்டின் ஒற்றுமைக்கு கேடு விளையும் என்று கூறிவிட்டு தனது அமைச்சர் பதவியை அவர் ராஜினாமாச் செய்தார்.

ஜனாதிபதி பிரேமதாசாவுடன் நெருக்கமான தொடர்புகள் ஏற்பட்டமையும் அவர் ராஜினாமா செய்ய ஒரு காரணமாக அமைந்தது.

அவர் ராஜினாமா செய்த பின்னர் ஜோ செனிவிரத்ன என்பவரை அமைச்சராக நியமித்தது ஈ.பி.ஆர்.எல்.எஃப்.

அப்போது ஆப்கானிஸ்தானில் இருந்து ரசியப் படைகள் வாபசாகிக் கொண்டிருந்தன. ரசியப் படைகள் வாபசானதும், ரசியாவை நம்பியிருந்த ஆப்கானிஸ்தான் அரசாங்கம் ஆட்டம் காணத் தொடங்கியது. கிளர்ச்சியாளரின் தாக்குதல்கள் மேலோங்கின.

அதனை சுட்டிக்காட்டிய ஒரு நிருபர் ஜோ செனிவிரத்னவிடம் பின்வருமாறு கேட்டிருந்தார். ரசியப் படைகள் வாபசானதும் ஆப்கானிஸ்தான் அரசு ஆட்டம் காண்பது போல, இந்தியப்படைகள் வாபசானால் வடக்கு-கிழக்கு மாகாணசபையும் ஆட்டம் காணுமா?

அதற்கு ஜோ செனிவிரத்ன சொன்ன பதில்: "ஆப்கான் அரசாங்கம் தனது எதிரிகளை எதிர்த்துப் போராட தன்னைத் தயார் செய்து கொள்ளவில்லை. வடக்கு-கிழக்கு மாகாணசபை எதிர்ப்புக்களை முறியடிக்கக் கூடிய பலத்தில் இருக்கிறது. இந்தியப் படை வெளியேறினாலும் வடக்கு-கிழக்கு மாகாணசபை தொடர்ந்து தாக்குப்பிடிக்கும்."

தற்போது ஜோ செனிவிரத்ன வெண்தாமரை இயக்க முக்கிஸ்தர்களில் ஒருவராக இருக்கிறார்.

இலங்கை ஜனாதிபதியே வெளியேறச் சொன்ன பின்னர் தாம் தொடர்ந்து நிலை கொண்டிருப்பது சாத்தியம் இல்லை என்பது இந்தியப் படையினருக்கும் நன்கு தெரிந்துவிட்டது.

அதனால் தாம் வெளியேறிய பின்னர் வடக்கு-கிழக்கு மாகாணசபை புலிகளின் எதிர்ப்பை சமாளிக்கும் விதமாக பலம் பெறவேண்டும். அதற்குரிய வழிவகைகளைச் செய்து கொடுத்துவிட்டுச் செல்ல வேண்டும் என நினைத்தனர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைமையில் ஈ.என்.டி.எல்.எஃப்., ரெலோ இயக்க உறுப்பினர்களையும் சேர்த்து தமிழ்தேசிய இராணுவத்தை பலமாக கட்டியமைத்துவிட்டு செல்லலாம் என்று எண்ணினார்கள்.




'ஐலண்ட்' வெளியிட்ட காட்டூன்

### கட்டாயப் பயிற்சி

தமிழ்த் தேசிய இராணுவத்துக்கு கட்டாய ஆட்சேர்ப்புக்கள் தொடர்ந்து நடந்தன. பலவந்தமாக பிடித்து வரப்பட்டவர்களை பலத்த காவலுடன் பயிற்சி முகாம்களில் அடைத்து வைத்திருந்தனர்.

1989ல் கட்டாய ஆட்சேர்ப்பின்போது ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தால் பிடித்துச் செல்லப்பட்டவர்களில் ஒருவர் என். பிரபாகரன். அவர் தனது அனுபவத்தை கூறுகிறார்.

"அப்போது எனக்கு 15 வயது. நானும் எனது நண்பனும் யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் வைத்து ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினரால் ஒரு வாகனத்தில் ஏற்றப்பட்டோம். நாம் இருவரும் கோயிலுக்கு சென்றுவிட்டு திரும்பும்போதுதான் இச் சம்பவம் நடைபெற்றது.

அந்த வேனில் ஏற்கனவே பிடிபட்ட சிலரும் இருந்தனர். நாங்கள் அசோகா ஹோட்டல் முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டோம். அங்கு ஏற்கனவே பிடிபட்டிருந்த பலருடன் நாங்களும் அடைக்கப்பட்டோம்.

நாம் அடைக்கப்பட்ட கட்டடத்தின் கீழ்ப் பகுதியில் புலிகள் என சந்தேகிக்கப்பட்ட பலர் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

அங்கு நடக்கும் சித்ரவதையால் அவர்கள் அலறும் சத்தம் எமக்கு கேட்பதுண்டு. அதனால் நாங்களும் பயந்துபோய் இருந்தோம். என்னுடன் 80 பேர்வரை இருந்தனர். நாளுக்கு நாள் இத்தொகை அதிகமானது. அதில் சிலர் பின்னர் விடுவிக்கப்பட்டனர். உயர்மட்ட உறுப்பினர்களுக்கு தெரிந்தவர்களின் பிள்ளைகளே அவ்வாறு விடுவிக்கப்பட்டனர். வேறு சிலர் பணம் கொடுத்தும் விடுவிக்கப்பட்டனர்.

சில நாட்களின் பின்னர் வேலணையில் இருந்த பயிற்சி முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டோம்.

அங்கும் ஏற்கனவே பலநூறுபேர் பயிற்சிக்காக வைக்கப்பட்டிருந்தனர். நாங்கள் கொண்டு செல்லப்பட்ட அன்றே எங்களுக்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

"இந்த முகாமைவிட்டு யாராவது தப்ப முயற்சித்தால் வெடிதான். நாலுபக்கமும் எல்.எம்.ஜி. சென்றிதான். யாரும் தப்ப முடியாது." என்று எச்சரிக்கப்பட்டோம்.

எங்கள் எல்லோருக்கும் ரன்னிங் சோட்ஸ்சும் பெனியனும் வழங்கப்பட்டது. சக உறுப்பினர்களை 'தோழர்' என்றே அழைக்க வேண்டும் என்று கண்டிப்பான உத்தரவு.

காலை 4 மணிக்கு விசில் ஊதப்படும். உடனே எழும்பி வரிசையாக அணிவகுக்க வேண்டும். பயிற்சி முகாமை பத்துமுறை சுற்றி ஓடவேண்டும்.

மூன்றுமுறை சுற்றிவரும்போதே நானும் வேறு சிலரும் களைப்பினால் விழுந்தோம். ஒருமுறை சுற்றும் தூரம் ஒரு மைல் இருக்கும்.

நாம் விழுந்தவுடன் பூவரசம் கம்பினால் அடி விழுந்தது. எழுந்து ஓடினோம். அன்று எப்படி ஓடினேன் என்று எனக்கே தெரியவில்லை. அதன்பின்னர் உடற்பயிற்றிகள். மூத்த உறுப்பினர்கள்தான் பயிற்சி தந்தனர். எல்லோருக்கும் தலைமயிர் மிகவும் குட்டையாக வெட்டப்பட்டது.

### முதல் குளிப்பு

11 நாட்களின் பின்னர் குளிப்பதற்கு அழைத்துச் செல்லப்பட்டோம். வேலணைக்கு கொண்டு செல்லப்பட்டபின்னர் அன்றுதான் முதன் முதலாக குளிக்க அனுமதித்தனர்.

சில நாட்களுக்குப் பின்னர் 500-550 பேர்வரை அங்கிருந்து லொறிகளில் சாவகச்சேரி பயிற்சி முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டோம்.

அந்த பயிற்சி முகாமில் பயிற்சி முடித்த உறுப்பினர்கள் அன்றுதான் வெளியேறினர். எமக்கு கை காட்டிக் கொண்டே சென்றனர்.

நாங்கள் அனைவரும் கொளுத்தும் வெய்யிலில் ஒரு வெட்டவெளியில் இருக்க வைக்கப்பட்டோம். அங்கு ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டோம். எங்களில் இருந்தே பொறுப்பாளர்களை தேர்ந்தெடுத்தனர். உயர் தரக் கல்வி பயின்றவர்களே தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அங்கு இந்திய இராணுவத்தினரே எங்களுக்குப் பயிற்சி அளிக்கும் பொறுப்பை ஏற்றனர். ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு அதிகாரியும், மூன்று இராணுவத்தினரும் பயிற்சி தரும் பொறுப்பை ஏற்றனர்.

நானும் எனது நண்பனும் 5வது பிரிவில் இருந்தோம். எங்களுக்கு அதிகாரியாக தமிழ் நாட்டைச் சேர்ந்த சந்திரமோகன் நியமிக்கப்பட்டார். எங்களுக்கு இரண்டுமாத பயிற்சி என அறிவிக்கப்பட்டது.

அங்கு ஈ.பி.ஆர்.எல்.எஃப். பொறுப்பாளராக 'ராபிக்' என்பவர் இருந்தார். ஈ.பி.ஆர்.எல்.எஃப். மூத்த உறுப்பினர்களும் இருந்தனர். அங்கும் முன்னைய எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

### தண்டனைகள்

இந்தியப் படையினர் பயிற்சி தந்த போதும் எங்களைக் கண்காணிக்கும் பொறுப்பு ஈ.பி.ஆர்.எல்.எஃப். மூத்த உறுப்பினர்களிடமே இருந்தது.

யாரும் தவறு செய்யக்கூடாது. மீறும் பட்சத்தில் தண்டனைதான். மன்னிப்பு என்பதற்கே இடமில்லை. தண்டனைகள் பலவாறு தரப்படும்.

தென்னை மரத்தில் அரைவாசி உயரம் வரை ஏறி அப்படியே சில மணித்தியாலயங்கள் தென்னை மரத்தை கெட்டியாகப் பிடித்தபடி இருக்க வேண்டும். இதனால் நெஞ்சப் பகுதியில் உராய்வு ஏற்பட்டு காயங்கள் தோன்றும். அல்லது நீண்ட தூரத்திற்கு முன்னோக்கி குத்துக்கரணம் அடித்தவாறு சென்று, பின்னர் பின்பக்கமாக குத்துக்கரணம் அடிக்கவேண்டும்.

ஒரு பிரிவில் யாராவது பிழை விட்டால், அந்தப் பிரிவில் உள்ள அனைவருமே தண்டனை அனுபவிக்க வேண்டும்.

காலைச் சாப்பாடு கடலை, பாசிப்பயறு, கௌபி அல்லது ரொட்டிதான். பகல், இரவு சோறுதான்.

முதன் முதலாக ஆயுதப் பயிற்சி. ஏ.கே.47. துப்பாக்கி, அதன் உதிரிப்பாகங்களின் தொழிற்பாடுகள், தோட்டா நிரப்பப்படும் எண்ணிக்கை, நிரப்பப்படும் முறை, ஒரு தோட்டா செல்லும் தூரம் (கில்லிங் ரேன்ஜ்) என்பவை விரிவாக விளக்கப்பட்டது.

இவ்வாறு எம்.70, எஸ்.எம்.ஜி, 9எம்.எம். (பிஸ்டல்), ஆர்.எல்.(ரொக்கட் லோஞ்சர்), 20எம்.எம். மோட்டார், கைக்குண்டு போன்றவை பற்றிய சகல பாடங்களும் எடுக்கப்பட்டன. எல்லாப் பாடமும் பயிற்சி கொப்பியில் எழுதினோம்.

தாக்குதல் ஒன்றுக்கு முன்னேறும் முறை, நிலை எடுக்கும் இடம் போன்றவையும் வகுப்புக்களில் சொல்லித்தரப்பட்டன.

தினமும் மாலை ஆறுமணிக்கு போராட்டக் காலங்களில் பலியான உறுப்பினர்களுக்காக அஞ்சலி செலுத்தப்படும்.

### கண்டிப்பு

எங்களுக்கு பயிற்சி தந்த இந்திய இராணுவ அதிகாரியான சந்திரமோகன் எங்களுடன் கரிசனையோடு நடந்து கொண்டார்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். மூத்த உறுப்பினர்கள் எங்களுடன் காட்டுமிராண்டித்தனமாக நடந்துகொள்வது அவருக்கு அதிருப்தியை ஏற்படுத்தியது.

நாங்கள் நடத்தப்படும் முறை குறித்து அவர்களுடன் காரசாரமாக ஏசியிருக்கிறார். "பயிற்சி முடியும்வரை இவர்களைத் தண்டிக்கும் அதிகாரம் உங்களுக்கு இல்லை." என்று அவர்களிடம் கண்டிப்பாகக் கூறிவிட்டார். எங்களுக்கு மிகவும் ஆறுதலாகவும், ஆதரவாகவும் இருந்தார்.

அப்படியிருந்தும் மூத்த உறுப்பினர்களின் அட்டகாசங்கள் தொடர்ந்தன. பலர் தப்பிச் சென்றனர். அதனால் பயிற்சி முகாமைச்சுற்றி முட்கம்பி வேலி போடப் பட்டது. முகாமின் முன்பக்கம் இந்திய இராணுவத்தினரின் சென்றியும், பின்பக்கம் ஈ.பி.ஆர்.எல்.எஃப். மூத்த உறுப்பினர்களின் சென்றியும் இருந்தது.

எங்கள்மீது அனுதாபம் கொண்ட இந்தியப் படையினர் சிலர் தாம் கடமையில் இருக்கும் நேரத்தில் எங்களில் சிலர் தப்பிச்செல்ல உதவினார்கள்.

ஒருமுறை எங்களில் ஒருவர் பின்பக்கமாக தப்பிச்செல்கையில் பிடிபட்டுவிட்டார். அவரை மூத்த உறுப்பினர்கள் மரத்தோடு கட்டிவைத்து அடித்தனர்.

"தப்பிச்செல்ல முற்பட்டதால் இவனுக்கு மரண தண்டனை கொடுக்கப்போகிறோம். உங்களுக்கும் ஒரு பாடமாக இருக்கட்டும்." என்று கூறினார்கள்.

நாங்கள் அனைவரும் ஒருமித்த குரலில் 'தயவு செய்து மன்னித்து விடும்படி' கூறினோம். அதற்கு சம்மதித்து ஒரு நிபந்தனை விதித்தனர்.

"நீங்கள் அனைவரும் ஆளுக்கு ஒரு அடி கொடுங்கள்." என்றனர். எங்களுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

இரத்த காயங்களுடன் மயக்கமடைந்து கிடந்தவரை மெதுவாக முதுகில் தட்டிவிட்டுப் போனோம்.

இச் சம்பவத்தின் பின்னர் எங்களில் பலர் ஈ.பி.ஆர்.எல்.எஃப்பை அழிக்க புலிகளுடன் சேருவதுதான் வழி என்று கூறிக் கொண்டிருந்தனர்.

### "உங்களால் முடியாது"

பயிற்சியின் இறுதிக்கட்டத்தில் 'ஆம்ஸ் பயறிங்' (துப்பாக்கி சுடும் பயிற்சி) தரப்பட்டது.

பயிற்சி முடிந்தபின்னர் எங்களை வழியனுப்பும்போது சந்திரமோகன் சேர் எங்களுக்கு சொன்ன வார்த்தை: "நாங்கள் போன பின்னர் நீங்கள் எல்.ரீ.ரீ.ஈ.யுடன் யுத்தம் செய்ய வேண்டி வரும். நாங்கள் இருக்கும் வரைதான் இந்தப் பயலுக (ஈ.பி.ஆர்.எல்.எஃப்.) கொட்டம் அடிப்பானுங்க. பின்னர் எங்கே ஓடுவார்கள் என்று எனக்கே தெரியாது. நிச்சயமாக உங்களால் எல்.ரி.ரி.ஈ.யுடன் மோதவே முடியாது." என்று சிரித்தபடி சொன்னார்.

பின்னர் சாவகச்சேரியில் இருந்து மறுபடி அசோகா ஹோட்டல் முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டோம். வெளியே செல்ல அனுமதிக்கப்படவில்லை. ஆனாலும் சுதந்திரமாக இருக்கமுடிந்தது. எங்களுக்கு மாத ஊதியமாக ஆயிரம் ரூபாய் தரப்பட்டது.

பின்னர் சென்றிக் கடமைகளில் ஈடுபட்டோம். எங்களது சென்றி சாந்தி தியேட்டர் முன்பாகவும், பெரியாஸ்பத்திரி முன்பாகவும் இருந்தது. ஒருநாள் புதிய உறுப்பினர்கள் இருவர் இரவுச் சென்றி பார்த்துக் கொண்டிருந்தபோது ஏ.கே.47 துப்பாக்கிகளுடன் தப்பிச் சென்றனர். பலர் ஆயுதமின்றித் தப்பிச் சென்றனர்.

ஆயுதத்துடன் தப்பிச் சென்றவர்களின் குடும்பத்தினரைப் பிடித்துவந்து அடித்தனர். புலிகளின் தாக்குதல்களும் அதிகமாகிக் கொண்டிருந்தன. இனிமேல் தாமதித்தால் ஆபத்து என்று நினைத்து நானும் தப்பிச் சென்றேன்." என்று தன் அனுபவங்களை நினைவு கூர்ந்துள்ளார்.

அவர் கூறியவை சரியான தகவல்களா? என்பதை உறுதிப்படுத்திக்கொண்ட பின்னரே இங்கு தரப்பட்டன.

1989 பெப்ரவரியில் நடைபெற்ற ஒரு சம்பவம் இந்தியாவையும் கலக்கியது. பரபரப்பாக பேசப்பட்டது. அது அடுத்த வாரம். (தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# வெளிப்பட்டுவரும் பிணக்குகள்

## பயன்படுத்துமா தமிழ்பேசும் தரப்பு?

அலசுவது- இராஜதந்திரி

புலிகளுடன் பேசுவதற்கு அரசும், ஐ.தே.கட்சியும் கூட்டாக ஆலோசனை ஒன்றை முன்வைக்க வேண்டும் என்று பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகர் தெரிவித்திருக்கிறார்.

புலிகளுடன் பேசுவதைவிட ஐ.தே.கட்சியுடன் அரசு இணக்கத்துக்கு வருவதுதான் சிரமமான காரியம் என்று அமெரிக்காவின் அரசியல் நிபுணர்களில் ஒருவரான கலாநிதி மைக்கல் ஈபிரௌன் கருத்துக் கூறியிருக்கிறார்.

**அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு விடுதலை புலிகள்தான் தடையாக இருக்கிறார்கள் என்று ஆட்சியாளர்கள் கூறும் காரணம் சர்வதேச அரங்கில் பலவீனமாகி வருவதையே இவை புலப்படுத்துகின்றன.**

ஆட்சியாளர்களும், அவர்களது பிரதான அரசியல் எதிரியான ஐக்கிய தேசியக் கட்சியினரும் நாட்டின் பொதுப் பிரச்சனைகளில் கீரியும், பாம்புமாக எதிரெதிர் நிலைப்பாடுகளையே கொண்டுள்ளனர்.

நாளும், பொழுதும் ஆட்சியாளர்களுக்கும் எதிர்க்கட்சியினருக்கும் இடையிலான பிணக்குகள் தீவிரமடைந்து வருவதையே காணக்கூடியதாகவுள்ளது.

**இந்நிலையில் இனப்பிரச்சினைக்கு இரு தரப்பாரும் இணக்கமுடன் முன்வந்து நல்லதொரு தீர்வைக் காணலாம் என்பது பகற்கனவாகவே இருக்கிறது.**

விடுதலை புலிகளுடன் பேசவேண்டுமாயின் ஐக்கிய தேசியக் கட்சியுடன் அரசியல் தீர்வு தொடர்பாக ஒரு உடன்பாடு காணப்பட்டாக வேண்டும். அதன்பின்னரே பேச்சுக்கு செல்ல முடியும் என்று ஜனாதிபதியும் கூறியிருக்கிறார்.

முப்படைகளின் தளபதியாகவும் இருக்கும் ஜனாதிபதி அவர்களே அவ்வாறு கூறியிருப்பதானது, புலிகளுடன் பேசுவதற்கு ஒரு அரசியல் தீர்வு இல்லாத நிலையில்தான், படையினர் போர்த்திட்டத்துடன் களத்தில் இறக்கப்பட்டுள்ளார்கள் என்பதை மறைமுகமாக ஒப்புக்கொள்வதாக அமைந்துள்ளது.

**புலிகளுடன் பேசிப் பயனில்லை. போர்மூலமே சமாதானத்தை கொண்டுவரப் போகிறோம் என்றுதான் முன்னர் ஆட்சியாளர்கள் கூறிவந்தனர்.**

புலிகள் முதலில் போர் நிறுத்தத்தை முறித்துக்கொண்டமையை தமக்கு சாதகமாக பயன்படுத்தி கொண்ட ஆட்சியாளர்கள் புலிகள்மீதே முழுப் பழியையும் போட்டிருந்தனர்.

அரசியல் தீர்வொன்றை காண்பதற்கான ஏற்பாடுகள் யாவும் கைகூடிவந்த நிலையில் புலிகள் எல்லாவற்றையும் கெடுத்துவிட்டார்கள் என்பதே ஆட்சியாளரின் குற்றச்சாட்டாக இருந்தது.

புலிகள் போரை ஆரம்பித்திருக்காவிட்டால் அரசியல் தீர்வை எட்டியிருக்கலாம், தாம் அதற்கு தயார் நிலையில் இருந்தோம் என்பதுபோலவே ஆட்சியாளர்கள் கூறத் தலைப்பட்டனர்.

இலங்கையின் உள்நாட்டு அரசியல் நிலவரம், ஆளும் கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கும் இடையிலான தீராப் பகைமைகள் என்பவற்றை அறிந்திராத வெளியுலகம் முன்பாக ஆட்சியாளரின் பிரசாரம் எடுபடவே செய்தது.

**அரசியல் தீர்வு யோசனைகளை விவாதத்துக்கு உரிய ஒன்றாக உள்நாட்டில் முன்வைத்த ஆட்சியாளர்கள், அதுதான் தீர்வுத்திட்டம் என்பதுபோல வெளியுலகில் சொல்லிக் கொண்டிருந்தனர்.**

மாற்றத்திற்கு உள்ளாக்கப்படவேண்டிய ஒன்றாக உள்நாட்டில் முன்வைக்கப்பட்ட தீர்வு யோசனை என்ற ஆவணம், மாற்றத்துக்கு உள்ளாகாத ஆவணம் போல வெளியுலக ராஜதந்திரிகளிடம் விநியோகம் செய்யப்பட்டது.

அதனை நம்பிக்கொண்ட வெளிநாட்டு இராஜதந்திரிகள் சிலர் அரசின் தீர்வு யோசனைகளை ஆதரிக்குமாறு தமிழ்க் கட்சிகளிடம் கோரவும் செய்தனர்.

**ஆட்சியாளர்கள் தீர்வு யோசனைகளை ஆதரவு தருமாறு கோரி முன்வைக்கவில்லை. ஆலோசனைகள் தருமாறு கோரியே முன்வைத்தனர்.**

அதன் பொருட்டே பாராளுமன்றத் தெரிவுக் குழுவிலும் தீர்வு யோசனைகள் முன்வைக்கப்பட்டன. நாடளாவிய ரீதியிலும் ஆலோசனைகள் கோரப்பட்டன.

ஆதரவு தருமாறு கோருவதற்கும், ஆலோசனை தருமாறு கோருவதற்கும் இடையே பாரிய வித்தியாசம் இருக்கிறது.

ஒரு ஆவணத்தை முன்வைத்து இதற்கு ஆதரவு தாருங்கள் என்று கேட்கப்படுமானால், அந்த ஆவணத்தில் உள்ள விடயங்கள் மாற்றத்திற்கு உள்ளாக்கப்படக் கூடியவை அல்ல என்பதுதான் அர்த்தமாகும். அதுதான் தீர்வு என்று பொருள்படும்.

ஆனால் ஆலோசனை கோரப்படுமானால் எதுதான் தீர்வு என்பதில் இன்னமும் ஒரு முடிவில்லை, ஆலோசனைகள் பெறப்பட்டு, அவற்றில் கருத்துக்கு எடுக்கப்பட வேண்டியவற்றை ஆராய்ந்து, சேர்க்கப்பட வேண்டியவற்றை சேர்த்து, குறைக்கப்பட வேண்டியவற்றை குறைத்து ஒரு தீர்வு திட்டம் அதன்பின்னர்தான் உருவாகும் என்பதே அர்த்தமாகும்.

அவ்வாறு உருவாக்கப்பட்ட திட்டத்தையே பின்னர் ஆதரவு கோரி மக்களிடம் முன்வைக்கலாம்.

**எனவே இப்போது ஆட்சியாளர்கள் செய்ய வேண்டியது, இதுவரை பெறப்பட்ட ஆலோசனைகளை தீர்வு பற்றிய தங்கள் கண்ணோட்டத்தில் ஆராய்ந்து, உறுதியான ஒரு தீர்வுத்திட்டத்தை முன்வைப்பதேயாகும். அவ்வாறு முன்வைக்கப்படும் திட்டத்துக்கு மக்களின் ஆதரவை கோரலாம்.**

தங்கள் தீர்வு யோசனைகளை ஆட்சியாளர்கள் முன்வைத்ததும், அதனை பரந்துபட்ட விவாதத்துக்கு உள்ளாக்க முன்வந்ததும் காரணத்தோடுதான்.

அரசியல் தீர்வுக்கு அரசு தயாராக இருக்கிறது என்பதை வெளியுலகுக்கு காண்பிக்கக்கூடிய துருப்புச் சீட்டாகவே தீர்வு யோசனை ஆவணத்தை தமது கையிலிருந்து இறக்கினார்கள் ஆட்சியாளர்கள்.

அதேநேரம் 'நாம் அதிகப்படியாக ஒன்றும் கொடுத்துவிடப் போவதில்லை. உங்கள் விருப்பம் அறிந்தே நடப்போம்.' என்று தென்னிலங்கை மக்களுக்கு திருப்தி கொடுக்கவே அந்த ஆவணம் மீது நாடளாவிய ரீதியில் விவாதம் தொடங்கப்பட்டது.

**தீர்வு யோசனை முன்வைக்கப்பட்டமை பற்றிய ஆரவாரங்கள், தீர்வு யோசனை பற்றிய விவாதங்கள் போன்றவை தீர்வொன்றுக்கான பலத்த முயற்சிகள் நடப்பதாக ஒரு தோற்றத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்க, மறுபுறம் புலிகளுடனான போரை நடத்தி முடித்துவிடலாம் என்றே ஆட்சியாளர்கள் கணக்குப் போட்டிருந்தனர்.**

புலிகளுடனான போரில் வெற்றி கிட்டுமானால் தென்னிலங்கையில் மக்கள் ஆதரவு பெரிதும் உயரும். அந்த வெற்றிப் பெருமிதம் முன்பாக எதிர்க்கட்சியின் குரல் அமுங்கிப்போகும்.

புலிகளின் வீழ்ச்சியின் பின்னர் தமிழர் தரப்பும் அரசியல் தீர்வு முயற்சிகளில் பிடிவாதம் காட்டப்போவதில்லை.

**அவ்வாறான நிலையில் தீர்வு யோசனை பற்றிய விவாதங்களை முடிவுக்கு கொண்டுவந்து, சிங்கள மக்களை திருப்திப்படுத்தக்கூடிய ஒருதீர்வு திட்டத்தை முன்வைக்கலாம். போரின் வெற்றி மூலம் கிடைத்த செல்வாக்கை பயன்படுத்தி மக்கள் ஆதரவையும் பெறலாம் என்பதுதான் ஆட்சியாளரின் திட்டமாக இருந்தது.**

எதிர்க்கட்சியின் ஒத்துழைப்போ, ஆதரவோ அப்போது தேவைப்பட்டிருக்காது.

எனவே, எதிர்க்கட்சியின் ஒத்துழைப்பை எதிர்பார்த்தோ, ஆதரவை நம்பியோ தமது தீர்வு யோசனைகளை ஆட்சியாளர்கள் முன்வைத்திருக்கவில்லை.

எதிர்க்கட்சியின் ஒத்துழைப்புடன்தான் அரசியல் தீர்வைக் காணமுடியும் என்று ஆட்சியாளர்கள் நம்பியிருப்பார்களேயானால், தீர்வு யோசனைகளை தயாரிக்க முன்பாக எதிர்க்கட்சியுடன் கலந்து ஆராய்ந்திருப்பர்.

**'உங்களால் முடியாத ஒரு காரியத்தை நாங்கள் செய்கிறோம், அதற்கு நீங்கள் ஒத்துழையுங்கள்' என்ற அணுகுமுறைக்குப் பதிலாக, 'எங்களாலும், உங்களாலும் தனித்து இந்தக் காரியத்தை செய்ய முடியாது, ஒன்றாக இருந்து பேசி பொதுவான திட்டம் ஒன்றை முன்வைப்போம்' என்ற ரீதியில் எதிர்க்கட்சியை அணுகியிருப்பார்கள்.**

எதிர்க்கட்சியினரை அனுசரிக்கின்ற போக்கோ, தமக்கு இடையிலான முரண்பாடுகளை சற்றுத் தள்ளிவைத்துவிட்டு முதலில் இனப்பிரச்சினைக்கு எதிர்க்கட்சியுடன் பேசி பொது உடன்பாடு காணும் அணுகுமுறைகளோ ஆட்சியாளர் தரப்பில் இருந்து வெளிப்பட்டிருக்கவில்லை.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னர், அதனைப் பின்போடுமாறும், தேர்தலில் எதிரும் புதிருமாக மோதிக்கொண்டு அரசியல் தீர்வு விடயத்தில் நட்போடு ஒத்துழைக்க முடியாது என்றும் ரணில் கோரியிருந்தார். ரணிலின் இக் கோரிக்கையை ஜனாதிபதியுடன் நடந்த சந்திப்பில் தமிழ்க் கட்சிகள் ஆதரித்துப் பேசியிருந்தன.

கூட்டணித் தலைவர் மு. சிவசிதம்பரம்தான் ரணிலின் கோரிக்கைக்கு ஆதரவாக ஜனாதிபதியிடம் வலியுறுத்தி இருந்தார்.

**"ரணில் ஒருபோதும் தீர்வுக்கு ஒத்துழைக்கமாட்டார். எதிர்க்கட்சி ஒத்துழைக்காவிட்டாலும் தீர்வைக் கொண்டுவர எம்மிடம் ஒரு உத்தி இருக்கிறது. எனவே தேர்தல் நடந்தே தீரும்" என்று ஜனாதிபதி தமிழ்க் கட்சிகளிடம் திட்டவட்டமாக தெரிவித்திருந்தார்.**

போரில் கிடைத்த வெற்றியின் பயன்களை விரயமாக்காமல், தமது அரசியல் வெற்றிக்கு பயன்படுத்தும் அவசரமே ஆட்சியாளரிடம் காணப்பட்டது.

ஆனால், எதிர்க்கட்சியின் ஒத்துழைப்பே முக்கியமானது என்று ஆட்சியாளர்கள் இப்போது கூறத் தொடங்கியுள்ளனர்.

சர்வதேச அரங்கிலும், உள்நாட்டிலும் ஏற்பட்டுவரும் மாற்றங்களும், நெருக்கடிகளுமே ஆட்சியாளர்கள் அவ்வாறு கூறத் தொடங்கியுள்ளமைக்கு காரணம் என்பது புலனாகின்றது.

அரசு திட்டமிட்டிருந்தது போல யுத்தம் குறுகிய காலத்தில் முடிந்துவிடக்கூடியதாக அமையவில்லை. அதனால் அரசியல் தீர்வு திட்டத்தையும் அரசு நினைத்திருந்த



காலவரையறைக்குள் முன்வைக்க இயலாமல் போயுள்ளது.

யுத்தத்தில் புலிகளை வெற்றிகொள்ள அரசால் முடியும் என்ற அபிப்பிராயம் தற்போது கேள்விக்குள்ளாகி இருக்கிறது.

**இது வெற்றி காணமுடியாத யுத்தம், அரசியல் தீர்வொன்றால்தான் சமாதானத்தை தோற்றுவிக்க முடியும் என்ற அபிப்பிராயம் உள்நாட்டில் மட்டுமல்லாமல், உலக அளவிலும் தோன்றத் தொடங்கியுள்ளது.**

இந் நிலையில் முன்புபோல புலிகளை போரில் முறியடித்தே தீருவோம் எனச் சூளுரைப்பதும், போர்மூலம் சமாதானம் என்ற கோஷமும் வெளியுலக ஆதரவை இழக்கத் தொடங்கியுள்ளன.

அரசியல்தீர்வு முயற்சிகள் இழுபட்டுச் செல்கின்றன என்ற விடயமும் வெளியுலகின் கருத்துக்கு வரத்தொடங்கியுள்ளது.

இவ்வாறான நிலையில் இலங்கையின் பிரதான எதிர்க்கட்சியினரே அரசும், புலிகளும் பேசவேண்டும் என்று பகிரங்கமாக கூறியுள்ளமை ஆட்சியாளர்களுக்கு பலத்த தலைவலியாகி இருக்கிறது.

எனவே-'போர் மூலம் சமாதானம்' என்னும் தமது கோஷத்தை மூட்டை கட்டி வைத்துவிட்டு வேறு உத்திகளையும், கோஷங்களையும் தேடவேண்டிய நிலைக்கு வந்துள்ளனர் ஆட்சியாளர்கள்.

புலிகளும் அரசும் பேசவேண்டும் என்று ஐ.தே. கட்சியினர் கோருவதற்கு பின்னணியில் அவர்களின் சொந்த அரசியல் நோக்கங்களே உள்ளன. இதயசுத்தியுடன் கூறப்படும் கூற்றாக அதனை நோக்க முடியாது.

**ஆனாலும், பிரதான எதிர்க்கட்சி என்ற வகையில் அவர்கள் முன்வைத்துள்ள நிலைப்பாடு ஆட்சியாளரின் சமாதான இமேஜ்மீது குறிவைப்பதாக அமைந்துள்ளது. வெளியுலகின் முன்பாக 'போரே ஒரே முடிவு' என்று ஆட்சியாளர்கள் கூறமுடியாமல் செய்துள்ளது.**

இது தென்னிலங்கை அரசியல் முரண்பாடுகள் ஊடாக தமிழ்பேசும் தரப்புக்கு கிடைத்துள்ள சாதகமான அம்சமாகவும் இருக்கிறது.

தமது இமேஜை காப்பாற்றிக் கொள்வது, வெளியுலகில் போருக்கான நிதி ஆதாரங்களை பெறுவது என்பதை எதிர்க்கட்சியின் நிலைப்பாடு பாதிப்புறச் செய்யும் என்பதால், இப்போது ஆட்சியாளர்கள் தங்கள் அஸ்திரங்களை எதிர்க்கட்சியை நோக்கி திருப்பி இருக்கின்றனர்.

போர் தொடர்வதற்கே எதிர்க்கட்சியினர்தான் காரணம் என்று பொருள்படும்படியாக பேசத் தலைப்பட்டுள்ளனர்.

**ஆனால் வெளியுலகம் முன்பாக ஆளும் தரப்பு, எதிர்த்தரப்பு இழுபறிகள்தான் அரசியல் தீர்வுக்கு தடையாக உள்ளன என்ற அபிப்பிராயம் மெல்ல மெல்ல மேலோங்கத் தொடங்கியுள்ளன.**

அமெரிக்க அரசியல் நிபுணரும், மற்றும் பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகரும் தெரிவித்துள்ள கருத்துக்கள் அதனையே புலப்படுத்துகின்றன.

தீர்வுக்கு புலிகள் தடை என்றும், தமிழ் முஸ்லிம் கட்சிகளுக்கிடையே ஒத்த கருத்து இன்மையே தடை எனவும் ஆளும் தரப்பும், எதிர்த்தரப்பும் கூறிவந்த காரணங்கள் பலவீனமாகிக் கொண்டிருக்கின்றன.

இத்தகைய சந்தர்ப்பத்தை தமிழ்பேசும் கட்சிகள் அரசியல் விவேகத்துடன் கையாளுமானால், வெளியுலக ஆதரவை அரசியல் தீர்வொன்றை விரைவாகக் காண்பதற்கான நெருக்கடியாக மாற்ற இயலும்.

**மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் பற்றிய கோரிக்கையை உரத்து முன்வைக்கவும் இதுவே ஏற்ற தருணமாகும்.**

அமெரிக்க அரசியல் நிபுணர் தனது கருத்தில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் பற்றியும், அதன் பலன்கள் பற்றியும்கூட தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்.

**"உள்நாட்டு இன மோதல்களில் வெளிநாட்டு மத்திஸ்த உதவிகள் வரவேற்கத்தக்கவையாகும். இத்தகைய நெருக்கடிகளில் வெளிநாட்டு உதவிகள் தடுக்கப்படுவது பாரதூரமான ஒரு விடயமாகும்"** என்று அவர் கருத்து தெரிவித்திருந்தார்.


சூழல்களை கருத்தில் கொண்டு அதற்கேற்ப அரசியல் வியூகங்களை வகுக்கக்கூடியவையே சரியான அரசியல் தலைமைகளாக விளங்க முடியும்.

ஆட்சியாளர்களுக்கும், எதிர்க்கட்சியினருக்கும் இடையிலான முரண்பாடுகள்தான் தீர்வுக்கு தடையாக உள்ளன என்பதை உலகம் உணரத் தலைப்பட்டுள்ள இந்த வேளையில், அதனை மேலும் வெளிப்படுத்துவதுடன், சகல தரப்புக்களையும் ஒரு கட்டுக்குள் கொண்டுவந்து நேர்த்தியான அரசியல் பேச்சுக்களை ஆரம்பிக்க மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவை என்பதை முன்நின்று வலியுறுத்த தமிழ்பேசும் அரசியல் கட்சிகள் முன்வரவேண்டும்.

தமிழ்பேசும் தரப்புக்கள் மத்தியில் உள்ள முரண்பாடுகளை தென்னிலங்கை அரசியல் கட்சிகள் பயன்படுத்தி வருகின்றன. தென்னிலங்கை அரசியல் முரண்பாடுகளை தமிழ் பேசும் தரப்புக்கள் பயன்படுத்த முடியாதிருக்குமானால் அரசியல் வங்குரோத்தினதும், சுயநலத்தினதும் வெளிப்பாடாகவே கொள்ளப்படும். ■







## எப்போது விடியும்?

யாழ் குடாநாட்டில் இருந்து இடம்பெயர்ந்த மக்களில் கணிசமானோருக்கு புகலிடமாக மாறியது வன்னிப் பெருநிலபரப்பு. 'ஜயசிக்குறுய்' ஆரம்பமான பின்னர் அதே வன்னி மக்கள் புகலிடம் தேடி அலைந்து கொண்டிருக்கின்றனர்.

வன்னி மக்களுக்கே உரித்தான மண்பற்றும், மன உறுதியும்தான் அவர்களிடம் உள்ள மகத்தான சொத்து. ஆட்டிலெறி ஷெல்கள் எட்டக்கூடிய இடங்களில் இருந்தெல்லாம் மக்கள் இடம்பெயர்ந்து செல்கின்றனர். மரங்கள் குடை பிடிக்கின்றன. அங்குதான் வாழ்க்கை. சிறார்களுக்கு பாடசாலை செல்ல முடியவில்லை. விழும் ஷெல்களை எண்ணிக் கணக்கு எடுப்பதுதான் கணக்குப்பாடம். "அம்மா தேத்தண்ணி தாருங்கோ" அழும் பிள்ளைகளுக்கு சீனியில்லாத தேநீர்தான். இனிப்பில்லாத வாழ்க்கை. இழப்பதற்கு எதுவுமில்லை, மன உறுதியைத் தவிர! போருக்குள் வாழ்கிறார்கள். வாழ்வதற்காக தினம் போராடுகிறார்கள். எப்போது விடியும்? தெரியாது! ஆனால் நம்பிக்கை இருக்கிறது! ■



படிப்பகம்

www.padippakam.com

# கொள்ளை ராணி

# பூலான்தேவி

## 63

தருவது ரசிகன்

**கடந்த வாரம்**

**பூலானும் பிக்குவும் படகொன்றில் தப்பிச் செல்கின்றனர். நாகினா என்ற கிராமத்தின் அருகிலுள்ள நதிக்கரையில் பூலான் மட்டும் இறங்குகிறாள். தனியே செல்கிறாள். இனி....**

பூலானின் நெருங்கிய உறவினரான மன்னு தன் குடிசையில் படுத்துக்கிடந்து வானொலி கேட்டுக்கொண்டிருந்தான். அவனது மனைவியும், பிள்ளைகளும் வெளியூர் சென்றிருந்தனர்.

மன்னுவுக்கு தூக்கம் வரவில்லை. படுக்கையில் புரண்டுகொண்டிருந்தான். குடிசைக் கதவு தட்டப்படுவதுபோல இருந்தது.

அவனுக்கு எழுந்துசென்று பார்க்க அலுப்பாக இருந்தது. மரக்குச்சி ஏதாவது கதவில்பட்டு உராய்கிறதாக்கும் என்று நினைத்தான்.

தொடர்ந்தும் மெதுவாகக் கதவில் தட்டப்படும் சத்தம் கேட்டது. போர்வையை சுருட்டிப் போட்டுவிட்டு எழுந்து கதவருகே சென்று, "யாரது?" என்றான்.

மறுபக்கத்தில் மெல்லிய குரலில் "நான்தான் மன்னு-கதவைத் திற!" என்றது. 'பெண்குரலாக இருக்கிறதே!' ஆச்சரியப் பட்டுக் கொண்டு கதவைத் திறந்தான்.

உள்ளே வந்தாள் பூலான்.

மன்னுவுக்கு உடனே அடையாளம் தெரியவில்லை. விழிகளை அகட்டிக் கொண்டு பூலானை மேலும் கீழும் பார்த்தான்.

அலைச்சலும், தொடர் பட்டினியும் பூலானை அடையாளமே தெரியாதளவுக்கு மாற்றி விட்டன. அது தவிர அவன் பூலானை கடைசியாகப் பார்த்தே பல ஆண்டுகள் ஆகிவிட்டன.

மன்னு கடைசியாக அவளைப் பார்த்தபோது பூலான் சிறுமியாக இருந்தாள். மிட்டாய் வாங்கிக் கொடுத்திருக்கிறான். கன்னத்தில் கிள்ளியிருக்கிறான். "பெரியவளானதும் என்னைக் கல்யாணம் பண்ணுவியா?" என்று விளையாட்டாகக் கேட்டிருக்கிறான்.

பின்னர் பூலானைப் பற்றி அவன் அறிந்த செய்திகளால் அவளுக்காக கவலைப்பட்டிருக்கிறான். பூலான் கொள்ளைக் கூட்டத்தில் சேர்ந்தபின்னர் அறிந்த செய்திகளால் ஆச்சரியப்பட்டுமிருக்கிறான்.

மன்னுவுக்கும் கொள்ளைக் கோஷ்டிகள் சிலவற்றுடன் தொடர்புகள் இருக்கின்றன. ஓரளவோடு மட்டும் தொடர்புகளை நிறுத்திக் கொள்வான்.

"என்னைத் தெரியவில்லையா? நான்தான் பூலான்தேவி," என்றாள் பலவீனமான குரலில்.

மன்னுவின் கண்கள் ஆச்சரியத்தால் மேலும் விரிந்தன. வாஞ்சையோடு பூலானை அணைத்துக் கொண்டான். ஆதரவாக கன்னத்தில் முத்தமிட்டான்.

பூலானால் நிற்கமுடியவில்லை. இதுவரை பல்லைக் கடித்துக்கொண்டு, மனதைத் திடமாய் வைத்துக்கொண்டு பசியையும், அலைச்சலையும் பொறுத்துக் கொண்டாள்.

இனிமேல் கால்களுக்கு சக்தியில்லை. உடம்பு ஒத்துழையாமை செய்தது. அப்படியே தரையில் அமர்ந்துகொண்டாள்.

"குடிக்க தண்ணிகொடு மன்னு; சாப்பிட என்ன வைத்திருக்கிறாய்? கொலைப் பட்டினி" என்றாள்.

மன்னு தண்ணீர் கொடுத்தான். மீதியிருந்த சப்பாத்திகளை சாப்பிடக் கொடுத்துவிட்டு, அவளையே கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

மளமளவென்று சப்பாத்திகளை பிய்த்துப் பிய்த்து உள்ளே தள்ளினாள் பூலான். சாப்பிட்ட பின்னர் வயிறு முட்ட தண்ணீர் குடித்தாள். போன உயிர் திரும்பிவந்ததுபோல திருப்தியாக, நிறைவாக இருந்தது.

"வீட்டில் யாருமில்லையா?" என்றாள் பூலான். "ஊருக்குப் போயிருக்கிறார்கள்; வருவதற்கு ஒரு வாரமாகும்;" என்றான்.

இதுவரை அடக்கிவைத்திருந்த சோகம் பீறிட்டுக்கொண்டு வர குலுங்கிக் குலுங்கி அழத் தொடங்கிவிட்டாள் பூலான். "என் தெய்வத்தைக் கொன்றுவிட்டார்கள் மன்னு, கொன்றுவிட்டார்கள்," என்றாள் அழுதுகொண்டே.

மன்னுவும் மல்லா இறந்ததைப் பற்றி அறிந்தே இருந்தான். மல்லாவை பூலான் காதலித்தாள் என்பதை பூலான் சொல்லித்தான் தெரிந்துகொண்டான்.

தன் மனதில் இருந்த பாரத்தையெல்லாம் இறக்கிவைக்க ஆள் கிடைத்ததே என்று அவனிடம் கொட்டித்தீர்த்தாள் பூலான்.

கொள்ளைக் கோஷ்டியை விட்டு விலகி இனிமேல் வேறு வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும்படி மன்னு யோசனை கூறினான். முடியவே முடியாது என்றுவிட்டாள் பூலான்.

பூலான் வேறு ஒரு வாழ்க்கையை அமைத்துக்கொண்டாலும் பொலிசாரோ, ஸ்ரீராமோ அவளை விட்டுவைக்கப்போவதில்லை என்பதை மன்னுவும் புரிந்துகொண்டதால், பூலானுக்கு உதவ முன்வந்தான்.

தானும் மல்லாவும் பாபாவுடன் சேரத் திட்டமிட்டிருந்ததை மன்னுவிடம் கூறினாள் பூலான்.

பாபா என்று அழைக்கப்பட்ட மஸ்தக்கு வீமின் குழுவுடன் மன்னுவுக்கு தொடர்பு இருந்தது. அதனால் பாபாவைப் பற்றிக் கூறியதும் மன்னுவின் முகம் மலர்ந்தது.

"எனக்கு பாபாவைத் தெரியும். நான் முதலில் சென்று பேசிப்பார்க்கிறேன். உன்னை அவர்கள் சேர்த்துக் கொள்ள சம்மதித்தால், நானே உன்னை அழைத்துச் செல்கிறேன்!" என்றான் மன்னு.

மறுநாள் பூலானுக்கு தேவையான உணவை ஏற்பாடு செய்து கொடுத்துவிட்டு, அவளை தன் வீட்டுக்குள் வைத்து வெளிப்புறமாகப் பூட்டினான் மன்னு. யாராவது வந்து பார்த்தால் வீடு பூட்டியிருக்கிறது என்று நினைத்துக் கொள்ளட்டும் என்றே அப்படிச் செய்தான்.

"நான் வந்து குரல் கொடுத்தால் தவிர வேறு யார் வந்து கூப்பிட்டாலும் தலையைக் காட்டாதே!" என்று சொல்லிவிட்டுப் போனான் மன்னு.

கான்பூருக்குச் சென்று பாபாவைச் சந்தித்த மன்னு பூலான் பற்றி கூறினான். பாபா உடனடியாக பதில் எதுவும் கூற



பூலான்

வில்லை. "செய்தி அனுப்புகிறேன். இப்போது நீ போகலாம்," என்று கூறிவிட்டார்.

மன்னுவுக்கு ஏமாற்றமாகிவிட்டது. தொங்கிய முகத்துடன் திரும்பிச் சென்றான். அன்றிரவே வீடு திரும்பிய மன்னு பூலானிடம் தன் ஏமாற்றத்தைச் சொல்லவில்லை.

"தகவல் வரும்வரை காத்திருக்கச் சொன்னார் பாபா. நிச்சயம் உன்னை தன் கூட்டத்தில் சேர்த்துக் கொள்வார்," என்று சொல்லிவிட்டான்.

ஐந்து நாட்கள் பூலான் மன்னுவின் குடிசைக்குள்ளேயே அடைந்து கிடந்தாள். வெளியே நடமாடினால் யாராவது கண்டுவிடுவார்கள்.

நாகினா என்ற அந்தக் கிராமத்தின்மீது எப்போதும் ஒரு கண் வைத்திருந்தார்கள் பொலிசார். திடீர் திடீர் என்று சோதனை நடத்துவார்கள்.

பூலான் அங்கிருக்கும்வரை பொலிசார் வந்துவிடக்கூடாதே என்று உள்ளூரப் பயந்துகொண்டு இருந்தான் மன்னு. ஆனாலும் அதனை வெளிக்காட்டாமல், பூலானை பத்திரமாக கவனித்துக் கொண்டான்.

மன்னு அடிக்கடி 'வெளியே போய் பாபாவின் ஆட்களுடன் தொடர்பு கொள்ள முயன்று கொண்டிருந்தான்.

பூலானுக்கு முதலில் இருந்த நம்பிக்கை சற்றுக் குறையத் தொடங்கியது. மல்லாவுடன் சென்று முதன் முதலாக பாபாவைச் சந்தித்தபோது, "பெண்களை நம்பி நம்மோடு வைத்திருக்கக்கூடாது!" என்று பாபா கூறியதை நினைத்துப் பார்த்தபோது, நம்பிக்கை மேலும் சரிந்தது.

இன்னமும் சில நாட்கள் பார்த்துவிட்டு புறப்படவேண்டியதுதான். மன்னுவுக்கு எத்தனை நாள்தான் சுமையாக இருக்க முடியும், என்று நினைத்தாள் பூலான்.

என்ன செய்வது, எங்கே போவது? என்பதுதான் புரியாமல் இருந்தது. "மன்னுவின் மனைவி, பிள்ளைகள் வருவதற்கு முன்னர் இங்கிருந்து சென்றுவிடவேண்டும், அதுதான் சரி!' என்று முடிவு செய்து கொண்டாள்.

மன்னு தன் மீது காட்டிய பரிவும், தன் பொருட்டு அவன் பட்டுவரும் கஷ்டங்களும் பூலானுக்கு நெகிழ்ச்சியாக இருந்தன.

ஐந்தாவது நாள் மன்னு உற்சாகத்தோடு வந்தான். அவன் கையில் ஒரு பொதி இருந்தது.

"பூலான் உனக்கு நல்லகாலம் வந்துவிட்டது. இன்றிரவு பாபா ஒரு கிராமத்திற்கு வருகிறார். நாங்கள் அங்குபோய் அவரைப் பார்க்கலாம். தயாராகு!" என்றான்.

பூலான் சந்தோசத்தில் திக்குமுக்காடிப் போனாள். மன்னு புதிய பாதணிகள் வாங்கி வந்திருந்தான். தனது உடைகளை அணிந்துகொண்டு பையன்போல வருமாறு கூறினான்.

கலெளலி என்ற கிராமத்திற்கு அவர்கள் செல்ல வேண்டி இருந்தது. படகில்தான் செல்ல வேண்டும். தனக்குத் தெரிந்த படகோட்டியிடம் படகு ஒன்றை இரவல் வாங்கி வைத்திருப்பதாகவும், தானே படகைச் செலுத்தப்போவதாகவும் மன்னு கூறினான்.

பூலானுக்கு அவன் செய்துவைத்துள்ள முன்னேற்பாடுகள் பிரமிப்பாக இருந்தன. அவளை தயாராகும்படி கூறிவிட்டு வெளியே சென்ற மன்னு, துப்பாக்கி ஒன்றுடன் திரும்பி வந்தான்.

பூலான் படகில் இருந்து இறங்கியபோது பிக்குவிடம் துப்பாக்கியைக் கொடுத்துவிட்டே வந்திருந்தாள்.

மன்னு தன் நண்பன் ஒருவனிடம் வாங்கி வந்த துப்பாக்கிக்கு தோட்டாக்கள் எதுவும் இருக்கவில்லை.

"தோட்டா இல்லாமல் துப்பாக்கி எதற்கு?" என்று கேட்டாள் பூலான்.

"ஒரு மனத்தைரியத்துக்கு!" என்று மன்னு சொன்ன பதிலைக் கேட்ட பூலான் சிரித்துவிட்டாள்.

"இங்கே வந்த பின்னர் இப்போதுதான் நீ சிரிக்கிறாய். அதற்காவது இந்த துப்பாக்கி உபயோகப்பட்டிருக்கிறதே. போதாதா?" என்றான் மன்னு.

மன்னுவும், பூலானும் படகுக் கரைக்குச் சென்றனர். மன்னுதான் படகைச் செலுத்தினான். பூலானை படகின் அடியில் படுக்கச் சொல்லிவிட்டான் மன்னு. அவ்வாறு பயணம் செய்து பழக்கப்பட்டு விட்டதால் பூலானுக்கு சிரமம் அதிகம் இருக்கவில்லை.

நீரோட்டத்துக்கு எதிராகவே படகு செல்ல வேண்டி இருந்தது. அதனால் படகு அப்படியும் இப்படியுமாக ஆடிக் கொண்டிருந்தது. படகில் படுத்துக் கிடந்த பூலானும் அப்படியும் இப்படியுமாக உருளவேண்டியிருந்தது.

இறுதியாக மணல் செறிந்த கரையில் படகு முட்டி நின்றது. பூலானை எழுந்து கொள்ளச் சொன்னான் மன்னு.

"இதுதான் நாம் இறங்கவேண்டிய இடம்," என்றான் மன்னு. மன்னுவின் பின்னால் பூலான் நடந்து சென்றாள். மன்னு அந்த தோட்டா இல்லாத துப்பாக்கியுடன் முன்னால் செல்வதைப் பார்க்க சிரிப்புச் சிரிப்பாக வந்தது பூலானுக்கு.

ஒரு மரத்தடியில் பூலானை நிற்கச் சொன்னான் மன்னு. "பாபாவின் ஆள் இங்குதான் ஓரிடத்தில் இருக்கிறான். நான் போய் அழைத்து வருகிறேன்," என்று சொல்லிவிட்டு மன்னு போய் விட்டான். போகும்போது துப்பாக்கியை பூலானிடம் தந்துவிட்டுச் சென்றான்.

மன்னுவை எதிர்பார்த்து ஒரு வீட்டருகே இரண்டுபேர் காத்திருந்தனர். அதில் ஒருவனைக் கண்டதும் மன்னுவுக்கு அச்சமும் வியப்பும் ஒருசேர ஏற்பட்டன.

பாபாவின் கோஷ்டியில் இரண்டாவது நிலையில் இருந்தவன் மான்சிங். சற்றுக் குள்ளமாக, ஆனால் திடகாத்திரமான தோற்றத்துடன் இருந்தான். சின்னதாக தாடி வைத்திருந்தான். பாபா தன் எதிரிகளை மன்னித்தாலும் மான்சிங் மன்னிக்கமாட்டான் என்பார்கள். முரட்டு ஆசாமி என்று பெயர் எடுத்தவன்.

மான்சிங்தான் மன்னுவை எதிர்பார்த்துக் காத்திருந்தான். அவனை அங்கு எதிர்பார்க்கவில்லை மன்னு. சாதாரண கிராமத்து ஆள் போல உடை அணிந்திருந்த மான்சிங்கின் தோளில் ரைபிள் தொங்கிக் கொண்டிருந்தது.

மான்சிங்கின் கண்கள் குண்டு குண்டாக இருந்தன. மன்னுவை அக் கண்கள் உற்று நோக்கின. தன் தாடியை கையால் வருடிக் கொண்டே கணீரென்ற குரலில் "வா மன்னு, பூலான் எங்கே?" என்றான். அவன் விழிகள் மன்னுவின் பின்னால் பூலானைத் தேடின.

மன்னு பவ்வியமாய் தன் கைகளைக் கட்டிக்கொண்டு, பூலானை மரத்தடியில் விட்டு வந்திருந்த தகவலைத் தெரிவித்தான்.

மன்னுவுடன் மான்சிங்கும், இன்னொருவனும் மரத்தடி நோக்கிச் சென்றார்கள்.

அங்கே பூலானைக் காணவில்லை. வேறு ஆள் நடமாட்டமும் இருக்கவில்லை.

மன்னு திகைத்துப் போனான். மான்சிங் எரித்துவிடுவதுபோல மன்னுவை நோக்கினான். அவன் கண்களில் தெரிந்த சந்தேகச் சாயயைக் கண்ட மன்னுவுக்கு நடுக்கம் தொற்றிக் கொண்டது.

மரத்தின் பின்னால் இருந்த புதருக்குப் பின்னால் மறைந்திருந்தாள் பூலான். பாபாவுடன் மான்சிங்கை முன்பே கண்டிருக்கிறாள்.

புதரைவிட்டு வெளியே வந்த பூலானைக் கண்டதும்தான் மன்னுவுக்கு தன் தலை தப்பியது போலிருந்தது. மான்சிங் பூலானை நெருங்கி தன் கையில் இருந்த பார்சலை மரியாதையாக நீட்டினான்.

"பாபுஜி தங்களை அழைத்துவர என்னை அனுப்பினார். நான் மான்சிங். இதற்குள் உள்ள புடவையைக் கட்டிக் கொண்டு வருமாறு பாபுஜி கூறியிருக்கிறார்,"

புதர் பின்னால் சென்ற பூலான் உடை மாற்றிக்கொண்டு அவர்களுடன் புறப்பட்டாள். அவளிடமிருந்த துப்பாக்கியை மான்சிங் பெற்றுக்கொண்டான்.

நீண்ட தூரம் நடந்த பின்னர் ஒரு கல்வீட்டின் முன்பாக ஆயுதம் தாங்கிய பலர் காவலுக்கு நிற்பது தெரிந்தது.

பூலானுக்கு படபடப்பாக இருந்தது. பாபா தன்னை எப்படி நடத்துவாரோ? என்று யோசனையாக இருந்தது. பெண்தானே என்ற அனுதாபத்தில் சமையல் வேலை தந்துவிட்டால் என்ன செய்வது?

கல்வீட்டின் வாசலை அவர்கள் நெருங்கினார்கள். அப்போதுதான் பூலான் எதிர்பார்க்காத சம்பவம் ஒன்று நிகழ்ந்தது.

வாயிலில் நின்ற இருவரும் தங்கள் துப்பாக்கிகளை தலைக்குமேல் உயர்த்தினர்.

"பூலான் தேவிக்கு ஜே!" என்று ஒரே குரலில் கூறினர். மறுநொடியில் குனிந்து பூலான் பாதங்களைத் தொட்டு மரியாதை செய்தனர்.

பூலான் சிலையாக நின்றாள்.

(தொடர்ந்து வரும்)

# மருத்துவமனை விபரீதம்



பிரமாண்டமான தனியார் மருத்துவமனைகள் பற்றிய குறைபாடுகள் நம் நாட்டிலும் இருக்கின்றன. மருத்துவத் துறை நவீன வசதிகளுடன் முன்னேறியுள்ளது. ஆயினும் சில மருத்துவர்களின் அலட்சியத்தால் பலரது எதிர்காலம் பாழாகும் அபாயம் ஏற்படுகிறது.

தமிழ் நாட்டில் பிரபலமான தனியார் மருத்துவமனைகளில் ஒன்று அப்போலா மருத்துவமனை. முதுகு வலிக்காக சிகிச்சை பெறச் சென்ற நடிகை விஜி அங்கிருந்து முடமாகத் திரும்பியிருக்கிறார்.

'கோழி கூவுது' படத்தில் அறிமுகமானவர் விஜி. இறுதியாக 'பூவே உனக்காக' படத்தில் "மச்சினி வரும் நேரம் மணமணக்குது.." என்ற பாடலுக்கு ஆடியிருந்தார்.

முதுகுத் தண்டில் ஏற்பட்ட வலிக்காக டாக்டர் உமாசந்திரன் என்பவர் விஜிக்கு சத்திர சிகிச்சை செய்தாராம். தவறான சத்திர சிகிச்சை காரணமாக விஜியின் கால் ஒன்று ஊனமாகிவிட்டது. ஊன்று கோலுடன் வீடு திரும்பிய விஜி இடிந்துபோய் இருக்கிறார்.

"ஐந்து இலட்சரூபாய் தருகிறோம். மேலும் சிகிச்சையும் தருகிறோம்" என்று முதலில் சமரசத்துக்கு சென்றதாம் அப்போலா நிர்வாகம். பின்னர் பல்டி அடித்து "உங்களால் முடிந்ததைப் பாருங்கள்!" என்று கூறிவிட்டார்களாம்.

இப்போது நாற்பது இலட்ச ரூபாய் நஷ்டஈடு கோரி வழக்குத் தொடுக்கப் போகிறார் விஜி. நடிகை ரேவதி விஜிக்காக போர்க்கொடி உயர்த்தி இருக்கிறார். 'துக்ளக்' பத்திரிகை ஆசிரியர் சோ போன்றோரும் துணை நிற்கிறார்கள்.

அலட்சியமான சிகிச்சையால் ஒரு இளம் நடிகையின் வாழ்க்கையே இருண்டு போயிருக்கிறது.

அப்போலாவில் இப்படி நடப்பது இது முதற் தடவையல்ல; பிரபல டென்னிஸ் ஆட்டவீரர் சந்திரசேகரையும் சத்திர சிகிச்சை ஒன்றின்போது முடமாக்கி வெளியே அனுப்பினார்கள். அவரும் வழக்குத் தொடர்ந்து நஷ்டஈடு பெற்றுக் கொண்டார். வெளியே தெரியாமல் எத்தனை தவறுகள் நடந்ததோ யார் அறிவார்?!

# இன்னொரு பிரேமானந்தா

# கொலைகளும்-லீலைகளும்

ஒரு பிரேமானந்தாவை சட்டம் பந்தாடி உள்ளே தள்ளிவிட்டது. இன்னும் பல பிரேமானந்தாக்கள் வெளியே இருந்து சட்டத்தோடு விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்.

"அரசியல், சமூக மட்டங்களில் கௌரவமானவர்கள் என்று கருதப்படும் சிலரும், மூட நம்பிக்கைகளை வளர்க்கும் பத்திரிகைகள் சிலவும்கூட புல்லுருவிகள் வளர ஒரு



காரணம்தான். போலி ஆசாமிகளை புனிதர்களாக சித்தரிப்பதும் ஒரு சமூகக் குற்றம்தான்," என்கிறார் தமிழ்நாட்டில் உள்ள பிரபல சமூக ஆய்வாளர் நாராயணன்.

தற்போது தமிழ்நாட்டில் பரபரப்பாகப் பேசப்படும் போலி ஆசாமியின் பெயர் ஜோன் ஜோசப். இவர் ஒரு பாதிரியார். இவரது நடவடிக்கைகள் சரியில்லை என்று கத்தோலிக்க மதத்தில் இருந்து கல்தா கொடுத்துவிட்டார்கள்.

தமிழ்நாட்டில் மார்த்தாண்டம் என்ற இடத்தில் 'கரிஸ் மேட்டிக் சென்ரர்' என்ற பெயரில் ஆசிரமம் ஒன்றை ஆரம்பித்தார். ராணி, பெமி என்று இரண்டு அழகான சிஷ்யைகளை உதவிக்கும், தேவைக்கும் உபயோகப்படுத்திக் கொண்டார்.

ஜெப வழிபாடு செய்வதாகக் கூறிக் கொண்டு காமலீலைகளை அரங்கேற்றினாராம். இவரது பயங்கரமான நடவடிக்கைகளை அறியும்போது விசாரணையே இல்லாமல் சுட்டுக் கொன்றுவிடலாம் போல இருக்கிறது. அத்தனை வக்கிரப்புத்தி.

நோய் குணமாக்க வரும் ஆண்களிடம் "உனது நோய் குணமாக வேண்டுமானால் நான் சொல்லும் பெண்ணுடன் உடலுறவு வைத்துக்கொள்!" என்பானாம். உடனே ஆண் சீடரும் அப்படி உறவு கொள்ளும்போது கூட இருந்தே பார்த்து இரசிக்குமாம் இந்த மிருகம்.

அதன் பின்னர் அதே பெண் சீடருடன் தானும் உறவு கொள்வானாம். பிரேமானந்தாவையே தூக்கிச் சாப்பிடக்கூடிய இவனது லீலைகள் இப்போது வெளியே வந்துவிட்டன.

ஆசிரமத்தில் இருந்த சிறு பெண் ஒருவரை பலாத்காரம் செய்ய முயல, அப் பெண் தப்பி ஓடிவிட்டாள். அவளது தந்தையார் பொலிசில் புகார் செய்தார். பொலிஸ் ஆசிரமத்தை சோதனையிட்டதில் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகி இருக்கின்றன.

பிரேமானந்தா ஸ்டைலில் கொலையும் செய்திருக்கிறான் ஜோன் ஜோசப். கில்பர்ட் ராஜ் என்னும் பதினெட்டு வயது வாலிபனை அடித்தே கொன்றுவிட்டு ஆசிரம வளவில் புதைத்துவிட்டான்.

கில்பர்ட் ராஜ் என்ற இளைஞனை ஜோசப்பின் காதலி ராணி தன்னுடன் உல்லாசமாக இருக்க அழைத்தாளாம். கில்பர்ட் ராஜ் மறுத்ததால் ஜோசப்பும், ராணியுமாகச் சேர்ந்து அவனை அடித்தே கொன்றுவிட்டார்கள். அதேபோல மேலும் இரண்டுபேர் கொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

20 பெண் சீடர்கள் ஆசிரமத்தில் இருந்திருக்கிறார்கள். மூன்று ஏக்கர் நிலத்தில் பல இலட்சம் ரூபாய்கள் செலவில் ஆடம்பர பங்களா இருக்கிறது. அதுதான் ஆசிரமம்.

பெண் சீடர்கள் கர்ப்பமானால் கலைப்புச் செய்ய நாககண்டி என்னும் பெண் டாக்டரையும் ஆசிரமத்தில் வைத்திருந்தானாம்.

இப்போது ஆசிரமம் பொலிசாரின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. பிரேமானந்தாக்கள் முளைத்துக் கொண்டுதான் இருப்பார்கள், ஏனெனில் ஏமாறுகிறவர்கள் இருந்துகொண்டேதான் இருக்கிறார்கள்!

# இம்ரான்-ஜெமிமா

# விரிசல் தோன்றுமா?



**வை**ற் என்னும் பெயருடைய அழகி தன் ஐந்து வயதுக் குழந்தைக்கு இம்ரான்கான்தான் தந்தை என்றார். யாரும் அதிகம் நம்பவில்லை. கடைசியாக நீதிமன்றம் தீர விசாரித்துவிட்டு தீர்ப்புக் கூறியது. இம்ரான்கான் கிளீன் போல்ட்! அவர்தான் தந்தை என்பதை உலகம் அறிந்தது.

அந்த அதிர்ச்சியில் இருந்து இம்ரான்கான் மீளமுன்னர் மற்றொரு புயல் வீசும் போலிருக்கிறது.

இம்ரான்கானுக்கும் அவர் மனைவி ஜெமிமாவுக்கும் இடையே சிறு சிறு பிணக்குகள் தோன்றத் தொடங்கியிருக்கிறதாம்.

ஜெமிமாவின் தந்தையான கோடீஸ்வரன் சேர் ஜேம்ஸ் கோல்ட்ஸ்மித் சமீபத்தில் மரணமானார். அவருக்கு மொத்தம் எட்டுப் பிள்ளைகள். எட்டுப்பேரில் ஜெமிமாமீதுதான் கொள்ளை கொள்ளையாகப் பிரியம். அதனால் ஜெமிமா தன் விருப்பம் போல திருமணம் செய்யவும், மதம் மாறவும்கூட சம்மதித்தாராம் கோல்ட்ஸ்மித்.

ஜெமிமா புத்திசாலிப் பெண். கெட்டிக்காரத்தனம் ஏராளம். அதனால் தனக்குப் பின்னர் தன் திரண்ட சொத்துக்களையும், வர்த்தகத் தொடர்புகளையும் ஜெமிமா நிர்வகிக்க வேண்டும் என்பதுதான் கோல்ட்ஸ்மித்தின் கடைசி ஆசையாம்.

தன் தந்தையின் கடைசி ஆசையை நிறைவேற்றுவதா, பாகிஸ்தான் அரசியலில் மேலே உயரத்துடிக்கும் தன் கணவரின் ஆசைக்கு தோளோடு தோள் நின்று உதவுவதா? இரண்டில் ஒன்றைப் பற்றிய முடிவை எடுத்தாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார் ஜெமிமா.

தந்தையின் ஆசையை நிறைவேற்ற வேண்டுமானால் ஜெமிமா பிரிட்டனுக்குச் சென்றாக வேண்டும். ஆனால் பாகிஸ்தானைவிட்டுச் செல்ல இம்ரான்கான் விரும்பவில்லையாம். ஜெமிமா பிரிட்டனிலும், இம்ரான் பாகிஸ்தானிலும் இருந்தால் குழந்தை யாருடன் இருப்பது என்பது பிரச்சனையாகிவிடும்.

இம்ரான்கான் குடும்பத்திற்கு நெருக்கமான ஒருவர் பத்திரிகை ஒன்றுக்கு சொல்லியுள்ள தகவல் அதிர்ச்சியளிக்கிறது. "இம்ரான்கான்-ஜெமிமா தம்பதியினரிடம் சிறு பிணக்குகள் எழுந்துள்ளது உண்மைதான். சட்டப்படி பிரிந்து செல்லும் நிலைகூட ஏற்படலாம்!" என்று ஒரு குண்டைப் போட்டிருக்கிறார்.

மற்றொரு தகவலின்படி ஜெமிமா இப்போது கர்ப்பமாக இருக்கிறார்.



படிப்பகம்

www.padippakam.com



# பாய்ந்தால் மரியாதை!


← விளையாட்டு வினையாகிவிடலாம் என்று எச்சரிப்பது சரிதான் என்பதற்கு உதாரணமான விளையாட்டுக்கள் சில இருக்கின்றன. அதில் ஒன்றுதான் இதுவும்.

பசிபிக் பெருங்கடலில் உள்ள செலமன் தீவுகளில் ஒன்று மெலானிஸ். அங்கு பழங்குடி மக்களே வாழுகின்றனர். அவர்களுக்குள் பிரசித்தி பெற்ற விளையாட்டு இது.

அங்கு வானத்தை உரசும் கட்டிடங்களோ, பெரிய கோபுரங்களோ கிடையாது. அதனால் மரக் குச்சிகளை வைத்து பழங்கால முறையில் கோபுரம்போல அமைப்பார்கள். அந்தக் கோபுரத்தின் உச்சியில் இருந்து பாய்வதுதான் போட்டி. பாய்வதில் கில்லாடி என்று நிரூபிப்பவர்தான் உண்மையான ஆண்மகன் என்று மதிக்கப்படுவாராம்.

வெற்றி பெற்ற பாய்சல் மன்னனை திருமணம் செய்ய இளம் பெண்களிடம் பயங்கரமான போட்டியே ஏற்பட்டு விடுமாம்.

அதனால் 'பாய்ச்சல்' போட்டியில் தங்கள் திறமையைக் காண்பிக்க கட்டிளம் காளைகள் முண்டியடிப்பார்களாம். அப்படி முண்டியடித்த காளைகளில் ஒருவர் காலில் மரக் கொடியை கட்டிக் கொண்டு பாயும் காட்சிதான் படத்தில் உள்ளது. 65 அடி உயரத்தில் இருந்து தலைகீழாகக் குதிக்கிறார். சற்றுப் பிசகினால் எலும்பும் மிஞ்சாது. பயங்கர துணிச்சலப்பா! ■



தகவல் பெட்டி

# தீட்டப்படாத வைரம்

↑ இப்போதெல்லாம் 'ஜிம்னாஸ்டிக்' சாகச விளையாட்டில் விதம் விதமாக புகுந்து விளையாடுகிறார்கள். அந்தரத்தில் சுழன்று கரணமடிப்பது முதல் பல ரகமான சாகசங்கள் உள்ளன. அசத்துகிறவர்களுக்கு ஒலிம்பிக் போட்டிகளில் தங்கம் கிடைக்கிறது.

இப் புகைப்படம் எடுக்கப்பட்டது 1920ம் ஆண்டு. இந்த சிறுவன் ஜிம்னாஸ்டிக் வீரனல்ல. இவனது தேவை தங்கமும் அல்ல. வயிற்றை நிரப்பும் உணவுக்கு தேவையான சில சில்லறைக் காசுகள் கிடைத்தால் போதும். அதற்காக தெருவில் பார்வையாளர்களை கவரத்தான் இந்தச் சாகசம். பாருங்கள், தேநீர் கோப்பை ஒன்றில் ஒரு காலை வைத்தபடி மறுகாலை தூக்கி என்னமாய் 'பாலன்ஸ்' பண்ணுகிறான்! ஜிம்னாஸ்டிக் வீரர்கள்கூட இவன் முன்னால் நிற்க முடியாது. சீனாவில் ஒரு ரயில் நிலையம் முன்பாக 1920ல் எடுக்கப்பட்ட புகைப்படம் இது.

ஊக்குவிப்பும், வாய்ப்பும் கிடைத்திருந்தால் இவனும் ஜிம்னாஸ்டிக் மன்னனாக மாறியிருப்பான். இப்படிதான் எத்தனையோ திறமைசாலிகள் தீட்டப்படாத வைரம்மாதிரி எங்கெங்கோ மறைந்து கிடக்கிறார்கள். அப்படியே மறைந்தும் போகிறார்கள். இதற்குத்தான் சொல்வார்கள் 'திறமை மட்டும் இருந்தால் போதாது, நேரமும் சரியாக அமையவேண்டும்.' ■

# மேலிடத்துப் பந்தாட்டம்



→ அமெரிக்காவில் உள்ள அரிஸோனா மாநிலத்தில் உள்ள ஒரு பண்ணையில் 1955ல் எடுக்கப்பட்ட புகைப்படம் இது. மக்களைச் சுரண்டி, வெந்ததைத் தின்றுவிட்டு உழைக்காமல் வாழும் பிரபுக்களுக்கு பொழுது போக வேண்டாமா? அதற்காகவே சில விளையாட்டுக்கள் உருவாக்கப்பட்டன. அதில் சில விளையாட்டுக்கள் சுவராசியமானவை. சில சோம்பலானவை. அதில் இது எந்த ரகம் என்பதை நீங்களே தீர்மானிக்கலாம்.

பிரபுகளின் குதிரைகள் கால்பந்து விளையாடுகின்றன. குதிரைகள் மேல் இருந்து கொண்டு, பந்துகள் உருளும் திசைக்கேற்ப குதிரைகளை விட்டுப்பிடிப்பதுதான் பிரபுக்களின் வேலை. பிரபுக்களுக்கு பொழுதுபோக்கு, குதிரைகளுக்கு விளையாட்டு. கொடுத்துவைத்த குதிரைகள்!



# இயற்கையான பயிற்சி

← விளையாட்டுப் போட்டிகளில் சாதனை படைக்க வேண்டுமானால் கடும் பயிற்சிகள் செய்ய வேண்டும். எந்த விசேஷ பயிற்சியும் இல்லாமல் உலக சாதனையை முறியடித்தார் ஒருவர். அவர் ஒரு காட்டுவாசி. படத்தில் உயரம் பாய்கிறார் பாருங்கள் அவர்தான் நம்ம அண்ணாச்சி.

ஒலிம்பிக் போட்டிகளில் ஆகக்கூடுதலாக பாயப்பட்ட உயரம் 22 1/4 அங்குலம். 1896ம் ஆண்டு படைக்கப்பட்ட சாதனை அது. 1907ம் ஆண்டு வரை அச்சாதனை முறியடிக்கப்படவில்லை. 1907 ருவாண்டா நாட்டில் காட்டு வாசிகளுக்கிடையே விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. அவற்றில் உயரம் பாய்தலில் முன்னைய சாதனையை முறியடித்தார் இந்தக் காட்டுவாசி. மிருகங்களை துரத்தி ஓடியும், காட்டு மரங்களைத் தாண்டிப் பாய்ந்தும் இயற்கையாகவே பெற்ற பயிற்சிதான் இந்த அசத்தலுக்கு காரணம்.



→ இதுவும் ஒரு அந்தக்காலப் புகைப்படம்தான். இதன் பின்னணியில் உள்ள சமாச்சாரம்தான் முக்கியம். இப்போதெல்லாம் கயிறிழுப்புப் போட்டிகள் பிரபலமாகிவிட்டன. இவர்களும் அந்தக் காலத்தில் கயிறுதான் இழுக்கிறார்கள். இவர்களிடம் கயிறிழுப்புப் போட்டியை அறிமுகப்படுத்துவதற்கு அமெரிக்கர்கள் மிகச் சிரமப்பட்டு சிரத்தை எடுத்துக் கொண்டனராம்.

பிலிப்பைன்ஸ் தீவுகளில் வாழ்ந்த பழங்குடியினர்தான் இவர்கள். அமெரிக்கர்கள் இங்கு செல்ல முன்னர் இவர்கள் நடத்திய விளையாட்டுப் போட்டி விபரீதமானது. சொன்னால் நம்பமாட்டீர்கள், மனிதத் தலைகளை வெட்டும் போட்டிதான் நடத்திக் கொண்டிருந்தார்கள்! தங்கள் இனத்தைச் சாராத மற்றொரு இனத்தாரின் தலைகளில் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் யார் அதிகமாகத் தலைகளை சீவுகிறாரோ அவர்தான் வெற்றி வீரன்.

இப்படியான விபரீதமான திசையில் இவர்கள் சிந்தனை செல்லாமல் தடுத்து, ஆரோக்கியமான விளையாட்டுக்களில் ஈடுபடுத்தவே கயிறிழுப்பு போட்டியை இவர்களுக்கு அறிமுகம் செய்தனர்.

கோட்டு சூட்டோடு நின்று ஊக்குவிக்கிறார்கள் பாருங்கள். நம் நாட்டில் இவவாத அறிக்கைகளை தயாரிக்கும் சமாதானத் தலை வாங்கிகளுக்கு, யார் வந்து விளையாட்டு காண்பிக்கப்போகிறார்கள்? ■

# வெட்டாதே! இழு!



படிப்பகம்

# நாலு நாயகிகள்

முரளிக்கு அடித்திருக்கிறது அதிஷ்டம். கே.எஸ்.ரவிக்குமாரின் உதவியாளராக இருந்த இளஞ்செழியன் இயக்கும் 'ரத்னா' படத்தில் முரளிதான் கதாநாயகன். அவருக்கு ஜோடிகளாக நான்கு நாயகிகள் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

ரேவதி, சங்கீதா, மகேஸ்வரி, இந்து ஆகியோர்தான் முரளிக்கு ஜோடிகள். மனிதர் திக்குமுக்காடப்போகிறார். வடிவேலு, வினுசக்கரவத்தி, கசன்கான், குமரிமுத்து ஆகியோரும் நடிக்கின்றனர். இசை: ஜெயசூர்யா.

# பார்த்திபனின் தாராளம்

அண்மையில் வெளியான படங்களில் சக்கைபோடு போடத் தொடங்கியுள்ள படம் 'அபிமன்யு'. முரட்டுப் பொலிஸ் அதிகாரியாக புகுந்து விளையாடி இருக்கிறார் பார்த்திபன். கவர்ச்சிக்கு என்று மட்டும் ரவளியை போட்டுள்ளார்கள். பார்த்திபனும், ரகுவரனும் போட்டி போட்டு நடித்திருக்கிறார்கள். விறு விறுப்புக்கு உத்தரவாதம்.

அதென்னவோ பார்த்திபன் படங்கள் அடுத்தடுத்து சூப்பர் ஹிட்டாகிக் கொண்டிருக்கின்றன. அதனால் பார்த்திபனை தேடி தயாரிப்பாளர்கள் படை எடுக்கிறார்கள். மறுபடி பொத்தென்று விழுந்துவிடக்கூடாதே என்று விழிப்பாக இருக்கிறார் பார்த்திபன்.

பார்த்திபனுக்கு ஏற்பட்டுள்ள மவுசைப் பார்த்து கடைத் திறப்பு விழாக்களுக்கு வலிந்து அழைக்கிறார்களாம். திறப்பு விழாக்களுக்கு நடிகர், நடிகைகளை அழைப்பது என்றால் ஒரு தொகை கையில் கொடுக்கவேண்டும். பார்த்திபனுக்கும் ஒரு கடை திறப்பு விழாவில் 10 ஆயிரம் கொடுத்தார்களாம்.

பார்த்திபன் அப் பணத்துடன் நேராக அநாதை விடுதி ஒன்றுக்கு சென்று 120 சிறுவர் சிறுமியருக்கு உடுப்புக்கள், படுக்கைகள், உணவு வகைகள் வாங்கிக் கொடுத்தாராம்.

# அன்னை தெரேசாவுடன் குஷ்பு

அன்னை மேரியின் படம் பொறித்த டாலர் வைத்திருக்கிறார் குஷ்பு. அதைக் கொடுத்தவர் அன்னை தெரேசாவாம்.

கல்கத்தா சென்றபோது அன்னையை சந்தித்தாராம் குஷ்பு. எந்த முன் அனுமதியும் இல்லாமல் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்ததாம். குஷ்பு தன்னை ஒரு நடிகை என்று அறிமுகப்படுத்திக் கொண்டதும் அன்னை தெரேசா என்ன கேட்டார் தெரியுமா?

"நீ சினிமாவில் நடிக்கிறியா? அப்படியானால் உன்னிடம் நிறையத் துணிகள் இருக்குமே. நீ போட்டு உபயோகித்த துணிகளை தூக்கியெறிந்து விடாமல் எங்கள் ஆசிரமத்துக்கு கொடு. உன் வயதில் இங்கே நிறையப் பெண்கள் கட்டிக் கொள்ள நல்ல துணிகள் இல்லாமல் கிழிந்ததைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்." என்றாராம். அப்படியே துணிகளை சென்னையில் உள்ள அன்னை தெரேசா ஆசிரமத்துக்கு கொடுத்தாராம் குஷ்பு. கண்கலங்கியபடி இதனைச் சொல்லியிருக்கிறார் குஷ்பு.

# கஜோல் நிபந்தனை

மகா பிரமாண்டமாக இந்திப் படமொன்றை எடுக்க இருக்கிறார் மணிரத்னம். அதற்காக கஜோலை நாயகியாக போட முடிவு செய்திருக்கிறார். கஜோலை அணுகிய மணிரத்னத்திடம் தயக்கத்துடன்தான் சம்மதம் தொவித்தாராம் கஜோல்.

மணிரத்னம் போன்ற பெரிய இயக்குநர்களின் படம் என்றால் நடிகர்களும், நடிகைகளும் கதை கேட்பது வழக்கமில்லை. 'இருவர்' பட படுதோல்வியை அறிந்திருந்த கஜோல் மணிரத்னத்திடம் படத்தின் கதை கேட்டாராம்.

மணிரத்னமும் வேறு வழியில்லாமல் கதையை கொடுத்திருக்கிறார். கதையைப் படித்துப் பார்த்தார் கஜோல். பரவாயில்லை நடிக்கலாம் என்றாராம்.

ஆனால் கஜோல் கேட்ட சம்பளம் கட்டுபடியாகவில்லையாம். கடுப்புடன் திரும்பிவிட்டார் மணிரத்னம். எல்லாம் நேரம்தான்.

# மந்திர வலை வீச்சு

சில நடிகைகள் சினிமாவுக்கு வந்த பின்னர்தான் கிசுகிசுக்கள் வரும். சில நடிகைகள் சினிமாவுக்கு வரும்போதே கிசு கிசுக்களை சுமந்துகொண்டு வருவார்கள். இதில் மந்த்ரா இரண்டாவது ரகம். சினிமாவுக்கு வர முன்னரே ஹோட்டல் ஒன்றில் நடனமாடி பல பெரும் புள்ளிகளின் நட்பைப் பெற்றவர். இப்போது நடனம் ஆடியதே இல்லை என்று மறுக்கிறார்.

நடிக்க வந்த சூட்டோடு தன் முதல்பட நாயகனான அருண்குமாரை வலைக்குள் போட்டார். அருண்குமாரின் மாக்கெட் அவுட்டானதால் அவரை விட்டு சற்று விலகி இருக்கிறார். ஒப்ரேஷன் மூலம் உடலின் அங்கங்களை பெரிதாக்கிக் கொண்டு வாய்ப்புத் தேடி வலை வீசிக் கொண்டிருக்கிறார்.

தற்போது தமிழ் சினிமா உலகில் முன்னணியில் இருக்கும் இரண்டு நடிகர்களோடு அவ்வப்போது சந்திப்புக்களை நடத்திக் கொண்டிருக் கிறார். தமிழோடு நிறுத்திக் கொள்ளாமல் இந்தியிலும், தெலுங்கிலும் தனது மந்திர வித்தைகளை காண்பித்துக் கொண்டிருக்கும் மந்த்ரா, தமிழ்ப் படங்களில் சொந்தக் குரலிலேயே பேசி நடிக்கிறார்.

* நடிகை லட்சுமியின் கணவரும், நடிகரும், இயக்குநருமான சிவச்சந்திரன் விரைவில் பிரபு கதாநாயகனாக நடிக்கும் படமொன்றை இயக்கவுள்ளார். பிரபு ஏற்கனவே சிவச்சந்திரன் இயக்கியுள்ள 'என் உயிர் கண்ணம்மா', 'ரத்ததானம்' போன்ற படங்களில் நடித்துள்ளார்.

* இந்த வருடத்தில் ரம்யா கிருஷ்ணன் நடித்துள்ள தெலுங்குப் படங்களில் மனம்மாயி' என்ற படம் பெரும் வெற்றி பெற்றுள்ளது. இரட்டை வேடத்தில் கிருஷ்ணன் நடித்திருக்கும் இப்படத்தை மௌலி இயக்கியுள்ளார்.

* மலையாளத்தில் சிம்ரான் முதல் முதலில் நடித்த படம் தமிழில் 'டெல்லி தர்பார்' என்ற பெயரில் மொழிமாற்றப்பட்டு வருகிறது. இந்தப் படத்தில் மம்முட்டி கதாநாயகனாக நடித்திருக்கிறார்.

* அர்ஜுன் கதாநாயகனாக நடித்த 'செங்கோட்டை' படத்தைத் தயாரித்தவர் 'சூப்பர்குட் ஃபிலிம்ஸ்' ஆர்.பி. சௌத்ரி. இவர் மீண்டும் அர்ஜுனைக் கதாநாயகனாக வைத்துப் படமொன்றைத் தயாரிக்கவுள்ளார்.

* டி. ராஜேந்தர் கதை-திரைக்கதை- வசனம் எழுதி இசையமைத்து இயக்கிவரும் 'மோனிஷா' என்ற படத்திற்காக 'மோனலிசா மோனலிசா..' என்று தொடங்கும் பாடலொன்றைப் பாடியுள்ளார் சிலம்பரசன்.

* பார்த்திபன் நடித்த 'பாரதி கண்ணம்மா' தெலுங்கில் 'ஜமீன் தாரு காரு அம்மாயி' என்ற பெயரில் மொழிமாற்றப்பட்டு வெற்றிகரமாக ஓடியதைத் தொடர்ந்து இவரது சமீபத்திய படமான 'அபிமன்யு' படமும் தெலுங்கில் மொழிமாற்றப்பட்டு வருகிறது.

* இந்தியில் வினோத் கன்னாவுடன் 'தயாவான்', 'மஹா சங்கராம்' ஆகிய படங்களில் ஜோடியாக நடித்துள்ள மாதுரி டிக்ஷித், தற்போது வினோத் கன்னாவின் மகன் அக்ஷய் கன்னாவுடன் ஜோடியாக நடித்து வருகிறார்.

* 'ஆனஸ்ட்ராஜ்', 'மிஸ்டர் ரோமியோ' போன்ற படங்களை இயக்கிய கே.எஸ்.ரவி அடுத்து இயக்கும் படத்தில் அரவிந்தசாமி கதாநாயகனாக நடிக்கவுள்ளார். இதில் அரவிந்தசாமிக்கு ஜோடியாக நடிப்பவர் இந்தி நடிகை சோனாலி பாந்த்ரே.

* சத்யராஜ் நடித்த 'பகைவன்' வெற்றிப் படத்தைத் தயாரித்த வி.என். சுந்தர் முதன் முறையாக படமொன்றை இயக்கவிருக்கிறார். இந்தப் படத்தில் கதாநாயகனாக நடிப்பவர் சத்யராஜ்.

# துள்ளித் திரிந்த காலம்

பாலச்சந்தரின் கவிதாலயா பட நிறுவனம் தற்போது 'விடுகதை' படத்தை தயாரித்து வருகிறது. அகத்தியன் இயக்கத்தில் உருவாகும் படம் அது.

அதனை அடுத்து கவிதாலயா தயாரிக்கப்போகும் படத்திற்கு 'துள்ளித் திரிந்த காலம்' என்று பெயர் சூட்டியுள்ளனர்.

படத்தில் கதாநாயகன் அருண் குமார். அவருக்கு ஜோடி யார் என்பது இன்னமும் தீர்மானமாகவில்லை. முக்கிய வேடத்தில் குஷ்பு, நாசர் ஆகியோரும் நடிக்க உள்ளனர்.

'லவ்டுடே' படத்தை இயக்கிய பாலசேகரன் இப்படத்தையும் இயக்கப்போகிறார். அக்டோபர் மாத நடுப்பகுதியில் படப்பிடிப்பு ஆரம்பமாகி, ஜனவரியில் வெளியிட உத்தேசமாம்.



சுரேஷ்-வினிதா
படம்: நான் ஒரு இந்தியன்

# காதோடு சொல்லுகிறோம்

'மா' என்ற எழுத்தில் பெயர் முடிவடையும் மூன்றெழுத்து நடிகை தன் தங்கைக்கு சிபாரிசு செய்தார். 'கா' நடிகருடன் 'குரு'வுக்கு எதிர்ச்சொல் கொண்ட படத்தில் தங்கை நடித்தார். 'கா' நடிகர் அவரை தன் சிஷ்யையாக்கி குருவாக மாறிவிட்டார். அடுத்தடுத்த படங்களிலும் வாய்ப்புத் தருவதாக வாக்குக் கொடுத்தாராம். சேர்ந்து நடித்த முதல்படமே பப்படமாகிவிட்டதால் நடிகர் நழுவிவிட்டார். இப்போது தங்கை நடிகை அந்த 'கா' நடிகர் போல் ஒரு பெண்பித்தர் உலகில் கிடையாது என்று சொல்லிக்கொண்டு திரிகிறார்.

ரன் என்ற எழுத்துக்களில் பெயர் பூர்த்தியாகும் நடிகை அவர். அவரை ஒரு பிரபல நடிகர் சந்திக்க விரும்பினாராம். அவருடன் ஜோடியாக நடிக்கத்தான் அழைக்கிறார் என்று ஓடோடிப் போனராம் நடிகை. ஆனால் நடிகரே வேறு எண்ணத்தில் இருந்திருக்கிறார். வாய்ப்புத் தராமல் வாய்ப்புத்தேடிய நடிகருக்கு முகத்தில் அடித்தாற்போல மறுப்புச் சொல்லிவிட்டு போன வேகத்தில் திரும்பி வந்தாராம் நடிகை. அந்த நடிகர் சிறந்த நடிகர்தான். நடிகையிடம் மட்டும் அவர் நடிப்பு எடுபடவில்லையாம்.

டயானா விபத்தில் பலியான பின்னர் மீன் நடிகையின் தாய்க்குலம் தங்கள் கார் ஓட்டுநருக்கு கண்டிப்பான கட்டுப்பாடுகளை விதித்துள்ளாராம். அதனால் வேலையை விட்டு நின்றுவிடலாமா? என்று யோசித்துக் கொண்டிருக்கிறார் ஓட்டுநர். ஆனால் மீன் நடிகைக்கு அவரை இழக்க விருப்பமில்லையாம்.

சுகன்யமான நடிகைக்கு திருமணம் செய்ய மணமகன் பார்த்தார்கள். மணமகனும் கிடைத்தார். அவர் ஒரு தொழிலதிபர். இந்த விடயம் நடிகையின் முன்னால் காதலரான முன்னாள் அமைச்சருக்கு எட்டிவிட்டது. உடனே தனது ஆட்களைவிட்டு தொழிலதிபரை மிரட்டினாராம். தொழிலதிபர் துண்டைக் காணோம், துணியைக் காணோம் என்று ஓட்டம் பிடித்தாராம். மாஜி அமைச்சரின் சொத்துக்களை நடிகை கெட்டியாகப் பிடித்து வைத்திருக்கிறார். திருமணம் செய்வதானால் அதனையெல்லாம் திருப்பிக் கொடு என்று கேட்கிறாராம் மாஜி அமைச்சர் கண்ணாளர்.

இந்தி நடிகைகள்தான் மது அருந்துவார்கள் என்பதெல்லாம் ரொம்பத் தப்பான நம்பிக்கை. தமிழ்ப்பட நடிகைகள் பலரே இப்போது முன்னணியில் இருக்கின்றனர். அந்தப் பட்டியலில் பிரபலமாக அறியப்படுபவர் 'ஹீர' நடிகை. சென்னையில் இருந்தார் என்றால் தவறாமல் அங்குள்ள நட்சத்திர விடுதியொன்றில் 'பார்' பக்கம் தினமும் காணப்படுகிறாராம்.



மந்த்ரா
படம்: தேடினேன் வந்தது

# அப்பாஸ் வருத்தம்

"வி.ஐ.பி. படத்தில் இரண்டு ஹீரோக்களில் ஒருத்தராக நடித்தபின்னர் எனக்கு கசப்பான அனுபவங்கள் ஏற்பட்டன. இனி இரண்டு கதாநாயகர்களில் ஒருத்தராக நடிப்பதை கொஞ்சம் கொஞ்சமாக குறைத்துக் கொள்ளப்போகிறேன்." என்று கூறியிருக்கிறார் அப்பாஸ்.

மற்றொரு தகவல், அப்பாசுக்கு தலையணைகள் என்றால் பிரியமாம். தலைக்கு இரண்டு கட்டாயம் தேவை. அத்தோடு இடம், வலமாகவும் தலையணை வைத்துக் கொண்டுதான் தூங்குவாராம்.

# மூன்றாவது வாரிசு

விஜயகுமார்-மஞ்சுளா தம்பதியினரின் மற்றொரு மகளான ப்ரீதாயும் கமராவுக்கு தீனிபோட்டுக் கொண்டிருக்கிறார். தெலுங்கு படமான 'ருக்மணி'யில் கதாநாயகியாக கலக்கிக் கொண்டிருக்கிறாராம். அவரது தங்கையாக படத்தில் நடிப்பவர் நிஜத்திலும் தங்கையான பேபி ஸ்ரீதேவி. ஏற்கனவே நடித்துவரும் தனது சகோதரி வனிதா போலவே இருக்கிறார் ப்ரீதா.

# குறி வைக்கிறார் ரவளி

விஜயகாந்த் பட நிறுவனத்தின் ஆஸ்தான நடிகையாக இருந்தவர் ரவளி. பின்னர் தெலுங்குக்குப் போனவரை 'சீமைப் பசு' என்று கூறி மறுபடி தமிழுக்கு கொண்டு வந்தவர் பார்த்திபன். 'அபிமன்யு' படத்தில் நடித்ததற்கு ரவளிக்கு இரட்டிப்பான சம்பளம் கிடைத்ததாம். இத்தனைக்கும் தொட்டுக் கொள்ள ஊறுகாய் போல சில காட்சிகளில் மட்டுமே தலை அல்லது உடல் காட்டியிருந்தார்.

பார்த்திபனுடன் மட்டுமல்லாமல் சத்யராஜுடனும் ராசியாகிவிட்டார் ரவளி. குறைந்த மூன்று முன்னணி நடிகர்களையாவது அனுசரித்துப் போனால்தான் தாக்குப்பிடிக்கலாம் என்று நினைக்கிறார் ரவளி. அவர் அடுத்து குறி வைத்திருப்பது கார்த்திக்கை என்கிறார்கள். இத் தகவல்களை பத்திரிகை ஒன்றுக்கு வழங்கியிருப்பவர் ரவளியின் தோழியாக உள்ள ஒரு நடிகைதானாம். அவரது பெயர் கீர்த்தனா.



ரவ
படம்: மனசுக்கு

# கட்டுப்பாட்டை மீறிவிட்டார்

'ராமன் அப்துல்லா' படநாயகி ஈஸ்வரிராவ் பாலுமகேந்திராவின் கண்டுபிடிப்பு. அவரது முன்னைய கண்டுபிடிப்பான அர்ச்சனா போலவே அசப்பில் இருக்கிறார் ஈஸ்வரிராவ். தனது கறுப்பு நிறத்தை மறைக்க முழு மேக்கப் போட்டுக் கொண்டுதான் வெளியே செல்கிறார். கறுப்பு நிறத்தை ஏன் தாழ்வாக நினைக்க வேண்டும்?

இது ஒருபுறமிருக்க, 'குரு பார்வை' படத்தில் கவர்ச்சியை அள்ளி வழங்கி நடித்துக் கொண்டிருக்கிறார். தனது அறிமுக நடிகைகளை சிறிது காலம் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்து தட்டிக் கொடுத்து முன்னுக்கு கொண்டுவருவதுதான் பாலுமகேந்திராவின் ஸ்டைல். ஈஸ்வரிராவ் கட்டுப்பாட்டை மீறியதால் படு கோபமாக இருக்கிறார் பாலு.

# எட்டிப்பார்த்த ரம்யா

தெலுங்கு தயாரிப்பாளரும், இயக்குநருமான பிரியத்துக்குரியவருடன் ரம்யா கிருஸ்ணனுக்கு லடாய். அதனால் தமிழ்ப்பட உலகப் பக்கம் எட்டிப்பார்க்க நினைத்தார். ரம்பா, சிம்ரான், நக்மா என்று ஒரு பட்டாளமே கவர்ச்சி ஆட்சி நடத்திக்கொண்டிருக்கும் தமிழ்ப்பட உலகில் ரசிகர்களின் அமோக வாக்குகளைப் பெறுவது கடினம் என்று கண்டுகொண்டாராம்.

பாருக்கு ராஜாவான அந்த தமிழ்ப்பட இயக்குநரையும் தாஜா பண்ணப் பார்த்தாராம். "நான் ஏற்கனவே தமிழ்ப்பட உலகப் பிரச்சனையில் தலையைக் கொடுத்து விட்டேன். இந்தப்பெண்ணும் நம்மை சந்திக்க வந்தா வேறுவிதமா பேசுவாங்க. பின்னர் ஒருநாள் பார்த்துக் கொள்ளலாம்" என்று உதவியாளர்களிடம் சொல்லி அனுப்பிவிட்டாராம் ராஜ இயக்குநர். மனம் ஒடிந்த ரம்யா மறுபடி தெலுங்கு ரசிகர்களை கவர்ச்சிகாட்டி மிரட்டச் சென்றுவிட்டார்.



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

திரையுலக மறுபக்கம் 23

# காதல் மன்னன் ஜெமினி கணேசன்

மித்ரவாசு

## திரைக்குப் பின்னால் தொடுத்த காதல் அஸ்திரங்கள்

காதலை மொத்த குத்தகைக்கு எடுத்துக் கொண்டவர் பிரதர் ஜெமினி கணேசன் என்று சிவாஜி அடிக்கடி சொல்வார். 'அவ்வை சண்முகி' வெள்ளிவிழாவிலும் சிவாஜி அப்படிச் சொல்லிப் பாராட்டினார்.

நிஜ வாழ்விலும் ஜெமினி காதல் மன்னனே. அவரது வாழ்வில் இடம்பெற்ற பெண்கள் ஒன்றா இரண்டா? எத்தனைபேர் என்று அவருக்கே தெரியாது.

கணேசன் ஜெமினி ஸ்டுடியோவில் வேலைக்குச் சேர்ந்து ஜெமினி கணேசன் ஆனார். ஜெமினி ஸ்டுடியோவில் அவர் 'ரெக்ருட்மெண்ட் டிப்பார்ட்மென்ட்'டில் வேலை பார்த்து வந்தார். நடிகர் நடிகைகளைத் தெரிவுசெய்யும் பகுதி அது. சக்ரதாரி படப்பிடிப்பு (வி.நாகையா ஹீரோ) ஜெமினியில் நடந்து கொண்டிருந்தபோது புஷ்பவல்லி அதில் கதாநாயகி. அதே படத்தில் கிருஷ்ணபரமாத்மாவாக வேடமிட்ட கணேசன் அந்தச் சந்தர்ப்பத்தில் புஷ்பவல்லியைச் சந்தித்தார்.

ஜெமினி கணேசன் சில காட்சிகளில் மட்டுமே அந்தப் படத்தில் நடித்தார். புஷ்பவல்லியோடு பேச வாய்ப்பில்லாத படம் அது. புஷ்பவல்லிக்கு அப்போதிருந்த நட்சத்திர அந்தஸ்தில் தன்னொடு பேசுவாரா என்றுகூட கணேசனுக்கு தயக்கம் இருந்தது.

ஜெமினி ஸ்டுடியோவில் தயாரான 'சம்சாரம்' படத்தில் ஜெமினியை கதாநாயகனாக நடிக்கவைப்பதாக இருந்தது. புஷ்பவல்லிதான் கதாநாயகி. பின்னர் எம்.கே.ராதாவை நடிக்கவைத்தனர். அதனால் ஜெமினி ஸ்டுடியோவில் இருந்து விலகினார் ஜெமினி கணேசன்.

மனக்கவலையில் இருந்த கணேசன் ஒருநாள் மாலை நேரத்தில் தனது காரில் சென்னை மெரினா கடற்கரைக்குச் சென்றிருந்தார்.

காரை நிறுத்திவிட்டு கடல் மணலில் அழுத்தமாக கால்களை ஊன்றி நடந்தார். சிறிது தூரத்தில் வெள்ளைப் புடவை அணிந்த பெண் ஒருத்தி தனிமையில் அமர்ந்திருந்ததைக் கண்டு அருகே சென்றார். அந்தப் பெண் நடிகை புஷ்பவல்லி.

"நீங்களா?" என்று ஜெமினி அவரை வியப்போடு கேட்க, அதே கேள்வியை புஷ்பவல்லியும் பதிலுக்குக் கேட்டார்.

"எங்கே இந்தப் பக்கம்?" என்று ஜெமினி கேட்டதற்கு, "மனம் சரியாக இல்லை, ஆறுதல் தேடி வந்தேன்" என்றார் புஷ்பவல்லி. "நம்ம கதையும் அதுதான்" என்றார் ஜெமினி கணேசன்.

ஜெமினி நிறுவனத்தில் தான் ஒப்பந்த நடிகையாக இருந்தும், புகழ் பெற்ற நடிகை என்ற அந்தஸ்தை அனுபவிக்க முடியாமல் அங்கு கூண்டுக் கிளியாக இருப்பதைப் பற்றிச் சொன்னார் புஷ்பவல்லி. ஜெமினியும் தன் மனதில் உள்ளதையெல்லாம் கொட்டினார்.

### கார்ப் பயணம்

"காரில் வந்திருக்கிறீர்களா?" என்று கேட்ட புஷ்பவல்லியிடம், "ஆமாம் என்னுடைய ராசியான பச்சை வண்ணக் காரில் வந்திருக்கிறேன்" என்றார் பெருமை பொங்க ஜெமினி.

"உங்கள் காரில் என்னை ஏற்றிக் கொள்ளுங்கள். சற்றுத்தூரம் காரில் போய்க் கொண்டே மனம்விட்டுப் பேசுவோம்" என்றார் புஷ்பவல்லி.

புகழ்பெற்ற நடிகையின் அந்த வார்த்தைகள் ஜெமினியின் மனதை இன்பவதை செய்தன. காரில் ஜெமினியின் அருகில் அமர்ந்தார் புஷ்பவல்லி. அது ஜெமினிக்கு இன்னும் என்னவோ போலிருந்தது.

கார் மெதுவாகச் சென்று கொண்டிருந்தது. "உங்களுக்கு கார் ஓட்டத் தெரியுமா?" என்று கேட்டார் ஜெமினி. "தெரியாது" என்றார் புஷ்பவல்லி.

"கார் ஓட்ட நான் உங்களுக்கு கற்றுத் தரட்டுமா?" என்று தனக்கே உரிய சிரிப்போடு கேட்ட ஜெமினி ஸ்டியரிங்கில் கையை வைக்கச் சொன்னார்.

புஷ்பவல்லியும் அப்படியே செய்ய அவரது கைகள்மீது ஜெமினியின் கைகள் பதிந்தன. அதற்கு எந்த ஆட்சேபணையுமில்லை. கைகளால் சங்கமித்தவர்களின் கண்களும் சங்கமித்தன.

ஜெமினி மணமானவர் என்றாலும் பிரபல நடிகை ஒருவரது கரங்களின் ஸ்பரிசம் அவருக்கு புது அனுபவமாக இருந்தது.

மக்கள் நடமாட்டமில்லாத எலியட்ஸ் கடற்கரையில் ஒரு ஓரமாக காரை நிறுத்தினார். இருவரும் சிறிது நேரம் ஏதேதோ பேசினர்.

இருவரது கண்களில் பொங்கிய உணர்வுகளும், பார்வையில் தெரிந்த அர்த்தங்களும் அவர்களை புது அனுபவத்திற்கு தயார்படுத்தின. அந்த அளவுக்கு செல்லும் வகையில் ஜெமினியின் இதமான பதமான வார்த்தைகள் புஷ்பவல்லியை முற்றிலும் வசப்படுத்திவிட்டது.

### ஒன்று சேர்ந்தனர்

அன்றிரவு வீடு திரும்பிய ஜெமினி பெரும் குற்றம் செய்துவிட்ட உணர்வில் தவித்தார். 'பாவம் தொலைந்து போவதாக' என்று முழுக்குப் போட்டுவிட்டு ஈர உடையுடன் தன் வீட்டுத் திண்ணையிலேயே படுத்துக்கொண்டார். தன் மனைவியிடமும், தயாரிடமும் அதற்கு ஏதேதோ காரணங்களைச் சொல்ல அவர்களும் நம்பிவிட்டனர்.

அதன் பின்னர் புஷ்பவல்லியைச் சந்திப்பதை ஜெமினி தவிர்த்தார். புஷ்பவல்லியே ஜெமினியைத் தேடிப்போய் சந்தித்தார். "இப்படி நீங்கள் செய்தீர்கள் என்றால் உங்களை நான் எங்கு சந்தித்தேனோ அதே கடலில் விழுந்து தற்கொலை செய்து கொள்வேன்" என்று அழுதார் புஷ்பவல்லி. ஜெமினி புஷ்பவல்லியை அணைத்தபடி காரில் ஏற்றிக் கொண்டு அவரது வீட்டுக்குச் சென்றார். அதுமுதல் புஷ்பவல்லியின் வீடே அவரது வீடானது.

ஒரு சினிமா நடிகனின் ஆசாபாசங்களையும், உணர்ச்சிகளையும் புரிந்துகொண்டு அவனோடு வாழ்ந்து இன்பம் தந்து வாழும் விசேஷத் திறமை தன் மனைவியைவிட புஷ்பவல்லியிடமே இருந்தது என்பதை ஜெமினி அறிந்தார். சில ஆண்டுகள் அவருடனே வாழ்ந்தார்.

இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தன. அவர்களில் ஒருவர்தான் பானுரேகா என்ற ரேகா. (இன்றைய இந்தி நடிகை) இன்னொருவர் தனலட்சுமி. டி.ராஜேந்தரின் 'ஒரு தாயின் சபதம்' என்ற ஒரேயொரு படத்தில் மட்டும் நடித்தவர் தனலட்சுமி.

### அடுத்து வந்தவர்

ஏ.வி.எம். நிறுவனத்தின் 'பெண்' படத்தில் நடிக்க ஜெமினி கணேசன் ஒப்பந்தமான சமயம், அதே நிறுவனத்தின் 'செல்லப் பிள்ளை' படத்தில் நடிக்க சாவித்திரியும் ஒப்பந்தமானார். அங்கு இருவரும் சந்தித்துப் பேசிக் கொண்டனர்.

சாவித்திரியின் கன்னங்கள் மல்கோவா மாம்பழம் போன்றும், அவரது கண்களில் இருந்த ஒளியும், சுறுசுறுப்பும் ஜெமினியின் இதயத்தில் விதை போட்டது.

'மனம் போல் மாங்கல்யம்' என்ற படத்தில் இருவரும் ஜோடியாக நடித்தனர். ஜெமினியின் காதல் அஸ்திரங்கள் சாவித்திரிமீது பாய்ந்தன. சாவித்திரியும் மனதை பறிகொடுத்தார். படப்பிடிப்பு நடந்த செட்டிலேயே ஜெமினியோடு சீண்டி விளையாட ஆரம்பித்தார் சாவித்திரி.

பி.நாசி ரெட்டியின் 'மிஸ்ஸியம்மா' படத்திலும் ஜோடி சேர்ந்தபோது நெருக்கம் அதிகமானது. பல இடங்களில் மறைமுகமாச் சந்திக்கத் தொடங்கினர். வெளியே செய்தி பரவ ஆரம்பித்தது.

புஸ்பவல்லிக்கு விஷயம் தெரிவதற்குள் முந்திக் கொண்டுவிடவேண்டும் என்று நினைத்த ஜெமினி, அவரிடம் பேச்சுவாக்கில் சாவித்திரி பற்றிக் குறிப்பிட்டார்.

சாவித்திரியை புஸ்பவல்லி வீட்டுக்கு அழைத்து வந்தார். ஜெமினி எதிர்பார்த்தற்கு மாறாக இரண்டு பெண்களும் கலகலவென்று பேசினர். பேச்சுக்கு நடுவே புஸ்பவல்லி, ஜெமினியைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே "சாவித்திரி அழகாக இருக்கிறாள். இவளை உங்கள் மூன்றாவது மனைவியாக வைத்துக் கொள்ளுங்களேன்" என்றாள் கேலியான குரலில்.

ஜெமினி திடுக்கிட்டுப்போக, சாவித்திரி இருவரையும் மாறி மாறிப்பார்த்துவிட்டு விடைபெற்றுச் சென்றுவிட்டார்.

### விரிசல்

ஒருநாள் நுங்கம்பாக்கத்தில் உள்ள முதல் மனைவி பாப்ஜி வீட்டில் ஜெமினி இருந்தபோது இரவில் வீட்டுக் கதவை யாரோ தட்டினர். திறந்தால் எதிரே சாவித்திரி.

உங்களை நம்பி வீட்டை விட்டு வந்துவிட்டேன். பெரியப்பாவின் நிர்ப்பந்தங்களுக்கும், நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டு அந்த வீட்டுச் சிறையில் இருக்க முடியாது" என்று அழுதார்.

அன்று இரவு அவரை தனது நண்பர் ஒருவரது இல்லத்திற்கு அழைத்துச் சென்றார். ஒன்றாக வாழ முடிவெடுத்தனர்.

தாயாரையும் முதல் மனைவி பாப்ஜியையும் ஒரு வழியாக சமாதானம் செய்த ஜெமினியால், புஸ்பவல்லியை சமாளிக்க முடியவில்லை. புஸ்பவல்லி நேரிலும், டெலிபோனிலும் திட்டிக் கொண்டிருக்க, ஜெமினி புஸ்பவல்லியைவிட்டு விலகத் தொடங்கினார்.



அப்பாஸ்-சங்கவி
படம்: இனியெல்லாம் சுகமே

### ...வசி பிடிவாதம்

...தில் ஒரு 'திடுக்' அனுபவம் ஏற்பட்டிருக்கிறது. ஒரு படப்பிடிப்புக்காக ...சென்றவர் ரயிலில் திரும்பி வந்தாராம். அவரிடம் ஒரு பிலிம் ...டியையும் கொடுத்து அனுப்பினார்களாம். ...தமிழ்நாட்டு எல்லையைத் தாண்டியபோது வெடிகுண்டுப் ...காரணமாக ரயிலை சோதனை போட்டனர். எங்கு ...யும் வெடிகுண்டு அகப்படவில்லை. கடைசியாக ஊர்வசியின் ...பெட்டிமீது போலிசார் கண்போட்டார்களாம். ...பிலிம் பெட்டியை பிரித்துக் காட்டச் சொன்னதாம் ...லிஸ். "பெட்டியைப் பிரித்தால் ...வீணாகிடும். என்னை நம்பிக் ...கொடுத்துள்ளார்கள். நான் பிரித் ...காட்டமாட்டேன்." என்று ...வசி அடம்பிடித்தார். ...போலிசார் மசியவில்லை. ...உடனே பிலிம் பெட் ...தூக்கிப் போட்டுக் ...டினாராம். அதன் ...பின்னர் போலிசார் ...வினார்களாம்.

### ரவளியின் தத்துவம்

"எந்தவொரு வேடமானாலும் அது கவர்ச்சியாக இருக்கிறதா, சோகமயமாக இருக்கிறதா என்றெல்லாம் நான் பார்ப்பது கிடையாது. கொடுத்த பாத்திரத்தை குறைவைக்காமல் செய்வேன். ரசிகர்களை ரசிக்க வைப்பதுதான் என் நோக்கம்" என்று தத்துவமுத்தை கொட்டியிருக்கிறார் ரவளி.


"மிகவும் கவர்ச்சியாக ஏன் உடை அணிகிறீர்கள்?" என்று ஒரு நிருபர் கேட்டதற்கு, ரவளியின் பதில்; "அதனை ஏன் கவர்ச்சியாகப் பார்க்கிறீர்கள்?" என்று கேட்டாராம் பின்னர் எப்படிப் பார்ப்பதாம்.

### காதல் வந்திரிச்சு

'ராமன் அப்துல்லா' படத்தில் விக்னேஷ், ஈஸ்வரிராவ் ஜோடியாக நடித்தனர். இன்னொரு படத்திலும் அந்த ஜோடி தொடர்கிறது. படத்தின் பெயர்; 'காதல் வந்திரிச்சு'.

ராஜீவ், நிழல்கள் ரவி, செந்தில், சார்லி, கோவை சரளா, சியாமளா ஆகியோரும் நடிக்கின்றனர். ஏற்கனவே சரண்ராஜ் என்றொரு நடிகர் இருக்கிறார். இப் படத்தில் கிரண்ராஜ் என்றொரு புதுமுகம் அறிமுகமாகிறார்.

இயக்கம் ஆர்.செல்வம்.
பாடல்கள்: பழனிபாரதி.
இசை: தேவா.





முள்ளில் ஆடும் ஈறுக்கும்
கள்ளில் ஊறும் கண்கள்
தங்கத் தட்டில் பொங்கும் இனப்பு
தேன்போல் பெண்கள்.

### ...க்கு கோயிலா?

...கோயில் கட்டியது தெரிந்த ...போது சிம்ரான் ரசிகர்கள் ...மானத்தை காட்ட கோயில் ...கிறார்களாம். சிம்ரானிடம் ...சக்தியைச் சொல்லி அனுமதி ...ம். சிம்ரான்தான் வேண்டாம் ...பிவிட்டாராம்.

...த கோயில் கட்டினால் ரம்பா ...சும்மா இருக்கமாட்டார்கள். ...க்கு தெரு கோயில்கள்தான்.

### ஒரே ஒரு நிபந்தனை

'ரோஜா மலரே' படத்தில் முரளியின் ஜோடியாக நடித்து வருகிறார் ரீவா. மும்பை இறக்குமதி. ஏற்கனவே 'செல்வா' படத்தில் விஜய் ஜோடியாக நடித்தவர்தான் ரீவா. அப்போது சற்றே மெலிவாக காணப்பட்டார். பின்னர் மும்பாய் சென்று உடலை தேற்றிக் கொண்டு வந்திருக்கிறார்.

'ரோஜா மலரே' படத்தில் குறும்பான பாத்திரமாம். எப்படி வேண்டுமானாலும் நடிக்கத் தயார். முத்தக் காட்சிக்கும் ஓ.கே. ஆனால் ஒரே ஒரு நிபந்தனையாம்! "முத்தம் கொடுக்கும் நாயகன் சிகரெட் பிடித்துவிட்டு வந்து நிற்கக்கூடாது" என்கிறார்.

### அம்மன் பக்தை

'கடவுள்' படத்தில் தீவிரமான அம்மன் பக்தையாக தோன்றுகிறாராம் ரோஜா. கவர்ச்சியா? மூச்.

தனது வருங்காலக் கணவர் ஆர்.கே.செல்வமணி இயக்கும் 'அரசியல்' படம் வந்தபின்னர் தனது மார்க்கெட் மறுபடி உயரும் என்று நம்புகிறார் ரோஜா. மாபெரும் திருப்பமும், கையில் நல்ல பணப் பெருக்கமும் ஏற்பட்ட பின்னர்தான் திருமணமாம்.

### முகப்பில்

| | |
|---|---|
| க | சா |
| ஜோ | க் |
| ல் | ஸி |

ரம்யா கிருஷ்ணன்
படம்: அஹிம்சை



படிப்பகம்

www.padippakam.com

## இரத்த அழுத்தமா?



உங்களுக்கு இரத்தக் கொதிப்பு உள்ளதா? கண்டு கொள்வது எப்படி? பெரும்பாலானோருக்கு அறிகுறிகள் ஏதும் இருப்பதில்லை. மருத்துவ சோதனைகளினால் மட்டுமே கண்டுபிடிக்கப்படுகிறது.

**இரத்தக்கொதிப்பின் அறிகுறிகள் என்ன?**

தலைவலி, தலைசுற்றல் (மயக்கம்), அதிக களைப்பு, மூச்சுத்திணறல், தூக்கமின்மை, நெஞ்சுவலி அல்லது படபடப்பு.

**எச்சரிக்கையாக இருக்க வேண்டியவர் யார்?**

இரத்தக் கொதிப்புள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர், மேலே குறிப்பிட்ட அறிகுறிகள் உள்ள 40 வயதிற்கு மேற்பட்டவர், பருமனாக உள்ளவர், நீரிழிவு, சிறுநீரக வியாதி மற்றும் கொழுப்புச் சத்து அதிகம் உள்ளவர்.

**இரத்தக் கொதிப்பினால் ஏற்படும் விளைவுகள்:**

இருதய நோய், மாரடைப்பு, பக்கவாதம், மூளைக்கோளாறுகள், மூளையில் இரத்தக் கசிவு, சிறுநீரகம் பாதிப்பு, கண்பார்வைக் குறைவு போன்றவை ஏற்படும்.

**இரத்தக் கொதிப்பைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள்:**

உணவுக் கட்டுப்பாடு, மிதமான உடற்பயிற்சி, மனக்கட்டுப்பாடு, மருத்துவம்

### இனம் காண்பது எப்படி?

**உணவுக்கட்டுப்பாடு:**

கொழுப்பு உணவுகளைத் தவிர்த்தல், (கொழுப்பு உள்ள மாமிசம், முட்டை, நெய், தயிர், மற்றும் தேங்காய் எண்ணெய் போன்றவை.) உப்பைக் குறைவாக உபயோகித்தல்.

**மிதமான உடற்பயிற்சி:**

இரத்த ஓட்டத்தை இது சீராக்கும். காலையிலும், மாலையிலும் நடத்தல். சில யோகாசனங்கள் மற்றும் தியானம் செய்தல், அமைதியான பொழுதுபோக்குகள்.

**மனக்கட்டுப்பாடு:**

மன அலைவு, கவலை மற்றும் உணர்ச்சி வசப்படுதலைத் தவிர்த்தல். மது அருந்துதல், புகை பிடித்தல் போன்றவற்றைத் தவிர்த்தல்.

**மருத்துவம்:**

1. குறிப்பிட்ட மருந்துகளை, குறிப்பிட்ட அளவு, குறிப்பிட்ட நேரத்தில் சாப்பிட வேண்டும்.
2. குறிப்பிட்ட இடைவெளிகளில் மறு பரிசோதனை அவசியம்.
3. மருந்துகளை உட்கொண்டு வரும்போது, எந்தக் குறை தென்பட்டாலும் அதனை மருத்துவரிடம் கூறி, அவர் ஆலோசனைப்படி நடக்க வேண்டும்.
4. மருந்தின் அளவையோ, சாப்பிடும் முறையையோ மருத்துவரை ஆலோசிக்காமல் மாற்றக்கூடாது.
5. இரத்தக் கொதிப்பு குறைந்து வரும் போது, இரத்த அழுத்தம் சீராக இருக்கும்படி குறைந்தளவு மருந்தை தொடர்ந்து சாப்பிட்டு வர வேண்டும்.

ஆரம்பத்திலேயே இரத்தக் கொதிப்பு இருப்பதைக் கண்டுபிடித்தால், முறையாக வைத்தியம் செய்து பின்விளைவுகளைத் தவிர்க்கலாம். எனவே இரத்த அழுத்தத்தை சோதித்துக் கொள்ளுங்கள்.

## மனதில் இளமை வேண்டும்

பெண்கள் எப்போதுமே அழகாகவே இருக்க விரும்புவர். ஆனால் சில பெண்கள் 35 வயதாகியவுடன் தான் முதுமை அடைந்து விட்டதாகக் கருதி, இனி நமக்கு எதற்கு அழகு? திருமணமாகிக் குழந்தைகளையும் பெற்று விட்டோமே என்று நினைத்து எஞ்சிய அழகைக்கூட வீணடித்து விடுகின்றனர்.

மேலைநாடுகளில் 40 வயதில்தான் பெண்கள் வாழ்க்கையை அனுபவிக்கத் தொடங்குகின்றனர். விதவிதமாய்த் தங்களை அழகுபடுத்தி ஆடையணிந்து உல்லாசமாயிருக்கின்றனர்.

ஆனால் இங்கோ தலையை அலங்காரமாய் வாரமாட்டார்கள். புடவையை அழகாக உடுத்தாமல், அப்புடவைகளுக்கு ஏற்ற ரவிக்கைகளை அணியாமல் ஏனோ தானோவென்று தலைவாரி, முகத்தில் அவசர அவசரமாகப் பவுடர் தீற்றி, புடவை ரவிக்கை அணிந்து ஐம்பது வயது தோற்றத்தோடு இருப்பார்கள். 40,45 வயதெல்லாம் இப்போ பெரிய வயதல்ல என்று நினைக்க வேண்டும்.

பெண்கள் உடம்பை அளவாகப் பராமரிக்க வேண்டும். உடம்பைப் பெருக்க வைக்காத உணவைச் சாப்பிட்டு சதை போடாதபடி முடிந்தளவு உடற்பயிற்சிகளை மேற்கொண்டு நடந்தால் என்றும் இளமை அழகியாகக் காட்சி தரலாம்.

காலையில் எழுந்ததும் குளித்துத் திருத்தமாக உடையணிந்து, தலையை வாரி சுறுசுறுப்பாக வேலை செய்தால் உண்மையில் உங்களுக்கு 40 வயதென்றாலும் நீங்கள் ஓர் இளமைத் தோற்றத்துடன் அழகியாகக் காட்சியளிப்பீர்கள்.

## உடைகிறதா உங்கள் நகங்கள்?

நீண்ட நேரம் விரல்களைத் தண்ணீரில் நனைய விடுதல், விரல்களை உடனே துவாயால் துடைக்காமல் காய்வதற்கு நீண்ட நேரம் எடுத்துக் கொள்ளுதல், துணிகளைத் துவைக்கும் போது சலவை சோப் அதிகளவில் உங்கள் விரல்களில் தங்கியிருத்தல் போன்ற காரணங்களால் விரல் நகங்கள் உடைகின்றன. அத்துடன் சத்துக் குறைபாடுகளாலும் நகங்கள் உடைய வாய்ப்புண்டு.

உடலில் இரும்புச்சத்து குறைவாக இருந்தால், நகங்கள் வெளிறிய நிறத்தில் இருக்கும். துத்த நாகம் (ZINC) குறைவாக இருந்தால் நகங்களில் வெள்ளைப்புள்ளிகள் தோன்றும். தினசரி உணவில் புரதம், மீன் எண்ணெய் மாத்திரைகள், இரும்புச் சத்து விட்டமின் 'சி', விட்டமின் 'பி', விட்டமின் 'ஈ', கல்சியம், துத்தநாகம், ஜெரினியம் ஆகியவை இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள்.

தினமும் நகங்களின் அடிப்பாகத்தைச் சுற்றி சிறிது நேரம் மசாஜ் செய்யுங்கள். நகங்கள் புதிய பொலிவினைப் பெறுவதைக் காண்பீர்கள்.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** CL

பெயர்:........................

முகவரி:........................

........................

கையொப்பம்:........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 11-10-1997**

அனுப்பவேண்டிய முகவரி- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## கண்ணீரில் கரைந்த இரவுகள்



பக்கிங்ஹாம் அரண்மனைக்குள் அடைந்து கிடந்தால் தனக்கு பைத்தியம் பிடிக்கிறதோ இல்லையோ 'பைத்தியக்காரி' என்று பட்டம் சூட்டிவிடுவார்கள் என்று பயந்துபோனார் டயானா.

சாள்ஸ்-கமீலாவுடன் கொண்டிருந்த உறவை கண்டுகொள்ளாமல் இருந்த மகாராணி எலிசபெத் பழியை தன்மீது போடுவதும் டயானாவுக்கு எரிச்சலாக இருந்தது.

பக்கிங்ஹாம் அரண்மனைக்குள் டயானாவுக்காக அனுதாபப்பட யாரும் இருக்கவில்லை. சாள்ஸ்-கமீலா உறவு டயானாவுக்கு தெரிய வந்த பின்னர் சாள்ஸ் எங்கே போயிருக்கிறார், எங்கிருக்கிறார் என்ற விபரங்கள் கூட டயானாவுக்கு மறைக்கப்பட்டன.

அரண்மனை ஊழியர்கள் பலர் மகாராணி குடும்பத்திற்கு விசுவாசமானவர்கள். டயானா தன்னைப் பற்றி விசாரித்தால் எதுவும் கூறக்கூடாது என்று அவர்களிடம் கண்டிப்பான உத்தரவு போட்டுவிட்டார் சாள்ஸ்.

ஒருமுறை சாள்ஸ்சும் கமீலாவும் பக்கிங்ஹாம் அரண்மனைக்குள் இன்னொரு அறைக்குள் உல்லாசமாக இருந்திருக்கின்றனர்.

டயானா அப்போது இரண்டாவது முறையாக கர்ப்பமாக இருந்தார். வயிற்று நோவில் துடித்த டயானா, சாள்ஸ்சுடன் தொடர்பு கொள்ள முயன்றார்.

"சாள்ஸ் அரண்மனையிலேயே இல்லை. வெளியே போய்விட்டார்." என்று அரண்மனை ஊழியர்கள் சொல்லிவிட்டனர்.

## மறைக்கப்பட்ட இரகசியங்கள்

பின்னர் தற்செயலாக ஜன்னல் வழியாக வெளியே பார்த்த டயானா பொறிகலங்கிப்போனார்.

கமீலாவை முத்தமிட்டு வழியனுப்பி வைத்துக்கொண்டிருந்தார் இளவரசர் சாள்ஸ். டயானாவின் வெறுப்பு மேலும் உயர்ந்தது.



மகாராணியுடனும் சாளசுடனும் டயானா.

### பரிசோதனைகள்

பிரிட்டிஷ் அரச குடும்பத்து மருமகள்களாக வரும் பெண்கள் கன்னித்தன்மையுடன்தான் இருக்கிறார்களா என்று கண்டறிய பரிசோதனை நடத்தப்படுவது வழக்கம்.

குழந்தைபெறும் தகுதி இருக்கிறதா? என்றும் மருத்துவ பரிசோதனை நடத்துவார்கள்.

இந்த இரண்டு சோதனைகளும் டயானாவுக்கு திருமணத்தின் முன்பாக நடத்தப்பட்டன.

ஒரு பெண்ணை அவமதிப்பது போன்ற இத்தகைய பரிசோதனைகள் டயானாவுக்கு அறவே பிடிக்கவில்லை. ஆனாலும் சாள்ஸ் மீது கொண்ட காதலுக்காக அவற்றைப் பொறுத்துக் கொண்டார்.

சாள்ஸ்-கமீலா உறவு தெரிந்தபின்னர் டயானா கொதித்துப்போனார்.

"தங்கள் மருமகளாக வரும் பெண்கள் சுத்தமானவர்களா இல்லையா என்று சோதனை நடத்தும் அரச குடும்பத்தினர், அந்தப் பெண்களுக்கு கணவர்களாகும் தங்கள் பிள்ளைகள் மட்டும் சுத்தமானவர்களாக இருக்க வேண்டும் என்று நினைக்கவில்லையே!" என்று தன் தோழிகளிடம் சொல்லி குமுறி இருக்கிறார் டயானா.

கமீலாவுடன் பழகி பெண்களிடம் கூச்சமில்லாமல் நடந்துகொள்ளக் கற்றுக்கொண்டார் அல்லவா சாள்ஸ்.

அதன் பின்னர் பல அழகிகளிடம் தன் திறமையை பரிசோதித்துப் பார்த்திருக்கிறார். வித்தைகளைக் காட்டியிருக்கிறார் என்ற தகவல்கள் தோழிகள் மூலமாக டயானாவுக்கு தெரிய வந்தன.

அரண்மனைக்குள் என்ன நடக்கிறது என்ற தகவல்கள்தான் டயானாவுக்கு தெரியவில்லை, அரண்மனைக்கு வெளியே சாள்ஸ் யாருடன் சுற்றுகிறார், எந்தக் காரில் எந்தப் பெண்ணுடன் சென்றார் என்ற தகவல்கள் எல்லாம் டயானாவுக்கு கிடைத்தபடியே இருந்தன.

டயானாவின் தோழிகள் தாங்கள் கண்ட காட்சிகளையெல்லாம் தொலைபேசி மூலம் உடனுக்குடன் தெரிவித்துவிடுவார்கள்.

அரண்மனை ஊழியர்களில் ஒருவர் மட்டும் டயானாவுக்கு இடைக்கிடையே சில தகவல்களை தெரிவித்து வந்தார். ஆரம்பத்தில் ஏனைய ஊழியர்கள் போலவே டயானா கேட்கும் கேள்விகளுக்கு 'தெரியாது' என்றே பதில் சொல்லிக் கொண்டிருந்தாராம்.

நாளடைவில் டயானாமீது அந்த ஊழியருக்கு பரிவு ஏற்பட்டுவிட்டது. அரச குடும்பத்தினர் போல அல்லாமல், ஊழியர்களிடம் எஜமான தோரணை இல்லாமல் டயானா பழகுவதும் அதற்கு ஒரு காரணம்.

அந்த ஊழியர் டயானாவின் அறைக்கு அடிக்கடி சென்று வருவது எலிசபெத் மகாராணிக்கு எப்படியோ தெரிந்துவிட்டது.

சாள்ஸ்ஸிடம் இன்பம் காணமுடியாத டயானா அந்த பணியாளருடன் அந்தரங்க உறவு வைத்திருக்கிறார் என்று அரண்மனை வட்டாரத்தில் கிசுகிசுக்கப்பட்டது. குறிப்பிட்ட பணியாளரும் கட்டுமஸ்தான தோற்றம் கொண்டவர். இளமையானவர்.

டயானா பற்றி அரசல் புரசலாக பேசப்பட்ட அந்தச் செய்தியை அரச குடும்பம் நம்பியது. விளைவு, அந்த ஊழியரை வேலையைவிட்டு நீக்கி வீட்டுக்கு அனுப்பிவிட்டனர்.

**புவனா**

### பாய்ச்சல்

அன்று கிறிஸ்மஸ் தினம். டயானா கர்ப்பமாக இருந்த நேரம். சாள்ஸ்-கமீலா இருவரும் அடிக்கடி வெளியே சென்று சல்லாபம் புரிகின்றனர் என்று ஒரு தோழி டயானாவுக்கு ஃபோன் செய்திருந்தார்.

ஃபோனை வைத்த டயானா 'இன்று சாள்ஸ்சிடமே இரண்டில் ஒன்று கேட்டுவிடுவது' என்ற முடிவோடு தன் அறையிலிருந்து வெளிப்பட்டார்.

அப்போது மாடிப்படிகளில் இறங்கிச் சென்று கொண்டிருந்தார் சாள்ஸ். டயானா மேலிருந்தபடியே அவரை அழைத்தார்.

டயானா அழைப்பது காதில் விழாத மாதிரி சென்ற சாள்ஸ், மீண்டும் டயானா சத்தமிட்டு அழைத்ததால் படியில் நின்றபடியே "என்ன?" என்பது போல பார்த்தாராம்.

> "மனதிலே புயலடித்தது, முகத்தில் புன்னகை மின்னல் அடிக்கவில்லை. ஒரு பொம்மை போலவே கலந்து கொண்டார்."

"கமீலா வேண்டுமா நான் வேண்டுமா? தயவு செய்து ஒரு முடிவை எடுங்கள். என்னை மோசம் செய்யாதீர்கள் ஃப்ளீஸ்.." என்று டயானா அங்கிருந்தபடியே கூச்சலிட்டிருக்கிறார்.

'அட... இதுதானா சமாச்சாரம்....' என்பதுபோல அலட்சியப் பார்வை ஒன்றை வீசிவிட்டு பதிலே சொல்லாமல் மாடிப்படிகளில் தொடர்ந்து இறங்கினார் சாள்ஸ்.

சாள்ஸ் செய்த அலட்சியம் டயானாவுக்கு கோபத்தையும், ஆற்றாமையையும் ஏற்படுத்திவிட்டது.

மாடியில் இருந்து அப்படியே கீழே குதித்தார்.

டயானாவின் புண்ணியம் அவருக்கோ, வயிற்றில் இருந்த கருவுக்கோ ஆபத்து எதுவும் ஏற்படவில்லை.

அதுவரை மூன்று முறைக்கு மேல் தற்கொலை முயற்சிகளில் ஈடுபட்டுவிட்டார் டயானா.

மூன்று முறையும் அதிஷ்டவசமாக பிழைத்துக் கொண்டார். அப்படியிருந்தும் சாள்ஸ்சோ, மாமியார் எலிசபெத்தோ டயானாவின் மனதை ஆற்றவோ, மனம்விட்டு பேசவோ முன்வரவில்லை.

மிரட்டல் நாடகம் என்றே நினைத்தனர். இதற்கிடையே சில பொது நிகழ்ச்சிகளில் சாள்ஸ்சும், டயானாவும் கலந்து கொண்டனர்.

**3**

டயானாவிடம் முன் போன்ற உற்சாகம் காணப்படவில்லை. ஒரு பொம்மை போல ஏனோ தானோவென்று கலந்துகொண்டார். தலைகுனிந்தபடி காணப்பட்டார்.

"டயானாவின் மனதில் புயலடிக்கிறது. அந்த அழகு தேவதையின் முகத்தில் முன்னர்போல புன்னகை மின்னலடிக்க வில்லை. சாள்ஸ்சை விட்டு விலகிப்போகிறார் டயானா. சாள்ஸ்-கமீலா உறவுதான் விரிசலுக்கு வித்தாகி இருக்கிறது." என்று சில பத்திரிகைகள் எழுதின.

இன்னொரு பத்திரிகை அந்தரங்கத்தை வேறு கோணத்தில் அலசியது.

"சாள்ஸ்-டயானா இடையே 13 வயது வித்தியாசம். டயானாவை உடல்ரீதியாக திருப்திப்படுத்த முடியாமல் தவிக்கிறார் சாள்ஸ். அதுதான் விலகிவிலகிப் போகிறார்.



டயானாவின் இளமைத் துடிப்பைக் கண்டு அஞ்சி நடுங்குகிறார் சாள்ஸ். அதனால்தான் கமீலாவே கதி என்று கிடக்கிறார்."

"டயானா செக்ஸ் விஷயத்தில் ஆர்வமும் வேகமும் உள்ளவர். பாவம் சாள்ஸ்சுக்கு வயதாகிவிட்டது." என்று எழுதியது இன்னொரு பத்திரிகை.

இச் செய்திகளைப் பார்த்ததும் டயானாவின் மனநிம்மதி போயேவிட்டது.

படுக்கையறையில் உள்ள கட்டிலை டென்னிஸ் மட்டையால் அடித்துத் துவைத்து தன் ஆத்திரத்துக்கு வடிகால் தேடினார்.

ஒருமுறை காரை எடுத்துக்கொண்டு படு பயங்கரவேகமாக ஓட்டினார். "காரை வேகமாக ஓட்டிச் சென்றதால் ஓரளவு மனம் அமைதிப்பட்டது." என்று தன் தோழி ஒருவரிடம் கூறினாராம்.

இக்கட்டத்தில்தான் சில ஆண் நண்பர்கள் டயானாவின் வாழ்வில் குறுக்கிட ஆரம்பித்தனர்.

(அடுத்த வாரமும் வரும்)

### இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? அவிசாவளை வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான். | |
|---|---|
| | திருமதி தெய்வானை வீரையா<br>190, உக்வத்த, அவிசாவளை. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



படிப்பகம்

www.padippakam.com

## இங்கே... இக்கணமே...!

சபலங்களாலும்
சலனங்களாலும்
சமைக்கப்பட்ட சித்தம்,
சரியாயின் சரியெனவும்
பிழையாயின் பிழையெனவும்
கணிப்பதில் மட்டும்
காலங்கடத்தும்!
0–0
துளிரையும் சருகையும்
கண்ட பின்னரும்
புரிய முடியாமல்,
'நிரந்தரம் எல்லாம்'
என்றே நினைந்திருக்கும்!
0–0
இங்கே.... இக்கணமே...
இன்புற மறந்து,
இறப்பையும் எதிர்வையும்
நிகழ்விலே கலந்து
இருக்கும் பொழுதையும்
சிதைத்துக் கெடுக்கும்!
0–0
இலட்சிய வெறிகொண்டு
சுயத்துக்கு விலங்கிட்டு,
சுதந்திரங்கெட்டு,
பயத்தினை மட்டும்
தனக்குள் நிறைக்கும்!
0–0
குருட்டு மதங்கள்
மனித நோயறியாமல்
புனித மருந்து வழங்கும்;
கூழ் முட்டையில்
ஏறிக் குந்தி
குஞ்சை எதிர்பார்க்கும்
கோழிபோல் மனிதம்
அந்த மருந்துண்டு மகிழும்!
0–0
இங்கே... இக்கணமே....
இன்புற மறந்து
இறப்பையும், எதிர்வையும்
நிகழ்விலே கலந்து...?

பாலபேராதரன்.

## உன்னிதழ்களின் மரணத்தால்...!

அரசின்
தீர்வுப் பொதியைப் போல,
உன் காதலையும் நீ
காட்டப் போவதேயில்லையா?!
*–*
உன்னிதழ்களுக்கு
மரணமாகும்
மௌனம்,
விழிகளுக்கு
உயிர் கொடுத்து
என்னையல்லவா கொல்கிறது?
*–*
தூக்கத்துக்குள் அடங்காத
உன் கனவுகளால்
ஒவ்வொரு அஸ்தமனத்திலும்
துவைக்கப்பட்ட ஆடையாய்
பிழியப்படுகின்றன கண்கள்!
*–*



கோடைகாலத்து
வேர் போல, உனை
பருகத்துடிக்கும்
தாகங்களால்
உப்பிட்ட அயிரையின்
அவஸ்தையில் நான்!
*–*
அர்த்தப் பாதையை
விட்டு விலக்கி,
உன் காந்தக் காட்டுக்குள்
எனை கடத்திப் போனவளே!
ஒரு புன்னகைத் தாலாட்டுப்
பாடிவிட்டுப் போ!!
என் இதயக்காயங்கள்
கொஞ்சம் இமை மூட்டும்!

பர்ஸான்- யடவத்த,
நிகொள்ள.

## என்று தீரும்...?

எரிந்து போகும்
தேசத்தின்
எரிதணலின்
வெளிச்சமது
எங்கும்
பரவி வர...
**
விடிழந்து
சுற்றங்கள் தனைத்
துறந்து
வீதியே
வதிவிடமாய்
பலர்
வாழ!
**
விலையேற்றங்கள்
ஒருபுறம்:
போர்
மாற்றங்கள்
மறுபுறம்:
ஏதும் இல்லா
நாங்கள்
என்ன செய்வோம்?
**
ஷெல்லோசை
வெடியோசை
தினம் கேட்டு,
எப்போது
மரணமோ?
என்றெண்ணும்
அவல வாழ்வது
என்று தீரும்?

அகிலா ஜெகதீஸன்
- வவுனியா.

## தேன் கிண்ணம்

## ஊமைக் காதல்

தொண்டைக் குழிவரை
ஆயிரம் வார்த்தைகள்-
உனைக் கண்டதும்
உமிழ் நீரில் மரணமாகும்!
..
அடிக்கடி கடிதம் எழுதி
அனுப்பாமல் சேகரிக்கும்
என் இதயம்:
தினம் தினம் உன்னோடு
பேசத் தவம் இருக்கும்!
..



மற்றவர்கள் உன் பெயரைச்
சொல்லும்போது
ருசிக்கும் என் உள்ளம்,
உன் பெயரைச் சொல்ல வெட்கப்படும்!
..
உன் முகத்தையே பார்க்க
விரும்பும் என் கண்கள்:
நீ பார்க்கும்போது
மெல்ல திசை திரும்பும்!
..
என்னைப் போலத்தான் என் பேனாவும்
உனை நேசிக்கும்!
அதுதான் சத்தம் இல்லாமல்
எழுதிக் கொண்டே இருக்கிறது!
..

எஸ். நிவாசன்-
மட்/மகிழடித்தீவு.

## என்றும் அன்புடன்...!

வாழ்க்கை பாழடைந்து
அழுகின்ற போது,
வான் பரப்பில்
ஏறிப் பறந்து
'எத்திசையில் எனைத்தேட?
எங்கு சென்று எனைக் காண?'
என்றெண்ணி வருந்தாதே!
–0–
நீண்ட தொலைவில்
நான் வாழ்ந்திருந்தாலும்
உனது அன்பை
இரு விழிகளைப்போல–என்
உள்ளத்தில் காப்பாற்றுவேன்!
–0–
எனது அன்பு
சோகத்தை உன்னிடம்
அடையாளப்படுத்தித்
தரப்போவதில்லை!
துன்ப அடிச்சுவடுகளை
உன் இதயத்தில்
பதித்துச் செல்லப்
போவதில்லை!
–0–
உலகில் எந்தச் சிகரத்தின் மீது
நிலை கொண்டிருந்தாலும்,
உன்னுள்ளே கண்ணீர் எழும்
நேரங்களிலெல்லாம்- என்
அன்பின் கரங்கள்
நெருங்கி வந்து–உன்
விழிதுடைத்துப் போகும்!
–0–
கடந்த காலத்தால்
சுருட்டிக் கொள்ளப்பட்ட
கவலை நிரம்பிய
காட்சிகளை
மீண்டும் மீண்டும்
விரித்துப் பார்த்து
வேதனையடையாதே!
–0–
உன் சோகச் சுவடுகளைத்
தரிசிக்கும் தைரியம்–என்
நெஞ்சுக்கு இல்லை;
உன் கண்ணீருக்கு
ஆறுதல் கூறும் சக்தி
என் கண்களில் இல்லை;
உன் வேதனைகளுக்கு
ஒத்தடம் கொடுக்கும்
வார்த்தைகள் என்னிடமில்லை!
–0–
எனதன்பு உனக்கிருந்தால்
வாழ்க்கையை
வென்றுவருவதாகக் கூறுகிறாய்;
என்றென்றும் எனதன்பு
உனக்காக இருக்குமென
உறுதியாக நம்புகிறாய்!
வாழ்வின் எல்லைவரை
தூய அன்போடு–நான்
துணைவரப் பிரார்த்திக்கிறாய்!
–0–
அந்த நம்பிக்கைகளை
நான் உனக்குப்
பாதுகாத்துத் தருவேன்!
உன்னதங்கள் நிரம்பியதாய்
உனது வாழ்க்கையை
வாழவைத்து மகிழ்வேன்!



–0–
இருள் சூழ்ந்த உனது வானில்
இனி ரோஜாக்கள் சிரிக்கும்!
நீ போகும் பாதையெல்லாம்
ஆலாபனையே ஒலிக்கும்!

பஹீமா ஜஹான்- தெமடகொல்ல,
மெல்சிரிபுர.

## 'நறுக்'கவிதைகள்

### அகதியாற்றுப்படை
அகதியாய்....
அகதிமுகாம் சென்றவன்!
இன்னொரு...
அகதியைக் கண்டு
இவ்வாறு சொன்னான்:
"எங்கள் முகாமுக்கு வா!
ஒரு வேளையாவது
உணவு கிடைக்கும்!"

### கையறு நிலை
கையைத் தூக்காவிட்டால்...
மார்பிற்கு வெடி!
நிலம் நோக்கா
கால் வைத்தால்...
உயிருக்கே... இடி!

### புது(ற)த் திணை
முன்னேறிச் செல்!
பின்
பின்னேறிச் செல்!
பதுங்கிச் செல்!
பாய்ந்து கொல்!
'வெற்றி நிச்சயம்!'
இல்லையேல்,
'செய் அல்லது செத்துமடி!'

### காசுத்திணை
அவள் பெயரை
ஆருக்குஞ் சொல்லாது
கனிவாகப் பேசி
களவாகக் காதலித்து
காலம் கழிந்தபின்
காசு பெற்று
வரைந்து கொள்வது!

### குறிஞ்சித் திணை
தேர்தல் காலங்களில்
மலை மாந்தரோடு...
மக்கள் தலைவர்கள்
வாக்குறுதி தந்து,
வாகை சூடி...
அரசுடன் புணர்வது!

சோ. ஸ்ரீதரன்-
பொகவந்தலாவ.

## அசலும் நகலும்

➔ டயானாவை உரித்துவைத்தது போல அப்படி ஓர் உருவ ஒற்றுமை. இவரது பெயர் போர்மோர் (வலது புறம்) 'டயானா போலவே இருக்கிறீர்களே' என்று பார்ப்பவர்கள் சொல்வதில் கொஞ்சம் பெருமிதம், கொஞ்சம் கலக்கம். டயானா என்று நினைத்து சில புகைப்படப்பிடிப்பாளர்கள் இவர் பின்னால் அலைந்திருக்கிறார்கள். விளக்கம் சொல்லி கழன்று கொள்வதற்குள் போதும்போதுமென்றாகிவிடுமாம். இப்போது டயானா மறைந்ததில் இவருக்கும் சோகம்தான்.





➔ அசப்பில் இளவரசர் வில்லியமைப் போலவே இருக்கிறார் லியுக் (வலதை புறம்) அவுஸ்திரேலியாவைச் சேர்ந்தவர். ஒரு முறையாவது வில்லியமை நேரில் சந்தித்து அசத்த வேண்டும் என்று ஆசை. நண்பர்கள் இவரது பெயரான லியுக்கை தவிர்த்துவிட்டு வில்லியம் என்று தான் அழைக்கிறார்களாம்.





இளவரசர் ஆன்ட்ருவின் முன்னாள் மனைவி சாரா ஃபெர்கி போலவே இருக்கிறார் லிசா கெய்ஸ். (இடது புறம்) இவரும் அவுஸ்திரேலிய குடிமகள்தான். சாரா அடிக்கடி கிசுகிசுக்களில் அடிபடுகிறவர் என்பதால், சாரா போலவே இருப்பதால் சங்கடமாக உணர்கிறார். உருவ ஒற்றுமை இருந்தாலும், காதல் சமாச்சாரங்கள் லிசாவுக்குப் பிடிக்காதாம். சாராவையும் அவ்வளவாகப் பிடிக்காது. அதனால் அவரைச் சந்திக்க வேண்டும் என்றெல்லாம் ஆசை கிடையாதாம்.





## இந்த வாரம் உங்கள் பலன்

(05.10.1997 தொடக்கம் 11.10.1997 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | |
|---|---|
| ஞாயிறு- குடும்பக் கலகம், மனக் கவலை. | பி.ப. 1 மணி |
| திங்கள்- காரியானுகூலம், தொழில் சிறப்பு. | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, பண வரவு. | பி.ப. 2 மணி |
| புதன்- வீண்மனஸ்தாபம், உயர்ச்சித்தடை. | மு.ப. 10 மணி |
| வியாழன்- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| சனி- பிரயாணக் கஷ்டம், தேகசுகம் பாதிப்பு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- பணக் கஷ்டம், கடன் தொல்லை. | மு.ப. 10 மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, பண வரவு. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பகல் 11 மணி |
| புதன்- இனசன நன்மை, குடும்ப சுகம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | மு.ப. 10 மணி |
| வெள்ளி- சுபகாரிய மகிழ்ச்சி, பணச் செலவு. | பி.ப. 2 மணி |
| சனி- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- வீண்குறை கேட்டல், மனக்கிலேசம். | பகல் 11 மணி |
| செவ்வாய்- தொழில் மந்தம், அந்நியர் நட்பு. | பி.ப. 1 மணி |
| புதன்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| வியாழன்- பயனுள்ள செயல், மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, மனக்குறை நீங்கும். | பி.ப. 1 மணி |
| சனி- அந்நியர் நட்பு, பணவரவு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- துயர் நீங்கும், பிரயாண மிகுதி. | மு.ப. 1 மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, வெளியிட வாழ்க்கை. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, பண வரவு. | பகல் 11 மணி |
| புதன்- இனசன நன்மை, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, கௌரவம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- பொருள் வரவு, பயனுள்ள செயல். | மு.ப. 10 மணி |
| சனி- தொழில் மந்தம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- முயற்சி பலிதம், மன மகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, கௌரவம். | பகல் 12 மணி |
| புதன்- வெளியிடப் பயணம், அந்நியர் உதவி. | பி.ப. 2 மணி |
| வியாழன்- வீண்குறை கேட்டல், மனக் கவலை. | பகல் 11 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. 1 மணி |
| சனி- முயற்சியில் வெற்றி, மன மகிழ்ச்சி. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கன்னி | - சூரியன், புதன். |
| துலாம் | - வெள்ளி, செவ்வாய். |
| மகரம் | - வியாழன். |
| கும்பம் | - கேது. |
| மீனம் | - சனி. |
| சிம்மம் | - இராகு |

★ சந்திரன்- துலாம், விருட்சிகம், தனு ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | |
|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், பண வரவு. | பி.ப. 1 மணி |
| திங்கள்- பொருள் வரவு, உயர்ந்த நட்பு. | பகல் 11 மணி |
| செவ்வாய்- இனசன விரோதம், மனக் கவலை. | பி.ப. 2 மணி |
| புதன்- தொழில் மந்தம், பணச் செலவு. | மு.ப. 1 மணி |
| வியாழன்- அந்நியர் உதவி, கடன் சுமை. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், தேகசுக நன்மை. | பகல் 11 மணி |
| சனி- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, குடும்ப சுகம். | பி.ப. 1 மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, அந்நியர் நட்பு. | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- முயற்சி பலிதம், உயர்ந்த நட்பு. | பகல் 11 மணி |
| புதன் - வீண் முயற்சி, பணச் செலவு. | மு.ப. 9 மணி |
| வியாழன்- கடன் தொல்லை, மனக் கவலை. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- இனசன விரோதம், மனஸ்தாபம். | பகல் 11 மணி |
| சனி- பிரயாணக் கஷ்டம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-8

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பகல் 11 மணி |
| திங்கள்- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- குடும்ப சுகம், பெரியோர் நட்பு. | மு.ப. 10 மணி |
| புதன்- துயர் அதிகம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப. 2 மணி |
| வியாழன்- கடன் சுமை, உறவினர் பகை. | மு.ப. 1 மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், துயர் நீங்கும். | பகல் 12 மணி |
| சனி- அந்நியர் நட்பு, செலவு மிகுதி. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| திங்கள்- குடும்ப சுகம், மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, கௌரவம். | பி.ப. 1 மணி |
| புதன்- துயர் நீங்கும், பெரியோர் உதவி. | மு.ப. 10 மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- காரிய சித்தி, பிரயாண மிகுதி. | மு.ப. 1 மணி |
| சனி- பொருள் நஷ்டம், மனக் கவலை. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-7

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | |
|---|---|
| ஞாயிறு- வீண் கலகம், மனக் கிலேசம். | பகல் 11 மணி |
| திங்கள்- துயர் நீங்கும், குடும்ப சுகம். | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பி.ப. 2 மணி |
| புதன்- அந்நியர் நட்பு, காரியானுகூலம். | மு.ப. 10 மணி |
| வியாழன்- பயனுள்ள செயல், மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- முயற்சி பலிதம், பொருள் வரவு. | பி.ப. 1 மணி |
| சனி- மன மகிழ்ச்சி, பெரியோர் உதவி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- அந்நியர் நட்பு, மன மகிழ்ச்சி. | மு.ப. 9 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் 11 மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், கௌரவம். | மு.ப. 10 மணி |
| புதன்- இனசன நன்மை, முயற்சி பலிதம். | பகல் 11 மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | மு.ப. 9 மணி |
| வெள்ளி- வீண் செலவு, பணக் கஷ்டம். | பகல் 11 மணி |
| சனி- தொழில் மந்தம், காரியத்தடை. | மு.ப. 10 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-2

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- ஆடம்பரச் செலவு, குடும்ப சுகம். | மு.ப. 10 மணி |
| திங்கள்- பெரியோர் பகை, மனக் கலக்கம். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், குடும்பப் பிரச்சனை. | பி.ப. 1 மணி |
| புதன்- உறவினர் பகை, தொழில் மந்தம். | பகல் 11 மணி |
| வியாழன்- எதிர்பார்த்த நன்மை, பண வரவு. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும். | மு.ப. 10 மணி |
| சனி- பிரயாண மிகுதி, தொழில் உயர்ச்சி. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3



படிப்பகம்

www.padippakam.com





பக்கத்திருப்பவர் துன்பம்-தன்னைப் பார்க்கப் பொறாதவன்
புண்ணியமூர்த்தி;
ஒக்கத் திருந்தி உலகோர்-நலம் உற்றிடும் வண்ணம் உழைப்பவன் யோகி.
-சுப்பிரமணிய பாரதியார்.

# தாய் சொல்லைத் தட்டாதே!

**பாப்பா முரசு சிறுகதை**



மண்புழு ஒன்று ஒரு தோட்டத்தில் தனது குழந்தையுடன் வசித்து வந்தது.

ஒரு நாள்-

தாய் மண்புழு, தனது குழந்தையை வளையில் விட்டுவிட்டு இரை தேடுவதற்காக வெளியில் சென்றது. அது வெளியே செல்லுமுன் தன் குழந்தையிடம்,

"நான் திரும்பி வரும் வரையும் இந்த வளையை விட்டு ஓரிடமும் செல்லக் கூடாது. ஏதாவது அவசரம் என்றால் வளையில் இருந்து மெதுவாக உடலை வளைத்து மேலே வரவேண்டும். மேலே வந்தவுடன் எதிரிகள் யாராவது இருக்கிறார்களா என்று பார்த்து விட்டுத்தான் வெளியே வரவேண்டும்." என்று எச்சரித்தது தாய் மண்புழு.

அதற்கு சிறிய மண்புழு 'சரி'யென மேலும் கீழும் தலையசைத்தது.

தாய் மண்புழு வெளியே சென்ற சிறிது நேரத்தில் சிறிய மண்புழுவுக்கு ஓர் எண்ணம் தோன்றியது.

'எனது அம்மாவைப் போல் மற்ற மண்புழுக்களும் இரை தேடுவதற்காக வெளியே சென்றிருக்கும் அந்த மண்புழுக்களின் வளைகளில் அவர்களின் குழந்தைகள் என்னைப் போல சும்மா இருப்பார்கள். அவர்களை எல்லாம் கூட்டி வந்து தோட்டத்தில் விளையாடலாம். அம்மா வரும் வரை உல்லாசமாக இருக்கலாம்.' என்று எண்ணியது.

உற்சாக மிகுதியால் தாய் மண்புழு கூறிய எச்சரிக்கையை மறந்து, வேக வேகமாக உடலை வளைத்து, சடாரென்று மேலே ஏறி வெளியே வந்தது சிறிய மண்புழு.

அப்போது- அருகில் நின்ற கோழியொன்று சிறிய மண்புழுவைப் பார்த்து விட்டது. உடனே ஓடோடி வந்து அந்தக் கோழி.

கோழியைக் கண்ட சிறிய மண்புழு மீண்டும் வளைக்குள் நுழைய முயன்றது. ஆனால் அதன் உடலின் பெரும்பகுதி வளைக்கு வெளியே வந்துவிட்டதால் சிறிய மண்புழுவால் உடனடியாகத் தப்பமுடியவில்லை.

கோழி வந்து சிறிய மண்புழுவைக் கொத்தித் தின்றது.

தாய் சொல்லைக் கேளாமல் வெளியே வந்த சிறிய மண்புழு பரிதாபமாகத் தனது உயிரை மாய்த்துக் கொண்டது.

## அதிசயம் - ஆனால் உண்மை!

**கா.'.பர் ஹலாம் குடிசைகள்:** சிரியாவில் கா.'.பர் ஹலாம் என்ற இடத்தில் உள்ளவர்கள் வைக்கோலையும், மண்ணையும் சேர்த்துக் குடிசைகள் அமைப்பார்கள். இக் குடிசைகள் வெய்யில் காலத்தில் குளிர்ச்சியாக இருக்கும். குளிர்காலத்தில் இவர்கள் தங்களது குளிருக்கு இதமாக இருக்க, கால் நடைகளையும் குடிசையினுள் வைத்துக்கொள்வர்.





**தேவாலயத் தீவு:** கிரேக்க நாட்டில் உள்ள மைக்கோனோஸ் என்ற தீவில் 360 தேவாலயங்கள் உள்ளன. ஆனால் இங்குள்ள மக்கள் தொகை 5000 பேர் மட்டுமே.



**தண்டனை பெற்ற கட்டடம்:** 1820 பெப்ரவரி மாதம் ஃபிரான்ஸ் நாட்டுத் தலைநகரான பாரிசில் இருந்த 'ஒபேரா ஹவுஸ்' என்ற கட்டடத்தை இடித்துத் தரைமட்டமாக்க உத்தரவிடப்பட்டது. பெரி சீமாட்டி இந்தக் கட்டடத்தில் நாடகம் ஒன்றைப் பார்த்து விட்டுத் திரும்பும்போது கொல்லப்பட்டார். இந்தக் கொலையில் இக்கட்டடமும் பங்கெடுத்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டு இந்தத் தண்டனை வழங்கப்பட்டது.

## வாரம் ஒரு நாடு

### பெனின்

தலைநகர்- போர்டோ நோவா.
பரப்பு- 1,12,622 சதுரகிலோமீட்டர்.
மக்கள் தொகை- 54 இலட்சம்.
மொழி- ஃபிரெஞ்சு, பழங்குடி வழக்குகள்.
எழுத்தறிவு- 28%.
சமயம்- அனிமிசம், இஸ்லாம், கிறிஸ்தவம்.
நாணயம்- ஃபிராங்க்.
தனிநபர் வருமானம்- 410 டொலர்.

**அமைவிடம்:**

இது ஒரு மேற்கு ஆபிரிக்கநாடு. மேற்கில் டோகோவும் கிழக்கில் நைஜீரியாவும் வடக்கில் வால்டா மற்றும் நைஜரும் இதன் எல்லைகள்.

**வரலாறு:**

ஃபிரான்ஸிடமிருந்து 1960ல் சுதந்திரம் பெற்றது. இராணுவச் சதிமூலம் ஆட்சியைக் கைப்பற்றிய கெரெக்கோ, தாம் மார்க்கிஸ்ட்-லெனினிஸ்ட் கொள்கையைச் சார்ந்துள்ளதாக அறிவித்தார். 30 வருடங்களுக்குப் பிறகு



1991ல் முதல் அதிபர் தேர்தல். ஒரேயொரு கட்சி மட்டுமே வேட்பாளர்களை நிறுத்தியது.

**பொருளாதாரம்:**

தாவர எண்ணெய், பருத்தி, கோப்பி போன்றவை முக்கிய விளைபொருட்கள். மக்கள் தொகையில் 50 சதவீதத்திற்கும் அதிகமானோர் விவசாயத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 11.10.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 213
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 211

பரிசுக்குரியவர்:
எம். தினேஷ்குமார்,
க.ரோ.க.தமிழ் பாடசாலை, அம்பிட்டிய.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| எம்.சீ.எம். அஜுனாஸ், மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி, கல்முனை. | ச.சஞ்சயன், மட்/மகாவித்தியாலயம், ஆரையம்பதி. |
| எ.எம். தஸ்பான், பு/எருக்கலம்பிட்டி மு.ம.வி., பாலாவி. | ஜி. சுமதி, இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம், வவுனியா. |
| ஞானலிங்கம் தனுஜா, பரிசாந்த கிளேயர் மகளிர் ம.வித்., வெள்ளவத்தை, | கிறிஸ்தோபர் கிறிஸ்தினா ஏஞ்சல், சிங்கள மகா வித்தியாலயம், கல்முனை. |
| டி. அபிராமி, திருக்குடும்பக் கன்னியர் மடம், திருகோணமலை. | செல்வி சிந்துஷா சந்திரசேகர், கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். |
| எவ், ஜெபநேசன், பரி.யோவான் தமிழ் மகா வித்., இறக்குவானை. | எம்.எ.ஃப். இஜாஸ் அஹமட், க/அறபா முஸ்லிம் வித்தியாலயம், வஹுங்கொஹ. |

## தொலைபேசியை உருவாக்கியவர்

தொலைபேசியை முதன் முதலில் உருவாக்கியவர் அலெக்ஸாண்டர் கிரஹாம் பெல். இவர் ஸ்கொட்லாந்தில் பிறந்தவரானாலும் தம் வாழ்நாளில் பெரும்பகுதியை அமெரிக்காவிலேயே கழித்தார். இவர் முதலில் காது கேளாதோருக்கு எப்படிப் பாடம் சொல்லிக்கொடுப்பது என்றுதான் ஆராய்ச்சி செய்தார்.

இவர் பொஸ்டன் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றியபோது பேராசிரியர் தோமஸ் வட்சன் என்னும் தமது உதவியாளருடன் சேர்ந்து, 'நாம் பேசும்போது உண்டாகும் ஒலியை மின் அலைகளாக மாற்றுவது எவ்வாறு' என்பது பற்றித் தீவிர ஆராய்ச்சி நடத்தினார்.

உலோகத்தாலான ஒரு மென் தகட்டை காந்தத்தைச் சுற்றியுள்ள ஒரு சுருள் கம்பியருகில் தொங்கவிட்டு பலநாட்கள் அல்லும் பகலும் ஆராய்ச்சி நடத்தினார். 1876ம் ஆண்டு மார்ச் மாதம், தாம் நடத்திய பல்வேறு ஆராய்ச்சிகளின் பயனாக தொலைபேசிக் கருவியை உருவாக்கினார்.

தொலைபேசி மூலம் உலகிலேயே முதன்



முதலில் பேசியவர் அலெக்ஸாண்டர் கிரஹாம்பெல். அதைக் கேட்டவர் பேராசிரியர் தோமஸ் வட்சன்.

அன்று கண்டுபிடிக்கப்பட்ட தொலைபேசி பல்வேறு வகை மாற்றங்கள் அடைந்து இன்று பேசும் ஒலியைக்கேட்பதுடன், பேசுபவரின் முகத்தைப் பார்க்கவும் இயலும்படி தொலைபேசிகள் வந்துள்ளன.

## விடுகதைகளும் விடைகளும்

1. இருட்டுக்குகைக்குள் அடுக்கடுக்காய் பளிங்குச் சிற்பங்கள்.
அது என்ன?
2. மூடித்திறக்கும் கதவுகள், சத்தம் செய்யாக் கதவுகள்.
அது என்ன?
3. ஆழ்கடலில் இருப்பவன் அதிரடி ஒளி வீசுவான்.
அவன் யார்?
4. வெள்ளை மனிதனுக்குக் கறுப்புச் சட்டை.
அது என்ன?
5. தலைக்குள் கண் வைத்திருப்பவன் இவன் மட்டும்தான்.
அவன் யார்?
6. வளைந்து நெளிந்தவன், பதிலுக்குத் தூண்டுபவன்.
அவன் யார்?
7. வாலால் தண்ணீர் குடித்து தலையால் முட்டையிடும்.
அது என்ன?
8. கொம்போடு வரும் காளையைத் தொட்டால் கொம்போடு மறைந்து விடும்.
அதுஎன்ன?
9. செடியில்லாமல் மலர்ந்த வெள்ளைப்பூ,காய்க்காமல் பூக்கும் பூ.
அது என்ன?
10. கையில்லாதவன் நீந்துகிறான், காலில்லாதவன் ஓடுகிறான்.
அவன் யார்?

### விடைகள்

1. பற்கள் 2. கண் இமைகள் 3. முத்து 4. உழுந்து 5. நுங்கு 6. கேள்விக்குறி 7. கத்தரிச் செடி 8. நத்தை 9. உப்பு 10. படகு.

தொகுப்பு: ஷஹித் சஹாப்டீன்.

## வழிகாட்டிகள்

ஹங்கேரி நாட்டில் 'ஆட்டு நாய்' என்றொரு நாய் வகை உண்டு. தங்கள் கூட்டத்தை விட்டு வழி தவறிய ஆடுகளின் முதுகில் இவை ஏறிக்கொண்டு சரியான பாதையில் வழிநடத்தி ஆடுகளின் கூட்டத்தில் சேர்த்துவிடும்.



***

அவுஸ்திரேலியாவில் ஆட்டு மந்தைகளின் தலைவனாக அவற்றை வழிநடத்திச் செல்பவை எமு பறவைகள். சில இடங்களில் தீக்கோழிகளும் ஆட்டுமந்தைகளை வழி நடத்திச் செல்லும்.



***

மத்திய ஆபிரிக்காப் பகுதியில் உள்ள பபுல்கஸ் ஐபிஸ் என்ற பறவை அங்குள்ள எருமைகள் வழி தவறிச் செல்லும் நேரத்தில், சரியான வழிகாட்டி, எருமைகளுக்கு உதவி புரிகின்றன.



## வைரம்

உலகிலேயே இன்று அதிகளவில் வைரங்களை வெட்டி எடுக்கும் நாடாகத் திகழ்வது தென் ஆபிரிக்கா. 1870ம் ஆண்டுதான் தென் ஆபிரிக்காவில் வைரம் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.



வைரக் கற்களின் எடையை மதிப்பிடும் அளவிற்கு கரட் என்று பெயர். ஒரு கரட் என்பது 200 மில்லி கிராமிற்குச் சமமானது. 200 மில்லி கிராம் என்பது 2 கிராம் ஆகும்.



படிப்பகம்

www.padippakam.com

மைத்ரேயிக்கு வியப்பில் மூச்சை அடைத்தது. சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு ஜன்னல் கம்பிகளுக்குப் பின்னால் தெரிந்த பாஸ்கரை அதிர்ச்சியோடு ஏறிட்டாள்.

"பாஸ்கர்...! என்ன இங்கே, இந்த நேரத்துல வந்திருக்கீங்க?"

"கடந்த அரைமணி நேரமா.... உன்னைப் பார்க்கிறதுக்காக இங்கே

# உடைந்த இரவு

பண்ணி இங்கே வந்தேன். ஆமா... யாருக்கு என்ன உடம்பு....?"

மைத்ரேயி மறுபடியும் பார்வையை சுற்றும் முற்றும் துரத்தி பார்த்துவிட்டு குரலைத் தாழ்த்திக் கொண்டு சொன்னாள்.

"பாஸ்கர்...! என்னோட கணவர் ஏர்போட்டிலிருந்து டாக்ஸியில் திரும்பியிருக்கிறார்... வர்ற வழியில்... ஒரு ஆக்ஸிடெண்ட். டாக்ஸி டிரைவர் ஸ்பாட்லயே அவுட்."

என்னிக்கோ பேசி முடிவு பண்ணின விஷயம். அதை இன்னிக்கு டாக்டர் கெடு வெச்சிருக்கிற இந்த நேரத்திலேயே செஞ்சு முடிச்சுட்டா என்ன...?"

"அதைத்தான் நானும் யோசனை பண்ணிட்டிருக்கேன்."

"இப்போ அவர் ஐ.ஸி. யூனிட்ல இருக்கார். டாக்டர் கண்டினியூவா ட்ரீட்மெண்ட் கொடுத்துட்டிருக்கார். போதாக்குறைக்கு எங்க ஃபெமிலி டாக்டர் ராமபத்ரன் வேற வந்துட்டிருக்கார். இப்படியொரு கெடுபிடி நிலைமை யில என் கணவருக்குப் பக்கத்துல நான் போகவே முடியாது."

"கெடு தாண்டி தினேஷ் உயிர் பிழைச்சுட்டா அதுக்கப்புறம் திட்டத்தை நிறைவேற்ற முடியாதே....?"

"ஏன் முடியாது...? அதுக்கப்புறம்தான் நிறைய சந்தர்ப்பங்கள் கிடைக்கும்..."

"இந்த விஷயத்தை தள்ளிப் போட வேண்டாம். இன்னிக்கே முயற்சி பண்ணு... டாக்டர் கெடு வெச்சிருக்கிற இந்த



காத்திட்டிருக்கேன் மைத்ரேயி."

"என்ன விஷயம்?"

"காரை உன் பங்களாவில் விட்டுட்டு கொஞ்சதூரம் போனதும்தான் ஞாபகம் வந்தது."

"என்ன?"

"என்னோட பர்ஸை கார்லேயே விட்டுட்டேன். அதுல என்னோட போட்டோ, அட்ரஸ் எல்லாமே இருந்தது. நாளைக்கு உன் கணவன் காரை எடுக்கும்போது அவர் பார்வையில் பர்ஸ் பட்டு விடக்கூடாதென்று வேக வேகமாக வந்தேன். நான் வர்றதுக்குள்ளே நீ, வையாபுரி மாமா, அத்தையோடு கார்ல கிளம்பிட்டிருந்தே... நான் ஒரு ஆட்டோவில ஃபாலோ

பாஸ்கரின் முகம் ஒரு குட்டிச் சூரியனாய் பிரகாசித்தது.

"உன் கணவருக்கு என்னாச்சு?"

"அவர் இப்போ கோமா ஸ்டேஜில் இருக்கார். டாக்டர் நாளக்குக் காலையில ஆறு மணிவரைக்கும் கெடு வெச்சிருக்கார்."

"ஆள் போயிடுவாரா?"

"நாளைக்குக் காலையில ஆறு மணிக்கு மேலதான் தெரியும்: என்னோட தாலிக்கயிறு ஸ்ட்ராங்கா இல்லையான்னு..."

"மைத்ரேயி...."

"ம்..."

"இது நமக்குக் கிடைச்சிருக்கிற நல்ல சந்தர்ப்பம். தினேஷைத் தீர்த்துக்கட்டறதா நேரத்திலேயே காரியத்தை முடிச்சுட்டா... உம்மேல யாருக்கும் சந்தேகம் வராது...."

"முயற்சி பண்றேன். இந்த ராத்திரி நமக்கு அதிர்ஷ்டமான ராத்திரி. நமக்கு மறைமுகமா தொல்லை கொடுத்துட்டிருந்த பட்டாபியை முடிச்சுட்டோம். இப்போ... தினேஷையும் முடிக்கக் கூடிய ஒரு நல்ல வாய்ப்பை விதி நமக்கு உருவாக்கிக் கொடுத்திருக்கு..."

"அதை பயன்படுத்திக்க வேண்டாமா?"

"சமய சந்தர்ப்பம் பார்த்து நான் பயன்படுத்திக்கிறேன்.... நீங்க ஹாஸ்பிடல் காம்பஸுக்குள்ளே இருக்க வேண்டாம். கிளம்பிடுங்க."

"காருக்குள்ளே இருக்கிற என் பர்ஸ்...?"

கிரைம் சக்கரவர்த்தி

ராஜேஷ்குமார்

## சென்றவாரம்

ஓடிவந்த நர்ஸ் இன்ஸ்பெக்டரிடம் டாக்டர் அழைப்பதாகக் கூற மைத்ரேயியை அங்கேயே விட்டுவிட்டு டாக்டரிடம் செல்கிறார் இன்ஸ்பெக்டர்.

தினேஷின் நிலை கவலைக்கிடம் என்று டாக்டர் கூறியதை இன்ஸ்பெக்டர் எல்லோரிடமும் தெரிவிக்க; வையாபுரிமாமா 'ஸ்பெசலிஸ்ட்' ஒருவரை அழைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறார்.

மைத்ரேயிமிடம் குடும்ப டாக்டர் ராமபத்திரனின் தொலைபேசி எண்பெற்று அவருக்கு ஃபோன் செய்துவிட்டு, மைத்ரேயியிற்கு ஆறுதல் தெரிவித்தபின் ஸ்டேசனிற்குப் போய்விடுகிறார் இன்ஸ்பெக்டர்.

தொலைவில் இருந்த ஜன்னலில் ஒரு முகம் திடீரென்று தோன்றி கையசைத்து மைத்ரேயியைக் கூப்பிடவே தயக்கத்துடன் எழும்பிச் செல்கிறாள். அங்கே பாஸ்கர் நின்றிருந்தான்.

இனி...

## இரவு 19

"நான் பத்திரமா பார்த்து எடுத்து வச்சுக்கிறேன்..."

"மறந்துடாதே..! அது வேற யார் கைக்காவது கிடைச்சா பிரச்சனையாயிடப் போவுது..."

"கவலையே படாமே போய்ட்டு வாங்க..."

"நாளைக்குக் காலையில் ஆறுமணிக்கு உன் வீட்டுக்குப் ஃபோன் பண்றேன். தினேஷ் இறந்துட்டார்ங்கிற நல்ல செய்தியை நீ எனக்கு சொல்லணும்...." பாஸ்கரின் தலை ஜன்னலிலிருந்து அகன்று இருட்டில் மறைந்தது.

★ ★ ★

பாஸ்கர் ஜன்னலைவிட்டு மறைந்ததும் மைத்ரேயி வராந்தாவின் கோடி வரைக்கும் பார்வையைக் கொண்டு போனாள்.

யாரும் இல்லை. வேக நடைபோட்டு போர்டிகோவுக்கு வந்தாள். அவளுடைய கார் நின்றிருந்தது. டோர்லாக்கை சாவியால் விடுவித்து உள்ளே எட்டிப் பார்த்தாள்.

பிரேக் பெடலுக்கு கொஞ்சம் தள்ளி அந்த கறுப்பு நிற பர்ஸ் விழுந்திருந்தது.

எடுத்துப் பிரித்தாள். அது பாஸ்கரின் பர்ஸ்தான். பாலிதீன் சதுர உறைக்குள் போட்டோவும் சில நூறுரூபாய் நோட்டுக்களும் தெரிந்தன. பர்ஸை ஜாக்கெட்டுக்குள் பத்திரப்படுத்திக்கொண்டு, மறுபடியும் போர்டிகோ படியேறியபோது, ஹாஸ்பிடலின் காம்பௌண்ட் கேட்டுக்குள் ஒரு கார் வேகமாய் நுழைந்தது.

'யார்... அது?'

நின்று பார்த்தாள். பக்கத்தில் வர வர புரிந்தது. அது டாக்டர் ராமபத்ரனின் கார். கார் ஹெட்லைட்களை அணைத்து இயக்கத்தை நிறுத்திக்கொண்டபின், டாக்டர் ராமபத்ரன் மின்னும் வழுக்கை மண்டையோடு இறங்கி அவளை நோக்கி வந்தார். ஐம்பது வயது ராமபத்ரனுக்கு இரட்டை நாடி சரீரம்.

கவலையோடு கேட்டுக்கொண்டே அவளை நெருங்கினார்.

"தினேஷுக்கு இப்போ எப்படீம்மா இருக்கு...?"

கண்களில் அழுகையைக் காட்டினாள் மைத்ரேயி. குரலை செயற்கையாக தழுதழுத்தாள்.

"டா...டாக்டர்...! அவருக்கு இங்கே இருக்கிற டாக்டர்ஸ் கெடு வெச்சுட்டாங்க! அ...அவரை...நீ....நீங்கதான் காப்பாத்தணும்... டாக்டர்...ப...பணம் எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை..."

"பயப்படாதேம்மா...! தினேஷுக்கு எதுவும் ஆகாது. வீட்டை விட்டுப் புறப்படும் போதே நியூராலாஜிஸ்ட் டாக்டர் 'கோஷ்'க்கு ஃபோன் பண்ணி சொல்லிட்டுத்தான் வந்தேன்... அவரும் இப்ப வந்துடுவார். டாக்டர் கோஷ் ஹைதராபாத்தைச் சேர்ந்தவர். இந்தியாவிலேயே நெம்பர் ஒன் நியூராலாஜிஸ்ட். மாசத்துக்கு ரெண்டு தடவை மெட்ராஸ் வருவார்... இன்னிக்கு அதிர்ஷ்டவசமா அவர் மெட்ராஸில் இருந்தார்..."

மைத்ரேயி ஏமாற்றத்தைக் காட்டிக் கொள்ளாமல் முகத்தில் செயற்கை மலர்ச்சியைக் காட்டினாள்.

"டாக்டர் கோஷ் கண்டிப்பா வருவாரா?"

"இந்நேரம் வந்துட்டேயிருப்பார்...! வா... நாம மொதல்ல தினேஷைப் போய்ப் பார்ப்போம்..."

வராந்தாவில் மௌனமாய் நடந்து ஐ.ஸி.யூனிட்டை நெருங்கியபோது வையாபுரி மாமாவும், அத்தையும் எதிர்ப்பட்டார்கள். இரண்டு பேர்களின் கண்களிலும் நீர் அரும்பியிருந்தது. முகங்கள் இயல்பான நிறத்தை இழந்துபோய் கலவரத்தில் இருந்தன.

"அவன் கிடக்கிற கோலத்தை என்னால கண் கொண்டு பார்க்க முடியலையேம்மா...! உண்டியல்ல தாலியைப் போடறேன்னு திருப்பதிக்கு வேண்டிக்கோம்மா..."

புடவைத் தலைப்பால் வாயைப் பொத்திக்கொண்டே டாக்டர் ராமபத்ரனோடு ஐ.ஸி.யூனிட்டுக்குள் நுழைந்தாள் மைத்ரேயி.

ஏர்க்கண்டிஷனர் மெலிதாய் உறுமிக்கொண்டிருக்க அறையின் மையத்தில் சாய்வாய் தெரிந்த கட்டிலில் தலையில் பாண்டேஜ் கட்டோடு படுத்திருந்தான் தினேஷ். இரத்தமும் க்ளூகோஸும் பாட்டில்களி லிருந்து ட்யூப் வழியாக உடம்பிற்குள் பயணித் துக் கொண்டிருந்தன.

தலைமாட்டில் ஒரு டாக்டரும், நர்ஸும் தெரிந்தார்கள். ராமபத்ரன் சார்ட்டைப் பார்த்துவிட்டு டாக்டரை ஏறிட்டார்.

"பல்ஸ் ரேட் எப்படி...?"

"முன்னைக்கு இப்போ கொஞ்சம் குறைஞ்சிருக்கு. இதே நிலைமை நீடிச்சா... காலை ஆறு மணியைத் தாண்டறது கஷ்டம்."

"தலையில்தான் அடி இல்லையா...?"

"எஸ்... மூளையோட செரிபெல்லம் பகுதியில் ப்ளட் க்ளாட் ஆயிருக்கு..."

"அதை ஆப்ரேஷன் பண்ணி ரிமூவ் பண்ணினா உயிர் பிழைக்கக் கூடிய சக்ஸஸ் ரேட் அதிகமாகுமே....?"

"இங்கே இருக்கிற நியூரோசர்ஜன் ராகவேலுவை கன்சல்ட் பண்ணிப் பார்த்தோம். பேஷண்ட்டுக்கு ஆப்ரேஷனை தாங்கக்கூடிய சக்தியில்லைன்னு சொல்லிட்டார். வேலூரிலிருந்து டாக்டர் ரோனால்டை வரவழைக்க முயற்சி பண்ணினோம். அவர் ஸ்டேட்ஸ் போயிட்டதா தகவல்..."

"டாக்டர் கோஷ்... வந்தா ஆப்ரேஷனை பண்ணலாம் இல்லையா...?"

"ஷ்யூர்... பட்... அவர் ஹைதராபாத்தில் அல்லவா இருக்கார்...?"

"நோ... ஹி...ஈஸ்..இன் மெட்ராஸ். எனக்கு தினேஷ் பற்றிய தகவல் கிடைச்சதுமே அவர் மெட்ராஸ்ல இருக்காரான்னு அவர் வழக்கமா தங்கற இடத்துக்குப் ஃபோன் பண்ணினேன். ஃபார்ச்சுனேட்லி ஐ காட் ஹிம்."

அந்த டாக்டர் மலர்ந்தார்.

"தென்...நோ...ப்ராப்ளம்! டாக்டர் கோஷ் கைபட்டா கோமா ஸ்டேஜில் இருக்கிற எந்தவொரு பேஷண்ட்டும் கண்ணை முழிச்சுப் பார்ப்பாங்கறது மெடிகல் ஃபீல்ட்ல பேசப்படுகிற ஒரு வாக்கியம்... டாக்டர் கோஷ் எப்போ வருவார்...?"

"ஐ திங்க்... நவ் ஹி ஈஸ் ஆன் த..வே... எதுக்கும் ஒரு தடவை ஃபோன் பண்ணிப் பார்த்துடறேன்...! மைத்ரேயி, நீ இங்கேயே இரும்மா. நான் ஃபோன் பேசிட்டு வந்துடறேன்..."

ராமபத்ரன் கால்களில் சக்கரத்தைக் கட்டிக்கொண்டவர் போல் வெளியேற மைத்ரேயி சலனமில்லாமல் படுத்திருக்கும் கணவனை உணர்ச்சியில்லாமல் பார்த்தாள்.

டாக்டர் கோஷ் வருவதற்குள் இவருடைய மூச்சை யாருக்கும் தெரியாமல் நிறுத்த வேண்டும்.

'முடியுமா...?'

தீவிரமாய் யோசிக்க ஆரம்பித்தாள்.

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: ரி. ராஜஸ்ரீகாந்த்,
வயது: 21
முகவரி: துன்னாலை வடக்கு, கரவெட்டி, யாழ்ப்பாணம்.
பொழுதுபோக்கு: பத்திரிகை, உதைபந்து.



பெயர்: எஸ். வசந்தா,
வயது: 16
முகவரி: 78, கற்குழி, வவுனியா.
பொழுதுபோக்கு: ரீ.வி., பத்திரிகை.



பெயர்: ஜி. கிங்ஸ்லி அன்ரனி,
வயது: 25
முகவரி: P.O.BOX- 873, TRIPOLI, LEBANAN.
பொழுதுபோக்கு: வழமையானவை.



பெயர்: எம். சுபைர்,
வயது: 21
முகவரி: பதுறியா நகர், மீராவோடை.
பொழுது போக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம்.



பெயர்: ஐ. மௌஜுதா,
வயது: 21
முகவரி: P.O.BOX-64509, AL- ROYATH-11546, K.S.A.
பொழுது போக்கு: வழமையானவை.



பெயர்: எம். றிஸ்வி,
வயது: 25
முகவரி: P.O.BOX-948, PINCODE-211, SLALAH, S.OF.OMAN.
பொழுதுபோக்கு: கிரிக்கெட்.

பெயர்: ஆர். இக்பால்,
வயது: 20
முகவரி: அரை ஏக்கர்-7, கிண்ணியா.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: எம். ஷரீப்தீன்,
வயது: 23
முகவரி: 118, மத்திய வீதி, புதிய காத்தான்குடி-3.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: கே. சந்திரகாசன்,
வயது: 18
முகவரி: அனுமார் வீதி, நொச்சிமுனை.
பொழுது போக்கு: ரீ.வி. வானொலி.

பெயர்: எஸ். ராஜா,
வயது: 21
முகவரி: 116/3, சென் பெனடிக்ட் மாவத்தை, கொழும்பு-13.
பொழுது போக்கு: பேனாநட்பு.

பெயர்: கே. குமார்,
வயது: 32
முகவரி: BECKHOF STR.19, 48145 MUNSTER, GERMANY.
பொழுது போக்கு: ரீ.வி., பேனா நட்பு.

பெயர்: றிஸான் றஸீஸ்,
வயது: 23
முகவரி: 30, திக்கல வீதி, ஹேனமுல்லை, பாணந்துறை.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.



படிப்பகம்

www.padippakam.com

அத்தியாயம் 31

# கனவு மெய்ப்பட வேண்டும்

## பிரபஞ்சன்

அந்த அம்மாள் சொன்னாள்: "இந்த வேலைக்காரியை எல்லாம் நீ நம்பக்கூடாது. வேலைக்காரிகளுக்கு இந்த அளவுக்கு இடமும் கொடுக்கக்கூடாது நீ."

"ஏன் என்ன விஷயம்?"

"இல்லை, நீ இந்தப் பக்கம் ஆபீசுக்குப் போன கையோடு நான் கொஞ்சம் களைப்பா வந்ததுன்னு படுத்துட்டேன், பனிரெண்டு மணி போல் விழிப்பு ஏற்பட்டது.

சமையல் அறைப்பக்கம் தண்ணீர் குடிக்கலாம் என்று போனேன். பார்த்தால் பகீரென்றது. என் வாயால் எப்படி சொல்ல? இந்த வேலைக்காரக் குட்டி யாரோ ஒருத்திக்கு சர்க்கரை, காபி, காய்கறி எல்லாவற்றையும் எடுத்துக் கொடுத்துவிட்டு, காசு வாங்கிக் கொண்டிருந்ததைப் பார்த்தேன். இந்த ரெண்டு கண்ணாலும் பார்த்தேன். என்னடி அம்மா அநியாயம்னு கேட்டேன். நீ கண்டுக்காதே

> **இதுவரை**
>
> சுமதி பள்ளியாசிரியரின் மகள். அவர் சுமதிக்கு தந்தையாகவும் தோழனாகவும் இருந்து அன்புடன் ஆளாக்குகிறார்.
> சுமதி கணேசனை காதலிக்கிறாள். இருவரும் திருமணம் செய்கின்றனர். கணேசனைவிட சுமதிக்கு நல்லவேலை, நல்ல சம்பளம். அதனால் கணேசன் தாழ்வு மனப்பான்மை கொள்கிறான். வக்கிரமான அவனது மறுபக்கம் சுமதிக்கு அதிர்ச்சி தருகிறது.
> சுமதியை கணேசன் கொடுமைப்படுத்துகிறான்.
> வீட்டை விட்டு அடித்துவிரட்டுகிறான். சுமதி தனியாகச் செல்கிறாள்.
> ஒரு மிருகத்துடன் வாழ முடியாத நிலையில் விவாகரத்துக் கோரி மனுத்தாக்கல் செய்கிறாள்.
>
> **இனி.....**

அப்படின்னுட்டா."

சுமதியால் அதை நம்ப முடியாது. சுசீலா அப்படியெல்லாம் நடக்கக்கூடியவள் இல்லை. ஆனாலும் இந்தப் போக்கை வளர விடக்கூடாது என்று மனசுக்குள் முடிவு செய்து கொண்டாள்.

"சரி... நான் அதைக் கவனிக்கிறேன்."

அத்துடன் அப்பிரச்சனைக்கு சுமதி முடிவு கட்டிவிட்டாலும், ஒரு கருத்து மட்டும் அடி மனதில் இருந்து கொண்டேயிருந்தது. பிறர்மேல் திருட்டுப் பழி சுமத்துகிற ஒருத்திக்கு, அவள் அளவில் திருட்டுக் குணம் இருக்கத்தானே இருக்கும்!

எவ்வளவுதான் விழிப்பிருந்து என்ன? சுமதிக்கு கையில் மொத்தமாகப் பணம் வைத்திருக்கும் வழக்கம் இல்லை. அன்று தேதி ஏழுதான் ஆகியிருந்தது. முதல் தேதிதான் ஆயிரம் ரூபாயை பையில் போட்டு வைத்திருந்தாள். ஏழுநாட்களுக்குள் எவ்வளவு செலவாகியிருக்கும்? ஆனால் பையில் இருந்த பணமோ நூற்றிச் சில்லறை மட்டுமே இருந்தது.

"சுசீலா."

"என்னம்மா?"

"பையிலிருந்து ஏதாவது பணம் எடுத்தியா?"

"தெருவில் மீன் போச்சும்மா. நல்லா இருந்துச்சு. உங்களுக்குப் பிடிக்குமேன்னு முப்பது ரூபாய் எடுத்தேன்."

"பணம் அதிகமாக் குறையுதே."

"எவ்வளவு அம்மா?"

"சுமார் ஐநூறு ரூபாய் குறையுது."

"ஐயையோ."

"சரி. நீ யாரிடமும் எதுவும் பேசாதே! தானாக திருட்டு வெளிப்படும்."

அப்படித்தான் வெளிப்பட்டது. அன்று சனிக்கிழமை, அலுவலக விடுமுறை. தன் அறையில் கட்டிலில் சாய்ந்து கொண்டு புத்தகம் படித்துக் கொண்டிருந்தாள் சுமதி. வெளியே தபால்காரரின் குரல்கேட்டது.

சுசீலா சுமதிக்கு வந்திருந்த தபால் கட்டுக்களை வாங்கிக்கொண்டு வந்து கொடுத்துவிட்டுச் சென்றாள். தபால்களைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருக்கையில், அது தென்பட்டது. மணி ஆர்டர் பாரத்தில் கிழிக்கப்பட்ட துண்டுப் பகுதிதான் தென்பட்டது. பாகீரதி கையெழுத்திட்டு, யாரோ அலுமேலு என்ற பெண்ணுக்கு ஐநூறு ரூபாய் அனுப்பியிருந்தாள்.

இரவு சாப்பிடும்போது சுமதி அந்த அம்மாளிடம் கேட்டாள்,

"ஆமா... சின்னம்மா, உங்க பொண்ணு பேரு என்ன?"

"அலமேலு. ஏன் கேக்கறே...?"

"நீங்க அலமேலுக்கு அனுப்பின பணம் அவளுக்குக் கிடைச்சுதாம். மணியார்டர் துண்டுச் சீட்டு இன்று வந்தது; சொல்ல மறந்துட்டேன்."

சாப்பிட்டுக் கொண்டிருந்த அம்மாவின் கை அப்படியே அந்தரத்தில் நின்றது.

"கஷ்டமா இருக்கு. பணம் வேணும்னு கேட்டா."

"அது தப்பில்லை. ஆனா என் பையிலிருந்து பணம் எடுக்கிறது தப்பில்லையா?"

அந்த அம்மாள் முகம் வெளுத்துப் போய் இருந்தாள்.

"இனி நீங்கள் இந்த இடத்தில் இருக்க முடியாது. நாளைக் காலையே ஊருக்குப் புறப்பட்டு விடுங்கள்!"

அந்த அம்மாள் புறப்படும்போது சுமதியைப் பார்த்துச் சொன்னாள்,

"நீ விளங்கமாட்டே! கண்டவனோட கட்டிப் புரள்வதற்காகத்தான் புருஷனை விட்டுட்டு வந்தே. நீ நல்லா இருப்பியா?"

சுமதி சிரித்துக்கொண்டே அவளுக்கு விடை கொடுத்தாள். அதன் பிறகு உறவுக்காரர் எவரையும் அவள் சேர்த்துக்கொள்ளவில்லை.

ஆக, ஒற்றைக்கொரு உறவு என்று சொல்லிக்கொண்டு அவளிடம் வந்த ஒரு அம்மாளும் அவளை நோக்கி மண்ணை வாரிவிட்டுச் சென்றுவிட்டாள். கதவை மூடித் தாளிட்டுவிட்டுத் தன் அறைக்குள் சென்று படுக்கையில் அமர்ந்த அவள் மனம் துன்பத்தில் ஆழ்ந்தது. மனிதர்கள் ஏன் இப்படி அசுரர்கள் மாதிரி நடந்து கொள்கிறார்கள்? என்று தோன்றியது. வெளி உலகத்தில் மிகவும் உயர்ந்தவர்கள் என்று பேசப்படும் ஆட்களும்கூட அப்படித்தான் இருந்தார்கள்.

வண்ணாரப்பேட்டையில் யாரோ சச்சிதானந்த சுவாமிகள் என்று ஒருவர் இருப்பதாகவும், முக்காலமும் அறிந்த முனிவர் என்றும், நடக்கப்போவதை மனிதர் முகத்தைப் பார்த்தே சொல்லிவிடுகிறார் என்றும் மக்கள் சொல்லிக்கொண்டார்கள். வசந்திக்கும் யாரோ சொல்லியிருக்கிறார்கள். சுமதியின் விவாகரத்து வழக்கு எப்போது முடியும் என்பதையும், கணேசனால் அவளுக்கு ஏற்பட்டுவரும் துன்பங்கள் எப்போது முடியும் என்பதையும், தெரிந்து கொள்ளும் ஆவல் அவளுக்கு ஏற்பட்டது. இது தவறில்லை. சிநேகிதிக்கு நேரும் துன்பம் களைய எந்தச் சிறு முயற்சியையும் எடுத்துக் கொள்வது மனிதாபிமானம் சார்ந்த காரியம் தான். சச்சிதானந்தரைச் சுமதிக்காக வசந்தி சென்று பார்த்து, சுமதியை அழைத்து வர அனுமதி கேட்டிருக்கிறாள். சுவாமிகள் மிகவும் மகிழ்ச்சியுடன் சம்மதித்து, அவளை அழைத்துவர அனுமதி அளித்துவிட்டார்.

சுமதிக்கு கடுங்கோபம் வந்தது.

"இந்தச் சாமியார்கள், துறவிகள், ஜோசியர்கள் இவர்கள் மேல் எனக்கு நம்பிக்கை இல்லை என்று உங்களுக்குத் தெரியும்தானே, வசந்தி? இப்படியிருந்தும் எனக்குத் தெரியாமல் எப்படி அவரிடம் போய் எனக்காகப் பேசினீர்கள்?"

இந்தக் கேள்வி வசந்தியின் மனசை மிகவும் புண்படுத்திவிட்டது.

"நீ படும் அவஸ்தையை என்னால் பார்க்க முடியவில்லை சுமதி. ஏதோ என் அறியாமை என்றே வைத்துக்கொள்! எனக்காக தயவுசெய்து என்னுடன் வாயேன்."

அந்த அருள் உள்ளம் சுமதியை உருக்கிவிட்டது. அது அவள் பலம் அல்லது பலவீனம். ஒரு காலை அந்த அருட்செல்வரைப் பார்க்க சுமதி, வசந்தியுடன் புறப்பட்டுச் சென்றாள்.

அருட்செல்வர் பத்திரிகைச் செல்வாக்கு மிக்கவர். அவரைப் பற்றி அடிக்கடி



பத்திரிகைகளில் செய்தி வந்து கொண்டிருந்தது. அவருடைய சித்து, மாய மந்திரவேலை எல்லாம் பத்திரிகைகள் மூலம் பிரபலமாக வந்து கொண்டிருந்தன. ஆகவே, அந்த இடத்தில் மாபெரும் கும்பல் சகலவித பூஜைப் பொருட்களுடன் இருந்தது. ஏஜெண்ட் மாதிரி இருந்த ஒரு பெரிய மனிதர் இவர்களை மரியாதையாக வரவேற்றார்.

"இருங்கள்! சுவாமிகளிடம் சொல்லி விட்டு வருகிறேன்." என்று போய், உடனே திரும்பி வந்து "வாருங்கள்! சுவாமிகள் அழைக்கிறார்" என்று அவர்கள் இருவரையும் அழைத்துச் சென்றார்.

பெரிய அறை. ஒரு அகன்ற ஆசனத்தில் புலித்தோல் விரித்து அதன் மேல் சுவாமிகள் அமர்ந்திருந்தார். சுவாமிக்கு சுமார் நாற்பத்தைந்து இருக்கும். திடகாத்திரமாக இருந்தார். காவி என்றும் இல்லாமல், மஞ்சள் பட்டு என்றும் இல்லாமல் ஒரு வகையான ஆடை உடுத்தியிருந்தார்.

"வாங்க... வாங்க..." என்றார் சுமதியைப் பார்த்து. பிறகு "உட்காருங்கள்!" என்றார்.

அவர்கள் இருவரும் அமர்ந்தார்கள்.

பிறகு சொன்னார்,

"நிஷ்டை கலைகிறது. நீங்கள் மாலை ஏழு மணிக்கு வாருங்கள்; உங்கள் முக்காலத்தைச் சொல்கிறேன்."

சுமதிக்கு மறுக்க முடியவில்லை. டூட்டி இருக்கிற காரணத்தால், வசந்தி வரமுடியாமல் போயிற்று. அதே அறையில் சுவாமிகள் மட்டும் இருந்தார். வெளியே கூட்டம் இல்லை. அவளுக்குப் பின்னால் கதவு சாத்தப்பட்டது.

சுவாமிகள் அவளிடம் ஒரு பெரிய காசு மாலையைக் கொடுத்து "இது சுமாராக, எவ்வளவு பெறும் என்று சொல்லுங்கள்!" என்றார்.

சுமதி அதைக் கையில் வாங்கிப் பார்த்து, "இருபது பவுன் இருக்கும்" என்றாள்.

"உங்களுக்குப் பிடிக்கிறதா?"

"ஏன்?"

"நீங்களே போட்டுக் கொள்ளுங்கள்!"

"எனக்கு எதற்கு?"

"சுமதி, உங்களைப் பார்த்தது முதற்கொண்டு என் மனசு மாறிப்போயிற்று."

"என்ன!"

"ஆம். என் மனசு மாறிவிட்டது. என்ன சொல்கிறீர்கள்? என்னால் ஒரு காரியமும் செய்ய முடியவில்லை. அந்தக் காசு மாலையை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள். இங்கேயே அதை வைத்துக் கொள்ளலாமா? அல்லது வெளியூருக்குப் போகலாமா?" என்றார் அருட்செல்வர்.

"தூ" என்று கொத்தாக அவர் முகத்தில் துப்பி விட்டு சுமதி வெளியேறினாள்.

★ ★ ★

கணேசன் தொடர்ந்து விண்ணப்பம் எழுதித் தள்ளிக் கொண்டிருந்தான். சுமதி ஒரு நடத்தை கெட்டவள், சுமதி ஒரு வெறியள், சுமதி லஞ்சம் வாங்குகிறாள். சுமதி எஸ்டேட் வைத்திருக்கிறாள். சுமதிக்குப் பத்து கோடி ரூபாய் இருக்கிறது...

தினம், தினம் ஒரு 'என்கொயரி' வந்தது அவளுக்கு. வேலை செய்ய முடியவில்லை. முற்றிலும் அமைதியை இழந்தாள் அவள். யாரோ சொன்னார்கள்,

"நாயக்கர் என்பவரைப் போய்ப் பார். அவர் முதல்வருக்கு ரொம்ப வேண்டியவர். ஒரு வார்த்தை முதல்வரிடம் அவர் சொன்னார் எனில், அரசாங்க ரீதியான தொந்தரவு இருக்காது!"

நிம்மதியாக வாழ வேண்டும் என்கிற ஆசை யாருக்குத்தான் இல்லை!

நாயக்கர் மாநிலத்தில் மாபெரும் சாராய அதிபர். சுமதி அவருக்குப் ஃபோன் பண்ணினாள்.

"உடனே வரலாம்" என்றார் நாயக்கர்.

சுமதி பிரச்சனைகளைச் சொன்னாள்.

"நாளை என் கெஸ்ட் ஹவுசுக்கு வாருங்கள்."

போனாள். வசந்தியையும் அழைத்துக் கொண்டு போனாள் சுமதி.

"இது யார்?"

"என் சிநேகிதி."

"நீங்கள் மட்டும் தனியாக வருவீர்கள் என்று நினைத்தேன்."

"ஏன் நான் தனியாக வர வேண்டும்?"

நாயக்கர் தரையைப் பார்த்தார்.

அடுத்த நாள் காலை ராமலிங்கம் என்பவன் அவளைத் தேடி வந்தான்.

"என்ன விஷயம்?"

"நாயக்கரின் பி.ஏ.நான்."

ஆள், பெண் தரகர் மாதிரி தடியாக, கறுப்பாக, தாடியுடன், விகாரம் வடியும் முகத்தோடு இருந்தான்.

"சொல்லுங்கள்."

"நாயக்கர் சொல்லச் சொன்னார், மாசம் பத்தாயிரம், ஒரு கார், ஒரு பங்களா, எல்லாம் தருவதாக. நீங்கள் அவருக்கு 'வைப்பாக' இருக்க வேண்டும். வேலையை ராஜினாமா செய்துவிடலாம். வீட்டோடு இருக்கலாம். என்ன சொல்கிறீர்கள்?"

இரண்டாம் முறை துப்பினாள் சுமதி.

அவள் முதல் முறையாக அவனைப் பற்றிப் பயம் கொண்டாள்.

◊◊◊◊

சுமதிக்கு மிகுந்த ஆச்சரியமாக இருந்தது, வசந்தி சொன்னதை அவள் கேட்டபோது.

"சுமதி! எண்பத்தேழில் நான் அவரைச் சந்தித்தேன். என் அண்ணன் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார் என்று சொல்லியிருக்கிறேன் அல்லவா? அவனைப் பார்க்க அவர் வருவார். அவர்களுடன் ஞாயிற்றுக்கிழமைகளில் நாள் முழுவதும் நான் பேசிக் கொண்டிருப்பேன். பிறகு போகப் போக, அண்ணனுடன் என்று இல்லாமல், என்னுடனும் பேச அவர் வருவார். பொதுவாக நாங்கள் சமூகம், கலை, படித்த புத்தகங்கள் இவைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்போம். என் பேச்சை, அதில் பொதிந்து இருக்கிற கருத்துக்களை அவர் புரிந்து கொண்டார் என்று நினைக்கிறேன். அது போலவே, அவர் எண்ணங்கள், அவை சஞ்சரிக்கும் தளம் ஆகியவைகளை நானும் புரிந்து கொண்டேன். எங்களுக்குள் நிறைய கருத்து ஒற்றுமைகள் இருந்ததை நான் உணர்ந்தேன். அவர் உணர்ந்திருந்தார் என்று அறிந்தேன். கருத்து ஒற்றுமைதானே மனிதர்களை ஈர்க்கிறது? எங்களுக்குள் அந்த ஈர்ப்பு ஏற்பட்டது. ஒருவரை ஒருவர் அடிக்கடி சந்திக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. சந்தித்தோம்.

**(தொடர்ந்து வரும்)**

---

# கனவு

அவன் விழித்திருக்கவே மாட்டான். யாரோ அவனை உலுக்கியதில் திடுக்கிட்டு விழித்தபோது மீனா அழுது கொண்டிருப்பதைப் பார்த்தான்.

பிள்ளைகள் இரண்டும் பாயை விட்டு, கூடத்தின் மூலைகளுக்குப் போயிருந்தன. அதிலும் தீபா சுத்த மோசம். ஒரு நேரங்கூட பாவாடை ஒழுங்கிலேயே இராது. கணேஷ் தன் ஒரு காலைத் தூக்கி தீபாவின் மீது போட்டிருந்தான்.

பிள்ளைகளை நேரே எடுத்து விட்ட பிறகுதான் மீனாவின் அழுகை உறைத்தது.

"ஏய் மீனா, ஏன் அழுவுறே?"

தன்னிச்சையாய் பார்வை உயர்ந்து சுவர்க் கடிகாரத்தைப் பார்த்தது. மணி இரண்டு.

முசுமுசுவென்று அழுதாள். 'என்னன்னு சொல்லித் தொலைச்சுட்டு அழுதாக்க என்ன?' என்று தோன்றியது. கண் எரிச்சல் வேறு. இப்படி அரைத் தூக்கத்தில் எழுப்பிவிட்டு இன்ன காரணம் என்று சொல்லாமல் ஒருத்தி அழுதால்...

"மீனா!"

மீண்டும் அழைக்க, அரைப்பார்வை பார்த்துவிட்டு, இவன் மேல் சாய்ந்து கொண்டாள். ஆதரவாய் அவளைத் தட்டிக் கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்த்தது புரிந்தது.

"என்ன மீனா வயிறு நோவுதா...?"

"எனக்கு பயமா இருக்குங்க."

"சொல்லேன்." இவனுக்கு படபடப்பு ஏறிக்கொண்டே போனது.

"நடுரோட்டிலே புள்ளைங்களோட நீங்க வரீங்க. ரோட்டுக்கு இந்தப் பக்கம் நான் நிக்கிறதைப் பார்த்து விட்டு அவங்களை விட்டுட்டு குறுக்கால வேகமா வரீங்க. லாரி வேகமா வருது தெரியாம நான் அலறேன்; வராதீங்க! நில்லுங்கன்னு; உங்க காதுலே விழலே. அந்த லாரி நிறுத்தாம வேகமா..."

முடிக்காமல் மீண்டும் அழுதாள்.

என்ன சொல்கிறாள் என்று புரிபடச் சில விநாடிகள் ஆயின.

"என்ன உளர்றே, ஏதாச்சும் கனவு கண்டியா?"

"ஆமாங்க. என்னால தாங்க முடியல. உங்களுக்கு ஏதாச்சும் ஆயிடுச்சின்னா..."

"அடிப்போடி பைத்தியம்."

என்ன சொல்வதென்றே புரியவில்லை. பெரிதாய்ச் சிரிக்க வேண்டும் என்று தோன்றியது. கனவு- அதைப் போய் தீவிரமாய் எடுத்துக் கொண்டு நடு ராத்திரியில் ஒப்பாரி வைக்கிறாள்.

"இதைப்பாரு. நான் முழுசா உன் முன்னால் இருக்கேன். போயும் போயும் ஒரு கனவை....!"

தூக்கம் கெட்டது மறந்து பெரிதாய்ச் சிரித்தான்.

அருகில் வந்து இறுக்கிக் கட்டிக் கொண்டாள்.

"எனக்கு அப்படியே நெஜம் போல"-

"அய்யோ லூசு படு பேசாம."

"தூக்கம் வரலிங்க. கண்ணை மூடினா அதுவே வருதுங்க."

"பச். உனக்கு வரலேன்னா, எனக்கு வருது என்னை விடு."


படுத்துக் கொண்டான். மீனா நெருங்கி அணைத்தபடி படுத்தாள்.

"எதுவும் ஆவாதில்லே?"

"ம்ஹூம். கனவிலே அப்படி வந்தா ஆயுசு கெட்டிம்பாங்க. பேசாம படு."

மீனா எழுந்து, கண்களை மூடி ஏதோ பிரார்த்தித்தாள். மறுபடி அவனை அணைத்துக் கொண்டு படுத்தாள்.

அவனுக்குத்தான் தூக்கச் சரடு அறுந்து போனது. தலைக்குள் லேசான வலி.



ரிஷபன்

மீனாவுக்கு விதம் விதமாய்க் கனவுகள் வரும்- வருகிறது. இன்றைய இரத்தக் கனவு போல இல்லாமல் சந்தோஷக் கனவுகளும்.

ஒருமுறை வெட்கப்பட்டுக்கொண்டு சொல்லியிருக்கிறாள். யாரோ நடிகன், அவளுக்குப் பிரியமானவன் வீட்டுக்குள் வந்து (கனவில் தான்) சாப்பாடு கேட்டு வாங்கிச் சாப்பிட்டானாம். "ரொம்ப நல்லா சமைக்கிறீங்க. அழகாவும் இருக்கீங்க." என்றானாம்.

சொன்னாள்.

"நான் ஒரு தடவைக்கூட உன்னிய பாராட்டினதே இல்லை- சமையல் நல்லா இருக்கு; நீ சூப்பரா இருக்கேன்னு. உன்னோட மனசு ஏக்கம் அப்படி கனவிலே வந்திருக்கு" என்றான் கனவின் காரணம் பற்றி.

"போங்க. எதிலேயும் உங்களுக்கு விளையாட்டுத்தான்" என்றாள்.

கனவுகள் அபத்தம் நிறைவேறாத ஆசை கனவாய் வரலாம் என்பார்கள்.

அப்ப நான் அடிபட்டு சாவணும்னு மீனாவுக்கு ஆசையா என்ன? ஏன் இப்படி குதர்க்கமாய் நினைக்கிறேன். அடி மனசு பயம் கனவாய் வரக்கூடும். என்றோ ஒருநாள் இவன் சொன்ன விபத்தில் தப்பித்தது.

"ஒரு செகண்டிலே இந்தாண்ட வந்துட்டேன். இல்லை லாரி கூடாசியிருக்கும்" என்றான்.

அது கனவில் வந்து மிரட்டியிருக்கக்கூடும்.

பைத்தியம். கனவுக்கு முக்கியத்துவம் கொடுத்து, தூக்கம் கெடுத்து நினைவுகளுடன் உழன்று மீண்டும் தூக்கம் கொள்ள எத்தனை நேரம் ஆனதோ...

"என்னங்க-மணி ஆறரை எழுந்திருங்க."

தலைக்குக் குளித்திருந்தாள். இன்று வெள்ளிக்கிழமை; எழுப்பியவளையே வெறித்தான்.

"என்ன தூக்கம் கலையலையா?"

'அடிப்பாவி. என்னையே சார்ந்து எனக்காகவே வாழ்கிறவள் என்று நம்பியிருந்தேன். இப்படிச் செய்து விட்டாயே?'

நன்றாய், துல்லியமாய், படப்பிடிப்பு. மீண்டும் ரீப்ளே. இதோ மீனாவிடம் என்னமாய் பரபரப்பு.

தெருவில் கமலக்குமார் போகிறானாம். அவள் வாசலுக்கு ஓடுவதற்குள் அந்த தடியனே உள்ளே வந்துவிட்டான்.

"ஹாய் மீனு."

பாவி! நானே அப்படி அழைத்ததில்லை.

எனக்காகக் கொண்டு வந்த முதல் டிகாஷன் காப்பியை சுடச்சுட அவனிடம் தருகிறாள். எச்சில் பண்ணிக் குடித்துவிட்டு முகத்தில் என்ன எக்ஸ்பிரஷன் தருகிறான்.

"இந்தக் கையா காப்பி போட்டது?"

அவன்தான் புத்தி கெட்டுப் போய் கையை வருடுகிறான் என்றால், இவளுக்கு எங்கே போச்சு அறிவு?

"என்னோட ஹீரோயினா நடிக்க சம்மதமா?" என்கிறானே, அட இவளும் தலையாட்டுகிறாளே, வாசலுக்குப் போகிறாளே?

கோபத்துடன் அவன் நின்ற போது யாரோ அவனைத் தட்டி மணி ஆறரை- என்றது கேட்டது.

மனம் விட்டு ரசித்துச் சிரித்தாள்.

"என்னைவிட சூப்பரா கனவு காணறீங்க."

'அவளை ஏமாற்றிவிட்டதாய் உணர்ந்தது வெறும் பிரமைதானா?' திடுக்கிட்ட போதும் மேலும் ஒன்று புரிந்தது.

நடு இரவில் அவள் ஏன் அப்படி அழுதாள்? என்றும் அந்த விநாடி அவளை நிமிர்ந்து பார்க்க வெட்கமாய் இருந்தது அவனுக்கு. ■



படிப்பகம்

www.padippakam.com

# "ரிப்ஸ்"

அவளுக்கும் எனக்கும் இரண்டு வயதுதான் வித்தியாசம். ஆனால் தோற்றத்தில் மட்டும் இருவரும் நல்ல குண்டர்கள். நல்ல வசதியானவள் அவள். எல்லாம் வெளிநாட்டுக் காசு தான்.

எனக்கோ. இந்த 'கிளாக்கு' உத்தியோகச் சம்பளத்தை விட வேறு வருமானம் ஒன்றும் இல்லை. என் தங்கையின் மரணத்தின் பின் அவ்விடத்தை நிரப்புகிறவள், கல்லூரி நண்பியாகி என் உடன்பிறவா சகோதரியானாள்.

"பாஸ் அண்ணே! உங்கடை பிறந்த நாள் இன்றைக்கு எல்லோ?" என்றபடி எனது நெற்களஞ்சிய வீட்டிற்கு வந்தாள் ஜனனி.

"பிறந்தநாள் கொண்டாட்டத்தை விட்டு மூன்று வருசமாகுது. நீர் எண்டாலும் இங்கு இருக்கிறதால் வந்து ஞாபகப்படுத்தி வாழ்த்துகிறீர். உமக்கு நான் என்னத்தைச் செய்யப்போறேனோ தெரியாது."



ஜெ.ஜெயபாஸ்கரன் – வவுனியா

"ஒன்றும் செய்ய வேண்டாம். வாங்கோ போவம் புரியாணி சாப்பிடப் போகலாம்," என்றாள்.

எனக்கு கைகால் ஓடவில்லை. மொத்தமாக என்னிடம் ஐம்பது ரூபா மட்டுமே இருந்தது. இருந்தும் அவளின் வற்புறுத்தலில் ஹோட்டலுக்குப் போனேன்.

கடையில் நல்ல வரவேற்பு. புரியாணி வந்தது; நான் காலையில் சாப்பிடவில்லை. நல்ல பிடி ஒன்று பிடித்தேன். கணக்கு இருநூற்றி இருபது ரூபா. என்ன செய்வது என்று எனக்குப் புரியவில்லை. எனது நிலையைப் புரிந்து கொண்டவள் போல் ஆயிரம் ரூபாவை எடுத்து 'ரிசீற்றுடன்' வைத்தாள். பரிமாறிய ஊழியர் மிகுதிப் பணத்தைக் கொண்டு வந்து வைத்தார்.

நான் வாங்கிக் கொடுக்க வேண்டிய இடத்தில், அவள் வாங்கித் தந்ததை நினைக்க எனக்கு வேதனையாக இருந்தது. இருந்தும் எனது கௌரவத்தை விட்டுக்கொடுக்காமல் என்னிடம் இருந்த பத்து ரூபா சில்லறையில் ஐந்து ரூபாவை எடுத்து பரிமாறும் ஊழியருக்கு "ரிப்ஸ்" சாக வைத்தேன்.

அவள் சிரித்துக்கொண்டு "இப்ப சாப்பிட்டதே எங்கடை அண்ணை வெளிநாட்டில் எடுக்கிற "ரிப்ஸ்" காசிலைதான். நாங்கள் ஐந்து பேர் அந்தக் காசிலேதான் வாழுறம். மிச்சம் ஐந்து ரூபாவையும் வைச்சு விடுங்கோ." என்றாள்.

அப்பதான் எனக்கு சந்தோசமே வந்தது; என்ர பத்து ரூபாவிலும் ஒரு குடும்பம் வாழுது என்று! ■

# மலர்க்கணை

"ஜெயாக் குட்டிக்கு ஊரையும், உறவுகளையும் விட்டுப் பிரிய மனமில்லை. பிரிந்தே ஆக வேண்டிய நிலை"

விதானையார் இடிந்துபோயிருந்தார். மகனைப் பற்றி அறிந்த செய்தியினால்தான் அவர் இப்படி ஆகியிருந்தார். அந்த மகன் சொந்த நாட்டில் இருந்தால் பரவாயில்லை. அன்பால்– அரவணைப்பால் அல்லது அதிகாரத்தால் என்றாலும் அவனை நல்வழிப்படுத்த முயலலாம்.

ஆனால் கண்காணா தேசமாகிய கனடா தேசத்திலிருந்தல்லவா இந்தச் செய்திகளெல்லாம் அவரை வந்து எட்டுகின்றன.

"அங்கு குடித்துவிட்டு தெருக்களிலே விழுந்து கிடக்கிறானாம். குடிப்பதற்குப் பணம் கொடுக்காதவர்களை அடித்துத் துன்புறுத்துகிறானாம்" பரம்பரைக்கேயில்லாத பழக்கங்களையெல்லாம் மகன் கற்றுக்கொண்டிருக்கிறானே என்று அவர் வேதனைப்பட்டார். அதைவிட அவனின் வாழ்க்கை இப்படிப் பாழாய்ப்போகிறதே என்று நெஞ்சு கிடந்து துடித்தது.

"ஜெயாக்குட்டி, ஜெயாக்குட்டி" என்று செல்லமாய் வளர்த்த பிள்ளை இப்படிச் சீரழிந்துவிட்டானே என்று கண் கலங்கினார் விதானையார்.

இந்த விதானையார் கிராம சேவகராகப் பணியாற்றிவிட்டு ஓய்வு பெற்றுவிட்டிருந்தார். இன்னும் அந்த ஊர்மக்கள் அவரை விதானையார் என்றே அழைக்கிறார்கள். அந்தளவிற்கு மக்களிடம் பரிச்சயம் பெற்றிருந்தார் மனிதர். அவருக்கு இரு ஆண்களும் மூன்று பெண்களுமாக ஐந்து பிள்ளைகள்.

அதில் 'ஜெயாக்குட்டி' என்று அழைக்கப்படுகின்ற ஜெயதேவன் கடைக்குட்டிப்பிள்ளை, இவனுக்கு நான்கு வயதாகும்போதே தாயார் நோய்வாய்ப்பட்டு இறந்து போனார். கடைக்குட்டிப்பிள்ளை, தாயைப்பறிகொடுத்தவன் என்று மிகவும் செல்லமாகவே ஜெயாக்குட்டி வளர்க்கப்பட்டான்.

அவனுக்குப் பத்தொன்பது வயது முடிவடைந்தநேரம், எமது நாட்டில் புரையோடிப்போன இனப்பிரச்சனையால் அவர்கள் பகுதி மிகவும் பாதிப்புக்குள்ளாகிக் கொண்டு வந்தது.

மகனைத் தொடர்ந்து ஊரில் வைத்துப் பாதுகாக்க முடியாத நிலை விதானையாருக்கு ஏற்பட்டது. இதனால் ஜெயாக்குட்டியை வெளிநாடு அனுப்ப அவர் ஏற்பாடு பண்ணினார். ஜெயாக்குட்டிக்கு முதலில் உறவுகளையும், ஊரையும் விட்டுப் பிரிய விருப்பமில்லை. இருந்தும் அவனுக்குப் பிரிந்தே ஆக வேண்டும் என்ற நிலமை. இதனால் அவன் கனடா நாடு போய்ச் சேர்ந்தான்.

உறவுகளின் அரவணைப்பில் வாழ்ந்தவனுக்குக் கனடா வந்ததும் கண்ணைக் கட்டிக் காட்டிலே விட்டது போலிருந்தது.

சகல விஷயங்களிலும் அவன் தனிமைப்படுத்தப்பட்டவன் போல் உணர்ந்தான். இந்தத் தனிமையிருக்கிறதே இது மகாகொடுமை. இதை அனுபவித்தவர்களுக்கே இதன் அகோரம் புரியும். இந்த அகோரத்தில் ஜெயாக்குட்டியும் அகப்பட்டான்.

பகல் நேரத்தில் சில நாட்கள் வேலைக்குப் போய்வந்ததனால் ஓரளவு பொழுதுபோனது. இரவில் படுக்கைக்குப் போனால் உறக்கம் வருவதில்லை. மாறாக யோசனைகள்தான் வந்து அவனைச் சூழ்ந்து கொள்ளும். இதனால் ஜெயாக்குட்டி மிகவும் சிரமப்பட்டான்.

அப்பொழுதுதான் புதிதாக அறிமுகமான நண்பனொருவன் சொன்னான்: "மச்சான் இது ஆரம்பத்தில் எல்லோருக்கும் வருகிற பிரச்சனைதான். வேலை முடிந்து போகும் போது இரண்டு கிளாஸ் அடிச்சிட்டுப் போ. பிறகு தூக்கம் வருகிறதா இல்லையா என்று பார்!" என்றான்.

ஜெயாக்குட்டியும் அப்படியே செய்தான். நல்ல தூக்கமும், நிம்மதியும் கிடைத்தது. ஆனால் காலப்போக்கில் அவன் இந்தக் குடியையே கதி என்று கிடக்க ஆரம்பித்தான். இதனால் இருந்த வேலையையும் இழக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

வேலை போய் பணம் இல்லாவிட்டாலும் பழகிய பழக்கத்தை மறக்க முடியவில்லை. இதனால் தெரிந்தவர்களிடம் கையேந்தத் தொடங்கினான். ஊரவர்கள் வேலை செய்யும் இடங்களுக்குக் கடன் கேட்டுப் படியேறினான். கிடைக்கும் பணத்தைக் கொண்டு குடித்தான். வாந்தி எடுத்தான். வீண் பேச்சுக்களால் குழப்படிகளை உண்டாக்கி விழுந்து கிடக்க ஆரம்பித்தான். இது வாடிக்கையாகவே தொடர்ந்து கொண்டிருந்தது.

ஜெயாக்குட்டியின் இந்நிலமை ஊரவர்கள் வாய்மெல்லுவதற்கு நல்ல தீனியாக அமைந்தது. அந்த ஊரவர்கள் இந்தச் செய்தியை தங்கள் உறவுக்காரர்கள், நண்பர்களுக்கு அவிழ்த்துவிடத் தொடங்கினார்கள். இப்படியாக ஊர் மக்கள் மூலம் இது



களுவாஞ்சிக்குடி யோகன்
அவுஸ்திரேலியா

கசிந்துதான் விதானையாரின் காதுகளுக்கும் வந்து எட்டியது. அன்று விதானையாரின் விதவைத் தங்கை தான் இந்தச் செய்தியைக் கொண்டு வந்திருந்தார்.

இதனால் தான் அவர் இடிந்து போயிருந்தார்.

அண்ணன் இருந்த நிலையினைப்பார்க்கச் செய்தி கொண்டு வந்திருந்த தங்கையாருக்குப் பரிதாபமாக இருந்தது. "அண்ணே! ஜெயாக்குட்டிக்கு ஒரு கால்கட்டுப் போட்டு விட்டால் எல்லாம் சரியாகிவிடும்." என்று ஆறுதல் சொன்னார்.

"நீ சொல்றது சரிதான்; இப்படியான பிள்ளைக்கு யார் பெண் தரப்போகிறார்கள்?"

"பெண்ணைப்பற்றி நீ கவலைப்படாதே, நான் பேசிப்பார்க்கிறன்," என்ற தங்கையார் போய்விட்டார்.

அந்தத் தங்கையார் தனது அயலிலுள்ள துர்க்காவை அவளின் தாயிடம் பெண் கேட்டார். துர்க்கா சிறுவயதிலேயே தந்தையைப் பறிகொடுத்தவள். 'அட்வான்ஸ் லெவல்' படித்துக் கொண்டிருந்தாள்.

அவளிடம் தாய் வந்து இப்படிக் கேட்டதும் அவள் பல மணி நேரம் யோசித்தாள்.

"அம்மா, நான் பதில் சொல்ல முன், ஜெயாக்குட்டியுடன் கொஞ்சம் கதைக்கலாமோ?" என்று தாயிடம் கேட்டாள்.

விதானையாருக்குத் தகவல்போனது. துர்க்கா மகனுடன் 'ரெலிஃபோனில்' கதைப்பதற்கு அவர் ஏற்பாடு பண்ணிக்கொடுத்தார்.

துர்க்காவும், ஜெயாக்குட்டியும் ஃபோனில் கதைத்தார்கள். சம்பிரதாயமாக அறிமுகங்கள் முடிந்ததும் துர்க்கா தொடர்ந்தாள்.

"குடிப்பவர்கள் எல்லாம் ஒன்றும் கெட்டவர்கள் கிடையாது. இது அளவுக்கு மிஞ்சிப் போய்த்தான் என் அப்பா அழிந்து போனவர். நான் உங்களிடம் ஒன்றே ஒன்று மட்டும் கேட்கிறேன். அதை உங்களால் நிறைவேற்ற முடியுமா?" என்று கேட்டாள்.

"முடிந்தால் நிச்சயம் நிறைவேற்றுவேன். சொல்லுங்கள்!" என்றான் ஜெயாக்குட்டி.

"நீங்கள் குடிக்கலாம்; அது பிரச்சனையில்லை. ஆனால் நான் உங்களிடம் வந்து சேரும்வரை அதை நிறுத்தவேணும், எனக்காகச் செய்வீர்களா?" உருக்கமாகக் கேட்டாள் துர்க்கா.

தன்னைப் பற்றி முற்றாக அறிந்திருந்தும் அதைப்பொருட்படுத்தாமல் தான் வரும் வரை இந்த மதுவை நிறுத்தி வையுங்கள், என்று அவள் கேட்டது அவனது நெஞ்சைத் தொட்டது.

அந்தக் குரலிலிருந்த பரிவு, அக்கறையெல்லாம் இதுநாள்வரை கேட்டிராத அன்பு ஊற்றாய் அவனது உள்ளத்தில் பாய்ந்தது.

'அவள் என்னிடம் வந்து சேரும் வரையென்றாலும் இதை மறந்துதான் பார்ப்போமே.' என்று ஜெயாக்குட்டி உறுதி செய்தான்.

அந்த உறுதியினூடே "நிச்சயமாக நீங்கள் வரும் வரை நான் இதைத் தொடமாட்டேன்!" என்றான்.

ஜெயாக்குட்டி சொன்னவிதமும், அந்த உறுதியும் துர்க்காவை திருப்திப்படுத்தியிருக்க வேண்டும். "ஐ லவ் யூ" என்றாள் அவள். அவர்களின் அளவளாவல் தொடர்ந்து கொண்டிருந்தது.

சில நாட்கள் நகர்ந்திருக்கும். மறுபடியும் மகனைப்பற்றிய செய்திகள் விதானையாரின் காதுக்கு எட்டியது.

"இப்போது ஜெயாக்குட்டி குடியை விட்டுவிட்டானாம்!"

"ஒழுங்காக வேலைக்குப் போகிறானாம்!"

எல்லாம் வரப்போகும் மருமகளின் கைங்கரியந்தான் என நினைத்தவர் நிம்மதியாகப் பெருமூச்சுவிட ஆரம்பித்தார். ■

# இழப்பு

விரித்துவிட்ட கூந்தலுடன், அதோ உட்கார்ந்து கொண்டிருக்கிறாள் சாவித்திரி! உடம்பு அனலாய்த் துடிக்க, மலை போன்ற துக்கம் உள்ளேயும் அமுங்காமல், வெளியேயும் வராமல், பாறாங்கல்லாய் நெஞ்சை அழுத்திக் கொண்டிருக்கிறது. அழுது.அழுது, கண்கள் இரண்டும் கோடைகால ஏரியைப் போல் வற்றிப்போய்விட்டன. அப்படியே ஓர் ஓரமாய் அன்ன ஆகாரம் இன்றி உட்கார்ந்து கொண்டிருக்கிறாள்; பாவம்!



உமாசந்திரசேகர்

இரண்டு நாட்கள் வாய் மூடி மௌனமாக இருந்த பெரியவர் நடராஜன், இன்று துணிச்சலை எல்லாம் ஒன்றுதிரட்டி மகள் அருகில் வந்து அமர்கிறார்.

"சாவித்திரி, நீ இப்படி எதுவுமே பேசாமல், சாப்பிடாமல் உட்கார்ந்திருந்தால், உடம்பு என்னத்துக்கு ஆகும்..? விதியின் செயலுக்கு நாம் என்ன செய்ய முடியும்?"- அதற்கு மேல் பேசத் தெரியாமல், அவள் தலையை அன்போடு வருடுகிறார்.

அவள் பதில் சொல்லாமல், அவரை வெறித்துப் பார்க்கிறாள்- வெறும் சூன்யப்பார்வை!

"இதோ பாரும்மா... நீ இப்படி இருக்கக்கூடாது... உன் பிள்ளை விக்ரமிற்காகவாவது, நீ உன் துக்கத்தை விழுங்கத்தான் வேண்டும்...!"-மேல் துண்டினால் வாயைப் பொத்திக்கொண்டார்.

"பாவியிலும் மகா பாவி நான். அவரோட உடம்பைக் கூடப்பார்க்க முடியாமல் போய் விட்டது... அமெரிக்காவில் அவர் மரணமடைய.... நான் இங்கு இருக்க... என்ன கொடுமை அப்பா! அவருடைய முகதரிசனம் கூட எனக்குக் கிடைக்காமல் போயிடுச்சு..! இந்தத் துன்பத்தை என்னாலே தாங்க முடியலே அப்பா..!"- தலையில் 'மடேர் மடேர்' என்று அடித்துக்கொண்டு வாய்விட்டு 'ஓ'வென்று அழுகிறாள்.

அவரால் அவளைச் சமாதானப்படுத்த முடியவில்லை! என்ன சொல்லி தேறுதல் சொன்னாலும், அவளுடைய இழப்பு ஈடு செய்ய முடியாதது என்பதைப் புரிந்து கொண்டு, பேசாமல் எழுந்து போனார், பெரியவர் நடராஜன்.

***

"ஸார் போஸ்ட்..." என்ற குரல் கேட்டு, நடராஜன் எழுந்து போகிறார்.

அயல் நாட்டுக் கவர்..!- அதைப் பிரித்துக்கொண்டே, உள்ளே வந்து அமர்கிறார். முகம் மெல்ல மெல்ல சந்தோஷத்தில் மலர்கிறது.

"சாவித்திரி..! மாப்பிள்ளை ஸ்ரீகாந்த் தோட இழப்புக்கு, அவன் வேலை பார்த்த கம்பனியிலே வருத்தம் தெரிவித்துக் கடிதம் எழுதி இருக்காங்க... நஷ்ட ஈடாகப் பணம் அனுப்புவதாகவும் தெரிவித்திருக்காங்க நம்ம ஊர் மதிப்பிலே சுமார் இருபது லட்சம் ரூபாயாம்!"

"என்னப்பா, இருபது லட்சமா?"

"ஆமாம்மா!- என்ன இருந்தாலும், அமெரிக்கா அமெரிக்காதான்!"

"ஊம்..."

"சாவித்திரி! இனிமேல் நீ வேலைக்குப் போக வேண்டாம்!"

அப்பா, பையன், மருமகள் மூவரும் உற்சாகமாய்ப் பேசிக்கொள்கிறார்கள்!

பிள்ளை விக்ரமைத் தன் மடியில் கிடத்திக்கொண்டு, அப்பா கொடுத்த கடிதத்தையே வெறித்துப் பார்த்தவாறு உட்கார்ந்து கொண்டிருக்கிறாள் சாவித்திரி!

அவளது பயங்கர மௌனத்தைக் கண்டு குழம்பியபடியே, அவள் அருகில் போய் உட்கார்ந்து கொள்கிறார் பெரியவர் நடராஜன்!

"சாவித்திரி! ஏம்மா இப்படிப் பேசாமல் இருக்கே? மாப்பிள்ளையின் நினைப்பு வந்துவிட்டதா? ஈடு செய்ய முடியாத இழப்புத்தான்! என்ன செய்யறது? நாம் கொடுத்து வச்சது அவ்வளவுதான்! 'ஐந்து வருஷத்திலே ஏராளமாய்ச் சம்பாதித்துக்கொண்டு வருவேன்' என்று சொல்லிவிட்டுப்போன மாப்பிள்ளை ஸ்ரீகாந்த், திரும்பவே இல்லை! செத்தும் கொடுத்தான் சீதக்காதி என்பது போல் மாப்பிள்ளையோட மரணம் நமக்கு நஷ்டஈடு கொடுக்கப்போகுது..! இனியும் நீ அவனை நினைத்து வேதனைப்படக்கூடாது- குழந்தை விக்ரமை நல்ல நிலைக்குக்கொண்டு வரணும்... அதுக்காக நீ பழசை மறக்கணும்... அந்தப் பணத்தை வச்சுண்டு மாப்பிள்ளையின் ஆசைகளை நிறைவேத்தணும்!"

சாவித்திரி புடவைத் தலைப்பினால் முகத்தை அழுத்தமாய்த் துடைத்துக்கொள்கிறாள்; பின்னர், இதழ்களைச் சோகம் பிரித்து விலக்குகிறாள்:

"அப்பா! நீங்க எல்லோரும் நேரிடையாப் பாதிக்கப்படலே! அதனால, உங்க எல்லோருக்கும் இப்படித்தான் தோணும்! 'இதோ.. ஐந்து வருஷத்திலே சம்பாதித்த பணத்தோடு திரும்பி வந்து விடுவேன்!' என்று சொல்லிவிட்டுப் போனவர், திரும்பலே..! அவருடைய இழப்புக்கு ஈடாக, இவ்வளவு பணம் என்று அவர் கம்பெனியிலே நிர்ணயிச்சு அனுப்பி இருக்காங்க..! ஆனால் அந்தப்பணம், என்னுடைய இழப்புக்குத் துலாக்கோலாக மாறாது! எதை ஈடாகக் காட்டினாலும், அது என் அன்புக் கணவரோட மறைவிற்கு ஈடாகாது! எனக்கு அந்தப் பணம் வேண்டாம் அப்பா..! அந்தப் பணத்தினால வரும் சுகங்களை அனுபவிக்கும் பொழுது, உடம்பும் உள்ளமும் துடிக்கும்! அவரோட இழப்பினால் வந்த பணத்தில விக்ரம் வளர வேண்டாம்..! என் உழைப்பு இருக்கிறது! என் பிள்ளை விக்ரமை நான் வளர்த்து ஆளாக்கிடுவேன்...! ஆமாங்க, அப்பா!"

"அம்மா.... சாவித்திரி! நீ சின்னவள்! அனுபவம் இல்லாதவள்! அந்தப் பணம், நியாயப்படி உனக்குச் சேரணும்... எதையோ கற்பனை செஞ்சு குழம்பாதே! நான்..."

இடையில் குறுக்கிட்டாள் சாவித்திரி.

"அப்பா! பணம்...பணம் என்று அலறுறீங்களே? இந்த பணத்தாலே, என் கணவரை மீட்டுத்தர முடியுமா? என்னையும் அவரையும் பிரிக்கும் இந்தப் பணம் எனக்கு வேண்டவே வேண்டாம்...! என் மனக் கஷ்டத்தைப் புரிஞ்சுக்கிடுங்க அப்பா..! இனிமேலும் என்னைத் தொந்தரவு செய்யறது பாவம் அப்பா..ப்ளீஸ்!"

"அருமை மகளே சாவித்திரி!"

பெரியவரால் மேற்கொண்டு எதுவும் பேசமுடியவில்லை..! ●

# ஈரமான பாடல் இது

டயானாவின் மரணச் சடங்கில் திரண்டிருந்த இலட்சோப இலட்சம் மக்களின் கண்களை குளமாக்கியது இந்தப் பாடல். சோகத்தை நெஞ்சுக்குள் பொத்திக் கொள்ள முயன்ற வருங்கால மன்னரான இளவரசர் வில்லியம் இப் பாடலைக் கேட்டதும் வாய்விட்டே அழுதுவிட்டார். மர்லின் மன்றோவுக்காக எழுதப்பட்ட பாடலில் சின்னச் சின்ன மாற்றங்கள் செய்து பாடினார் பிரபல பாடகர் எல்ட்டன் ஜோன். டயானாவின் தோழர் அவர். கடைசிவரியில் அவர் குரலும் சோகத்தில் உடைந்துபோனது. அந்தப் பாடலின் தமிழ் மொழி பெயர்ப்பு:



போய்வா
இங்கிலாந்தின் ரோஜாவே!
போய்வா!

என்றென்றும் எங்கள்
இதயங்களில் நீ
மலர்வாயாக!

வாழ்க்கைகள் கிழிந்து சிதைகையில்
உன் கருணை
திடமாக நின்றது.

நீ எங்கள் தேசத்துக்கு
அழைப்பு விடுத்தாய்
வலியில் துடித்தோருடன்
நீ பரிவுடன் பேசினாய்
இப்போது நீ
சொர்க்கத்துக்கு
சொந்தமாகிவிட்டாய்!

உன் பெயரை
நட்சத்திரங்கள் உச்சரிக்கின்றன.

காற்றில் அசைந்தாடும்
மெழுகுவர்த்தியைப் போல
உன் வாழ்க்கையை
நீ வாழ்ந்தாயென்று
எனக்குத் தோன்றுகிறது!

மேகங்கள் முத்தமிட்டபோது
சூரியன் நீ
அஸ்தமித்துவிடவில்லை.

இங்கிலாந்தின்
பசுமையான குன்றுகளில்
உன் காலடிச் சுவடுகள்
எப்போதும் பதிந்திருக்கும்!

உன்னுடைய மெழுகுவர்த்தி
எரிந்து முடிந்து
நெடுங்காலத்துக்கு பின்னரும்
உன் சரித்திரம் தொடரும்!

இனிமையை நாங்கள்
இழந்துவிட்டோம்!
உன் புன்னகையைக் காணாத
இந்த நாட்கள்
சூனியமானவை!
எனினும்
எங்கள் தேசத்தின்
தங்கக் குழந்தைக்காக
இந்தத் தீபம்
எப்போதும் ஒளிவிடும்!

நாங்கள் முயன்றுதான் பார்க்கிறோம்;
ஆனாலும் உண்மை உரைப்பதால்
கண்ணீர் கொட்டுகிறது!

நீ இத்தனை வருடங்களாக
எங்களுக்கு
தந்த சந்தோசத்தை
எத்தனை வார்த்தைகளாலும்
வெளிப்படுத்த முடியாது!

உன்னை இழந்துவிட்டதால்
தன்னை இழந்துவிட்ட தேசம்
சொல்லுகிறது-
போய்வா.....
இங்கிலாந்தின் ரோஜாவே!

உன் மனித நேய
இறக்கைகளை
எவ்வளவு தூரம்
நாங்கள் இழந்து நிற்கிறோம்
என்பது
உனக்கே தெரியாது!

இப்பாடல் இடம்பெற்ற 'டிஸ்க்'குகள் விற்பனையாகி உலக சாதனை படைத்துள்ளன. அதன் மூலம் பெறப்படும் வருமானம் டயானா அறக்கட்டளைக்கு வழங்கப்படுகிறது.



படிப்பகம்

# இலக்கிய நயம்





தருவது ரசிகன்

# இதுதான் காதல்

எப்போதும் திகட்டாத
சங்கத் தமிழ் நூல் எட்டு
அதில் ஒன்று
'கலித்தொகை' என்ற
வெல்லத் தமிழ்த் திரட்டு.

கலித்தொகை பாடல்கள்
மொத்தம் ஐம்பது
காதல் சுவையில் வல்லது
மூழ்கிக் களிக்க ஏற்றது!
'கலித்தொகை' காட்டும்
காதல் காட்சி ஒன்று காண்பீர்!

-*-

கட்டழகுப் பாவையல்ல
அன்னம்போல் நடையுமல்ல
முன்னழகும் பின்னழகும்
மோகம் கொள்ள வைப்பதல்ல.

முகம் அழகுதான்-அவள்
முதுகுதான் கூனல்.
வீசிய காற்றில்
வளைந்த கொடிபோன்றவள்.
மேனி அமைப்பின் காரணத்தால்
கூனி என்றே கூறி அழைப்பர்.

கட்டழகுக் காளையல்ல
அண்ணாந்து பார்க்கும் உயரமல்ல
மோதலுக்கு ஏற்ற உருவமல்ல
மோகத்தை ஊட்டும் தோற்றமல்ல
அளந்தால் மூன்றடி அளவிருப்பான்
அவனைக் குறளன் என அழைப்பர்.

உருவத்தைப் பார்த்து
உருவாகுவதில்லை காதல்.
உள்ளத்தில் மொட்டவிழ்ந்து
பூவாகுவதுதான் காதல்.

கூனியின்மீது மோகம் கொண்டான்
காதல் ஏணியின்மீது ஏறி நின்றான்.

கூனியை ஒருநாள் வழிமறித்து
வீசினான் காதல் வலை எடுத்து!

"வளைந்து நீ நடக்கும்போது
கலைந்து போனது என் மனது.
குனிந்த உன் மேனி கண்டு
கனிந்து போனது என் காமம்.

கண்ணே நான் காதலுற்றேன்
மண்ணில் இனி வாழ்வதென்றால்
பெண்ணே உன் அருள் வேண்டும்
இன்றேல் என் உயிர் போகும்!"

கூறிய குறளன் அவள்
கரம்மீது தன் கை பதித்தான்.
பதறிய கூனி உதறிவிட்டு
குறளனை முறைத்தாள் கோபத்திலே!

எட்டியே பிடித்தாய் கையில்
கட்டியே பிடிக்க உந்தன்
குட்டியாம் தேகம் தகுமோ?
எட்டிப்போ வழியை விட்டு!"

விலகாமல் குறளன் நின்று
குறும்பாக பதில் உரைத்தான்.

"வாள் போன்ற வாய் உனக்கு
வில் போன்ற உடல் உனக்கு
மார்போடு உனை அணைத்தால்
கூன் வந்து குறுக்கே நிற்கும்
மகிழ்வோடு ஓடிவந்து
பின்புறமாய் உனை அணைத்தால்
முதுகுக் கூன் மோதி தடுத்துவிடும்
பக்கமாய் நெருங்கி உன்னை
பதமோடு அணைத்தால்தான்
இதமாக இன்பம் பெருக்கெடுக்கும்!"

வித்தகன் போல விளக்கிவிட்டு
பித்தனைப் போல புன்னகைத்தான்!

"கூன் என்றால் குறும்போ
வீண் உந்தன் முயற்சி எல்லாம்.
நிறுத்திவைத்த ஆமையைப் போல்
நிற்கின்ற நீ எனக்கு
பொருத்தமே இல்லைப் போடா!"

கூனியின் வசை எதுவும்
குறளனை அசைக்கவில்லை.

"கொடியினைப் போல் வளைந்த
உருவத்தாள் உன்னை ஆள
யாருண்டு என்னை விட்டால்?
கண்டதும் ஓடுவார்கள்-நான்
கண்டதும் நாடிவந்தேன்!
மறுக்காதே! என்னை விட்டால்
உன்னை பொறுப்பாக காதலிக்க
விருப்பாக யார் வருவார்?"

குறளனின் கேள்வி
கூனியை கொதிக்க வைத்தது!

"யார் உண்டு என்றா கேட்டாய்
பார் முழுக்க பலர் உண்டு
நேர் வந்து பெண் கேட்டோர்
பட்டியலை எடுத்துவிட்டால்
மூச்சிழந்து வேர் அற்ற மரமாய் விழுவாய்!"

கூனியின் கோபம் கண்டு
குறளனும் அரண்டு போனான்.

"கொய்யாக் கனியே கோபமா?
மொய்யா மலரே தாபமா?
மெய்யாய் என்மேல் கோபமா?"

குறளனின் பணிவு
கூனிக்கு இனிப்பானது!
கோபத்தை விரட்டிவிட்டு
குளிர்மையை வீசினாள்!

குளிர்பார்வை கண்ட குறளன்
குதித்து நடந்து குதூகலித்தான்.

"காமனார் நடையோ
இந்த நடை
காதல் வேகத்தார் நடையோ
இந்த நடை
உருவம்தான் குள்ளம்
உள்ளம் மலை!
உமக்கு தேகம்தான் சிறிது
தேக ஆசை மலை!"

"கடுகுதான் சிறிது காரம் பெரிது
என்பர் நீ அறியாயோ?"

"அறிவேன் குறளா உண்மை அது
இகழேன் உன்னை உண்மை இது
கோபுரம் உயரே இருந்தென்ன
குன்றிமணிதானே பளபளக்கும்
உருவம் பெரிதாய் இருந்தென்ன
உள்ளம் பெரிதாய் வேண்டாமோ?
கள்வா நீதான் பெரு மனிதன்
உள்ளத்தால் உயர்ந்த குண மனிதன்!"

கூனி சொன்னதும்
குறளன் மகிழ்ந்துவிட்டான்.
பக்கத்தில் நெருங்கி குறும்பு செய்ய
வெட்கத்தில் கூனி விழியடைத்தாள்!

"போதும் இங்கே வேண்டாமே
கண்டவர் நகைப்பர் வேண்டாமே
கூடிக் களிக்கையில் குறுக்கிட்டு
குறும்பாய் வீசுவர் வார்த்தைகளை!"

கூனி தடுத்தாள்
குறளன் தவித்தான்!

"கண்ணே உன்னை கலக்காமல்
கனி இதழ் சுவையே பருகாமல்
கட்டிக்கொண்டு உருகாமல்
போகேன் பெண்ணே நான்
போகேன்!"

"குறளா! குறளா! குதிக்காதே
உறவாய் உனக்காய் ஆனேனே
சோலை எம்மை அழைக்கிறது
போர்வையாகத் துடிக்கிறது
புகுவோம் அந்தப் போர்வைக்குள்
புறப்படு குறளா சோலைக்கு!"

குள்ளம் எனினும் குறளன்
உடல் உறுதி
குறளன் கரத்தால் கூனியை
கொத்தாய் அள்ளிக் கொண்டானே!
மொத்த இன்பம் அறிவதற்கு
சிப்பிக்குள் முத்தை காண்பதற்கு
குதித்து குதித்து சென்றானே!

இக் காதல் காட்சியை
கலித்தொகையில் காட்டுகிறார்
மருத இளநாகனார்.

"என் நோற்றனை கொல்லோ
நீகுள் நுடங்கிய மென்சாயல்

..................

என்று தொடங்கி
போதர் அகடு ஆரம் புல்லி முயங்குவோம்
துகள்தபு காட்சி அவையத்தார் ஓலை
முகடு காப்பு யாத்து விட் டாங்கு"
என்று முடிகிறது பாடல்.

ஸ்போர்ட்ஸ்

## சனத் சாதனைப் பட்டியல்

தனது அதிரடி ஆட்டத்தின் மூலம் உலகில் பரபரப்பாகப் பேசப்படும் இலங்கை வீரர் சனத் ஜெயசூரியவின் சாதனைப் பட்டியல் இதோ:

### ஒரு நாள் போட்டிகள்

137 போட்டிகளில் 129 இன்னிங்ஸ்களில் 4 போட்டிகளில் அவுட்டாகாமல் விளையாடியுள்ள ஜெயசூரிய, 3382 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். இதில் 5 சதங்களும், 19 அரைச்சதங்களும் அடங்கும். ஒருநாள் போட்டிகளில் இவரது அதிக பட்ச ஓட்ட எண்ணிக்கை- அவுட்டாகாமல் 151. ஒரு போட்டிக்கு 27.05 என்ற சராசரி ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுள்ள ஜெயசூரிய 53 'கட்ச்'களைப் பிடித்துள்ளார்.

பந்து வீச்சில் 3855 ஓட்டங்களைக் கொடுத்து 116 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். 5 தடவைகள் ஒவ்வொரு போட்டியிலும் 4 விக்கெட்டுக்களுக்கு மேல் வீழ்த்தியுள்ளார். இவரது சிறப்பான பந்துவீச்சு 29 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களைச் சாய்த்தமை.

### டெஸ்ட் போட்டிகள்

27 டெஸ்ட் போட்டிகளில் 45 இன்னிங்ஸ்களில் 6 போட்டிகளில் அவுட்டாகாமல் 1944 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். இதில்



4 சதங்களும், 9 அரைச்சதங்களும் அடங்கும். இவரது அதிகப்பட்ச ஓட்ட எண்ணிக்கை 340. டெஸ்ட் போட்டியில் 49.89 ஓட்டங்களைச் சராசரியாகப் பெற்றிருக்கும் இவர் 23 'கட்ச்'களைப் பிடித்துள்ளார்.

பந்துவீச்சில் 536 ஓட்டங்களைக் கொடுத்து 9 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். இவரது சிறப்பான பந்து வீச்சுப் பெறுதி 3/45.

## நவ்ரீன் மறுமணம்

இந்திய அணியின் முன்னாள் கப்டன் முகமட் அஸாருதீனால் விவாகரத்து செய்யப்பட்ட அவரது மனைவி நவ்ரீன், சவுதி அரேபிய தொழிலதிபரை மறுமணம் செய்துள்ளார்.

ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த அஸாருதீன், ஹைதராபாத்தைச் சேர்ந்த நவ்ரீனை திருமணம் செய்தார். அப்பாஸ், அஸர் என்ற இரு ஆண்குழந்தைகள் அவர்களுக்குப் பிறந்தன.

பின்னர் இந்தி நடிகையும், மொடல் அழகியுமான சங்கீதா பிஜ்லனியை அஸாருதீன் காதலித்தார். சங்கீதாவைத் திருமணம் செய்வதற்காக நவ்ரீனை அஸாருதீன் விவாகரத்து செய்தார். விவாகரத்தின் பின் அஸாருதீன் சங்கீதாவைத் திருமணம் செய்தார்.

நவ்ரீன் பெற்றெடுத்த பிள்ளைகள் இருவரும் அஸாருதீனிடமும், அஸாருதீனின் பெற்றோரிடமும் இருந்தனர். கணவனையும், பிள்ளைகளையும் பிரிந்த நவ்ரீன் வாழ்க்கையில் எந்தப்பிடிப்பும் இல்லாமல் இருந்தார்.

இளம் வயதான நவ்ரீனை மறுமணம் செய்து கொள்ளுமாறு அவரது பெற்றோர் வற்புறுத்தினர். இதைத் தொடர்ந்து நவ்ரீன் மறுமணத்திற்குச் சம்மதித்தார்.

சவுதி அரேபியாவைச் சேர்ந்த தொழிலதிபர் சலீம் ஹஸீமுக்கும்-நவ்ரீனுக்கும் சவுதி அரேபிய தலைநகர் ஜெட்டாவில் இரகசியமாகத் திருமணம் நடந்தது. இந்தத் திருமணத்தில் மணமக்களின் நெருங்கிய உறவினர்கள் மட்டுமே கலந்துகொண்டனர்.

தற்போது ஜெட்டாவில் வசித்து வரும் நவ்ரீனிடம் அவரது மகன்களான அப்பாஸ், அஸர் இருவரும் வந்துவிட்டனர்.

## இலங்கை அணி இந்தியாவில்

ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் இந்தியாவுக்கு இலங்கை கிரிக்கெட் அணி சுற்றுப் பயணம் செய்யவுள்ளது என்பது தெரிந்ததே. இந்தியாவில் 3 டெஸ்ட் மற்றும் 3 ஒருநாள் போட்டிகளில் இலங்கை அணி விளையாடுகிறது.

மொகாலி, நாக்பூர், மும்பாய் ஆகிய இடங்களில் டெஸ்ட் போட்டிகளும், இந்தூர், கௌகாத்தி, கோவா ஆகிய இடங்களில் ஒருநாள் போட்டிகளும் நடைபெறுகின்றன.

இவற்றுடன் முன்னாள் இந்திய வீரர் அன்ஷுமன் கெய்க்வாட்டிற்கு நிதி திரட்டுவதற்காக மேலும் ஓர் ஒருநாள் போட்டி நடைபெறவுள்ளது. நவம்பர் 11 அல்லது 12ம் திகதி இப்போட்டி பரோடாவில் நடைபெறவுள்ளது.

மேற்குறிப்பிட்ட இத்தகவல்களை இந்திய கிரிக்கெட் சபையின் செயலாளர் லில்லி தெரிவித்துள்ளார்.

## சிந்தியா பதில்கள்

* "அமைச்சர் என்ற ரீதியிலோ, பொ.ஐ.மு.செயலாளர் என்ற ரீதியிலோ சிங்களக் கமிஷனின் அறிக்கை வெளியிடும் விழாவுக்கு செல்லவில்லை" என்று அமைச்சர் ஜயரத்ன கூறியதாக வானொலியில் தெரிவிக்கப்பட்டது. அப்படியானால் அவர் யாராகக் கலந்து கொண்டார்?

இ.சதாசிவம், கொழும்பு-06.

முன்னர் 'ஹெல உறுமய'வில் ஒரு உறுப்பினராக இருந்த நினைப்பில் கலந்து கொண்டிருக்கலாம். எனக்கொரு கேள்வி: அமைச்சர் பதவி என்ன சட்டையா, அடிக்கடி கழற்றிவைத்துவிட்டுப் போவதற்கும் பின்னர்வந்து எடுத்து மாட்டிக் கொள்வதற்கும்!

OO

* சிங்களக் கமிஷன் அறிக்கையை சாடியிருக்கிறாரே அமைச்சர் மங்கள?

ஜி.பற்குணம், நீர்கொழும்பு.

அவரது துணிச்சலைப் பாராட்டலாம். ஆனால் அவரது கருத்தை அரசின் நிலைப்பாடாக கூட்டணித்தலைவரும், ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைவரும் சித்தரிப்பதுதான் சரியல்ல. ஒரு அமைச்சர் அறிக்கையை வாங்கியிருக்கிறார். இன்னொரு அமைச்சர் அறிக்கையைச் சாடியிருக்கிறார். இதில் ஜனாதிபதி அவர்களின் கருத்து என்னவோ? அதை அறியத்தான் ஆவலாக இருக்கிறது.

OO

* டியர் சிந்தியா! மகாத்மா காந்தி மறுபடியும் பிறந்தால் என்னாகும்?

கே.சுதாகரன், செங்கலடி.

மறுபடியும் சுடுவார்கள்!

OO

* தமிழ்க் கட்சிகள் விழித்துக்கொள்ளுமா?

எம்.ஜெயரட்னம், திருமலை.

தூங்கினால்தானே விழித்துக்கொள்ள வேண்டும்? தூங்குவதுபோல நடித்துக் கொண்டிருக்கிறார்கள்!

OO

* டியர் சிந்தியா! பிரித்தானிய மகாராணியை விட டயானாவின் புகழ் கூடக் காரணம் என்ன?

கே.மோகன், கொழும்பு-12.

மகாராணிக்கு தலையிலுள்ள மகுடத்தை இறக்கிவைத்தால்கூட தலைக்கனம் போகாது. டயானாவுக்கு மகுடம்கூட கனமாகத் தெரியவில்லை.

OO

* இளவரசி டயானா இறந்தபின்னர் பூத உடலை மக்களுக்கு ஏன் காட்டவில்லை?

அ.லெ.மு.சர்ஜுன், ஆரையம்பதி.

உடல் சேதமாகி இருந்ததுதான் காரணம் என்று 'லண்டன் ரைம்ஸ்' தெரிவித்திருக்கிறது.

OO

* 'ஆவதும் பெண்ணாலே, ஆண்கள் அழிவதும் பெண்ணாலே' என்பது சரிதானே சிந்தியா?

எஸ்.விஜயன், அக்கரைப்பற்று-07.

சரிதான்! தன்னைக் கொல்ல வரும் பசுவையும் கொல்லலாம் என்று மகாத்மாவே கூறியிருக்கிறார், மோசமான ஆணாக இருந்தால் அழிப்பதும் சரிதான்.

OO

* நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறை விரைவில் மாற்றப்படும் என்கிறார்களே? நடக்குமா?

ஜெ.முஸ்தபா, அக்குறணை.

இப்போது சொல்கிறேன் குறித்து வைத்துக் கொள்ளுங்கள்- ஜனாதிபதியாக இருந்துதான் அடுத்த பாராளுமன்றத் தேர்தலை நடத்தி முடிப்பார் சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்கா!

OO

* ஜாலியாக இருப்பதில் அதிக நாட்டம் கொண்டவர்கள் ஆண்களா பெண்களா?

ஆர்.ரூபன், பண்டாரவளை.

இந்த விடயத்தில் ஆண், பெண் பேதம் எல்லாம் கிடையாது.

புதிதாக திருமணமான ஒருத்தர் மருந்துக் கடை ஒன்றுக்கு சென்றார்.

"எனக்கு தூக்க மாத்திரைகள் வேண்டும். ஓய்வே இல்லை. தூங்க வேண்டும்!" என்றார்.

தூக்க மாத்திரையைக் கொடுத்த கடைக்காரர் "இந்தாருங்கள், எப்போதாவது போட்டுக்கொள்ளுங்கள். அடிக்கடி உபயோகிக்காதீர்கள்!" என்றாராம்.



அஜித்-ரிச்சா. (படம்: 'உயிரோடு உயிராக')

உடனே புதுமாப்பிள்ளை: "நான் ஏன் போட்டுக் கொள்கிறேன், இது என் மனைவிக்கு!" என்று'விட்டு நடையைக் கட்டினார்.

OO

* மும்பை தாதாக்களால் ரஜினி உயிருக்கு ஆபத்தாமே உண்மையா?

எம்.எம்.அனஸ், காத்தான்குடி.

வெறும் புரளி. மும்பாயில் சினிமாப் புள்ளிகள் வேட்டையாடப்படுவதற்கு முக்கிய காரணம் மூன்றுங்க.

1. பெண் 2. பொன் 3. பங்குத்தகராறுகள். சும்மா பரபரப்புக்காக 'ரீல்' விட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

OO

* சினிமா நடிகைகளை கதாநாயகர்கள் தூக்கிவைத்துக் கொண்டு 'டூயட்' பாடுகிறார்களே? குச்சிபோல இருக்கும் ஹீரோக்கள் எப்படி தாக்குப்பிடிக்கிறார்கள்?

ஜெ.நூர்டீன்.

தோமஸ் ஹார்டி என்ற அறிஞர் என்ன சொல்கிறார் எனில், "உற்சாகத்துடன் தாங்கும்போது சுமையின் கனம் குறைகிறது."

OO

* சிந்தியா! 'ஜல்' வைப்பது என்றால் என்ன?

இ.ஷகிலா, கண்டி.

ஒரு பெரியவர் விருந்துக்குப் போனாராம். சாப்பிடுவதற்கு முன்னாடியே, "ஆகா.. விருந்து சாப்பாடு என்ன ருசி! என்ன சுவை! ரொம்ப பிரமாதம்! இதுபோல என் வாழ்நாளில் சாப்பிட்டதே கிடையாது," என்று பாராட்டினார்.

"என்ன, இன்னமும் சாப்பிடவே இல்லை. அதுக்குள்ளே பாராட்டிவிட்டீர்களே?" என்று மற்றவர்கள் கேட்டார்கள்.

அதுக்கு பெரியவர் சொன்னார்:

"சாப்பிட்ட பின்னர் பாராட்ட முடியுதோ இல்லையோ தெரியாது. அதனால்தான் முன்னாடியே பாராட்டிவிட்டேன்!"

OO

* இப்போதெல்லாம் எண் ராசிப்படி பெயர் வைக்கிறார்களே! பயன் இருக்குமா?

பி.வளர்மதி, கந்தப்பளை.

எனக்கு நம்பிக்கை கிடையாது. ஆனால் பொருத்தமான பெயராக வைக்க வேண்டும் என்பதில் உடன்பாடு இருக்கிறது. ஒருவர் மரணமானால் கைலாசம் போய்விட்டார் என்று இந்துக்கள் சொல்வது வழக்கம். அதையொட்டி ஒரு குட்டிக் கதை:

தன் வியாதிக்காக டாக்டரிடம் போனார் ஒருத்தர். டாக்டரின் வீட்டு வாசல்வரை போய்விட்டு திரும்பிவந்துவிட்டார்.

"ஏன் திரும்பி வந்துவிட்டீர்கள்?"

"எனக்கு அந்த டாக்டர்மேல் நம்பிக்கை இல்லை!"

"நம்பிக்கையோடுதானே போனீர்கள். பின்னர் ஏன் திரும்பி வந்தீர்கள்?"

"டாக்டர் மேல் நம்பிக்கை இருக்கிறது. போர்டுல அவர் பெயரைப் பார்த்ததும்தான் நம்பிக்கை போய்விட்டது!"

"என்ன பெயர்,"

"கைலாசம்!"

OO

* ரம்பாவுக்கு சிம்ரான், சிம்ரானுக்கு போட்டி யார்?

சி.பிரகாஷ், பதுளை.

தினம் ஒரு தினுசாக பலர் வந்து குதிக்கிறார்கள். அதில் ஒருத்தர் ரிச்சா. அஜித்குமாருடன் 'உயிரோடு உயிராக'வில் ஜோடி சேர்ந்திருக்கிறார்.

OO

* டியர் சிந்தியா! இந்திய கிரிக்கெட் அணியில் சிறந்த பந்துவீச்சாளர்கள் இல்லையே ஏன்?

எம்.பூபாலன், அலவத்துகொட.

இருந்தவர்களைக்கூட தகுந்தபடி கவனிக்கிறார்கள் இல்லையே! ஸ்ரீநாத்தையும், வெங்கட பிரசாத்தையும் சிகிச்சைக்காகவும், பயிற்சிக்காகவும் அவுஸ்திரேலியாவுக்கு அனுப்புமாறு சிபாரிசு செய்யப்பட்டது. அதனை இந்திய கிரிக்கெட் சபை காதில் போட்டுக்கொள்ளவில்லை. செலவு அதிகம் என்று கைவிரித்தார்கள். இப்போது சென்னையில் உள்ள ஒரு அமைப்புத்தான் தன் சொந்தப் பணத்தில் அனுப்பி வைத்திருக்கிறது! இந்த இலட்சணத்தில் சிறந்த வீரர்கள் தோன்றுவது எப்படியாம்?

OO

* பெண்களுக்கு புடவை ஆசை, நகை ஆசை என்பவை எப்போது போகும்?

என். லிங்கேஸ்வரன், வவுனியா.

ஆண்களுக்கு சேர்ட் ஆசை, ஜீன்ஸ் ஆசை, வேஷ்டி ஆசை, தற்போது மேலதிகமாகச் சேர்ந்துள்ள தோடு போடும் ஆசையெல்லாம் போனபின்னர் இக் கேள்விக்கு பதில் சொல்லலாம்.




படிப்பகம்

# இராமாயணம் அங்கம் 102

# இந்திரசித்துவின் தந்திரோபாயம்

இராமபிரான் தனது தம்பி இலக்குமணன், இந்திரசித்து ஏவிய நாகாஸ்திரத்தால் கட்டுண்டு தரையில் வீழ்ந்து கிடப்பதைக் கண்டு கவலைப்பெருங்கடலில் மூழ்கினார். தன் அன்புக்குரிய தந்தை தசரதச் சக்கரவர்த்தியை இழந்து கானகம் ஏகிய நாளிலிருந்து ஒன்றன் பின் ஒன்றாக வந்துற்ற கேடுகளை நினைத்து வருந்தினார். தனது உயிருக்குயிரான தர்மபத்தினியை அந்நியன் கவர்ந்து சென்றமை; தந்தைக்கு நிகரான ஜடாயு ஐயனின் உயிர் தன் மடியிலேயே பிரிந்தமை, இன்று தனது அருமைத் தம்பி இலக்குமணன் பேச்சு மூச்சற்று தரையில் கிடப்பது போன்ற சம்பவங்கள் அவருடைய உள்ளத்தை உடைத்து சுக்கு நூறாக்கிவிட்டிருந்தன.

விபீடணன் தன் அருகில் நிற்பதைக் கண்டு தனது வேதனையைச் சற்றுக் கடினமாக்கினார். தனது அண்ணன் கும்பகர்ணனின் ஆற்றல்களையும் குணத்தையும் விபரித்த விபீடணன், இராவணனின் மகனான இந்திரசித்தைப் பற்றி தம்மிடம் எதுவும் கூறாமல் விட்டமைக்காக அவரைக் கடிந்து கொண்டார். கும்பகர்ணன் மாண்டமையினால் இராவணனே இராமபிரானுடன் பொருத முன்வரக்கூடும் என்று தான் கருதியிருந்ததாகக் கூறி, தன் குற்றமற்ற தன்மையை விளக்கினார் விபீடணர். அத்துடன் இராம



**இராஜகுமாரன்**

பிரானின் கோபத்துக்கு ஆளாகிவிட நேர்ந்ததை எண்ணி விபீடணர் பெரிதும் வருந்தினார். இலக்குவனைத் தாக்கியிருப்பது நாகாஸ்திரம் எனும் அரவக்கணையே என்றும், சிவபிரானால் இவ்வாயுதம் இந்திரசித்துக்கு வழங்கப்பட்டது என்றும் விபீடணர் மேலும் விளக்கினார்.

## கருடாழ்வார்

அரவக்கணையினால்தான் ஏற்கனவே இலங்கை மாநகரில் ஆஞ்சநேயரை மயக்கமுற வைத்த இந்திரசித்து இராவணன் முன் நிறுத்தினான். இக்கணையினால் தாக்கப்பட்ட பெரும்பாலானோர் உயிர்தப்புவது அரிது. இருப்பினும் சிலரை ஒரு குறிப்பிட்ட நேரம் மட்டும் தனது பிடியில் வைத்திருந்துவிட்டு தானாகவே செயலிழந்துவிடவும் கூடும். இலக்குமணனுக்கு என்ன நேருமோ தெரியாது, என்று இராமபிரானே கவலையில் ஆழ்ந்திருந்த நேரம் பெரியதொரு கருடப்பட்சி இலக்குவனின் காலடியில் வந்து அமர்ந்த வண்ணம் தனது சிரம் தாழ்த்தி இராமபிரானை வணங்கியது.

"மும்மூர்த்திகளில் உயிரினங்களைக் காத்து இரட்சிக்கும் பிரதான பொறுப்பினை ஏற்றுள்ள முழு முதற்கடவுளான விஷ்ணு பரமாத்மாவே! உண்மையான உனது திருச்சொருபத்தை மறைத்து இன்று இப்பூவுலகில் மாறிட வேடம் தாங்கி நிற்கின்றாய்! சாதாரண மனிதரைப்போலவே பிரிவு எனும் துயரை அனுபவிக்கின்றாய்! இது நீயே உனக்கு வகுத்துக்கொண்ட மாயை. இத்தகைய மாயையின் உட்பொருளை எவரால் தான் கண்டு கொள்ளமுடியும்?" என்று கருடன் இராமபிரானைப் பலவாறாகக்கூறி அர்ச்சித்தது.

கருடாழ்வார் இராமபிரானைத் துதிப்பதாக கவிஞர்பெருமான் பக்திச் சிறப்புடன் தரும் செய்யுள்களில் ஒன்றைப் பார்ப்போம்:

> பேர் ஆயிரங்கள் உடையாய் பிறந்த
> பொருள் தோறும் நிற்றி பிரியாய்
> தீராய் பிரிந்து திரிவாய் திறம் தொறு
> அவை தேறும் என்று தெளியாய்
> கூர் ஆழி அம் கை உடையாய் திரண்டு ஓர்
> உரு ஆதி கோடல் உரிபோல்
> ஆராயின் ஏதும் இலையாதி ஆர் இவ்
> அதிரேக மாயை அறிவார்?
>
> (யுத்த காண்டம் 2204)

பொருள்:

*"ஆயிரம் திருநாமங்களை உடைய நீ, உலகில் காணப்படும் சகல பொருள்களிடத்திலும் செறிந்திருக்கின்றாய். உனது இயல்பு எந்த வகையிலும் மாறுபடாதிருக்கும் அதே வேளையில் சகல உயிர்களிடத்திலும் பிறந்து அவை உய்யும் வழியாகவும் இருக்கின்றாய். அவ்வுயிர்களுக்கு அருள் பாலிக்கும் நீ கூர்மையான சக்கரப் படையையும் வைத்திருக்கின்றாய். உன் லீலைகளை ஒவ்வொன்றாக ஆராய்ந்து பார்த்தால் எதுவுமே இல்லாத நிலையில் இருக்கும் உன்னுடைய மாயையை எவரால்தான் அறிய முடியும்?"*

கருடாழ்வார் மகாவிஷ்ணுவின் வாகனம். ஆகவே திருமாலின் அவதாரமான இராமபிரானின் துன்பத்தை நீக்க ஓடோடிவந்தார். கருடனுக்கும் பாம்புக்கும் எப்போதும் பகை. பாம்பைக் கண்டால் கருடன் அதனைக் கொன்றுவிடும். இப்பொழுது இலக்குவனின் காலடியில் கருடன் வந்தமர்ந்த உடனேயே இலக்குவனைப் பிணைத்திருந்த அரவக்கணையின் வேகம் அகன்று போனது. சாதாரணமாகத் தூக்கத்திலிருந்து எழுவது போல் இலக்குவன் கண்விழித்து எழுந்தமர்ந்தார். இராமபிரானுக்கு அளவு கடந்த மகிழ்ச்சி உண்டாயிற்று. இருவரையும் வணங்கிவிட்டுப் புறப்பட ஆயத்தமான கருடப்பட்சிக்கு நன்றி கூறியதுடன் இராமபிரான் அதனை ஆசீர்வதித்தார்.

கருடனின் வருகையால் இலக்குவன் மட்டும் எழுந்திருக்கவில்லை; அன்றையப் போரிலீடுபட்டு உயிரிழந்தும் குற்றுயிராகவும் கிடந்த வானரப்படையினர் அனைவரும் உயிர்பெற்றெழுந்தனர். அவர்கள் மேனியில் இருந்த காயங்களும் மறைந்தன. புதுப்பொலிவும் புத்தூக்கமும் பெற்றவர்களாக அவர்கள் காணப்பட்டனர்.

## ஆஞ்சநேயரின் கோரிக்கை

இக்காட்சிகளையெல்லாம் பார்த்துக் கொண்டு நின்ற ஆஞ்சநேயர், இராமபிரானின் பாதங்களில் விழுந்து வணங்கியவாறு, "ஐயனே! தங்கள் தம்பியும் வானர சேனையின் பெரும்பகுதியும் இந்திரசித்துவின் வீரத்தால் மாண்டுபோயினர் என்ற செய்தி இலங்காபுரியெங்கும் பரவி, அங்கு பெரும் வெற்றி விழாக் கோஷங்கள் எழுந்து கொண்டிருக்கின்றன. இதனைக் கேட்கும் பிராட்டியாரின் மனம் உண்மை அறியாது ஏங்கித்தவிக்கும். ஆகவே அரக்கர் எழுப்பும் கோஷங்களை விட மிகப்பெரிய கோஷங்களை நம்படையினர் எழுப்புதல் வேண்டும்!" என்று கூறினார்.

இதனைக்கேட்ட இராமபிரான் ஆஞ்சநேயரின் கருத்தை ஏற்றுக்கொண்டவராக, சுக்கிரீவனுக்கு சைகை மூலம் தன்கருத்தை வெளியிட்டார். நொடிப் பொழுதில் வானமே இடிந்துவிழுவது போன்ற பேரொலியினை வானரர்கள் ஒன்று சேர்ந்து எழுப்பினர்.

"ஸ்ரீ இராமச்சந்திரமூர்த்திக்கு ஜே...! இளையபெருமாள் இலக்குமணனுக்கு ஜே..!" என்றும் "ஸ்ரீ ராம ஜெயம், ஸ்ரீ ராம ஜெயம்!" என்றும் மாறி மாறி அவர்களுடைய கோஷங்கள் எங்கும் எதிரொலித்தன.

இராவணன் தனது அரண்மனையில் சப்ரகூட மஞ்சத்தில் படுத்திருந்தான். அன்று நடைபெற்ற போரில் தனது மகன் இந்திரசித்து மாபெரும் வெற்றியை ஈட்டியிருந்தான். தம்பி கும்பகர்ணன் மாண்டதனால் துயரடைந்திருந்த இராவணன், மகன் இந்திரசித்து, இலக்குவனை நாகாஸ்திரத்தால் வீழ்த்திவிட்டான்; ஏராளமான வானரப்படைகளைக் கொன்றொழித்துவிட்டான், என்ற தகவலை அறிந்து ஓரளவு திருப்தி அடைந்திருந்தான். இதனால் சிறிதளவாவது ஓய்வெடுக்கலாம் என்ற நோக்குடன் சயனித்திருந்தான். கண்களை அப்போதுதான் மூடி உறக்கத்தை அரவணைத்துக் கொண்டிருந்த போது அந்தப்பேரொலி எழுந்தது.

இலக்குவன் வீழ்ந்தமையினால் வானரப் படைகள் ஓலமிடுகின்றனவோ என்ற சந்தேகம்தான் முதலில் அவனுக்கு ஏற்பட்டது. உன்னிப்பாகக் கேட்டதில் அது ஜெய கோஷம் என்று தோன்றியது. "ஸ்ரீ ராம ஜெயம்." என்ற வார்த்தைகளும் இராவணனைத் திகைப்படைய வைத்தன. படுக்கையிலிருந்து எழுந்து, அருகே இருந்த காவலனை அழைக்கும் சாதனத்தை அறைந்தான். கதவுகளைத் திறந்து கொண்டு பல பக்கங்களிலிருந்தும் காவலர்கள் ஓடோடி வந்து கை கட்டி வாய் புதைத்து நின்றனர். கோட்டைக்கு வெளியே கேட்கும் ஆரவாரங்களுக்கான காரணத்தை அவர்களிடம் கேட்டான். அப்போது உள்ளே நுழைந்த காரியாதிகாரி, கோட்டைக்கு அப்பால் நடைபெற்ற சம்பவங்கள் அனைத்தையும் விபரித்தான்.

"என்ன...! கருடப்பட்சி வந்து நாகாஸ்திரத்தின் சக்தியை இழக்கப் பண்ணிவிட்டதா? நம்பமுடியாதிருக்கிறதே!" என்று கூறிய இராவணன் எழுந்து தனது மகன் இந்திரசித்துவின் அரண்மனைக்குச் சென்றான். அங்கே இலக்குவன் எய்த பாணங்களினால் ஏற்பட்ட ரணங்கள் படுத்திய வேதனை தாங்காமல் இந்திரசித்து அழுது புலம்பிய வண்ணம் கிடந்தான். தன்னை நாடிவரும் தந்தைக்கு எழுந்து நின்று மரியாதை செலுத்தக் கூட வலுவற்ற நிலையில் கைகளைக் கூப்பி வணக்கம் செலுத்தினான்.

மகனுக்கு ஒருபுறம் ஆறுதல் கூறிக் கொண்டே கோட்டைக்கு வெளியே இடம் பெற்ற சம்பவத்தையும் இந்திரசித்துவிடம் இராவணன் கூறினான். அவனுக்கும் இத்தகவல் நம்பமுடியாததொன்றாகவே இருந்தது. இருப்பினும், பொழுது புலர்ந்ததும் மீண்டும் தான் போர்முனைக்குச் செல்வதாக இந்திரசித்து தந்தையிடம் கூறினான்.

## போர் முனையில் சீதாப்பிராட்டியார்

அரக்கர்களில் பெரும்பாலானோர் மாய வித்தைகள் கற்றுத் தேர்ந்தவர்கள். இராவணன் மகன் இந்திரசித்தும் மாயாஜாலங்கள் தெரிந்தவன். இராம- இலக்குமணன் ஆகியோரை வெற்றிபெற வேண்டுமானால் மிகவும் சக்தி வாய்ந்த பிரம்மாஸ்திரத்தை ஏவியாக வேண்டும். அந்த அஸ்திரத்தைப் பாவிப்பதற்கு முன் அதற்குரிய யாக பூசை ஒன்றைச் செய்தாக வேண்டும். இதற்கான ஒரு நேரத்தை ஒதுக்குவது- போருக்குப் புறப்படும் வேளையில்- பெரும் சிரமமாக இருந்தது. ஓர் இடைவெளியை ஏற்படுத்துவதற்காக இந்திர சித்து மாயையின் உதவியை நாடினான். போர்முனை செல்வதற்கு ஏற்பாடுகளைச் செய்து- சேனைகளை முன்னால் அனுப்பிவிட்டு, சற்றுத் தாமதமாகி, அவன் இரதத்தில் ஏறினான். பின்னர் கனவேகத்தில், முன்சென்ற படை அணிகளின் முன்சென்று நின்றான்.

வானர சேனைகளும் போர் முனையில் முன்னணியில் நின்றன. இந்திரசித்துவின் இரதத்தின் ஒரு மூலையில் தலைவிரிகோலமாக சீதாப்பிராட்டியாரின் உருவம் தலை குனிந்த வண்ணம் இருந்ததைக் கண்டு சுக்கிரீவன், அங்கதன் முதலானோர் பெரிதும் கலங்கினர். வானர சேனைகளும் தளபதிகளும் பார்த்திருக்கும் போதே இந்திரசித்து சீதாப்பிராட்டியாரின் தலை முடியைத் தன் இடது கரத்தால் பற்றி, வலது கையிலிருந்த வாளால் தலையைச் சீவினான். பிராட்டியாரின் சிரமற்ற உடல் தரையில் உருண்டது.

இக்கோரக் காட்சியைக் கண்ட வானரப் படைகள் கதிகலங்கின. இராம- இலட்சுமணரிடம் இத்துயரம் தோய்ந்த சம்பவத்தைக் கூற பல தளபதிகள் ஓடிச் சென்றனர். தகவலைக் கேட்ட இராமபிரான் ஓரளவு நினைவிழந்தார். இலக்குவன் கண்களில் கண்ணீர் வெள்ளம் கரை புரண்டோடியது. சுற்றி நின்ற அனைவரும் திகைப்படைந்து, அடுத்து என்ன செய்வது என்று அறியாத நிலையில் கவலையில் மூழ்கினர்.

(தொடர்ந்து வரும்)

---

**இராமாயணப் போட்டி: 100**

**சரியானவிடை:—** பலநாட்கள் தொடர்ந்து தூங்குவது அல்லது ஆறு மாதங்கள் தூங்குவது.

1. **எஸ். வினோதினி,** மொன்டிகிரிஸ்டோ, நாவலப்பிட்டி.
2. **செல்வி ஏ. கெட்விஜ்,** 2ம் வட்டாரம், வங்காலை, மன்னார்.
3. **ரிசாலா ரஷீத்,** 40, யெஹ்யா மாவத்தை, மாத்தறை.
4. **செல்வி ப. பாமா,** 75/12, ஜயசுந்தர மாவத்தை, களுத்துறை (தெற்கு).
5. **எஸ். அசோக்குமார்,** சவற்காலை வீதி, கல்முனை-01.

**போட்டி இல. 102** கேள்வி:- இலக்குவனை வீழ்த்த இந்திரசித்துப் பாவித்த ஆயுதம் யாது?

ஒக்டோபர் 11 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி—இல.102, தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

---

# வீரப்பன் - கலைஞர் நேருக்கு நேர்

**காதிலை பூ கந்தசாமி**

**கலைஞர்:** என் இளவலே வருக! மரம் பல வெட்டி, மதம்கொண்ட யானை பல சாய்த்து, தந்தம் பல பெற்று, சந்தன மரக் காட்டையாண்ட வேட்டைக்காரனே வருக!

**வீரப்பன்:** என்ன தலைவா, என்னை வேட்டைக்காரன் என்று சொல்றீங்க?

**கலைஞர்:** என் நாற்பதாண்டு கால நண்பர் எம்.ஜி.ஆரும் 'வேட்டைக்காரன்' என்ற படத்திலே நடித்திருக்கிறார். முதல்வராகவும் நாட்டை ஆண்டிருக்கிறார்.

**வீர:** வேணாம் தலைவா, எனக்கு பதவியே வேண்டாம்.

**க:** இப்படிப் பேச எப்போது கற்றுக்கொண்டாயோ, அப்போதே நீ அரசியல்வாதியாகிவிட்டாய்!

**வீர:** அப்படியானால் பதவியைத் தூக்கி வீச தயங்கமாட்டோம் என்னு அறிக்கை விடுறதெல்லாம் ஏன் தலைவா?

**க:** பக்கத்தில் இருப்பவனுக்கு பதவி ஆசை வந்துவிடக்கூடாதே என்பதற்காகவும், நம்மைக் கவிழ்த்துவிட்டு நம் நாற்காலியை பறிக்க நினைத்துவிடக்கூடாதே என்பதற்காகவும், நாம் பதவி சுகத்தில் பவிசாக இருக்கிறோம் என்று, நமக்கு வாக்குப் போட்டுவிட்டு வாடிக்கிடக்கும் மக்கள் பொறாமைப்பட்டுவிடக்கூடாது என்பதற்காகவும் கூறப்படும் கூற்றுக்கள்.

**வீர:** தலைவரே! நான் அரசியலில் குதித்தா ஜனங்க ஏற்றுக் கொள்வாங்களா?

**க:** எதையும் தாங்கும் இதயம் கொண்டவர்கள் மக்கள். உன்னைவிட மோசமான எத்தனையோ பேரை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லையா? உன்னைத்தானா உதறிவிடப் போகிறார்கள்?! அஞ்சற்க!

**வீர:** நம்ம குணம் அரசியலுக்கு ஒத்துவருமா தலைவா?

**க:** அது என்ன குணமப்பா!

**வீர:** எத்தனை கொலை செஞ்சேன், எத்தனை ரூபா கொள்ளையடிச்சேன், எத்தனை யானையை சுட்டுச் சாவடிச்சேன் என்றெல்லாம் எதையும் மறைக்காமல் உண்மை பேசுறேன் பாருங்க, இந்தக் குணம் என்னைவிட்டு போகாதே ஐயா.

**க:** கவலைப்படாதே சகோதரா, அரசியலுக்கு வரும்வரை அனைவருமே அரிச்சந்திரர்கள்தான்! வந்த பின்னர் தானாக வந்துவிடும் நரித் தந்திரங்கள்!

**வீர:** நான் அரசியலுக்கு வருவதால் நாட்டுக்கு என்ன நன்மை ஐயா?

**க:** காட்டு வளம் காப்பாற்றப்படுகிறதே, அதுவும் ஒரு நன்மைதானே!

**வீர:** புரியாமல் பேசாதீங்க. நாம காட்டில இருந்ததால கள்ள மரம் வெட்டுறவங்க யாரும் உள்ளே வரப் பயந்துகிட்டிருந்தாங்க. இனிமேல் ஆள் ஆளுக்கு கத்தி, கோடாரியோட மரம் வெட்டக் கிளம்பப் போறாங்க.

**க:** நாட்டுக்குள் வந்தது ஒரு வீரப்பன், அதனால் காட்டுக்குள் புகப்போகிறார்கள் பல வீரப்பன்கள் என்கிறாயா? நியாயம் தான், ஆனால் இதை வெளியில் சொல்லித் தொலைக்காதே!

**வீர:** ஏனுங்க?

**க:** எங்கே என்று பார்த்துக் கொண்டிருக்கிறார் செல்வி. மெல்ல அவல் கிடைத்த மாதிரியாகிவிடும் நீ சொல்லும் இந்த செய்தி.

**வீர:** அந்தம்மா ஆட்சியிலே நடந்த அநியாயங்களை புட்டுப் புட்டுவைக்கட்டுங்களா?

**க:** செய்! சன் ரி.வியிலே ஒரு தொடராகவே ஒளிபரப்பச் சொல்லுகிறேன். உன் முகமும் பிரபலமாகும். செல்வி முகமும் விகாரமாகும்! எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சிதான்!

**வீர:** நம்ம புண்ணியத்தில நக்கீரன் கோபாலு பிரபலமாகிட்டிருக்காரு. செவ்வாய்க் கிரகத்துக்கே போய் விட்டு வந்தவரு மாதிரி தமிழ்நாட்டு பத்திரிகைகளில் எல்லாம் பேட்டியும், கட்டுரையுமா கொடுத்துக்கிட்டிருக்காரு. அவரே அப்படிப் பிரபலமாகும்போது நாமே பேட்டி கொடுத்தா பிய்ச்சுக்கிட்டுப் போகாதுங்களா?

**க:** அதென்ன சகோதரா, சுற்றிச் சுற்றிப் பார்க்கிறாய்?

**வீர:** வீடு ரொம்பச் சின்னதா இருக்கே. என் கோரிக்கையை மறந்துட்டீங்களா ஐயா?

**க:** என்ன உன் கோரிக்கை?

**வீர:** நல்ல தனி பங்களா வேண்டும். அங்கே காட்டு மரம் நாலு ஐந்து வேண்டும். செடி, கொடிகள், செழிப்பான புதர்கள் கொண்ட சுற்றுச் சூழல் வேண்டும்.

**க:** மொத்தத்தில் வீட்டுக்குள் ஒரு காடு வேண்டும் என்கிறாய்?

**வீர:** ஆமாங்க, பழசையெல்லாம் மறக்கக் கூடாதுபாருங்க. கடந்து வந்த பாதையை நினைச்சுப் பார்க்க வேண்டாமா?

**க:** நெருப்பாற்றை நீந்தி வந்தவர்கள் நாங்கள், காட்டாற்றை கடந்து வந்தவர்கள் நாங்கள் என்றெல்லாம் நாமும் மேடையிலே பேசுகிறோம். அதற்காக காட்டாற்றுக்கு பக்கத்திலேயா குடியிருக்க முடியும். காட்டாற்றைத்தான் நாம் கண்ணால் கண்டிருப்போமா?

**வீர:** நாலு துப்பாக்கி வேண்டும். அதற்கு லைசன்ஸ் வேண்டும் என்று கேட்டிருந்தேனே ஐயா?

**க:** என்ன சகோதரா, இதுவரைக்கும் லைசன்ஸ் இல்லாம சுட்டுக்கிட்டிருந்தாய், இனிமேல் லைசன்ஸ் வாங்கிக் கொண்டு சுடப்போகிறாயா? என்று நான் கேட்கா விட்டாலும்கூட வேறு யாராவது கேட்க மாட்டார்களா?

**வீர:** அதில பாருங்க, மிஞ்சி மிஞ்சிப்போனா இரண்டு வருஷம்தான் சிறையில இருப்பேன். அதுவும் தனி பங்களாவிலதான் இருப்பேன். மான் கறி, மரைக் கறி என்று வாரா வாரம் போட்டுக்கிட்டே இருக்கணும்.

**க:** மாநில அரசு மான் வேட்டைக்கு போனால் மக்கள் என்ன நினைப்பார்கள்?

**வீர:** அந்தச் சிரமம் உங்களுக்கு வேண்டாம் ஐயா. நல்ல சோக்கான மான் கூட்டமா பிடிச்சு வந்து நம்ம பங்களா ஏரியாவில விடச் சொல்லுங்க. நாமளே அப்பப்ப வேட்டையாடி விருந்து சாப்பிட்டுக்கிறோம்.

**க:** வேறென்ன கோரிக்கை வைத்திருக்கிறாய் சகோதரா? (வியர்வையை தோள்துண்டால் துடைத்துக் கொள்கிறார்)

**வீர:** அப்புறம், சினிமாப் படமொன்று எடுக்கணுமுங்க. உங்க பூம்புகார் புரொடக்ஷன் சார்பாகவே படத்தை தயாரிக்கலாங்க.

**க:** படத்திற்கு என்ன பெயரப்பா?

**வீர:** 'பண்டிட் கிங்'



**க:** தனித் தமிழ் வேண்டும் என்று கட்டளை பிறப்பித்துக் கொண்டிருக்கிறார் நம் அமைச்சர் தமிழ்க் குடிமகன். அதனால் தூய தமிழ் பெயராக சொல்லப்பா?

**வீர:** ஏங்க, சன்.ரி.வி. என்னு வைச்சிருக்கீங்களே தமிழ்க் குடிமகன் கண்டுக்காமதானே இருக்கிறாரு. போதாக்குறைக்கு அறிவிப்பாளருங்க எல்லாம் தங்கிலீஸ் பேசுறாங்களே?

**க:** அது என்ன சகோதரா தங்கிலீஸ்?

**வீர:** இங்கிலீஸ் 75 வீதமும், தமிழ் 25 வீதமும் நன்கு கலந்து பேசுகிற பார்முலா இருக்கே, அதுதாங்க தங்கிலீஸ்.

**க:** காட்டுக்குள்ளே இருந்து சன்.ரி.வி பார்த்தாயா?

**வீர:** காட்டுக்குள்ளே சன் தாங்க எட்டிப் பார்க்க கஷ்ரப்படும். சன்.ரி.வி உள்ளே வருமுங்க.

**க:** என் மடியிலேயே கைவைக்கிறாய். போகட்டும், மேலும் என்ன கோரிக்கைகள்?

**வீர:** யாருங்க அது, ஏதோ பேரு சொல்வாங்களே, துணியெல்லாம் இடுப்பில நிக்க கஸ்ரப்படுமே, அது பேரு என்னங்க, ஆ.. சிம்ரானுங்க, அதுதானுங்க நம்ம ஹீரோயின். ஏற்பாடு பண்ணச் சொல்லுங்க.

**க:** ஏம்பா, வீரப்பா, ஒரு மாநில அரசிடம் கேட்கக்கூடிய கோரிக்கையா இது? எதைக் கேட்கணும், எதைக் கேட்கக்கூடாது என்று விவஸ்தையே இல்லையாப்பா.

**வீ:** நான் காட்டிலே இருந்தா நீங்க அவஸ்தைப்படுவீங்க எண்ணுதானே நாட்டுக்கே வந்திருக்கிறேன். நீங்க விவஸ்தை பற்றிப் பேசுறீங்களே தலைவா?

**க:** கோரிக்கைகள் இவ்வளவுதானா? அல்லது இன்னும் இருக்கா?

**வீர:** நானும், என் ஆளுங்களும் சிறை இருக்கிற பங்காளவிலேயே சினிமா சூட்டிங் வைச்சுக்கிடலாங்க. அங்கே காவலுக்கு நிற்பாங்க பாருங்க பொலிஸ்காரங்க, அவங்களையே வில்லன்களாப் போட்டுடலாம். ஏங்க, பங்களாவில நீச்சல் குளம் இருக்குமில்லே?

**க:** நீ சிறையிலே இருக்கப் போகிறாயா? அல்லது ஃபைவ் ஸ்டார் ஹோட்டலில் இருக்கப் போகிறாயா?

**வீர:** நாட்டு மக்களை திருப்திப்படுத்த சிறையிலே சில காலம் இரு என்னுறீங்க. நம்மை திருப்திப்படுத்த அந்த சிறையையே ஃபைவ் ஸ்டார் ஹொட்டலா மாத்திப் புடுங்க. அதுதாங்க நம்ம பாயிண்டு.

**க:** காட்டில் இருந்திருந்தால் இந்தச் சுகம் எல்லாம் கிடைத்திருக்குமா? நினைத்துப் பார் வீரப்பா, நினைத்துப்பார்?

**வீர:** ஏங்க, நான் காட்டில இருந்திருந்தா வீரப்பனை சரணடைய வைத்தேன் என்னு சொல்லிக்கிற புகழ் உங்களுக்கு கிடைச்சிருக்குமாங்க?

**க:** கோபப்படாதே சகோதரா, நமக்குள் குழப்பம் வந்தால் செல்விக்கு கொண்டாட்டமாகிவிடும். வேறென்ன கோரிக்கைகள் உண்டு, சொல்லப்பா'

**வீர:** அரசியலுக்கு வரணுமில்லே, அதுக்காக ரெயினிங் எடுங்க வசதியா பங்களாவிலே ஒரு பெரிய மேடை போடச் சொல்லுங்க. பவர்ஃபுல்லான மைக் செட் வைக்கச் செல்லுங்க.

**க:** செய்துவிடலாம். அவ்வளவுதானா?

**வீர:** இல்லேங்க... அது வந்துங்க... இன்னும் ஒரே ஒரு கோரிக்கை. உள்மனசில கிடந்து துடிச்சுக்கிட்டிருக்குங்க.

**க:** வெட்கப்படாதே சகோதரா, வெளியே சொல்!

**வீர:** நீங்க சற்று நேரம் எழுந்திருக்க முடியுமாங்க?

**க:** ஏனப்பா, காலில் விழப்போகிறாயா?

**வீர:** இல்லேங்க, உங்க நாற்காலியில நான் இருந்து பார்க்கணும். நான்தான் முதல்வர் என்னு ஐந்து நிமிடமாவது நினைத்துக் கொண்டிருக்கணும். என்னங்க எழுந்திருக்கிறீங்களா? என்னங்க..

(கலைஞர் அதிர்ச்சியில் அப்படியே உறைஞ்சுபோய் இருக்கிறார்.)



அருள் ஜுவலர்ஸ்

ARUL JEWELLERS

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன

கிளை: 105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


# டயானாக் குட்டி



இந்த சின்னஞ் சிறுமிதான் பின்னர் உலகின் கண்ணைக் கவர்ந்த டயானா




ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

323657





டயானா தன் பிள்ளைகளான இளவரசர் வில்லியம்ஸ் இளவரசர் ஹரி ஆகியோருடன். மாண்புமிகு இளவரசி என்ற பட்டத்தை பிரிட்டிஷ் அரச குடும்பம் திரும்பப் பெற்றுவிட்டது. வருங்கால மன்னரின் தாய் என்ற பெருமையை யாரால் பறிக்கமுடியும்?

→ தன் பிள்ளைகள் இருவர் மீதும் அளவில்லாத பிரியம் கொண்டிருந்தவர் டயானா. பிள்ளைகளுக்கும் அம்மாமீதுதான் ஒட்டுதல். அப்பா சாள்ஸ்கடன் அத்தனை ஒட்டுதல் கிடையாது.

தன் குழந்தைகள் என்றில்லை, பொதுவாகவே குழந்தைகள் என்றால் டயானாவுக்குப் பிரியம்தான். டயானாவின் உடல் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தபோது, வில்லியம்சும், ஹரியும் தங்கள் கைப்பட 'மம்மி' என்று எழுதிவைத்திருந்த அட்டையிலும் பாசத்தின் சரம்தான் தெரிந்தது. ■

# கலைச் சின்னம்



← பார்த்ததும் பிரமிக்கச் செய்யும் இந்த கலை நயம்மிக்க ஸ்தூபியின் சரித்திரத்தை புரட்டிப் பார்க்கலாமா?

ஆப்கானிஸ்தானை 1149 முதல் 1215ம் ஆண்டு வரை ஆட்சி புரிந்த கோரிட் மன்னர் பரம்பரையினர் காலத்தில் உருவாக்கப்பட்ட ஜாம் மசூதியின் கோபுரம் இது.

213 அடி உயரமான இந்தப் பிரசித்திபெற்ற ஸ்தூபி, 800 வருடங்களாக அந்நாட்டில் நடந்து வரும் பிரதேசச் சண்டைகளிலோ, ஆப்கான் முஜாஹிதீன் முஸ்லிம் தீவிரவாதிகளுக்கும் சோவியத் யூனியனுக்குமிடையில் நடைபெற்று வந்த போர்களின் போதோ எதுவித சேதத்துக்கும் உட்படாமல் தப்பித்துக் கொண்டதுதான் மகா ஆச்சரியம்.

இஸ்லாமிய சிற்பக்கலைச் சிறப்புகளை உள்ளடக்கிய வடிவங்களும், திருக்குர் ஆனின் வாசகங்களும் இந்த ஸ்தூபியில் பொறிக்கப்பட்டுள்ளன. சுற்றி வளைத்து குன்றுகள் பல இருந்த போதிலும், இந்தக் கோபுரம் சுட்ட களிக்கற்களினாலேயே அமைக்கப்பட்டுள்ளது.

காலத்தால் அழியாத இந்தப் புராதனக் கலை வடித்தை அருகிலுள்ள ஜாம் ஆற்று வெள்ளத்திலிருந்து பாதுகாக்க 300 அடி நீளமானதும் 10 முதல் 13 அடி உயரமான சுவர் ஒன்று சுற்றிவர அமைப்பது அவசியம் என்று இதனை அண்மையில் சென்று பார்த்து வந்த ஆப்கான் நாட்டின் கட்டடக் கலை நிபுணர் வாசே நாஜிமி ஐநா.சபை பிரமுகர்களிடம் கூறியிருக்கிறார்.

இந்த ஜாம் மசூதி ஸ்தூபி அமைந்துள்ள இடத்துக்குச்செல்ல வேண்டுமானால் பிரதான பாதைகளிலிருந்து கரடுமுரடான மலைப் பிரதேசத்தில் 10 மைல் தூரம் கால் நடையாகத்தான் செல்ல வேண்டுமாம். ■

# மெய்க் காவல்



→ இருக்கும் இடத்தைப் பொறுத்ததுதான் மரியாதை. இரு மாமிச மலைகளின் மத்தியில் இருப்பவர் ஒரு புகைப்படக் கலைஞர். ஹொப் சென்றிக். அன்னார் ஆறு அடி உயரமானவர். தனியாகப் பார்த்தால் நெடு நெடு என்று வித்தியாசமாகக் காட்சியளிப்பார். ஒருமுறை பார்த்தவர்கள் 'அட.. இத்தனை உயரமாப்பா' என்ற வியப்புடன் மறுமுறையும் பார்க்காமல் போகமாட்டார்கள். ஆனால் இரு மலைகள் மத்தியில் இருக்கும் போது அவரது விசேஷம் தெரியவே இல்லை. போயேபோச்சு!

'நானும் செம உயரம் தானே, இவர்களுடன் புகைப்படம் எடுத்துத்தான் பார்ப்போமே' என்றுதான் மலைகள் மத்தியில் அமர்ந்து தானியங்கி கமராவில் படம்பிடித்தாராம் ஹொப். படத்தை கழுவிப்பார்த்த பின்னர்தான் மலைகள் நடுவே சிக்கிய குச்சி மாதிரி தான் இருப்பது புரிந்தது.

பிரமுகர்களுக்கான பாதுகாவலர்களை மெய்க் காவலர்கள் என்பர். இப்படியான மெய்க் காவலர்கள் என்றால் சொல்லுக்கு பொருத்தமாக இருக்கும். இரு மலைகளும் சுமோ மல்யுத்த வீரர்கள். ■

# பிறந்தநாள் வாழ்த்து




**சிந்துஜன் – அனோஜன் (06.09.97)**

யாழ்ப்பாணம் ஓடக்கரை வீதியைச் சேர்ந்த அல்போன்சஸ்-அம்பிகா தம்பதியினரின் செல்வப்புதல்வர்களான சிந்துஜன்-அனோஜன் இரட்டையர்கள் தமது முதலாவது பிறந்த தினத்தை 06.09.97 அன்று தமது இல்லத்தில் கொண்டாடினார்கள்.

இவர்களை டோகாவில் இருக்கும் அப்பா, அம்மா, சிந்து அக்கா, அபிலா அக்கா மற்றும் அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், தாத்தா, பாட்டிமார், ஞானப்பெற்றோர் ஆகியோர் திரு இருதயநாதரின் அருளுடன் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

வாரமலர் தினமுரசு

# வானில் வலம்




↑ என்ன இது பறக்கும் தட்டா? இல்லை. விமானம். ஆனால் பயணவிமானமல்ல. பருவமாற்றம் அறியும் புதிய விமானம்.

மனிதர்கள் எவரும் இல்லாமல் பெட்ரோலோ வேறு எரிபொருளோ இல்லாமல் பூமியிலிருந்து கொடுக்கப்படும் சமிஞ்ஞைகளுக்குக் கட்டுப்பட்டு வானில் தொடர்ந்து (அதன் இயல்பான அழிவு காலம் வரை) பறந்து கொண்டிருக்கக்கூடிய விமானம் இது.

'பாத்ஃபைண்டர்' (பாதை கண்டு பிடிப்பவர்) என்பது இதற்கு சூட்டப்பட்டுள்ள பெயர்.

அமெரிக்காவின் தேசிய விண்வெளியியல் ஆய்வக நிறுவனமான 'நாசா'தான் (NASA) இந்த விமானத்தை உருவாக்கியுள்ளது.

இது சூரிய சக்தியால் இயங்கக்கூடியது. நுணுக்கமான சுற்றுச் சூழல் மாற்றங்களை மிகத் துல்லியமாகக் கண்டறியக்கூடிய ஆற்றலைக் கொண்ட சாதனங்கள் பொருத்தப்பட்ட இக்கலம், சுமார் 70 ஆயிரம் அடி உயத்தில் மிதக்க விடப்பட்டு பரீட்சிக்கப்பட்டுள்ளது. இதன் இறக்கைகளின் நீளம் 98.6 அடி. எடை 486 இறாத்தல்.

சூரியக்கதிர் வீச்சுக்கள், வெள்ளம், புயல் போன்ற இயற்கை மாற்றங்களை இதில் பொருத்தப்பட்டுள்ள கருவிகள் அவ்வப்போது பூமிக்கு அறிவித்துக் கொண்டிருக்கும். முதன் முதலில் உருவாக்கப்பட்ட இவ்விமானத்தின் வெற்றியை ஆதாரமாகக் கொண்டு இதைவிடப் பெரிய விமானங்கள் அமைக்கப்படுமாம். ■



... 29, ... அச்சிட்டு வெளியிடப்படுகிறது